



# பிரபோதா

**எழுத்தாளர்:** மூன்று மதத்திற்கும் ஒருவரே குரு,
ஆன்மீக சாம்ராஜ்ஜிய சக்கரவர்த்தி, நூறு கிரந்தங்கள் எழுதியவர்,
இந்து ஞான தர்ம பிரதாதா, குறிப்பிடத்தக்க எழுத்தாளர்,
த்ரைத்த சித்தாந்த ஆதிகர்த்தா

## ஸ்ரீஸ்ரீஸ்ரீ ஆச்சார்ய பிரபோதானந்த யோகீஸ்வரர்




**தமிழாக்கம்**
எஸ். பிரகாஷ்

**பதிப்பாளர்**
**இந்து ஞான மேடை**
(Estd. in 1978 – Regd. No.: 168/2004)

த்ரைத்த வருடம் - 44 முதல் பதிப்பு: அக்டோபர் - 2022
பதிப்பு: 1000 விலை: /-

**எஸ். பிரகாஷ்,**
குப்பம், ஆந்திர பிரதேஷ்.
(கைபேசி: +91-9441915291)

**ப. ர. சந்திரமோகன்,**
சென்னை, தமிழ் நாடு.
(கைபேசி: +91-9840381879)

**கே. செந்தில்குமரன்**
சென்னை, தமிழ் நாடு.
(கைபேசி: +91-9841355578)

## பொருளடக்கம்


| வரிசை எண் | பொருள் | பக்கங்கள் |
|---|---|---|
| 1. | மனிதன் ஜீவிதம் முக்கியமானது | 05 |
| 2. | ஷர, அக்ஷர, பிரக்ருதி | 09 |
| 3. | மோக்ஷம் | 22 |
| 4. | எமலோம் - சொர்க்கலோகம் | 28 |
| 5. | தேவதைகள் - ராக்ஷசைகள் | 38 |
| 6. | வித்யா - அந்த வித்யா | 49 |
| 7. | யோக வித்யா | 56 |
| 8. | வளைந்த பாதை | 63 |
| 9. | யோக சக்தி | 69 |
| 10. | யோக தண்டம் எதற்கு தேவைப்படும் | 76 |
| 11. | தோல் ஆசனம் எதற்கு தேவை? | 97 |
| 12. | ஆசிரமங்கள் | 102 |
| 13. | குரு போதனை தனித்துவமானது | 107 |
| 14. | இன்றைய காலத்தில் குருக்கள் நிலை | 110 |
| 15. | பகவான் வருகை | 124 |
| 16. | யோகி என்பவர் யார்? | 130 |
| 17. | தபசு - யோகம் | 139 |
| 18. | மந்திர சக்தி | 151 |
| 19. | கிரகங்கள் - விக்கிரகங்கள் | 162 |
| 20. | மகரிஷி - ஆனந்தா | 181 |
| 21. | சிவம் | 189 |
| 22. | பிராணயாமம் | 196 |
| 23. | பிரம்ம, கால, கர்ம, குணசக்கரங்கள் | 218 |
| 24. | சகுண - சாகார - நிராகாரங்கள் | 236 |
| 25. | ஞான எக்னம் | 245 |
| 26. | ஜெபமாலைகளில் பாசிகள் எத்தனை? | 249 |
| 27. | பண்டிகைகள் | 255 |
| 28. | கீர்த்தனா? தத்துவமா? | 262 |
| 29. | தேகம் ஒரு வடகை வீடு | 274 |
| 30. | இறுதி மரணம் | 286 |

உலகில் மொத்தம் உயிரினங்கள் எண்ணிக்கை 84 லட்சங்கள் என்று கூறப்படுகிறது. 84 லட்சரகங்கள் என்று மொத்தமாக சொல்வதற்கு இந்த காலத்தில் யாரிடமும் சரியான விவரங்கள் இல்லை. மற்ற ஜீவராசிகளை தன் ஆதிக்கத்தில் வைத்துக்கொள்ளும் சக்தி மனிதன் ஜாதிக்கும் மட்டும் உள்ளது. தலையில் புத்தி விதானம் எவ்வளவு பெரிதாகவுள்ள மனித ஜாதி முக்கியமான ஜாதியாக கணக்கிடப்படுகிறது. மற்ற பசுக்கள், பறவைகள், கிருமிகள், பூச்சிகள், மரங்கள், இவை எல்லாம் மனிதன் அறிவை விட குறைவு அறிவு உள்ளது என்று சந்தேகம் இல்லை. விலங்குகள், பறவைகள் முதலிய ஜீவராசிகள் எல்லாம் ஆகாரம் சம்பாதித்துக் கொள்ளுவது, தின்பது, தூங்குவது, சம்போக சுகம் அனுபவிக்கவேண்டியது தவிற மற்ற உலக ஞானம் அவற்றுக்கு இல்லை. மனிதனுக்கு தின்பது, தூங்குவது, சந்ததியைப் பெறுவதற்கு மற்றும் பல விதமான அதிகமாக உலக ஞானம் தெரியும். அதிகம் விவரம் இருக்கும் மனிதனிடம், எவ்வளவு பலமாகவுள்ள விவரமில்லாத சிங்கங்களும் தோல்வி அடைந்து வசமாகிப் போகிறது. இது எல்லாத்துக்காரணம் மனிதன் உலகப்பரமான புத்தி அம்சம் என்று சொல்லலாம். உலக நடவடிக்கை புத்தியில் எவ்வளவோ முக்கியமான ஜாதி மனிதனுடைய ஜாதி, உலக ஞானத்தில் உயர் நிலையில் நின்றது மனிதனுடைய ஜாதி, எவ்வளவோ பெரிய பரிசோதனை செய்து எந்திரங்களும் கம்ப்யூடர்களும், ரோபோட்டுகளும், உடல் ரீதியான ஜீன்ஸ்களை, ஆயுதங்கள், கப்பல்கள்,

அணுகுண்டுகளையும் கண்டுப்பிடித்தது மனித ஜாதி, ஒன்றே ஒன்று ஆனால் பரமாத்மா ஞானத்தில் முழுமையாக பின் தங்கியுள்ளார்கள். ஞானம் இரண்டு ரகம் உள்ளது. ஒன்று உலக ஞானம், இரண்டாவது பரமாத்மா ஞானம். உலக ஞானத்தில் எவ்வளவு முன் இருந்த மனிதன், பரமாத்மா ஞானத்தில் கடைசியில் உள்ளான். எவ்வளவோ விவரமுள்ள மனிதன் சூட்சம உருவத்தில் உள்ள பாவம் எது புண்ணியம் எது விசாரிக்காமல் ஸ்தூலமான உலக விஷயங்களை பெரியதாக எண்ணிக் கொண்டு, ஆத்மா ஞானத்தில் (ஆன்மிகத்தில்) அதனைப்பற்றி தெரியாமல் தன் நிஜமான நிலை தெரியாமல், தான் யாரோ கடவுள் யாரோ தெரியாமல், தெரிந்துக் கொள்ளுவதற்கு முயற்சி செய்யாமல், காலத்தை வீணாக கடத்திக் கொண்டு கர்மத்தை சம்பாதித்துக் கொள்கின்றார்கள். முதல் ஞானம் உலக ஞானத்தில் மிக பெரிதானவன் மனிதன், இரண்டாவது ஞானம் பரமாத்மா விஷயத்தில் முழுமையாக பின்தங்கி, மற்ற ஜீவராசிகள் உலக ஞானத்தில் பின்தங்கியிருந்து பரமாத்மா வழியில் மனிதனை விட முதலாவதாக இருக்கிறார்கள் என்று சொல்லலாம். மனிதனை விட குறைவான கர்மம் சம்பாதித்துக் கொண்ட ஜீவராசிகள் மனிதனைப் போல குணங்களில் அதிகமாக சிக்கிக் கொள்ளவில்லை. மனிதனை விட வித்தியாசமாக எல்லாம் குணங்களிலும் மிக குறைவாகயிருக்கிறது. மனிதனுக்கு அசை என்னும் குணங்கள் பெரியதாகயிருந்ததால் அவற்றுக்கு அது அவ்வளவு இல்லை. எல்லா குணங்களில் மிக அதிகமாக சிக்கிக் கொண்ட மனிதன் கடவுளுக்கு தூரமாக இருக்கின்றான், குணங்களில்

குறைவாக சிக்கிக் கொண்ட ஜீவராசிகள் கடவுளுக்கு நெருக்கமாகவே உள்ளது. கர்மத்தை அனுபவிக்கும் தவிற சம்பாதித்துக் கொள்ளாத விலங்குகள், விவரம் இல்லாமல் இருந்தாலும் தெய்வ ஞானத்தில் முன்பு இருக்கிறார்கள். குணங்களில் சிக்கி அனுபவிக்கும் கர்மத்தை விட அதிகம் கர்மத்தை சம்பாதித்துக் கொண்ட மனிதன் தெய்வ ஞானத்தில் பின்னோக்கி இருந்ததாகும். உலக ஞானத்தில் எவ்வளவோ பெரியதானவன் மனிதன், டாக்டர்களாக இன்ஜீனியராக விஞ்ஞானத்தை சம்பாதித்துக் கொண்ட மனிதன், எப்போதாவது தெரிந்துக் கொண்டு தன் புத்தியை உலகம் மீது காண்பிக்காமல் பரமாத்மா மீது உபயோகித்து தெய்வ ஞானத்தை தெரிந்துக் கொள்ளலாம். இறப்பு பிறப்பு இல்லாத மோக்ஷத்தை அடையலாம். மனிதன் வாழ்வில் விழித்திருந்தால் மற்ற ஜீவராசிகளை விட வேகமாக தெய்வ சன்னிதானத்திற்கு சேரலாம். இல்லை என்றால் மற்ற ஜீவராசிகளை விட முழுமையாக பின்தங்கியிருக்கலாம். மனிதன் ஜீவிதம் எவ்வளவு அஞ்ஞானமாகயிருந்தாலும், ஆர்வமிருந்தால் தெய்வ மார்க்கத்தில் விரைவாக நுழைய முடியும். தெய்வ மார்க்கம் நுழைவதற்கு மனிதன் ஜென்மமே நல்ல வாய்ப்பு என்று சொல்லலாம். எதற்கு என்றால்! எல்லா ஜீவராசிகள் விட பின் உள்ளவர் மனிதன் என்னும் தெரிந்த பரமாத்மா, மனிதனுக்கு ஞானம் தெரியப்படுத்துவதற்கு மனிதன் அவதாரத்தில் வந்தார். தெய்வ ஞானம் மனிதனுக்கு மட்டும் தேவை, மற்றும் மனிதனாகவே பிறந்து மனிதனுக்கு தேவைப்படும் ஞானத்தை சொல்லிப்போவது நடந்துக் கொண்டுயிருகிறது. கடவுளே

வந்து பிறந்த ஜென்மம் மனிதனுடையது. மேலும் தெய்வ விஷயங்கள் அர்த்தம் செய்துக் கொண்டால் மனிதனே முழுமையாக அர்த்தம் செய்துக் கொள்ளலாம். அப்படிப்பட்ட வாய்ப்புகள் கடவுள் தன் ஜென்மம் எடுத்து தெரிவித்தார். விலங்குகளில் கடவுள் ஜென்மம் எடுக்கவில்லை. மனிதர்களில் ஜென்மம் எடுப்பது என்றால் மனிதனுக்கு ஞானம் எவ்வளவு முக்கியமோ சொல்லாமலே தெரிகிறது. மனிதனுக்கு தெய்வ ஞானம் தெரிய வேண்டும் என்றால் குருவை பின்பற்ற வேண்டியது தான். குரு கிடைத்தப்பின் நம்பிக்கை என்பது முக்கியமாகயிருக்க வேண்டும். அந்த நம்பிக்கை இல்லை என்றால் குருவிடம் இருந்து தெரிந்துக் கொள்ளுவது எதுவும் இருக்காது. நம்பிக்கை உள்ளவன் மட்டும் குரு விடமிருந்து சர்வமும் தெரிந்துக்கொள்ளலாம். நம்பிக்கை என்பதே பக்தி. பக்தியில்லாதவன் எந்த மனிதனுமே பிரையோஜனமில்லாதவன். மனித ஜென்மம் எடுத்து நமக்குள்ள புத்தி எல்லாம் சிறிது காலம் இருக்கின்ற உலகத்தில் உபயோகித்து மரணம் அடைகிறோம். அல்லவா! என்ன பிரையோஜனம்? நம் புத்தி எதன் மேலே உபயோகிக்க வேண்டுமோ தெரிந்துக் கொண்டு, அதன் மீது உபயோகித்த மனிதன் ஜென்மத்திற்கு உபயோகப்படும். அப்படியாகாத போது பசுக்களுக்கு நமக்கு என்ன வித்தியாசம் இருக்கும்? அது வேலை செய்கின்றது, தின்கின்றது. அப்படியே நாம் வேலை செய்கின்றோம், திண்கிறோம், அப்படிப்பட்டப்போது பசுக்கள் போல சமமாகிவிடுவோம். மற்றும் அப்படியாகாமல் மனித ஜென்மத்தை முக்கியமாக அறிமுகப்படுத்த வேண்டும் என்றால், எந்த ஜீவராசிகள் செய்யாததை நாம் செய்ய

வேண்டும். அதுவே பரமாத்மாவை சாதிக்கும் சாதனை. ஒவ்வொருவரும் நல்லவராக மனித ஜென்மம் எல்லா ஜென்மத்தை விட உத்தமமானது என்று நிரூபியுங்கள். உங்கள் வாழ்கையை பல மார்க்கத்திலிருந்து பரமாத்மா மார்க்கத்திற்கு திருப்பிக்கொள்ளுங்கள்.

## ஷர, அக்ஷர பிரக்ருதி

பிரக்ருதி என்றால் கண்ணுக்கு தெரிகிறது என்று அர்த்தம். பூமி மேலுள்ள அனைத்து இடங்கள் பிரக்ருதியே. பிரக்ருதியை இரண்டாக சொல்லலாம். ஒன்று ஷரப்பிரக்ருதி இரண்டாவது அக்ஷரப்பிரக்ருதி. இவற்றை சேத்தன அசேத்தன பிரக்ருதி என்று சொல்வார்கள். சேத்தன அசேத்தன பிரக்ருதிகள் எப்படி தயாரானது? என்றால்! சொல்வதற்கு எழுதுவதற்கு எட்டாத பரமாத்மாவிலிருந்து முதலில் ஆகாசம், காற்று, அக்னி, நீர், பூமி என்னும் ஐந்து பாகங்கள் சக்தி வெளியே வந்தது. வந்தப்பிறகு ஆகாசம் இரண்டு பாகங்கள் ஆனது. காற்று இரண்டு பாகங்கள் ஆனது. அக்னி இரண்டு பாகங்கள் ஆனது. நீர் இரண்டு பாகங்கள் ஆனது. பூமி இரண்டு பாகங்கள் ஆனது. ஆகாசம் இரண்டு பாகங்கள் ஆனது அல்லவா! அதில் முதல் பாகம் பாதி நமக்கு அரை வட்டம் கோளம் மேல் தெரிந்துக் கொண்டுயிருக்கிறது. காற்று இரண்டு பாகம் ஆனது அல்லவா! அதில் முதல் பாகம் பாதி பூமியிலிருந்து மேல் சிறுது வரை பரவிவுள்ளது. அக்னியும் இரண்டு பாகங்கள் ஆனது அல்லவா! அதில் முதல் பாதி பாகம் சூரியனிலிருந்து பூமி வரை பரவியுள்ளது. நீர் இரண்டு

பாகங்கள் ஆனது அல்லவா! அதில் முதல் பாதி பாகம் பூமி பாகம் மீது கடல் உருவத்தில் உள்ளது. பூமி இரண்டு பாகத்திலும் கூட முதல் பாதி பாகம் நாம் நீவாசிக்கிறோம். இந்த விதமாக ஆகாசம், காற்று, அக்னி, நீர், பூமினால் உலகம் ஏற்பட்டது. இதனை அக்ஷர பிரக்ருதி என்பார்கள். (அக்ஷர என்றால் அழியாதது என்று அர்த்தம்). இன்னும் ஷர பிரக்ருதி எப்படி ஏற்பட்டது? ஆகாசம், காற்று, அக்னி, நீர், பூமி மற்றும் இரண்டாவது பாகமான பாதி பாதி பாகங்கள் உள்ளது அல்லவா! அது ஒவ்வொன்றாக பிரிந்துப் போனது. இப்படி பிரிந்து போன மொத்தம் **25** பாகங்கள் ஆனது.

இரண்டாவது பாதிபாகமான…………ஆகாசம்……5 பாகங்கள். இரண்டாவது பாதிபாகமான………….காற்று…….5 பாகங்கள். இரண்டாவது பாதிபாகமான…………அக்னி…………5 பாகங்கள். இரண்டாவது பாதிபாகமான…………..நீர்………5 பாகங்கள். இரண்டாவது பாதிபாகமான……..……..பூமி………..5 பாகங்கள் மொத்தம் பாகங்கள் **25**. இந்த **25** பாகங்கள் ஒன்றோடு ஒன்றாக கலந்து ஜீவன் உடம்புகள் ஏற்பட்டது. பாதி ஆகாசம் **5** பாகமானது அல்லவா! அதில் முதல் பாகம் பரமாத்மா அம்சத்தை கூடி ஜீவன் ஆனது. காற்றில் ஒரு பாகத்தில் கலந்து மனசு ஏற்பட்டது. அக்னில் ஒரு பாகத்தில் கலந்து புத்தி ஏற்பட்டது. நீரில் ஒரு பாகத்தில் கலந்து சித்தம் ஏற்பட்டது. பூமில் பாகத்தில் கலந்து அஹம் ஏற்பட்டது. இப்படி முதல் ஆகாசம் பாகம் ஐந்து வேறு

பாகங்களில் சேர்ந்து ஜீவன், மனசு, புத்தி, சித்தம் அஹும் தயாரானது. இவற்றை ஆகாசம் தத்துவங்கள் என்று சொல்வார்கள் மற்றும் அந்தக்கரணங்கள் என்றும் சொல்வார்கள்.

ஆகாசம் முதல் பாகம் 1 + பரமாத்மா அம்சம் = ஜீவன்.

ஆகாசம் முதல் பாகம் 1 + காற்றில் 1 வது பாகம் = மனசு.

ஆகாசம் முதல் பாகம் 1 + அக்னி 1 வது பாகம் = புத்தி.

ஆகாசம் முதல் பாகம் 1 + நீரில் 1 வது பாகம் = சித்தம்.

ஆகாசம் முதல் பாகம் 1 + பூமில் 1 வது பாகம் = அஹும்.

**ஜீவன், மனசு, புத்தி, சித்தம், அஹும்** என்னும் ஐந்து ஆகாசத்திலிருந்து முதல் பாகத்திலிருந்து பிறந்தது என்று அடையாளித்து கொள்ள வேண்டும். வாயுகள் கூட ஐந்து பாகங்கள் ஆனது அல்லவா! அதில் முதலாவது ஆகாசம் தத்துவத்தில் இணைந்து மனசு ஆனது அல்லவா! இனி நான்கு பாகங்கள் மீதி இருக்கிறது அல்லவா! அதில் இரண்டாவது பரமாத்மா அம்சத்தில் இணைந்து நம் தேகத்தில் உள்ள வியான வாயு ஆனது. வாயு இரண்டு பாகம் ஆகாசத்தில் இரண்டாவது பாகத்தில் இணைந்ததினால் சமான வாயு ஏற்படும். வாயுவில் இரண்டாவது பாகம் அக்னியில் இரண்டாவது பாகத்தில் இணைந்ததினால் ஊதான வாயு ஏற்படும். காற்றில் இரண்டாவது பாகம் நீரில் இரண்டாவது பாகத்தில் இணைந்ததினால் பிராண வாயு ஏற்படும். காற்றில் இரண்டாவது பூமியில் இரண்டாவது பாகம் இணைந்ததினால் அப்பான வாயு ஏற்படும். இவற்றை வாயு தத்துவங்கள் என்று சொல்வார்கள். மற்றும் பஞ்ச பிராணங்கள் என்று சொல்வார்கள்.

காற்று இரண்டு பாகம் + பரமாத்மா அம்சம் = வியான வாயு

காற்று இரண்டு பாகம் + ஆகாசம் இரண்டாவது பாகம் = சமான வாயு

காற்று இரண்டு பாகம் + அக்னி இரண்டாவது பாகம் = ஊதான வாயு

காற்று இரண்டு பாகம் + நீர் இரண்டாவது பாகம் = பிராண வாயு

காற்று இரண்டு பாகம் + பூமி இரண்டாவது பாகம் = அப்பான வாயு

**வியான, சமான, உதான, பிராண, அப்பான வாயுகள் ஐந்து காற்று மேலும் இரண்டாவது பாகமிலிருந்து பிறந்தது என்று தெரிந்துக் கொள்ள வேண்டும்.** அக்னியும் ஐந்து பாகங்கள் ஆனது அல்லவா! அதில் முதலாவது ஆகாசம் தத்துவத்தில் இணைந்து புத்தியாக மாறிப்போனது. இரண்டாவது காற்றில் இணைந்து உதான வாயு ஆனது. இன்னும் அக்னியில் மூன்று பாகங்கள் மிச்சமிருக்கிறது. அதில் மூன்றாவது பாகம் பரமாத்மா அம்சத்தில் இணைந்து கண் தயாரானது. ஆகாசத்தில் மூன்றாவது பாகத்தில் இணைந்து காது தயாரானது. வாயுவில் மூன்றாவது பாகத்தில் இணைந்து தோல் ஏற்பட்டது. மற்றும் நீரில் மூன்றாவது பாகத்தில் இணைந்து நாக்கு ஏற்பட்டது. அப்படி பூமி பாகத்தில் மூன்றாவது பாகம் இணைந்து மூக்கு ஏற்பட்டது. இந்த விதமாகவே அக்னியில் தயாரான அவற்றை ஞான யேந்திரங்கள் என்று சொல்வார்கள். மற்றும் அக்னி தத்துவங்கள் என்று சொல்வார்கள்.

அக்னியில் மூன்றாவது பாகம் + பரமாத்மா அம்சம் = கண்கள்

அக்னியில் மூன்றாவது பாகம் + ஆகாசம் மூன்றாவது பாகம் = காது

அக்னியில் மூன்றாவது பாகம் + காற்று மூன்றாவது பாகம் = தோல்

அக்னியில் மூன்றாவது பாகம் + நீர் மூன்றாவது பாகம் = நாக்கு

அக்னியில் மூன்றாவது பாகம் + பூமி மூன்றாவது பாகம் = மூக்கு

**கண், காது, தோல், நாக்கு, மூக்கு என்னும் தகவல் சேகரிக்கும் பாகங்கள் ஐந்து அக்னி மூன்றாவது பாகத்திலிருந்து பிறந்தது என்று நியாபகம் வைத்துக் கொள்ள வேண்டும்.**

நீர் கூட ஐந்து பாகங்கள் ஆனது அல்லவா! அதில் ஒரு பாகம் ஆகாசம் இணைந்து சித்தமாக, இரண்டாவது பாகம் காற்றில் கலந்து பிராண வாயுகளாக, மூன்றாவது பாகம் அக்னியில் இணைந்து நாக்கு ஏற்பட்டது அல்லவா! இனி மிச்சமான நான்காவது பாகம் பரமாத்மா அம்சத்திலுள்ள ரசமாக **(ருசியாக)** தயாராகும். ஆகாசத்தில் நான்காவது பாகத்தில் இணைந்து சப்தமாக, காற்றில் நான்காவது பாகத்தில் இணைந்து தொடு உணர்ச்சி, அக்னியில் நான்காவது பாகத்தில் இணைந்து உருவமாக, பூமியில் நான்காவது பாகத்தில் இணைந்து சந்தனமாக **(வாசனையாக)** தயாரானது. இவற்றின் நீர் தத்துவங்கள் என்று சொல்வார்கள்.

நீரில் நான்காவது பாகம் + பரமாத்மா அம்சம் = ரசமாக **(ருசி)**

நீரில் நான்காவது பாகம் + ஆகாசம் நான்காவது பாகம் = சப்தம்

நீரில் நான்காவது பாகம் + காற்று நான்காவது பாகம் = தொடு உணர்ச்சி

நீரில் நான்காவது பாகம் + அக்னி நான்காவது பாகம் = உருவம்

நீரில் நான்காவது பாகம் + பூமி நான்காவது பாகம் = சந்தனம் (வாசனை)

**ருசி, சப்தம், தொடு உணர்ச்சி, உருவம், வாசனை என்னும் தகவல்களுக்கு சம்மந்தப்பட்ட ஐந்து நீரில் நான்காவது பாகத்திலிருந்து பிறந்தது என்று மறக்கக்கூடாது.** பூமி கூட ஐந்து பாகம் அனது அல்லவா! அதில் ஒரு பாகம் ஆகாசத்தில் இணைந்து அஹங்காரம், இரண்டாவது காற்றில் இணைந்து அப்பான வாயு, மூன்றாவது பாகம் அக்னியில் இணைந்து மூக்கு, நான்காவது பாகம் நீரில் இணைந்து சந்தனம் (வாசனை) தயாரானது அல்லவா! மற்ற ஐந்தாவது பாகம் பரமாத்மா அம்சத்தில் இணைந்து ஆசனவாய், ஆகாசம் ஐந்தாவது பாகத்தில் இணைந்து வாய், வாயு ஐந்தாவது பாகத்தில் இணைந்து கை, அக்னி ஐந்தாவது பாகத்தில் இணைந்து பாதங்கள், நீர் ஐந்தாவது பாகத்தில் இணைந்து லிங்கம் தயாரானது. இவற்றை கர்ம யேந்திரங்கள் என்பார்கள்.

பூமி ஐந்தாவது பாகம் + பரமாத்மா அம்சம் = ஆசனவாய்

பூமி ஐந்தாவது பாகம் + ஆகாசம் ஐந்தாவது பாகம் = வாய்

பூமி ஐந்தாவது பாகம் + காற்று ஐந்தாவது பாகம் = கை
பூமி ஐந்தாவது பாகம் + அக்னி ஐந்தாவது பாகம் = பாதம்
பூமி ஐந்தாவது பாகம் + நீர் ஐந்தாவது பாகம் = லிங்கம்

**ஆசனவாய், வாய், கைகள், பாதங்கள், பெண்களுக்கு பிறப்புறுப்பு ஆண்களுக்கு லிங்கம் பூமி ஐந்தாவது பாகத்தில் தயாரானது என்று நியாபகம் வைத்துக்கொள்ள வேண்டும்.** இந்த விதமாக பாதி பாகமாக மீதியாகிக்போன ஐந்து சக்திகள் மொத்தம் **25** பாகமாக, ஒன்றின் ஒன்று இணைந்து உலகத்தில் ஜீவம் உருவம் கொண்ட தேகங்கள் வந்தது. இதனை ஷரப்பிரக்ருதி என்னும் சேத்தன பிரக்ருதி என்று சொல்வார்கள். இப்படி அச்சேத்தனமான உலகம், சேத்தனமான ஜீவதேகங்கள் இணைந்து "பிரக்ருதி" என்னும் சொல்லப்படும். அதனால் பிரக்ருதியை பிரிந்து ஒன்று சேத்தன. இரண்டாவது அச்சேத்தன பிரக்ருதி என்னும் சொல்லலாம். **1.** சேத்தனம் என்றால் அனைத்து ஜீவராசி மொத்த தேகம் என்று அர்த்தம். இதனை ஷர என்னும், ஜெகத்தி என்னும் சொல்வார்கள். **2.** அச்சேத்தனம் என்றால் ஆகாசம், காற்று, அக்னி, நீர், பூமி என்பவை. இவற்றினை அக்ஷசர என்னும் சொல்வார்கள். அச்சேத்தனம் மற்றும் காற்று, ஆகாசம், அக்னி, நீர், பூமி மேலும் உலகம் ஏற்பட்டது. சேத்தனமினால் தேகங்களிலுள்ள ஜீவராசிகள் அச்சேத்தனங்கள் உலகத்தில் நிறைந்துப்போனது. என்றால் இப்போது மனிதன் தேகம் அடைந்திருந்த நாம் கூட பிரக்ருதியில் ஒரு பாகமே. பகவத்கீதாவில் விஞ்ஞானம் யோகத்தில் பரமாத்மா என்ன சொல்கிறார் என்றால் **"ஜீவராசிகளின் மரணம் பிறப்பையும் இந்த சேத்தன**

**அச்சேத்தன பிரக்ருதி செய்கின்றது, நான் காரணத்தை மட்டும் பார்த்துக் கொண்டுயிருப்பேன்"** என்னும் சொன்னார். மற்றும் "ஒவ்வொரு குணங்கள் இந்த பிரக்ருதினால் பிறக்கிறது என்னும் ஞானி தெரிந்துக் கொள்ளுவார்கள், பிரக்ருதி என் ஆதினத்தில் உள்ளது. ஜீவராசிகள் பாவம் புண்ணியங்களை அனுசரித்து என் பிரக்ருதியே அவர்க்கு கஷ்ட சுகங்கள், லாபம் நஷ்டத்தை ஏற்படுத்தும். நான் மட்டும் எல்லா வற்றையும் சாட்சியாக பார்த்துக் கொண்டுயிருப்பேன். இப்படிப்பட்ட என்னை தெரிந்துக் கொள்ளுவதற்கு யோகிகளுக்கு மட்டும் முடியும். நான் மேல் ஆகாசத்திலிருந்து பூமி வரை அனைத்து திசையில் வியாபித்து (பரவி), அச்சேத்தன பிரக்ருதியில் ஊசிமுனை அளவு சந்திலும் நான் உள்ளேன். அதே விதமாக சேத்தன பிரக்ருதியில் எல்லாம் தேகங்களில் பாதத்திலிருந்து சிரஷ்சு (தலை) வரை பரவி உள்ளேன். அதனால் எனக்கு தெரியாமல் இந்த ஷர அக்ஷர உலகத்தில் ஒன்றும் நடக்காது. இந்த ஷரா ஷர உலகத்தில் இரவு மற்றும் பகல் எந்த நேரத்திலும், எந்த இடத்திலும், நடந்தது, நடத்துக் கொண்டுயிருப்பது, நடக்கப்போகிறது எனக்கு தெரியும். அதனால் விஞ்ஞானம் யோகத்தில் **"எனக்கு தெரியும் பூதஜலமுலக்கு ஜெகத்தியில் நடக்கின்ற, நடக்கபோகின்றதும், இதில் எல்லாம் என்னை யாரும் அடையாலிக்கமாட்டன்"** என்று சொல்லினார், மற்றும் விஞ்ஞானயோகத்தில் **"அனைத்து பூதங்களுக்கு ஜென்மம் இந்த சேத்தனா சேத்தன பிரக்ருதிகள் செய்துக் கொண்டுயிருக்கும், நான் தனிமை கொண்டவன் அனைத்து**

**ஜெகத்திலுள்ள பிறப்புக்கு மேலும் மரணத்திற்கு”** என்று சொல்லினேன். இப்போது உனக்கும் மற்றும் யாருக்கும் ஷர அக்ஷர பிரக்ருதி எந்த விதமாக பிரளயம் சம்பவங்கள் செய்கின்றது என்னும்? கேள்வி வரலாம். அதனைப்பற்றி விவரித்து சொல்லிக் கொள்ளலாம். இந்த விஷயம் கடவுள் சொல்கிறார் என்றால் “உன் அச்சேத்தன (அக்ஷர) பிரக்ருதி ஐந்து பாகங்களாயிருக்கிறது அல்லவா! அதில் காற்று வீசுவதினால் எந்த பொருளும் தங்காது. பெரிய மலையையும் மேல் எடுத்து சுற்றி சில மையில் தூரத்தில் வீசிவிடும். பெரிய மரத்தையும் கீழ் வேருடன் பிடிங்கிவிடும். இவ்வளவு பலமான என் ஆதினத்திலுள்ள காற்று வீடுகளை, மரங்களை, பூமி மீதுவுள்ள பொருள்களை கவிழ்ந்துவிட செய்யும். பிரக்ருதி சக்தியில் ஒன்றான காற்று அதிகமாகி விட்டால் உலகத்தில் எந்த ஜீவராசிகள் இருக்காது. இனி அக்னியை எடுத்துக் கொண்டால் அதற்கு கீழ்படாத எந்த பொருளும் இல்லை. உலகத்தில் கல்களை, இரும்புகளும், மரங்களும், மனிதர்களும், அனைத்து ஜீவராசிகளை எரித்து சாம்பலாக்கிவிடும். பிறகு நீர் விஷயத்திற்கு வந்தால் இது அதிகமாகி விட்டால் அனைத்து உலகத்தை முழ்கடித்து விடும் என்னும் அதனுடன் அழிந்துவிடும். அதே விதமாக பூமி அசைந்தால் மேல் இருப்பது கீழ், கீழ் இருப்பது மேல் செய்து எல்லாவற்றையும் பூமி சமமாக செய்துவிடும். இந்த விதமாக என் பிரக்ருதியான ஐந்து சக்தி ஒரே தடவை அதிகமானால் எதுவும் சொல்ல வேண்டியதுயிருக்காது. இந்த பிரக்ருதியில் சேத்தனமாக நின்று இருந்து இந்த ஜீவ உருவமில் உலகமெல்லாம் என் பிரக்ருதி ஆதினத்தில் உள்ளது” என்று

சொல்லினார். அந்த விதமாக சொல்லிய கடவுள் வார்த்தை கேட்டு சில பேர் என்ன சொல்கிறார் என்றால்! நோய்கள் வந்து மரணமடைந்த ஜீவிகளை பிரக்ருதி கஷ்டப்படுத்தவில்லை அல்லவா? என்று சொல்கிறார்கள். அவர்களுக்கு பரமாத்மா என்ன சொல்கிறார் என்றால் **“மாயையில் மூடப்பட்ட நீங்கள் என்னை, என் மஹத்தியத்தை தெரியாமல் அப்படி சொல்லிகிறார் மற்றும் வேறு அல்ல அதன் ரகசியம் தெரியப்படுத்துகிறேன் பொறுமையாக கேளுங்கள்”** என்று சொல்லினார். “அனைத்து ஜீவராசிகள் பஞ்சபூதங்களில் தானே தயாரானது. இந்த தேகம் உருவம் உள்ளதை தானே சேத்தன பிரக்ருதி என்று சொல்கிறோம். இந்த பிரக்ருதியில் ஒரு காற்று அதிகம் வந்தால் இருமல், தும்மல்கள் வரும். இதனை தான் சளி பிடித்து இருக்கிறது என்று சொல்கிறோம். இதனால் ஜீவிகள் கவலைப்படுவதில்லையா? இன்னும் ஆஸ்துமா நோய் வருகின்றது. இதனினால் ஜீவிகள் கவலைப்படுவதில்லையா? அப்பான (கேஸ்டிக்) வாயு அதிகமானால் வயிர்வீக்கம் வலி பேதி வருகின்றது. இதனினால் கவலைப்படுவதில்லையா? உபவாயு தனஞ்ஜயவாயு எதிர்த்தால் கர்ப்பத்திலுள்ள குழந்தை வெளிய வராமல் போகும் அதனினால் ஜீவிகள் கவலைப்படுவதில்லையா? வியான சமான வாயுகள் எதிர்த்தால் தேகத்தில் உள்ள உறுப்புக்கள் சரி சமமாகயிருந்த பலம் இழந்துவிடும். ஒரு காற்றுக்கு ஜீவன் கவலை அனுபவித்து மரணம் அடையும் நிலை ஏற்படுகிறது. அப்படியே தேகத்திலுள்ள நீர் எதிர்த்தால் தேகமெல்லாம் நீர் நிறைந்துக்கொண்டு கால்கள் கைகள் வீக்கமாகிவிடும்.

அதனினால் ஜீவன் எவ்வளவோ கவலைப்பட்டு அனுபவிக்க வேண்டியது இருக்கும். மற்றும் மூத்திரம் (யுரின்) வியாதி வரும். வாயில் ஈரம் குறைந்துவிடும் மூளையில் ஈரம் குறைவதினால் தூக்கம் குறைவாகிவிடும், கால்கள் கைகள் கனமாகி (விருத்து) தொடர்பை இழக்க நேரிடும், பார்வை குறைவாகும், சத்தம் கேட்காது. மூக்குகளில் வாசனைகள் உணரமுடியாமல் போகும். நாக்கு ருசி தெரியாமல் போகும். இப்படி எது லோபமானால் (குறைந்தால்) ஜீவன் கவலைப்பட வேண்டியது இருக்கும் மற்றும் மரணம் அடைய வேண்டியது இருக்கும். சேத்தன பிரக்ருதியில் ஒரு பாகமான பூமி அசைவு அதிகமாகும்போது, கால்கள் கைகள் வேலை செய்யாமல் போவது வலிகள் வருவது உண்டாகும். மூலவியாதி வரும், சுகவியாதிகள் வரும். பல் வலிகள் வரும், மற்றும் முச்சுத்திணறல் வியாதிகள் வரும். இப்படி பூமி பாதித்து (வேதனை) செய்து கொன்றுவிடும். சேத்தன பிரக்ருதியில் உள்ள ஆகாசம் எதிர்த்தால் மூக்குக்குவுள்ள துவாரம் (ஓட்டை) முடிப்போய் சுவாசிப்பதற்கு கஷ்டமாகிவிடும். மூக்குகள் முழுமையாக மூடப்பட்டு சுவாசம் நின்று விடும். தொண்டையில் சதைகள் வீக்கமாகி தொண்டை துவாரம் மூடப்பட்டு உணவு சாப்பிடுவதற்கு நீர் குடிப்பதற்குக்கூட கஷ்டமாகும். மூத்திரனாலம் மூடிக்கொண்டுப்போய் மூத்திரம் போவதற்கு கஷ்டமாகும். மனசு நிலை சரியில்லாமல் மனோவியாதி வரும். மற்றும் பைத்தியமும் பிடிக்கும். இப்படி பல ரகமான தேகத்துக்கு சம்மந்தப்பட்ட வியாதிகள் வந்து ஜீவனை பாதித்து

கடைசிக்கு அதனால் தான் மரணம் அடையும் படி செய்கின்றது. இன்னும் சேத்தன பிரக்ருதியான அக்னி அதிகமாகும்போது எத்தனையோ வியாதிகள் வந்து ஜீவனை கொல்லுகிறது. இந்த விதமாக சேத்தன, அசேத்தன பிரக்ருதிகள் ஜீவன் மரணத்திற்கு நெருங்கும் படி செய்கின்றது. மற்றும் பிரக்ருதி ஒரு பாகத்தில் ஒரு பாகம் கூடி ஜீவனுக்கு ஜென்மத்தை கொடுக்கும். மற்றும் ஜீவன் மரணத்திற்கு என் பிரக்ருதியே காரணமாகும்". "சேத்தன, அசேத்தன பிரக்ருதியே அனைத்து ஜீவராசிகளுக்கு மரணத்தையும் பிறப்பையும் பாவம் புண்ணியங்கள் அனுசரித்துக் கொடுக்கின்றது. நான் பிரக்ருதிக்கு தலைமை தாங்கி இருக்கின்றேன். அதனால் உலகம் சக்கரம் போல் சுற்றுகின்றது நான் யார் பாவத்தையும் மற்றும் புண்ணியத்தையும் நீக்கமாட்டேன். எனக்கு உலகத்தில் எல்லோரும் சமம்தான். மற்றும் என் பக்தர்கள் மட்டும் எனக்கு மிக அதிகமாக பிரியம் கொண்டவர்கள். அவர்கள் பாவம் புண்ணியம் மட்டும் என்னால் கொடுக்கப்பட்ட ஞானம் என்னும் அக்னியில் எரிந்து சாம்பலாக்கி, அவர் அனுபவிக்க பயன்படாமல் போகும். உலகத்தில் என் பக்தர்கள் எனக்கு பிரியமானவர்கள். எனக்கு எப்போதும் சம்மந்தப்பட்டவர்கள். மேலும், நானே அவர், அவரே நான் என்று தெரியப்படுத்துகிறேன். அவருக்கு என்னிடமிருந்த ஞானம் சம்பிராப்தமாக தெரியும் படி செய்யுவேன் என்று உறுதிசெய்கின்றேன். அதனுடன் அவர் கர்மமும் பாவ புண்ணியங்கள் இரண்டும் இல்லாமல் என்னில் ஐக்கியமாகி போகுவார்கள். அதனால் தான் நான் என் கீதா

சாஸ்த்திரத்தில் என்னை மட்டும் நம்பிக் கொள் அர்ஜீனா உன்னை அனைத்து பாவங்களிலிருந்து விடுவிப்பேன் என்று சொல்லினேன். அர்ஜீணனுக்கு மட்டும் அல்ல யாராவது நான் சொல்லியதுப்போல என்னை நம்பிக்கொண்டவரை கண்டிப்பாக மாயை என்னும் கடலில் இருந்து வெளியே போடுவேன். நானே உலகம் அனைத்திலும் நிறைந்துவுள்ளேன். எனக்கு தெரியாமல் எதுவும் நடக்காது. எல்லாத்தையும் நடத்துவது நானே. அனைத்து ஜீவராசிகளில் ஆத்மா நானே என்னும் யார் என்னை தெரிந்துக் கொண்டு என்னை மனதில் ஒவ்வொரு நொடியும் மறக்காமல் இருக்கும் அப்படிப்பட்ட பக்தனுக்கு நான் மிக நெருங்கியவனாகயிருப்பேன். என் பக்தர்கள் என் பிரக்ருதிக்கு விருந்தினர்கள். என் பக்தனை என் பிரக்ருதி ஒன்றும் செய்யாது. என் பிரக்ருதிலுள்ள அக்னி எரிக்காது, என் பக்தன் எரியமாட்டான். என் பிரக்ருதிலுள்ள நீர் மூழ்காது, என் பக்தன் நனையமாட்டான். அப்படியே காற்றுக்கு அடித்துக் கொண்டு போகமாட்டான், பூமி கசக்காது, காய்ந்துப்போக மாட்டான், நனையமாட்டான், எரியமாட்டான், வெட்டபட மாட்டான், எல்லாத்துக்கும் விருந்தினராக (அதீதுடை) என்னை போலவே என் பக்தன் மாறிப்போகுவான். அவனே நான், நானே அவனாகுவேன் இதே மோக்ஷம். இதே ஜீவப்பிரம்மா ஐக்கிய சந்தானம்." என்னும் சொல்லிய கடவுள் இன்னும் என்ன சொல்லுகிறார் என்றால்! "ஒ ஜீவா என்னை மட்டும் நம்பிக்கொண்டு, அனைத்து வேலைகளிலும் அனைத்து அமைப்பில் என் நிராகார உருவத்தை தெரிந்துக் கொண்டு இரு. என்றால் யோகத்தில் சரியாக இருக்க வேண்டும். சிறிது காலத்திற்கு நீ என்னை

போலவே மாறிப்போவாய். நீ நானாகிய பிறகு பிரக்ருதியை தயார் செய்த நான் பிரக்ருதி என்னை ஒன்றும் செய்யாது. அப்போது நீ என்னிடம் ஐக்கியமாகியிருக்கும் போது பிரக்ருதி உன்னை ஒன்னும் செய்யாது" என்னும் பகவான் சொல்லினார். மற்றும் அனைத்து மனிதர்கள் பிரக்ருதியில் சிக்கிக் கொண்டு கவலைப்படாமல் தப்பித்துக் கொள்வதற்கு இன்று இருந்து ஞானம் என்னும் அக்னியை சம்பாதித்து கொள்வதற்கு முயற்சி செய்யுங்கள்.

## மோக்ஷம்

ஒவ்வொரு மனிதன் மோக்ஷம் என்றால் என்ன? என்று தெரிந்துக் கொள்ள வேண்டும். மோக்ஷத்தைப்பற்றி தெரிந்துக் கொள்ளாமல் போனால் மனிதன் ஆத்மாவை தெரிந்து கொள்ளுவதற்கு முயற்சி செய்யமாட்டான். யாராவது சொல்லும் போது அதனினால் எங்களுக்கு என்ன பிரையோஜனம் இருக்கிறது? என்று சொல்வார்கள். மோக்ஷம் மதிப்பு தெரிந்துக் கொள்ளாமல் போனால் மனிதன் வாழ்கை வாசனையில்லாத பூவுக்கு சமமானது ஆகும். மோக்ஷம் பற்றி அர்த்தம் தெரிந்துக் கொள்ளாத மனிதன் **"புற்றுக்குள்ளே செதுல்கள் பிறக்காதா இறக்காதா"** சொன்னது போல் இருந்தாலும் இல்லாமல் போனலும் ஒன்று தான், மோக்ஷத்தைப்பற்றி தெரிந்துக் கொள்ளாதவர்கள் பக்தி, வழி முடிவு தெரியாத பயணம் போல் இருக்கும். சிலர்களுக்கு மோக்ஷத்தைப்பற்றி தெரிவித்து, மோக்ஷத்திற்கு சேர்ந்தாலும் ஜென்மிப்பது தேவையில்லை என்னும், அதன் மதிப்பு தெரியாத அஞ்ஞானிகள் "அங்கு போய் சும்மாயிருந்தால்

பொழுது எப்படி போகும்? இறந்து பிறந்து கொண்டுயிருந்தால் தானே பொழுது போகும்" என்று சொல்லிக் கொண்டுயிருக்கிறார்கள். மற்றும் "சும்மாயிருந்தால் நல்லா இருக்காது, பூலோகத்தில் பிறந்து எல்லாம் சுகத்தை அடைந்தால் தான் நல்லா இருக்கும்" என்று சொல்லிக்கொண்டுயிருப்பார்கள். இன்னும் "உங்களுக்கு பைத்தியம் பிடித்து மோக்ஷம் மோக்ஷம் என்று சொல்லிக்கொண்டுயிருக்கிறார்கள், அது எங்களுக்கு பிடிக்காது" என்னும் ஞானிகளை மிரட்டிக் கொண்டுயிருக்கிறார்கள். மோக்ஷம் என்றால் என்ன என்னும் விஷயம் தெரியாதவர்களுக்கு பரமாத்மாவைப்பற்றி சொல்லினால் காற்று இல்லாத அறையில் போட்டு கதவுகள் மூடியது போலாகும், மற்றும் அவர் கேட்காமல், அங்குயிருந்து எப்போது வெளியேருவேன் என்னும் ஆலோசனை செய்து தப்பித்துக் கொள்ளுவார்கள். மோக்ஷத்தைப் பற்றி தெரிந்துக் கொள்ளாதவர்கள் யாரும் பரமாத்மாவை பற்றி தெரிந்துக் கொள்வதற்கு இஷ்டப்படமாட்டார்கள். மேலும் பரமாத்மா விஷயங்களைப்பற்றி ஆலோசனை செய்யுபவரை அவர்கள் இஷ்டப்படமாட்டார்கள். மற்றும் ஒவ்வொரு மனிதன் முதல் மோக்ஷத்தைப்பற்றி தெரிந்துக் கொள்ள வேண்டும். மோக்ஷத்தைப் பற்றி சிறிது விவரித்துக் கொண்டு பார்த்தால் அது அஞ்ஞானிகள் நினைத்துப் போல ஒரு லோகம் அல்ல. மோக்ஷம் எங்கயோ இருக்கிறது என்று சிலர்கள் நினைத்துக் கொண்டுயிருப்பார்கள். அது எங்கும் இல்லை அனைத்திலேயும் உள்ளது. மோக்ஷம் அடைந்த ஜீவன்

காலமாகவே மாறிப்போகுவார்கள். காலமே அவரானப் பிறகு எப்படி பொழுதுப்போகும் என்னும் பிரச்சனை எப்படியிருக்கும்? மோக்ஷம் அடைந்த ஜீவன் அனு அனுவில் நிறைந்துப்போய், உலகத்திலுள்ள கஷ்டத்தை அடையாமல், எல்லாத்துக்கும் சாட்சியாக இருப்பான். மற்றும் அங்கு போய் என்ன செய்ய வேண்டும் பிரச்சனை இருக்காது. மோக்ஷத்தைப் பெற்ற ஜீவன் பிரக்ருதிவுள்ளே வெளியே உலகமெல்லாம் இருப்பான், மற்றும் பிரக்ருதி ஒன்றும் செய்யாது. சாதாரண மனிதன் பிரக்ருதிக்கு உள்ளே இருப்பதினால் அவரை பிரக்ருதி நாசனம் செய்கின்றது. மோக்ஷம் அடைந்த ஜீவன் அக்னியும் அவரே ஆனதினால் அக்னிக்கு எரியுவான் என்னும் பிரச்சனை இருக்காது. மோக்ஷம் அடையாத ஜீவன் அக்னியாகததினால் அக்னிக்கு எரிந்துப்போகுவான். மோக்ஷம் அடைந்த ஜீவன் குணங்கள் இல்லாமல், அது அவனை ஒன்னும் செய்யாது. சாதாரண மனிதன் குணங்களில் இருப்பான். குணங்கள் மனிதனை கஷ்டப்படுத்துகிறது. மோக்ஷம் அடைந்த ஜீவன் கண்ணுக்கு தெரியாமல் பலான இடத்தில் இருக்கிறேன் என்னும் அடையாலிக்க முடியாத நிலையில் இருக்கின்றான். சாதாரண மனிதனை அடையாளிக்கலாம். மோக்ஷம் அடைந்த ஜீவன் பிரளயத்தில் உலகமெல்லாம் நாசனமானாலும் அவர் நாசனமாகமல் இருப்பார். மோக்ஷம் அடைந்த ஜீவன் உலகத்தில் எல்லாம் தேகங்களுக்கு உள்ளே வெளியே இருப்பார். மோக்ஷம் அடையாத மனிதர்கள் தேகம் உள்ளே இருப்பார்கள். மோக்ஷம் அடைந்த ஜீவன் எல்லா இடத்திலும் பார்த்துக்கொண்டுயிருப்பார்கள். அதனை

அடையாதவன் அப்படி பார்க்கமாட்டான். மோக்ஷம் அடைந்த ஜீவன் ஒருயிடத்திலிருந்து வேறு இடத்திற்கு போகுவது தேவையில்லாததினால் அனைத்தில் இருப்பார்கள். அதனை அடையாதவன் முயற்சியுடன் ஒரு இடத்திலிருந்து வேறு இடத்திற்கு போக வேண்டியது இருக்கும். மோக்ஷம் அடைந்த ஜீவன் அக்னிக்கு எரியமாட்டான், நீருக்கு நனையமாட்டான், காற்றுக்கு போகமாட்டான் மற்றும் அவன் பயப்படமாட்டான். அதனை அடையாத ஜீவன் அக்னிக்கு, காற்றுக்கு, நீர்க்கு நித்தியம் (எப்போதும்) பயப்பட வேண்டியது இருக்கும். மோக்ஷம் அடைந்த ஜீவனுக்கு ஆகாரம் தேவையில்லை. அதனை அடையாதவனுக்கு ஆகாரம் நித்தியம் தேவையாகும். மோக்ஷம் அடைந்தவன் நிரந்தரமான சுகத்தை அடைந்து இருப்பார்கள். அதனை அடையாதவன் ஒரு நொடி காலமும் சுகத்தையும் அனுபவித்துக் கொண்டு எப்போதும் திருப்தியில்லாமல் இருப்பார்கள். மோக்ஷம் அடைந்தவன் எப்போதும் கவலைப்படவேண்டியது இல்லை. அதனை அடையாதவன் பல கவலைகளை அனுபவிக்க வேண்டியது இருக்கும். மோக்ஷம் அடைந்தவன் விட யாரும் பெரியதாக இருக்கமாட்டார்கள். அதனை அடையாத மனிதனுக்கு கடவுள் என்பவர் ஒருவர் பெரியவராக இருக்கின்றார். மோக்ஷம் அடைந்தவன் இப்போது ஒரு ரகமாக இருக்கின்றான், அடையாதவன் பல ஜென்மங்கள் குழந்தை பருவம், இளைஞர் பருவம், இளமை பருவம், முதுமை என்னும் நிலை அடைகின்றார்கள். இந்த விதமாக சொல்லிக்கொண்டு போனால் பல விதமாக மோக்ஷத்திற்கு

மதிப்பு இருக்கிறது. அதனைப்பற்றி முழுமையாக சொல்வதற்கு யாரும் சொல்ல முடியாது. இது எல்லாம் தெரிந்துக் கொண்ட நாம் இப்போது இருக்கின்ற நிலை நல்லதா? அல்லது மோக்ஷம் நிலை நல்லதா? என்னும் நீங்களே ஆலோசனை செய்ய வேண்டியது இருக்கும். மோக்ஷத்தை பற்றி தெரியாதவர்கள் அதனினால் என்ன வேலை என்று சொல்கின்றார்கள். மோக்ஷம் முன்பு இப்போது நாம் அனுபவிக்க வேண்டிய நிலை மலை முன்பு சின்ன கல்லுக்கு சமமானது என்று அவர்களுக்கு தெரியாது. மோக்ஷம் மதிப்பு தெரியாதவர்கள் பரமாத்மாவை பற்றி தெரிந்துக் கொள்வதற்கு முயற்சி செய்யமாட்டார்கள். மற்றும் முதலில் ஒவ்வொருவரும் மோக்ஷத்தை பற்றி தெரிந்துக் கொள்ள வேண்டும். மோக்ஷத்தை பற்றி தெரிந்துக்கொண்ட பிறகு அதனை அடைவதற்கு வழியை தேட வேண்டும். மோக்ஷம் அடைவதற்கு ஞானம் தேவை. ஞானம் அடைவதற்கு குரு தேவை. குரு கிடைத்தப்பின் அவரினால் மோக்ஷம் கிடைப்பதற்கு சாத்தியம். மோக்ஷம் சாம்ராஜ்ஜியத்தை அடைவதற்கு வழி ஒரு குரு தான். மற்றும் குருவை அடைந்து அவரினால் ஞானம், யோகம் அடைந்து ஜென்மங்கள் இல்லாமல் போவதற்கு மோக்ஷம் சம்பாதித்துக் கொள்ளுங்கள், **60** அல்லது **70** வருடம் காலம் வாழ்கை இந்த ஜென்மத்தில் **20** அல்லது **30** வருடம் உலக படிப்புகள் படித்து, பெரிய டிகிரியை சம்பாதித்து கொண்டு அந்த மதிப்பு இறக்கும் வரை மட்டுமே இருக்கும். டாக்டர்கள், இன்ஜினியர்கள் பட்டம் அடைந்த அதன் மதிப்பு சிறிது காலம் வரை இருக்கும். எவ்வளவோ பணம்

சம்பாதித்தாலும் அதனுடன் இருப்பது நாம் சிறிது காலம் மட்டும் தான், உலகத்தில் ஒவ்வொரு ஜென்மம் சிறிது காலமே இருக்கும். மேலும் இந்த ஜென்மம் கூட சிறிது காலமே இருக்கும். இருட்டில் கயிரை பாம்பு என்னும் நினைத்ததுப்போல, அஞ்ஞானத்தில் நிரந்தரமாகாதது, நிரந்தரம் என்னும் நினைத்துக் கொண்டு நாம் தவறாக எண்ணிக் கொள்கிறோம். அந்த தவறானதை தெரிந்துக் கொண்டு நிரந்தரமாகாத ஜீவிதத்தை புறக்கணிக்கப்பட்டு நிரந்தரமான மோக்ஷத்திற்காக முயற்சி செய்ய வேண்டும். மனிதர்களான நமக்கு எவ்வளவோ விவரமும் புத்தியிருக்கிறது. அதனை உபயோகித்து இதற்கு முன்பு மோக்ஷத்திற்காக முயற்சி செய்தவர்களை பற்றி ஆலோசனை செய்தாலும் நம்மை விட அதிகம் புத்திவுள்ளவர்கள் அதற்கு முயற்சி செய்ததாக தெரியும். மோக்ஷம் என்னும் சொல்லி ஏமாற்றம் செய்து திருட்டு பக்தர்கள் உலகத்தில் இருக்கலாம். அவர்களை பார்த்து மோக்ஷம் என்பது கெட்டது, அதனை முயற்சி செய்யுபவர்கள் எல்லோரும் கெட்டவர்கள் என்னும் நினைத்துக் கொள்ளாமல், மோக்ஷம் என்னும் சாராம்சம் மீது, ஒரு தடவை உங்கள் பார்வையில் பாருங்கள். மோக்ஷத்தை பற்றி தெரிந்துக் கொள்ளாத ஜீவிதம் பயன்படாதது என்று தெரிந்துக் கொள்ளுங்கள். மோக்ஷத்தை பற்றி தெரிந்துக் கொண்ட ஜென்மம் சார்த்தமானது என்று தெரிந்துக் கொள்ளுங்கள்.

## எமலோகம் - சொர்க்கலோகம்

ஜீவன்கள் பூமி மீது பிறந்து நித்தியம் கர்மத்தை செய்துக் கொண்டுயிருக்கிறார்கள். ஜீவிதமில் பிறந்ததிலிருந்து இறப்பு வரை கஷ்டசுகத்தை அனுபவித்துக் கொண்டுயிருக்கிறார்கள். ஜீவித காலத்தில் சுயநிலைக்காக செய்வது, செய்யாததை செய்து புண்ணியம் பாவம் சம்பாதித்துக் கொண்டுயிருக்கிறார்கள். செய்யும் வேலையில் கண்ணுக்கு தெரியாமல் வரும் பாவம் புண்ணியம் பயம் சிறிதளவு கூட இல்லாமல் இருக்கிறார்கள். செய்யும் வேலையில் பாவம் வருகிறது என்னும் தெரிந்தாலும் எமலோகத்திற்கு போன நாள் தானே நரகம் அனுபவிக்க வேண்டியது, எந்த நாளோ வரும் நரகத்திற்கு பயப்பட்டு இந்த நாள் நமக்கு சாதகமான வேலைகளை எதற்கு செய்யக்கூடாது என்னும், நரகம் வந்த நாள் பார்த்துக் கொள்ளலாம் என்று நினைத்து கொண்டுயிருக்கின்றார்கள். பாவபுண்ணியங்கள் இருக்கிறது என்னும் தெரியும், அதனை தவறாமல் அனுபவிக்க வேண்டும் என்னும் தெரியும், மற்றும் சிறிதளவும் பயம் இல்லாமல் செய்கிறார்கள் என்றால் அதனின் உண்மையான நிலை தெரிந்துக் கொள்ளவில்லை என்று அர்த்தமாகின்றது. கர்மம் காரணத்தினால் ஜீவன் பூமி மீது பிறக்கின்றான். கர்மம் என்றால் பாவம் புண்ணியம் கலப்பினம். பாவத்தினால் நரகம், புண்ணியத்தினால்சுகம் சம்பவிக்கின்றது. சிலரை கேட்கும்போது நரகம் எமலோகத்தில், சொர்க்கம் தேவேந்திரலோகத்தில் இருக்கிறது என்று தெரிவிக்கின்றார்கள். மற்றும் பாவம் செய்தவரை எமலோகத்தில் எமன் எமனிகர்கள் பல கவலைகள்

கஷ்டங்கள் படுத்துகிறார்கள் என்னும், அங்கு கவலைகள் எல்லாம் அனுபவித்தப்பின் புண்ணியம் இருந்தால் சொரக்கலோகத்திற்கு போய் சுகங்களை அனுபவிக்கின்றார்கள் என்று சொல்லுகிறார்கள். பகவத் கீதாவில் சாங்கிய யோகத்தில் "ஜீவன் தேகத்திலிருந்து போனப்பின் தாய் கர்ப்பத்தில் முழுமையாக தயாராகி பிரசவித்த வேறு ஒரு சிசு தேகத்தில் நுழைகின்றான். எப்படி என்றால் "பழையவஸ்திரம் விட்டு புதிய வஸ்திரம் அணிந்ததுப்போல்" என்னும் பகவான் சொல்லும் போது நாம் அஞ்ஞானத்தினால் ஜீவன் வேறு இடத்திலுள்ள எமலோகத்திற்கு போகுவார் என்னும் நினைத்துக் கொள்கிறோம். அப்படி நடக்காது என்னும் தெரிந்தவர்கள் சொல்லி சிலப்பேர் கேட்காமல், ஜீவன்கள் எமலோகத்திற்கு போய் நரகத்தை அனுபவிக்காமல் போனல் எமதர்மராஜா எங்குப்போகுவார்? எமனிகர்கள் எங்குப்போகுவார்கள்? எமலோகம் எதற்கு? என்னும் வாதிக்கின்றார்கள். இவர் வார்த்தை பிரகாரம் போனால் பகவத்கீதாவில் சொல்லிய வாக்கியம் பொய்யாகும். கீதாப்பிரகாரம் போனாலும் இவர்கள் வாதனை பொய்யாகும். இரண்டும் பலமான வாதனைகள் தான் பரமாத்மா வாதனை எப்போதும் பொய் ஆகாது. மனிதர்கள் வாதனை கூட பொய்யாகாது மற்றும் சிறிது தெரிந்துக் கொள்ள வேண்டியது இருக்கும். மனிதர்கள் பிறந்ததிலிருந்து கஷ்டசுகத்தை அனுபவிக்கின்றார்கள். சிலப்பேர்கள் அதிக சுகத்தை அனுபவிக்கின்றார்கள். சிலப்பேர்கள் அதிக கஷ்டத்தை அனுபவிக்கின்றார்கள். ஒருவன் எந்த வேலை செய்யாமல் சும்மாயிருந்தாலும் அஷ்டஐஸ்வர்யத்தை

அனுபவிக்கின்றார்கள். ஒருவன் ஒரு நாள் எல்லாம் எவ்வளவோ சிரமப்பட்டாலும் அவனுக்கு வயிறு நிறைவாக சாப்பாடு கிடைக்கவில்லை. பரமாத்மா அம்சம் எல்லோரிலேயும் சமமாக இருக்க சிலப்பேர்க்கு கஷ்டம் எதற்கு நடக்கின்றது என்னும் யாரும் ஆலோசனை செய்யவில்லை. பணமிருக்கிறவன் சுகப்படுகிறான், இல்லாதவன் கவலைப்படுகிறான் என்று நினைக்கின்றார்கள். மற்றும் கஷ்ட சுகத்திற்கு ஆதாரமான காரணத்தினால் பாவம் புண்ணியங்களை கவனிக்காமல் இருக்கின்றார்கள். தான் கஷ்டப்பட்டு வேறு அவர் கஷ்டத்தை பார்த்துக் கொண்டுயிருந்து, அது எங்கிருந்து வந்தது என்னும் ஆலோசனை செய்ய வில்லை. நாம் பூர்வ ஜென்மத்தில் சம்பாதித்துக் கொண்ட பாவம் புண்ணியம் முடிவு தானே! என்று தெரிந்துக் கொள்ள வில்லை. அப்படி என்றால் தெரிந்தவர் சொல்லினாலும் நம்பாமல் இருக்கிறார்கள். யாரும் நம்பினாலும் நம்பாமல் போனாலும் பூர்வஜென்மத்தில் செய்த பாவம் புண்ணியம் இந்த ஜென்மத்தில் தனக்கு தெரியாமலே மனிதன் அனுபவிக்கின்றான். அது எப்படி என்றால் ஒரு பணியாளர் ஒரு மாதமெல்லாம் வேலை செய்தால் அதன் விளைவு மாதக்கடைசியில் சம்பளம் வரும். அந்த சம்பளம் என்றால் முதல் மாதம் செய்த முடிவு இரண்டாவது மாதம் எல்லாம் அத்தியாவசிய பொருட்களுக்கு உபயோகித்து அனுபவிக்கின்றோம். அப்படியே ஒரு கூலிக்காரன் நாள் எல்லாம் தோட்டத்தில் வேலை செய்த அதன் முடிவு இரண்டாவது நாள் அனுபவிக்கின்றான் மற்றும்

விவாசயி ஒரு வருடமெல்லாம் கஷ்டப்பட்டு விவசாயம் செய்து வெள்ளாமை செய்து அந்த வெள்ளாமை இரண்டாவது வருடம் அனுபவிக்கின்றான். இந்த விதமாகவே மனிதர்கள் ஒரு ஜென்மத்தில் சம்பாதித்து கொண்ட பாவம் புண்ணியம் முடிவு இரண்டாவது ஜென்மத்தில். இரண்டாவது ஜென்மத்தில் சம்பாதித்து கொண்ட பாவம் புண்ணியங்கள் மூன்றாவது ஜென்மத்தில் அனுபவிக்கின்றான். மற்றும் ஸ்ரீகிருஷ்ணர் பரமாத்மா சொல்லியது ஜீவன் தேகத்தை விட்டவுடனே வேறு தேகத்தில் செல்கிறான். மேலும் எமலோகத்திற்கு போகவில்லை. அதனால் நானே ஜீவன் போன ஜென்மத்தில் செய்துக்கொண்ட பாவம் புண்ணியம் பிரகாரம் பூமி மீது கஷ்ட சுகத்தை அனுபவிக்கின்றான். ஒரு ஜீவி எல்லா கெட்ட வேலைகள் செய்ய வில்லை. அப்படியே எல்லா நல்ல வேலைகள் செய்ய வில்லை. நல்ல வேலையில் புண்ணியம், கெட்ட வேலையில் பாவம் யாருக்கும் தெரியாமலே வருகின்றது. அதனால் எந்த ஜீவனுக்கும் பாவம் புண்ணியம் இணைந்துயிருக்கும். ஜீவன் தான் ஜீவிதம் காலம் அதிகமாக நல்ல காரியங்கள் செய்துயிருந்தால் புண்ணியம் அதிகமாக கிடைக்கும். அப்படியாகாமல் ஜீவித காலத்தில் அதிகம் கெட்ட வேலைகள் செய்துயிருந்தால் பாவம் அதிகமாக வரும். மற்றும் ஒரு ஜீவம் அதிகம் சுகம் அனுபவிப்பது, ஒரு ஜீவம் அதிகம் கஷ்டம் அனுபவிப்பது பூமி மேல் நடக்கின்றது. எமதர்மராஜன் எங்கே? எமனிகர்கள் எங்கே? எமலோகம் எங்கே? என்னும் பதிலுக்கு சமாதானம் என்னவென்றால்! கீதா சாஸ்த்திரத்தில் “தண்டனை அதிகாரிகளில் எமன் நான் தான்” என்னும் பரமாத்மா

சொல்லினார். மற்றும் எமதர்மராஜன் எல்லாம் தேகத்தில் நிவாசிக்கும் ஆத்மா என்னும், எமனிகர்கள் ஆத்மாவினால் ஊக்கத்துடன் ஒரு ஜீவனை கஷ்டப்படுத்துகின்ற அனைத்து உருவம் என்று தெரிகின்றது. அதனால் பெரியோர்கள் **“நானருபேன கால கிங்கரம்”** என்று சொல்லினார். இனி எமலோகம் என்னும் சொல்லினால் ஜீவன் கஷ்டப்படும் இடம் தான். மற்றும் பூலோகமே எமலோகம் என்று தெரிகிறது. பாவகாரணத்தினால் வரும் கஷ்டங்களை எமதர்மராஜா? அல்லது எமனிகர்களா? கஷ்டப்படுத்துவது என்னும் சந்தேகம் சிலர்களுக்கு வரலாம். அதற்கு பதில் என்னவென்றால்! தன் தேகத்தில் வந்த கஷ்டங்கள் எமதர்மராஜா அளிப்பது என்னும், அப்படியாகாமல் அவரை விட வேறு உருவத்தில் வந்த ஒவ்வொரு கஷ்டம் எமனிகர்கள் படுத்திகிறார்கள் என்று தெரிகின்றது. நம் தேகத்தில் எப்போதும் ஆத்மா இருக்கிறது அல்லவா! ஆத்மாவுக்கு தெரியாமல் ஒன்றும் நடக்காது, மற்றும் அனைத்து வேலைகளுக்கு ஆத்மா சாட்சியாகயிருக்கின்றது. தேகத்திலுள்ள ஆத்மாவே நவகிரகத்தினால் பாவம் புண்ணியம் உணர்ந்து கொண்டு கர்மசக்கரத்திலிருந்து மறு ஜென்மத்திற்கு அனுபவிக்கும் படி செய்கின்றது. நாம் பாவம் புண்ணியம் அனுபவிக்கின்றபோது, அவற்றின் மாயைனால் உணராமல் இருகின்றோம். மாயையே பாவம் புண்ணியம் உண்மை நிலை தெரியாமல் செய்கின்றது. குருடன் யானை கால் பிடித்துக் கொண்டு கம்பம் என்று நினைத்துக் கொண்டு யானையை அடையாளிக்காமல் போனது போல், மாயை என்னும் குருட்டுதனத்தினால் கண் தெரியாதவர்கள் பாவம் புண்ணியங்கள் அனுபவிக்கின்றவர்

எப்படி பிரம்மிக்கின்றார்கள் என்றால்! நம்முடையை மூட்டை நாமே சுமக்கிறோம் என்னும், யாரும் சுமக்க வில்லை அல்லவா! என் மூட்டையை நானே சுமக்கிறேன் அல்லவா! என்னும் நினைத்துக் கொள்வதே மாயை. நம்மூட்டையை நாம் சுமந்து, சுமக்க வைக்கின்றது வேறு ஒன்று உள்ளது, அது தான் கர்மம். நம்மிடமிருந்து மூட்டையை வேறு ஒரு இடத்திற்கு கெண்டு போக வேண்டும் என்றால் கர்மத்தின் விருப்பம் (சங்கல்பம்) அல்லவா! நம் சுமக்கிறது. முயற்சிக்கு காரணம் கர்மம். மற்றும் அந்த வேலைக்கு காரணம் கர்மம் தான். செய்கின்ற வேலை நம்முடையது அல்லது வேறவர்ருடையது கனம் தூக்கின்றது தானே! மூட்டை கனம் மற்றும் கஷ்டம் அனுபவிக்கிறது ஜீவன் தானே! மற்றும் (தண்டனை) அனுபவிக்கிறவன் ஜீவன். தண்டனை கொடுக்கிறவன் காலன் (ஆத்மா) அப்படியே கர்மத்தினால் எத்தனையோ வேலை செய்து அதில் வரும் கவலைகள் அனுபவித்து கொண்டே இருக்கின்றோம். ஒரு மனிதன் கனம் எடுத்துக் கொண்டு எனக்கு தேவைக்காக நான் எடுத்துக் கொண்டு போகிறேன் என்று நினைகிறான். நிஜமாக நடக்கின்றது பாவம் அனுபவிக்கிறான் என்று தெரிந்துக்கொள்ளாமல் போனான். இறந்துப்போன நாய்யை இழுத்துக் கொண்டுபோகிறவன் எனக்கு இந்த நேரத்தில் எமன் நாய் பிணத்தை இழுக்கின்ற தண்டனை கொடுத்தார் அல்லவா! என்று தெரிந்துக் கொள்ளாமல் போனான். கத்திரிக்காய் கூடையை எடுத்துக் கொண்டு வியாபாரம் செய்கின்றவன் எனக்கு இந்த நேரத்தில் எமன் கத்தரிக்காய் கூடையை தலை மேல் வைத்து, அதனை

சுமந்து ஊர் எல்லாம் திரியும் படி செய்கின்றார் அல்லவா! என்னும் தெரிந்துக் கொள்ளாமல் போனான். ஜலதோசம் (சளி) பிடித்த நோயாளி வேறு கிணற்று தண்ணீர் குடித்ததினால் சளி பிடித்தது என்று மாயையில் பிரமிக்கிறான். சளிக்கு காரணம் பாவம், அந்த பாவம் இப்போது அனுபவிக்கும் நேரம் வந்தது மேலும் எமன் அந்த பாவம் காரணத்தினால் எனக்கு சளி கொடுத்து தலை வலியை கொடுத்தார். என்னும் தெரிந்துக் கொள்ளாமல் போனார். வயிற்று வலி வந்தவனுக்கு எதற்கு வந்தது? தேகமுள்ளே கஷ்டத்தை யார் அளிக்கிறார்? என்னும் தெரிந்துக் கொள்ளாமல் போகின்றான். ஆனால் ஞானியானவன் தவறு இல்லாமல் தண்டனை இருக்காது, மற்றும் ஒவ்வொரு கவலைகளை எமன் நியாயமாக எவ்வளவு கொடுக்க வேண்டுமோ அவ்வளவு கொடுப்பார், என்னும் தெரிந்துக் கொண்டுயிருப்பான். எமன் நம் உள்ளவே நிவாசம் இருந்து நம்மை ஊக்கபடுத்துகின்றார். ஒருவனை ரயில் கீழ் விழுகும் படி செய்து அவனுக்கு எவ்வளவு கஷ்டம் கொடுக்க வேண்டுமோ அவ்வளவு கஷ்டம் படும்படி, எவ்வளவு காயம் ஆகவேண்டுமோ அவ்வளவு காயமாகும் படி செய்கின்றார். அந்த விதமாக எத்தனையோ கர்மத்தை நாம் எப்போதும் அனுபவிக்கின்றபோது, மாயைனால் சிறியதளவு கூட தெரிந்துக் கொள்ளாமல் எமன் எங்கேயோயிருக்கின்றான், எமலோகம் எங்கேயோயிருக்கின்றது என்று நினைத்துக் கொண்டுயிருக்கின்றோம். பாம்பை எறும்பு இம்சிக்கிறது மேலும் பாம்புக்கு அந்த சமயத்தில் எறும்பு எமனிகர்கள் என்று தெரிந்துக் கொள்ளாமல் போகின்றோம். எறும்பை ஓணான் திண்கின்றது. மற்றும் அந்த சமயத்தில் எறும்புக்கு

ஓணான் எமனிகர்கள் என்னும் கிரகிக்காமல் போகின்றோம். ஆடுகளை மனிதர்கள் செதுக்கிவிடுகிறார்கள் ஆடுகளுக்கு அந்த சமயத்தில் எமனிகர்கள் மனிதர்கள் உருவத்தில் உள்ளார் என்று தெரிந்துக் கொள்ளாமல் போகின்றோம். காட்டில் ஒரு விலங்கை புலி செதுக்கியது என்னும் நினைத்துக் கொள்ளுங்கள். அந்த சமயத்தில் அந்த விலங்குக்கு புலி எமனிகர் என்னும் தெரிந்துக் கொள்ளாமல் போகின்றோம். ரிக்ஷாவில் ஒருவன் உட்கார்ந்திருக்கின்றான், ஒருவன் ரிக்ஷாவை கஷ்டப்பட்டு இழுக்கின்றான். அங்கு உட்கார்ந்திருப்பவன் சுகமாக இருக்கின்றான், வண்டியை இழுப்பவன் கஷ்டத்தை அனுபவிக்கின்றான். அதனைப் பார்த்த நாம் உட்கார்ந்திருப்பவன் அவன் புண்ணியத்தை அனுபவிக்கின்றான். ரிக்ஷாவை இழுப்பவன் அவனுடைய பாவத்தை அனுபவிக்கின்றான் என்னும் நாம் சிறிதளவு கூட தெரிந்துக் கொள்ளாமல் போகின்றோம். இப்படி உலகத்தில் நிஜமாக என்ன நடக்கின்றது என்று மாயையினால் தெரிந்துக் கொள்ளாமல் போகிறோம். நிஜமாக நடந்தது ஒன்று இருந்தால் நாம் நினைத்தது வேறு ஒன்று இருக்கும். மாயை விட்டு உண்மையாக நடக்கின்றது என்ன? செய்கின்றவர் யார்? என்னும் தெரிந்துக் கொண்டால் எமலோகம் எங்குயிருக்கின்றது, எமனிகர்கள் யாராகயிருக்கலாம் எமன் யார் என்னும் நிஜமாக தெரியும். சில பேர் நல்லவர் “நாங்கள் கெட்ட வேலைகள் செய்ய வில்லை அல்லவா! பகவான் எங்களை அதிகமாக கஷ்டப்படுத்துகின்றார். கெட்டவர்கள் கெட்ட காரியங்களை செய்கின்றப்போது அவரை சுகப்படுத்திக்

கொண்டுயிருக்கின்றார். கடவுளிடம் நியாயம் இருக்கிறதா" என்னும் சொல்கின்றார்கள். சில பேர் புத்தி குறைவானவர்கள் தெய்வ பக்தர்களை பார்த்து "பக்தர்களுக்கு கூட கஷ்டங்கள் இருக்குமா! கடவுள் உங்களை கஷ்டப்படுத்தமாட்டார் அல்லவா"! என்னும் கேலியாக பேசுகிறார்கள். இதற்கு பதில், "யார் பாவத்தையும் யார் புண்ணியத்தையும் ஆத்மா நீக்காது" என்னும் பகவத்கீதையில் பகவான் சொல்லினார். மற்றும் "எனக்கு யார் பாவம் புண்ணியம் சம்மந்தமில்லை" என்று சொல்லினார். மற்றும் இந்த ஜென்மத்தில் நல்லவர்களானலும் போன ஜென்மம் பாவத்தினால் கஷ்டங்கள் வரும். அதனால் தான் கடவுளிடம் நியாயம் உள்ளதா என்று நல்லவர்கள் சொல்லக்கூடாது. கெட்டவர்கள் போன ஜென்மத்தில் செய்த புண்ணியத்தினால் சுகம் இந்த ஜென்மத்தில் அனுபவிப்பார்கள். இந்த ஜென்மத்தில் செய்த கெட்ட வேலை முடிவு பிறகு வரும் ஜென்மத்தில் தவறாமல் அனுபவிப்பார்கள். அப்படியே இந்த ஜென்மத்தில் நல்லவர்கள் செய்த நல்ல வேலை முடிவுகள், பிறகு வரும் ஜென்மத்தில் தவறாமல் அனுபவிப்பார்கள். பக்தர்களும் கஷ்டம் அனுபவிக்கின்றதற்கு காரணம் போன ஜென்மத்தில் செய்துக் கொண்ட பாவமே. இப்போது சிலர் இந்த விதமாக கேட்கலாம். பாவம் செய்தால் முடிவு அனுபவிக்க வேண்டியது தானா? அல்லது தப்பித்துக்கொள்வதற்கு வேறு மார்க்கம் உள்ளதா? அதற்கு பதில் ஞானயோகத்தில் **"அனைத்து பாவங்களில் இருந்து நீ அதிகம் பாவங்கள் செய்துயிருந்தாலும் அழுக்கு**

**தண்ணிர் இருந்து கப்பலில் தாண்டியதுபோல் ஞானம் என்னும் கப்பலில் இருந்து பாவங்களை தாண்டுவாய்.” என்னும் பரமாத்மா சொல்லினார்.** மற்றும் எவ்வளவோ பாவம் செய்துயிருந்தாலும் ஞானத்தினால் தப்பித்துக் கொள்ளலாம். அக்னிக்கு விறகுகளை எரிக்கும் குணம் இருப்பது போல், ஞானத்திற்கு பாவத்தை இல்லாமல் செய்யும் குணம் உள்ளது. மற்றும் யார் ஞானத்தை தெரிந்துக் கொண்டுயிருக்கிறார்களோ அவன் பாவம் ஞானம் என்னும் அக்னியினால் எரிந்து போய், அனுபவிக்க வேண்டியதை தப்பித்துக் கொள்ளுவதற்கு முடியும். ஞானம் வேண்டும் என்றால் பரமாத்மாவை அனுசரிக்க வேண்டியது தான். சில பக்தர்கள் ஞானமார்க்கத்தை அனுசரித்து உலகத்தில் வரும் கஷ்டத்திற்கு பொருத்துக் கொள்ளாமல் பரமாத்மா பக்தர்கள் அல்லவா! ஞானம் உள்ளவர் அல்லவா! எங்களுக்கே கஷ்டம் வருகின்றது என்னும் ஞானம் மாரக்கத்தை விட்டு விடுவார்கள். இதனுடன் கடவுள் வார்த்தை பொய் என்று கூறுகின்றார்கள். பரமாத்மா சொல்லிய சொல் எப்போதும் பொய்யாகாது என்னும் தெரிந்துக் கொள்ளாமல் போனார்கள். அக்னியில் எத்தனையோ விறகுகள் எரிந்துப்போகும் விதமாக ஞான அக்னியில் அனைத்து கர்மங்கள் பஸ்மமாகிவிடும். பாவம் புண்ணியங்களும் இரண்டும் இல்லாமல் போவதற்கு ஆரம்பித்து, சிறிது காலத்திற்கு இரண்டும் இல்லாமல் போய் ஜீவன் பரமாத்மாவில் ஐக்கியம் ஆகின்றார். பரமாத்மாவை சிறிது காலம் நம்பினால் கர்மம் எல்லாம் போகும் என்றால் எப்படியாகும்? ஒரு விறகு செமை எரிவதற்கு ஒரு மணி நேரம் பிடிக்கும் வண்டி விறகு எரிவதற்கு ஒரு நாள் பிடிக்கும்.

அதுபோலவே **100** வண்டி விறகு எரிவதற்கு சில மாதங்கள் பிடிக்கும். விறகுகள் அதிகமாகயிருந்தால் எரியும் நேரம் அதிகமாகும். அதுபோலவே கர்மம் என்னும் விறகுகளை ஞான அக்னியினால் எரித்து கொண்டே இருக்கும். கர்மம் முழுமையாக எரியும் வரை ஜீவன் பிராரப்தகர்மத்தை அனுபவிக்க வேண்டியது இருக்கும். பக்தர்கள் கர்மத்தை ஒரு பக்கம் அனுபவிக்கின்றபோது வேறு ஒரு பக்கம் ஞானஅக்னி எரித்துக்கொண்டு இருக்கின்றது என்று தெரிகின்றது. எமலோகம் இங்கே இருக்கின்றது, எம தர்மராஜா, எமனிகர்களும் இங்கே உள்ளார்கள். நாம் அனுபவிக்கின்ற கஷ்டங்களே நரகம் என்னும், தேவதைகள் தேவேந்திரன் தேவலோகம் எல்லாம் இங்கேவுள்ளது என்னும், நாம் அனுபவிக்கின்ற சுகங்கள் சொர்க்க சுகங்கள் என்று தெரிகின்றது. மற்றும் உண்மை தெரிந்துக் கொண்டு எமலோகத்திற்கு சொர்க்கலோகத்திற்கு எட்டாமல் இருக்கின்ற பரமாத்மாவை எட்டிக் கொள்ள வேண்டும் என்று வேண்டிக் கொள்கிறோம்.

## தேவதைகள் - ராக்ஷசைகள்

உலகத்தில் பல தேவதைகள் உள்ளார்கள். மற்றும் ராக்ஷசர்களும் உள்ளார்கள். உலகத்தில் இரண்டு ஜாதிகள் மனிதர்களில் ஆதியிலிருந்து இப்போதும் உள்ளது. அதுவே **1.**தேவ ஜாதி **2.**ராக்ஷச ஜாதி. ஞானம் உள்ளவர்கள் இந்த இரண்டையும் அடையாளிக்கலாம். மற்றும் அவர் எந்த ஜாதிக்கு சேர்ந்தவர் என்னும் தெரிந்துக் கொள்ளலாம். இந்த இரண்டு ஜாதிகள் எப்படி ஏற்படுகின்றது

என்றால்! குணங்களை பொருத்து தெரிகின்றது. இந்த குணங்கள் உள்ளவர் ராக்ஷசர்கள் என்னும், இந்த குணங்கள் இருப்பவர் தேவதைகள் என்னும் அடையாளிக்கலாம். பகவத்கீதையில் “தெய்வசுர சம்பத்வி பாகயோகம்” பகவான் தேவதைகள் குணங்களை, ராக்ஷசர்கள் குணங்களை தெரிவித்தார். மற்றும் அவர்கள் நடந்துக்கொள்வதும் கூட தெரிவித்து உள்ளார். இனியும் ஸ்ரீகிருஷ்ணபரமாத்மா என்ன சொல்லினார் என்றால் “துவபூதா சர்கலோகேஷ்மின் தெய்வசுர ஏவச்சா” “லோகத்தில் தேவதைகள் ராக்ஷசர்கள் என்னும் இரண்டு விதமான ஜீவராசிகள் பூமி மீது பிறக்கின்றது” என்று சொல்லினார். மற்றும் பூமி மீது தேவதைகள், மேலும் ராக்ஷசர்கள் உள்ளார் என்று தெரிகின்றது. தேவதைகள் **33** கோடியிருப்பார் என்னும் நம்பிக்கை. அவர் எத்தனை பேர் இருந்தாலும் விஷ்ணு, ஈஸ்வர, பிரம்மா என்னும் மேலும் இந்திரன் இந்திரனின் நிர்வாகத்தால் உள்ளவர்கள் தேவதைகள் அல்லவா! அவர் எங்கு இருக்கிறார்கள்? அவர் பூமி மீது எங்கும் காணப்படமாட்டார் என்னும் சிலருக்கு சந்தேகம் வரும். அதற்கு பதில் என்னவென்றால்! பரமாத்மா சொல்லியதுப்போல் தேவதைகள் எல்லோரும் பூமி மீது உள்ளார்கள் மற்றும் நாம் அடையாளிக்காமல் போகின்றோம். நமக்கு பார்வையில்லாததால் எதிரில் ஒன்றும் இல்லை என்னும் நாம் அவர்களை பார்க்காமல் தேவதைகள் பூமி மீது இல்லை என்று சொல்லிகிறோம். நமக்கு உள்ள ஸ்தூல கண்களில் பார்த்தால் எல்லாம் மனித உருவங்களே காணப்படும். மற்றும் மனித உருவமிலுள்ள தெய்வீகம்

காணப்படாது. மனிதர்களில் உள்ள தெய்வீகம் அடையாளித்து இவர் பலான கடவுள் என்னும் தெரிந்துக் கொள்ளுவதற்கு ஞானப்பார்வை வேண்டும். ஞானபார்வை இல்லாமல் இருந்தாலும் ஸ்தூல பார்வைக்கு மேல் உருவங்களே காணப்படும். அதனால் எல்லோரும் மனிதர்களே என்று நினைத்துக் கொள்ள வேண்டும். ஸ்தூல பார்வையில் தேவதைகளை அடையாளிக்க முடியாது. சிறிது ஞானசக்தில் உள்ளவர் எல்லோரும் தெய்வ அம்சத்தில் உள்ளவரே என்றால் தேவதைகளே. தேவதைகள் எல்லோரும் சமமானவர் அல்ல. எதற்கு என்றால் அவரிடம் ஞானசக்தி சரி சமமாகயிருக்காது. அதிகம் ஞானசக்தி பெற்றவர் விஷ்ணு தான். அங்கு இருந்து யோகசக்தி குறைவாகயிருக்கின்றவர் ஈஸ்வர, பிரம்மாவில் இருந்து கிழ் உள்ளவர்கள் வரை இருப்பார்கள். அப்படியே அஞ்ஞானமாக இருப்பவர் ராக்ஷசர்கள். அவர்களுக்கும் கூட எல்லோரும் ஒரே ரகமாக இருப்பார்கள். அவர்கள் அஞ்ஞானம் பொருத்து அவரிடம் சின்னது பெரியது என்னும் வித்யாசம் இருப்பதற்கு வாய்ப்பு உள்ளது. இதனைப்பற்றி ஞானசக்தி உள்ளவர் எல்லோரும் தேவதைகள் என்னும், ஞானசக்தியில்லாதவர் எல்லோரும் ராக்ஷசர் என்று தெரிந்துப் போகின்றது. தேவதையான விஷ்ணு, ஈஸ்வர, பிரம்மா என்னும் முதலியவர்கள் இந்த கலியுகத்திலும் உள்ளார்களா? விஷ்ணு, ஈஸ்வர, பிரம்மா முதலியவர்கள் பெரிய ஞானியான கடவுளிடம் ஐக்கியமாகமல் கலியுகத்திலும் உள்ளாரா? அவருக்கு மோக்ஷமில்லையா? அவருக்கு எல்லோரை போலவே ஜென்மங்கள் எடுத்துக் கொண்டே இருக்கிறாரா?

என்னும் சந்தேகம் எல்லோருக்கும் வரும். அவர்களுக்கு என் பதில் என்னவென்றால்! உலகத்தில் ராஜா, யுவராஜா, மந்திரி, முக்கிய மந்திரி, சேனாதிபதி என்னும் எத்தனையோ பதவிகள் இருக்கிறது அல்லவா! முதலில் இருந்து ஒரு நபர் ராஜாவாக, ஒரு நபர் மந்திரியாகயிருக்கிறார்களா, அப்படி யாருமில்லை. ராஜா, மந்திரி முதலியன பதவிகள் மட்டும் அப்படியே இருக்கிறது. அந்த பதவிகளில் ஒருவர் பின் ஒருவர் அவரது அருகதை பொறுத்து நிர்ணயிக்கப்படுகிறது. இந்த விதமாக உலகத்தில் விஷ்ணு, ஈஸ்வர, பிரம்மா என்னும் பதவிகள் இருக்கும். யோகசக்தியை பொருத்து விஷ்ணு, ஈஸ்வர, பிரம்மா முதலியன பதவிகள் ஜீவிகளுக்கு கொடுக்கப்படுகின்றது. ஒரு ஜீவன் உலகத்தில் எல்லாவற்றிலும் யோகசக்தியில் முதலாமானவன் என்று நினைத்துக் கொள்ளலாம். அந்த ஜீவன் தேகத்தை அடைந்து பூமி மேல் பிறப்பான். யோகசக்தியில் முதலாமானவன் ஆனதினால் தேவதை பதவி என்னும் விஷ்ணு பதவிக்கு அவர் அருகதைப்பெற்றவர். மற்றும் அந்த ஜீவன் நாட்டில் விஷ்ணு. அந்த ஜீவன் அதே ஜென்மத்தில் யோக சாதனை பெற்று முழுமையான யோகசக்தி சம்பாதித்துக் கொண்டவனாகி கடவுளிடம் ஐக்கியம் ஆகின்றான். அதனால் பூர்வகாலத்தில் வைகுண்டத்தில் உள்ள விஷ்ணுக்கூட யோகம் செய்தார் என்று தெரிகின்றது. அதே அம்சத்திற்கு தகுந்தவர் எத்தனையோ பேர்கள் யோகம் செய்தார்கள் என்று தெரிகின்றது. விஷ்ணு பதவியை ஒரு ஜீவன் சிறிது காலம் இருந்து கடவுளில் ஐக்கியமாகியப்பின், அந்த சீட்டு (இடம்) தகுந்து வேறு ஒரு ஜீவி உலகத்தில்

தயாராகியிருக்கும். ராஜா பதவியில் இல்லாமல் போன உடன் நாட்டில் வேறு ஒருவர் அந்த பதவிக்கு அருகதை பெற்று உலகத்தில் விஷ்ணு, ஈஸ்வர, பிரம்மா முதலிய பதவிகள் இல்லாமல் போன உடனே அந்த அம்சத்திற்கு தகுந்த ஞானசக்தி (யோக சக்தி) தெரிந்தவர்கள் தயாராகிக் கொண்டுயிருப்பார்கள். மற்றும் விஷ்ணு, ஈஸ்வர, பிரம்மா முதலியவர்கள் தேகம் அணிந்து இருக்கிறார்கள். அவர்களும் கூட மோக்ஷத்திற்காக முக்கியமான யோகத்தை செய்கின்றார்கள். அவர் அவர்களில் உள்ள யோகசக்தி சம்பூர்ண நிலை அடையும் போது பரமாத்மாவில் ஐக்கியமாகின்றார்கள். மறுபடியும் வேறு ஜீவன்கள் அவர் அம்சத்திற்கு தகுந்தவர்கள் அவர் பதவி மற்றும் பெயரை அடைகின்றார்கள். இங்கு சில பேர்கள் ஒரே காலத்தில் (நேரத்தில்) ஒரே அம்சத்திற்கு அடைந்தவர் இருவர் ஜீவன் இருப்பார்களா! ராமன், பரசுராமன் விஷ்ணு அம்சத்தை அடைந்தவர் தானே என்னும் நினைக்கலாம். அதற்கு என் பதில். ஒரு நேரத்தில் ஒரு அம்சத்திற்கு அடைந்த இரண்டு ஜீவன்கள் இருப்பதற்கு எப்போதும் முடியாது. இனி ராமன், பரசுராமன் என்னும் சொல்லினாலும் இருவர்கள் விஷ்ணு அம்சத்தை அலங்கரித்தவர்களாக ஆகியிருந்தால் இருவர் ஒரு நேரத்தில் விஷ்ணு அம்சத்திற்கு சரியாக இருக்கமாட்டார்கள். சிறிது காலம் பரசுராமனுக்கும் சிறிது காலம் ராமனுக்கும் விஷ்ணு வம்சம் இருக்கும். என்றால் சிறிது காலம் ஒரு ஜீவன் விஷ்ணு, மற்றும் சிறிது காலம் வேறு ஒரு ஜீவன் விஷ்ணு. ராமனுக்கு திருமணம் ஆகும் வரை விஷ்ணு என்னும் சொல்லுக்கு பரசுராமனே அருகதை பெற்றவர்.

அதுவரை யோகசக்தியில் அவரை விட உலகத்தில் யாரும் இல்லை. ராமன் திருமணம் சமயத்தில், பரசுராமன் ராமனை எதிர்ப்பட்ட நேரத்தில், யோகசக்தியில் அதிகம் கொண்டவர் ராமனே ஆனார், பரசுராமன் யோகசக்தியை ராமன் மீறியவர் அப்போதுயிருந்து ராமன் ஜீவிதம் எல்லாம் ராமனே விஷ்ணு ஆனதுப் போல தெரிகின்றது. மற்றும் ராமன் பரசுராமன் இருவரும் விஷ்ணு வம்சத்தை சேர்ந்தவர் என்று தெரிகின்றது. இந்த விதமாக **33** கோடி தேவதைகள் அம்சங்கள் உள்ளது. அந்த அம்சத்திற்கு தகுந்த ஞான சக்தி உள்ள ஜீவன் அந்த தேவதைகளாக சொல்லப்படுகின்றார்கள். நடந்த காலத்தை பிரித்துக் கொண்டு பார்த்தால் மச்சந்திரன் விஷ்ணு பதவிக்கு, அவர் சிஷ்யன் கோரகுமாரன் ஈஸ்வர பதவிக்கு, அருகதைப் பெற்றார் என்று தெரிகின்றது. அந்த காலத்திலும் மற்றும் இந்த காலத்திலும் விஷ்ணு, ஈஸ்வர, இவர்களிலிருந்து இறுதிவரை அருகதைப் பெற்று யோகசக்தியில் இருந்தார்கள். சில பேர் அவரிலுள்ள மாயையினால் அவர் அருகதை அவருக்கே தெரியாமல் போனது. சில பேர் தங்கள் அருகதை தெரிந்துக்கொண்டு உள்ளார்கள். பகவத்கீதையில் பரமாத்மா சொல்லியது போல் பூமி மீது சஜீவமாக தேவதைகள் எல்லோரும் இருக்கிறார்கள். அவர்கள் பரமாத்மா மீது பக்தியாக யோகம் செய்துக் கொண்டேயிருக்கிறார்கள். ஞானிகள் என்றால் ஞான சக்தியிருப்பவற்கு (தேவதைகளுக்கு) எதிராகயிருப்பவர்கள் எல்லோரும் ராக்ஷசர்கள். இவரிடம் ஞானசக்தி இருக்காது. எல்லாம் தங்கள் சக்தியினால் நடக்கின்றது என்று நினைத்துக் கொண்டுயிருபார்கள். பரமாத்மா

விஷயம் இவர்களுக்கு எதிராகயிருக்கும். பல பயங்கரமான பாவங்கள் சம்பாதித்துக் கொள்ளுவராகயிருப்பார்கள். ராக்ஷசர்கள் எல்லோரும் அதிகமாக ஆசை மீறி கோரிக்கைகளை வேண்டுவார்கள். அவர்களிடம் கர்வம் தாண்டவமாடும். மகத்தான கோரிக்கை சுகத்தை விட வேறு சுகங்கள் பெரியது இல்லை என்று சொல்லுவார்கள். மற்றும் ஆசை என்னும் கயிற்றினால் கட்டியவர்களாக சுகத்தை வேண்டும் என்னும் ஆசைப்பட்டு, அந்த சுகத்திற்காக தனத்தை அதிகமாக அநியாயமான வழியில் சம்பாதிக்கின்றார்கள். இன்னும் என்னை விட யாரும் தெரிந்தவர்கள் இல்லை என்னும் அவர்கள் இஷ்டம் போல பூஜைகள் செய்கின்றார்கள். இப்படிப்பட்ட ராக்ஷசர்களை பகவத்கீதையில் **“குருவை, துவேசிப்பவர்களை நல்லதை கெட்டதாக கூறுபவரை ஆனால் இந்த மனிதர்களை ராக்ஷச கர்பத்தில் ஜென்மிக்கும் படி செய்து அவரை மாயையில் துக்கத்தை அடையும் படி செய்யுவேன். இந்த விதமாக ராக்ஷசர்கள் வயிற்றில் ஜென்மித்து ஜென்மஜென்மத்திற்கு அஞ்ஞானமாக ஆகும் படி செய்து என்னை தெரிந்துக் கொள்ளும் ஞானம் என்பது தெரியாமல் போகும்”** என்று தெரிவித்து உள்ளார். மற்றும் உலகத்தில் அஞ்ஞானத்திலிருந்து ராக்ஷச ஜென்மம் எடுக்காமல் ஞானம் மார்கத்தை தொடர்ந்து ஞானசக்தியை சம்பாதித்துக் கொண்டு தேவதைகள் வயிற்றில் ஜென்மித்து, ஜென்ம ஜென்மத்திற்கு யோகசக்தி அதிகமானவராக இறுதிக்கு பரமாத்மாவில் ஐக்கியமாக வேண்டும் என்று தெரிவிக்கிறோம். இதுவரை சொல்லினாலும் சிலருக்கு இனியும் சந்தேகமிருந்தால்

கீதாசாஸ்த்திரத்தில் அக்ஷரபரப்பிரம்மாயோகத்தில் ஸ்ரீகிருஷ்ணர் **"அ பிரம்மா பூவானலோகஹ புனாரவாரதுனோ அர்ஜீனா! ம முபேதியது கவ்ந்தேயே! புனர்ஜன்மன வித்யதே" "பிரம்மலோகம் எங்களுடையது முதலியன லோகம் எல்லாம் மறு படியும் ஜென்மம் இருக்க வேண்டும். ஆனால் என்னை (பரமாத்மா) அடைந்தப்பின் மறுபடி ஜென்மம் வராது என்னும் சொல்லினார் அல்லவா!** இந்த வார்த்தையினால் லோகங்கள் வேறு சொல்லியது போல், அங்கு தேவதைகள் இருக்கிறது என்று தெரிகிறதே! என்று கேட்கலாம். அதற்கு என் பதில் தேவதைகள் எல்லாம் இங்கே இருக்கிறார்கள். அவர்களுக்கு நெருக்கமாக பிறக்க வேண்டும் என்றால் எவ்வளவோ புண்ணியம் செய்து இருக்க வேண்டும். அவரில் பிறப்பதே அவர் லோகத்தில் பிறப்பது. அப்படி புண்ணியம் செய்து அவரில் பிறந்தப்பிறகு அவருக்கு மறு படி ஜென்மம் இருக்கும். மற்றும் என்னை அடைந்தவனுக்கு மறு படி ஜென்மம் இல்லை. மற்றும் வேறு அல்ல. அப்படியே ராஜவித்யாராஜகுஹ்யா யோகத்தில் **"தரைவித்திய மம் சோமப்பம் புத்த பாபா எஜ்வருஷ்ய சொர்கதிம் பிரத்யாந்த் தெபுன்யா மசயத்தியா சுரேந்திரலோக மஷரன்திதிவ்யான் திவி தேவபோகன்" "தேதம் புக்த்துவ சொர்க்கலோகம் விஷ்சாலம் ஷினேபுண்ணிய மர்த்திய லோகம் விஷ்யான்தினி ஏவம் திரயி தர்ம மனு பிரசன்னா காத்தா கத்தம் காம காம லாபன்யந்தே" "யாஜிக்குலு, சொமபனிகுலும் பாவமில்லாதவராக என்னால் தான் சொர்க்கம் சேர்ந்து இருக்கின்ற புண்ணியம் ஜென்மங்கள்,**

**திவ்யமான இன்பம், திவ்ய சுகங்கள் அனுபவிப்பார்கள். அப்படி சொர்க்க சுகங்கள் அனுபவித்தப்பிறகு தகுந்த லோகத்திற்கு வருவார்கள். இப்படி ஆசைப்படுபவராக புண்ணியம் சம்பாதித்துக் கொண்டவர்களாக எப்படி இருப்பார்களோ அப்படி இருப்பார்கள். அவருக்கு நிரந்தரமில்லாத சுகங்களே கிடைக்கும்" என்று பரமாத்மா கூறினார்.** இங்கு கூட சொர்க்கலோகம் வேறு ஒன்று இருக்கிறது என்று பல பேர் தவறாக நினைக்கின்றார்கள். புண்ணியம் செய்தவற்கு சொர்கம் இங்கே உள்ளது. அவர்கள் சொர்க்க சுகங்களை இங்கே அனுபவிக்கின்றார்கள். புண்ணியம் பலன் முடிந்த உடனே கஷ்டபடும் ஜென்மம் மறு படியும் எடுக்கின்றார்கள். அதற்காக நாம் அனுபவமில் நல்ல சுகம் அடைந்தவரை மேல் நிலையில் இருக்கின்றார்கள் என்னும், கஷ்டம் படுபவனை குறைவாக நிலையில் உள்ளார் என்று சொல்கிறோம். அப்படியே பணக்காரனுக்கு ஏழைக்கு வித்தியாசிக்கும் நேரத்தில் அவன் எங்கே இவன் எங்கே என்று சொல்லிக்கொண்டு இருப்போம். இந்த வார்த்தையில் கூட அவனுக்கு இவனுக்கு எவ்வளவோ தூரமாகயிருக்கின்றது. அந்த தூரம் என்னவென்று அர்த்தம் செய்துக் கொள்ள வேண்டும். அந்த வித்தியாசம் பூமி மீது இருக்கிறது என்று தெரிந்துக் கொள்ள வேண்டும். அவன் மேல் நிலையில் இவன் குறைவான நிலையில் இருக்கின்றான் என்று சொல்கிறோம். அவன் மேல் நிலை இவன் கீழ் நிலை பூமி மீது இருக்கிறது என்று தெரிந்துக் கொள்ள வேண்டும். அப்படியே ஒருவன் நன்றாக வாழ்ந்து சுகத்தை

அனுபவித்தப்பிறகு அவன் கஷ்டப்படுகின்றான் என்னும் நினைத்துகொள்ளலாம், அப்போதுக்கூட அவன் குறைவான நிலையில் இருக்கின்றான் என்று சொல்கின்றோம். சீரழிவு என்றால் குறைந்த நிலை அந்த குறைவான நிலை பூமி மேல் இருக்கின்றது என்று தெரிந்துக் கொள்ள வேண்டும். புண்ணியம் செய்தவன் பூமி மீது சொர்க்க சுகங்கள் அனுபவிக்கின்றான். பாவம் செய்தவன் பூமி மீது நரகம் அனுபவிக்கின்றான். மேல் லோகம் கீழ் லோகம் என்பது எல்லாம் பூமி மீது உள்ளது. யாருடைய லோகம் அவனுடையது, அவன் லோகத்திற்கு இவன் வரமாட்டான், இவன் லோகத்திற்கு அவன் வரமாட்டான் என்னும் ஞானியை அஞ்ஞானியை வித்தியாசத்தைப் பொருத்து தகுந்த நேரத்திலும் சொல்லிக் கொண்டுயிருப்போம். ஒரு நாள் குருவாகயிருந்த திரு வீரப்பிரம்மம் சிஷ்யனாக இருந்த சித்தையாவை லோகம் எப்படியிருக்கிறது என்னும் கேள்வி கேட்கும் போது யாருடைய லோகம் அவனுடையது சாமி பதிலாக சித்தையா சொல்லினார். பரமாத்மா கூட நான் மூன்று லோகத்திலேயும் இருக்கிறேன் என்று சொல்லினார். நான் இல்லாதயிடம் இல்லை என்று கூறினார். கடைசிக்கு லோகத்தைப் பற்றி தெரிந்துக் கொள்ள வேண்டும் என்றால் ஞானதுருஷ்டியில் (ஞானபார்வையில்) மட்டும் தெரிந்துக் கொள்ளுவதற்கு முடியும். எல்லா லோகங்கள் பூமி மீது உள்ளது. இவற்றைப்பற்றி முழுமையாக தெரிந்துக் கொள்ள வேண்டும் என்றால் கஷ்டமானது என்று நினைக்கலாம். மற்றும் ஞானம் பிரகாரம் விவரித்துக் கொண்டால் சுலபமாக அர்த்தமாகும்.

முக்கியமாக இருக்கிறது மூன்று லோகம் தான். அதில் ஒவ்வொன்று லோகத்தில் **108** உபலோகங்கள் உள்ளது. மொத்தம் **324** லோகங்கள் நம் தலையில் குணங்கள் உருவத்தில் உள்ளது. ஒரு ஜீவன் அவன் கர்மம் பிரகாரம் தேகம் அடைந்து பூமி மீதுவுள்ள லோகத்தில் சிக்கிக் கொண்டுயிருக்கிறான். யார் லோகம் அவனுக்கு நன்றாக காணப்படும். இவற்றினை விவரித்துக் கொண்டுப்போனால் இப்போது நேரம் இல்லை. மேலும் மீதியிருந்த லோகத்தை பற்றி விவரித்துக் கொண்டு, நரகங்கள் கஷ்டங்கள், சொர்க்கசுகத்தையும் ஜீவன் இங்கே அனுபவிக்கின்றார் என்று தெரிவிக்கின்றோம். அப்படியேனும் சொர்க்கலோகம் நரகலோகம் யெனில் ஏதாவது இருந்தால் பாவங்கள் புண்ணியம் இரண்டையும் ஜீவன் அங்கு அனுபவித்தால், இங்கு பூமி மீது பிறக்க வேண்டியது தேவையில்லை தானே! பாவம் புண்ணியங்கள் காரணத்தினால் நாம் ஜென்மம் எடுக்கிறோம் என்னும் நன்றாக தெரிந்து, பாவம் புண்ணியங்கள் எங்கேயோ அனுபவித்து வருகிறோம் என்றால் அதற்கு அர்த்தமே இல்லை. வேறு லோகத்தில் பாவம் புண்ணியங்கள் அனுபவித்தால் இங்கு ஜென்மிப்பது தேவையில்லை. மற்றும் எல்லா லோகங்கள் இங்கே உள்ளது என்னும், தேவதைகள் எல்லோரும் இங்கேயிருக்கிறார்கள் என்று தெரிந்துக் கொள்ள வேண்டும். பரமாத்மா கூட இதே எண்ணங்களில் சொல்லினார். அந்த எண்ணங்களை அர்த்தம் செய்துக் கொள்ளலாமல் நாமே தவறாக புரிந்துக் கொண்டுயிருக்கிறோம். பரமாத்மா தெரிவித்த கீதா சாஸ்த்திரத்தை பரமாத்மா எண்ணங்கள்

பிரகாரம் அர்த்தம் செய்துக் கொள்ள வேண்டும் என்றால் எவ்வளவோ ஞானம் தெரிந்துயிருக்க வேண்டும். அப்படியாகாமல் போனால் வேறு விதமாக அர்த்தமாகும், யார் ஞானம் பொருத்து அவனுக்கு அர்த்தமாகும். அதனால் தான் இந்த காலத்தில் ஒவ்வொருவர் ஒவ்வொரு விதமாக சொல்கின்றார்கள். எங்கள் பார்வையில் வக்ரமார்க்கத்தால் அர்த்தம் செய்துக் கொண்டவற்கு பரமாத்மா மறுபடியும் மனித உருவத்தில் வந்து சொல்லினாலும் அர்த்தம் செய்துக் கொள்ளலாமல் சொல்லியவர் நம்மைபோல் மனிதன் தானே! எங்களை விட இருவருக்கு அதிகம் தெரிந்து இருக்குமா? இந்த கர்வம் விடாமலிருந்தால் பிரையோஜனம் இருக்காது. நாம் எந்த நாள் கர்வத்தை விட்டு நமக்கு தெரியாத அறியாத உண்மை இன்னும் எவ்வளவோ இருக்கிறது என்னும் எண்ணங்களுக்கு வந்த நாளே நல்லா இருப்போம் என்று தெரிவிக்கிறோம். மற்றும் எனக்கு நல்லா தெரியும் என்னும் கர்வத்தை விட்டவர், தேவதைகள் அவர்கள் லோகம் இங்கேயிருக்கிறது என்று தெரிந்துக் கொள்ள வேண்டும். மற்றும் ராக்ஷசர்கள் அவர் லோகங்கள் இங்கு உள்ளது என்னும் கூட தெரிந்துக் கொள்ள வேண்டும்.

## வித்யா - அந்த வித்யா

வித் என்னும் எழுத்தில் இருந்து வித்யா என்னும் எழுத்து பிறந்தது. வித் என்றால் தெரிந்துக் கொள்ளுவது என்று அர்த்தம். அதனால் அதில் இருந்து பிறந்த வித்யா என்னும் எழுத்துக்களுக்கு கூட அதே அர்த்தம் வருகின்றது.

அவித்யா என்றால் தெரியாமல் போனது என்று தெரிகிறது. சிறிய வயதில் இருந்து பள்ளிக்கூடத்திற்கு போய் நமக்கு தெரியாத பாஷையை, சுற்றி விஷயங்களில் இருக்கின்ற கணக்கு எதோ மொத்தத்தில் தெரியாததை தெரிந்து கொள்ளலாம். அப்படி தெரிந்துக் கொண்டதை வித்யா என்று சொல்கிறோம். வித்தைகாக பணத்தை கொடுத்து எனக்கு தெரியாததை தெரியப்படுத்துங்கள் என்னும் கேட்கின்ற வரை வித்யார்த்தி என்று சொல்கிறோம். வித்யா + ஆர்த்தி = வித்யார்த்தி. வித்யார்த்தி என்றால் வித்தை கேட்கின்றவன் என்னும், இன்னும் தெரியும் படி சொல்லிக் கொள்ள வேண்டும் என்றால் தனக்கு தெரியாததை தெரிந்துக் கொள்ள வேறு ஒருவரிடம் போய் கேட்கிறவன் என்று அர்த்தம். தெரியாததை தெரிவிக்கின்ற வரை வாத்தியார் என்று சொல்கிறோம். தெரிவிப்பவன் வாத்தியார், தெரிந்துக் கொண்டுயிருப்பவரை வித்யார்த்தி (மாணவன்) என்பது சூத்திரம். இந்த சூத்திரம் பிரகாரம் எந்த விஷயத்தையும் தெரிவிப்பவன் வாத்தியார் தான். அப்படியே எந்த விஷயத்தையும் தெரிந்துக் கொண்டுயிருப்பவன் வித்யார்த்தி (மாணவன்) தான், தெரிந்ததை தெரிந்துக் கொள்ளுவது வித்தை தான். மனிதன் சிறியவயதிலிருந்து ஏதோ ஒரு வித்தை பழகிக் கொண்டுயிருப்பான். தனக்கு இளமை வயது வரும் வரை எத்தனையோ வித்தையை பழகி M.A, M.Sc, B.Sc, முதலியன டிகிரிக்களை வாங்கி P.H.D, வாங்கி நான் வித்தையை பழகினேன் என்று நினைத்துக் கொண்டு இருக்கிறான். P.H.D, வாங்கிய பின் அவர் நினைத்துப் போல வித்யாவந்தன் என்னும் யோசித்தால் அவர்

பழகியது வரை வித்யாவந்தன் தான். இன்னும் அவர் பழக வேண்டியது, தெரிய வேண்டியது இருக்கும். மற்றும் அவர் முழுமையாக தெரிந்துக் கொண்ட வித்யாவந்தன் அல்ல என்று சொல்லலாம். தெரிந்துக் கொள்ளுவது மீதி இருக்கிறது. மற்றும் அவர் தெரிந்துக் கொள்ள வேண்டியது மீதி இருக்கின்றதினால் அவித்யாவந்தன் (தெரிந்து கொள்ளாதவன்) என்று சொல்லலாம். முக்கியமான அவற்றுக்கு, முக்கியம் இல்லாதது சமமாகாது. அப்படி என்றால் முக்கியம் இல்லாததை பலதையும் பழகி, முக்கியமானதை ஒன்றை பழகவில்லை என்றாலும் அவர் அவித்யா தான் என்று சொல்லலாம். அப்படியாகும் போது முக்கியமாகாதது எது? முக்கியமானது எது? என்னும் விஷயம் எல்லோருக்கும் தெரியாமல் போயிருக்கலாம். அதனைப் பற்றி தெரிந்துக் கொள்ளலாம். உலகத்தில் இருக்கிற வித்தைகள், தெரிய வேண்டிய வித்தைகள் ஆறு மட்டுமே. அது என்ன வென்றால்! **1.** கணிதசாஸ்த்திரம் **2.** ரசயனசாஸ்த்திரம் **3.** பவ்திகசாஸ்த்திரம் **4.** ககோள சாஸ்த்திரம் **5.** ஜோதிடசாஸ்த்திரம் **6.** யோகசாஸ்த்திரம் மொத்தம் ஆறு சாஸ்த்திரங்களில் முக்கியமானது யோகசாஸ்த்திரம். தேகத்தில் முக்கியமான பாத்திரம் ஜீவாத்மா, ஆத்மாவைப்பற்றி யோகசாஸ்த்திரம் தெரிவிக்கின்றது. ஜீவாத்மா, ஆத்மாக்கள் இல்லாததை உலகமெல்லாம் உயிரற்றதாக இருக்கும். அப்படியே பரமாத்மா இல்லாமல் இருந்தால் உயிரற்ற உலகம் கூட இல்லை. முக்கியமாக மூன்று ஆத்மாவைபற்றி தெரிவிப்பது மேலும் யோகசாஸ்த்திரம் முக்கியமானது என்று

சொல்லலாம். மற்ற ஐந்து சாஸ்த்திரங்களில் இருக்கின்றது எல்லாம் உலகத்திற்கு சம்மந்தப்பட்ட வித்தை என்று தெரிந்துக் கொள்ள வேண்டும். இன்று ஆரம்ப பள்ளிக்கூடத்தில் இருந்து மேல் நிலைப்பள்ளி படிப்ப வரை எல்லாம் ஐந்து சாஸ்த்திரம் வித்தை தான். ஆறாவது சாஸ்த்திரமான யோகசாஸ்த்திரம் என்பது ஒன்று இருக்கிறது என்னும் சொல்லுபவர் யாரும் இல்லை, மற்றும் இந்த நாள் இந்த வித்தை போதனையில் இல்லாமல் போனது. மேலும் எந்த மாணவனுக்கும் யோகசாஸ்த்திரம் பற்றி தெரியாது. யார் எத்தனையோ படிப்பு படித்திருந்தாலும் எல்லாத்தை விட முக்கியமான யோகசாஸ்த்திரம் பற்றி தெரியாமல் போவதினால் அப்படிப்பட்டவனை அவித்யா மாணவன் தான் என்று சொல்லலாம். எத்தனையோ டிகிரிகள் வாங்கினாலும் ஒரு யோகசாஸ்த்திரம் தெரியாமல் போனால் அவித்யா மாணவன் தான் என்னும் சொல்வதற்கு முக்கியமான மற்ற ஒரு காரணம் கூட இருக்கிறது, அது என்ன வென்றால்! எந்த வித்தையானலும் ஒரு பாஷை லிபியில் ஆரம்பிக்கின்றது. அந்த லிபி சில எழுத்துக்கள் சமூகத்தில் கூடி இருக்கும். எந்த வித்தையானாலும் எழுத்துக்களில் கூடியே இருக்கும். வித்தை இருக்கின்றவனை எழுத்துக்கள் ஞானம் இருக்கின்றவன் என்னும் சொல்வது சகஜமாக கேட்டுக் கொண்டுயிருப்போம். எழுத்துக்கள் என்றால் உண்மையான அர்த்தம் தெரியாதவர்களை அது ஒரு உலகம் படிப்பு என்னும் நினைத்துக் கொண்டுயிருக்கிறோம். உண்மையான அர்த்தத்தை பொருத்து பார்த்தால் ஷரமு என்றால் நாசனம், அக்ஷரமு என்றால் நாசனமாகததை

அவிநாசியாக உள்ளது. அப்படி அவிநாசினமாகயிருந்த ஆத்மா ஞானத்தை பற்றி தெரிந்தவர்கள் அக்ஷரங்களை தெரிந்தவர்கள் என்னும், வித்யா மாணவன் (படித்தவன்) தெரிந்தவன் என்று சொல்லலாம். ஆத்மா ஞானத்தை தெரியாதவனை அக்ஷரங்களைப்பற்றி தெரியாதவன் என்னும், அக்ஷர ஞானத்தைப் பற்றி தெரியாதவன் என்னும் அவித்யா (படிக்காதவன்) என்று சொல்லலாம். இதனைப்பற்றி ஆத்மா ஞானமில்லாத எத்தனை படிப்பு படித்தாலும் அவித்யா மாணவன் என்று சொல்லலாம். இன்று அக்ஷர சாராம்சமில்லாத எத்தனையோ படிப்புகள் உள்ளது. அவற்றை பழகுவதற்கு பள்ளிக்கூடங்கள் மேல் நிலைப்பள்ளிகள் இருக்கிறது. அக்ஷர ஞானம் இல்லாத வித்தையை பழகுவதற்கு எத்தனையோ ஆயிரங்கள், லட்சங்கள் பணம் செலவு செய்ய வேண்டியது இருக்கும். விவரமில்லாத மனிதன் எத்தனையோ கஷ்டப்பட்டு அக்ஷர ஞானம் இல்லாத வித்தை பழகி, வித்தை தெரியும் என்று பெருமைப்படுகின்றான். மற்றும் அவர் எத்தனை பழகினாலும் அவித்யா மாணவன் என்னும் சத்தியம் தெரியாமல் இருக்கிறான். இன்று உலக சம்மந்தப்பட்ட வித்தை எல்லாம் உலகத்தில் வாழ்வதற்கு வாய்ப்பு கொடுகின்றது. மற்றும் பரமாத்மாவில் ஐக்கியம் ஆகுவதற்கு அல்ல. ஒரு கணக்கில் உலக வித்தையை பழகியவர் இன்று உலகத்தில் தகுந்த வேலை வராமல், அவன் படித்திருந்த படிப்பு மதிப்புயில்லாமல், எந்த படிப்புவராதவன் போல கஷ்டப்பட்டு குழப்பமான நிலையில் வாழவேண்டியது இருக்கும். ஆத்மா படிப்பு பழகியவன்

உலகத்தில் தைரியமாக வாழ்கிறான். இறந்துப்போன பிறகும் உயர் நிலையில் இருக்கிறார்கள். எல்லாம் சாஸ்த்திரத்தை விட மீறிய ஆறாவது சாஸ்த்திரமான யோகசாஸ்த்திரத்தை தெரிந்தவனுக்கு எத்தனையோ கஷ்டங்கள் வந்தப்போதும் அது அவருக்கு கஷ்டமாக தெரியாது, அருவடைய பந்தங்களை கணக்கிடமாட்டார். அதனால் ஆறாவது சாஸ்த்திரமான யோகவித்தையை கீதாவில் **“பவித்திர மிக வித்தியதே”** என்று சொல்லினார். மேலும் **“நஹி ஞானேன சதுருஷ்ஷம்”** என்று இந்த சொல்லும் உள்ளது. இதை விட வித்தை இல்லை மேலும் இதற்கு சமமானதும் இல்லை என்று அர்த்தம். அதனை தெரிவிப்பவர் இல்லையா? தெரிந்து கொள்ளுபவர்கள் இல்லையா? என்னும் சந்தேகம் சிலருக்கு வரலாம். இதற்கு பதில் என்ன வென்றால்! யோகசாஸ்த்திரம் தெரிந்துக் கொள்ளுபவர்கள் அரிதாக இருக்கிறார்கள். அந்த சாஸ்த்திரத்தைப்பற்றி தெரிவிப்பவர் மிக அரிதாக உள்ளார்கள். இன்று உலக படிப்புகள் படிப்பு எவ்வளவு பழகினாலும் அவித்யா மாணவர்கள் சிலர் யோக சாஸ்த்திரம் மதிப்பு தெரியாமல் குருவை நீச்சர்களாக பார்கிறார்கள். குருவிடம் ஆத்மஞானத்தை தெரிந்துக் கொண்டுயிருப்பவரை புத்தி குறைவானவராக கணக்கிடுகின்றார்கள். வாழ்க்கையில் சில காலம் உள்ளவர் பணியாளர்கள் சிலர்கள், தனக்கு அரசாங்கம் கொடுத்த அதிகாரத்தை பிடித்துக் கொண்டு கர்வப்பட்டு, கௌரவமான குரு சாம்பிரதாயங்களை கணக்கிடாமல் குருவை அவமதிக்கின்றார்கள். அப்படிப்பட்டவரை நாங்கள் கேட்பது என்ன வென்றால்! மாதாந்திர கட்டணத்துடன் பணத்தை வாங்கி எழுத்துக்களில்

சாராம்சமில்லாத வித்தையை சொல்லும் குருக்களை விட இலவசமாக சுயநிலமில்லாத எல்லாத்தை விட யோகசாஸ்த்திரம் தெரிவிப்பவர் குறைவானவரா? அரசுக்கு கீழ் படிதலாக வேலை செய்து அதிகரத்திலுள்ள வரை வணக்கத்தை வைத்துக் கொண்டு, அதிகாரம் முடிந்தப்பின் யாரும் மதிப்புக் கொடுக்காத வாழ்கையை விட, எத்தனையோ பேர் வாழ்கையல்லாம் கௌரவமாகயிருக்கின்றவர்கள் குருக்கள் குறைவானவர்களா? பணம் செலவு பண்ணி பிரையோஜனமில்லாத வரை விட, பணம் இல்லாமல் இலவசமாக தகுதியற்ற கல்வியை பழகிக் கொண்ட குரு சிஷ்யர்கள் புத்தி குறைவானவர்களா? எத்தனையோ பேர் நிரந்தரமில்லாத செல்வாக்கு, அதிகாரம், உயர் நிலையில் மகிழ்ச்சி அடைந்து நாளை என் “ஜீவிதம்” என்னவென்று யோசனை செய்யாமல் மாதம் கடைசியில் “சம்பளம் என்ன” என்று யோசனை செய்கின்றார்கள். காலகர்பத்தில் கலந்துப்போகும் உடலைப் பற்றி, தனக்கு ஏற்படும் நிலை பற்றி, தனக்கு யாரும் காப்பாற்றாத நிலை அனுபவங்களை பற்றி யோசனை செய்யாமல் கண்மூடித்தனமாக மனிதன் வாழ்கிறான். M.A., படித்து S.I., வேலை வந்தது என்னும், என் காவல் நிலையத்திற்குள் உள்ளவர்களை அடிக்கின்ற உரிமை இருக்கிறது என்று நினைக்கிறார்கள். மற்றும் என் தேகத்திற்கு உள்ளே அதிகாரி இருக்கின்றார் என்னும், தேகததிற்கு உள்ளே தண்டனையில் இருந்து அவர் தப்பிக்க முடியாது என்னும் தெரியாமல் இருக்கிறார்கள். உலகப்படிப்பு எத்தனையே படித்து இருந்தாலும் ஆத்மஞானம் இல்லாமல் வாழும்

வாழ்கை பயனற்றது. மற்றும் வித்யா என்றால் தெரிந்துக் கொள்ளுங்கள், எழுத்து என்றால் தெரிந்துக் கொள்ளுங்கள். பாஷை எழுத்துக்களில் கூடி உள்ளது உண்மையான வித்யா என்னும் நினைக்காமல், எழுத்துக்களில் கூடி உள்ளது உண்மையான வித்தை என்று தெரிந்துக் கொள்ளங்கள். நீ எத்தனை டிகிரிகள் வாங்கினாலும் வாழ்க்கையில் பிரையோஜனம் இல்லை என்று தெரிந்துக் கொள்ளுங்கள். திருப்தியையும் சாந்தியையும் கொடுகின்ற, மனித ஜீவிதத்திற்கு பிரையோஜனம் இருக்கின்ற வித்யா பிரம்மவித்தையை (யோகசாஸ்த்திரம்) தெரிந்துக் கொள், இது வரை உள்ள பயனற்றதை விட்டு வித்யா தெரிந்த மாணவனாக வேண்டும். ஷரத்தை விட்டு அக்ஷரத்தை தெரிந்துக் கொள்ள வேண்டும்.

## யோக வித்யா

ஜீவன் ஆத்மாவை தெரிந்துக் கொள்ளுவதற்கு, ஆத்மாவை தெரிந்து பரமாத்மாவில் ஐக்கியமாகுவதற்கு, பிறப்பு இறப்புல் இருந்து தூரமாக வெற்றிடத்தில் அனைத்திலும் அவரே இருப்பதற்கு யோக வித்தை பழக வேண்டியது இருக்கும். உலகத்தில் எத்தனையோ வித்தையில் யோக வித்தை சிறப்பானது, புனிதமானது. மனிதன் புத்தி கூர்மையாக இருந்தால் இந்த வித்தை அர்த்தமாகது. உண்மையாக பல பேருக்கு இந்த யோகவித்யா இருக்கிறது என்று தெரியாது. சிலருக்கு தெரிந்தாலும் அதனை எங்குயிருந்து ஆரம்பிக்க வேண்டுமோ பழக வேண்டும் என்று தெரியாது. இருக்கிற வித்தையில் எது

யோக வித்தையோ தெரியாது. அப்படிப்பட்டவர் யோகவித்தை தெரிந்துக் கொள்ள வேண்டும் என்பது தவறு இல்லை. மற்றும் வேறு வித்தையை யோகவித்தையாக எண்ணிக் கொண்டு, அதனை பழகுவது செயல்படுத்துவது தவறானதாகும். முக்கியமான வாழ்க்கை பிரையோஜனமில்லாமல் போகும் யோகவித்தை தெரிந்துக் கொள்ளுபவர்கள் இந்த வித்தை யார், எப்போது இருந்து ஆரம்பித்தார்கள். இதனை செயல் படுத்தி அனுபவம் அடைந்தவர்கள் இருக்கிறார்களா? இதற்கு ஆதாரமாக எந்த சாஸ்த்திரமாவது இருக்கிறதா? என்று தெரிய வேண்டும். அப்படி தெரியாமல் கேட்டது, பார்த்தது எல்லாம் யோகவித்தை என்பது தவறானது ஆகும். இந்து யோகவித்தையில் ஆறு சாஸ்த்திரங்களில் கடைசியானது யோக சாஸ்த்திரம் ஆதாரம். யோக சாஸ்த்திரத்தில் யோகத்திற்கு தேவைப்படும் ஷாசனங்கள் எல்லாம் விவரமாகயிருக்கும். யோக சாஸ்த்திரத்தை தவிற ஐந்து சாஸ்த்திரங்களை மனிதனே தயார் செய்தார்கள். யோக சாஸ்த்திரம் மட்டும் மனிதன் உருவத்தில் உள்ள பகவானினால் (பரமாத்மாவினால்) வெளிப்படுத்தியதன் மூலம் வந்தது. மற்ற ஐந்து சாஸ்த்திரங்களினால் உலகத்தில் எத்தனையோ பலன் கிடைத்தபோதும், யோகசாஸ்த்திரத்தினால் ஒன்றே ஒன்று பலன் கிடைக்கிறது. யோகவித்தைனால் பலன் கர்மம் இல்லாமல் மோக்ஷம் கிடைப்பது தவிற மற்ற வேறு ஒன்றும் இல்லை. ஒன்றே ஒன்று பலனைக் கொடுக்கும் யோகவித்தை எல்லா வித்தை விட கஷ்டமானது. அதனால் சுலபமாக யாருக்கும்

அர்த்தமாகாது. எவ்வளவோ விடாமுயற்சி இருந்தால் கிடைக்காத யோகவித்தை போதிப்பவர், உலக வித்தை தெரிவிக்கும் உலக போதிப்பவர்களை விட மதிப்பிற்க்கூறியவர்களாக இருப்பார்கள். யோகவித்யா போதிப்பவர்கள் பூர்வத்திலிருந்து இன்று வரை இருக்கிறார்கள். அப்போது இருந்து இப்போது வரை யோக சாஸ்த்திரம் ஒன்றே ஆகும்போது போதிக்கும் போதிப்பவர்கள் அன்றும் இன்றும் மாற்றம் அடைந்து உள்ளார்கள். அந்த நாள் போதிப்பவர்கள் யோக வித்தை யோக சாஸ்த்திரம் பிரகாரம் போதித்து வந்தனர். இன்று சிலர் குருக்கள் என்னும் நினைத்துக் கொண்டு போதிப்பவர்கள் சாஸ்த்திரத்தை ஆதாரம் செய்துக் கொள்ள வில்லை. சாஸ்த்திரமே இல்லாத முறையில் போதிக்கின்றார்கள். அந்த நாள் பக்தனை சம்பூர்ணஞானியாக செய்த பிறகு யோக நடைமுறை போதித்து உபதேசம் கொடுக்கின்றவர்கள் இருந்தார்கள். அதற்கு எத்தனையோ காலமாகும். இன்று போன உடனே உபதேசம் கொடுக்கின்றவர்களும் இருந்தார்கள். பூர்வகாலத்தில் எவ்வளவோ பவித்தரமாக போதிக்கபடும் வித்தை இன்று வகுப்பு வரை வந்தது. அந்த நாள் சிஷ்யர்களுக்கு குரு ஒருவர் தான். அவரிடம் உபதேசம் அடைந்து. அவரையே தெய்வமாக பூஜை செய்வார்கள். இன்று ஒரு பெரிய குரு, அவர் கீழ் துணை குருக்கள் பல பேர்களாக ஏற்ப்பட்டார்கள். பெரிய குருவுக்கு நேரமில்லை என்னும் கீழ் குருக்களே உபதேசம் கொடுக்கின்றார்கள். வாங்கிக் கொள்ளுபவர் தெரியாதவர்கள் என்னும் நமக்கு உபதேசம் கிடைத்தால் போதும் என்று

நினைத்துக் கொள்ளுகின்றார்கள். வாங்கிக் கொள்ளுபவர்கள் அடைய வேண்டும் என்னும் கோரிக்கை தவிற மற்றும், உபதேசம் என்றால் என்ன என்னும், அதன் பலன் என்ன என்று சிறிதளவுக்கூட ஆலோசனை செய்ய வில்லை. அவ்வளவோ இவ்வளவோ படித்தவர்களும் யோசனை செய்யாமல் இஷ்டம் வந்தப்படி மார்க்கத்தை அனுசரிகின்றார்கள். பூர்வகாலத்தில் கேட்டதை விவரித்து தெரிந்துக் கொள்ளுங்கள் என்னும், தெரிந்ததை செயல்படுத்தி அனுபவத்திற்கு வரும் படி சொல்வார்கள். நீ தெரிந்துக் கொண்டுயிருக்கும் ஞானம் வேறு ஒருவருக்கு கூட தெரியபடுத்துங்கள் என்று சொல்லுவார்கள். இன்று குரு ரகசியம் என்னும் வேறவர்களுக்கு தெரியபடுத்தகூடாது என்னும் குருக்களும் உள்ளார்கள். மற்றும் நாங்கள் சொல்லும் போதனைகள் மட்டும் கேட்க வேண்டும் என்னும், வேறு அவர்கள் போதனைகள், வேறு அவர்கள் புத்தகத்தையும் மற்றும் பார்க்கக்கூடாது என்பவர்களும் கூட இருக்கின்றார்கள். தங்களுடையது பெரிய வித்தை என்னும்போது அந்த விதமான நிபந்தனைகள் எதற்கு என்று அர்த்தமாக வில்லை. சந்தேகம் இல்லாதது தெய்வ ஞானம். சந்தேகம் இருக்கின்றது ஞானம் அல்ல. இன்று சந்தேகத்தை தீர்த்து வைக்காத சாஸ்த்திரம் முறையை ஞானத்தை பல மக்கள் அனுசரிகின்றார்கள். அப்படிப்பட்டவற்கு இது சரியான வழி அல்ல என்னும் சொல்லினாலும் கேட்கமாட்டார்கள். அது ஞானமே அல்ல அதனை அனுசரித்து அதுவே உண்மையான ஞானம் என்று நினைக்கின்றவர்கள் உள்ளார்கள். தெய்வ ஞானம் சில நிபந்தனையில் கூடியிருக்கும் என்னும்

தெரியாமல் அவருக்கு இஷ்டம் வந்ததை ஞானம் என்னும் நினைத்துக் கொள்ளுவர்கள். கண்கட்டி வித்தை போல மஹுத்தியங்களை பெரியதாக நினைக்கின்றவர்கள் பிரம்மவித்யாவை அடையாளிக்காமல் போகின்றார்கள். பூமி மீது கிடைக்கின்ற உலகத்தில் கிடைக்கின்ற சுகத்தை விட பரலோகத்தில் கிடைக்கும் தெய்வ சன்னிதானத்திற்காக ஞானத்தை அனுசரிக்க வேண்டும் என்னும் விஷயத்தை மறந்துப் போய் உலக சுகத்தை, உலக கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கு வேலை சொல்லும் குருக்களை அனுசரிக்கின்றர்கள். ஞானம் தெரியாமல் சாதனை செய்யக்கூடாது என்னும் சாஸ்த்திரம் சொல்லிக்கொண்டுயிருந்தலும், முழுமையான ஞானம் தெரியாமல் உபதேசம் அடைந்து சாதனை செய்யுபவர்கள் சிலர் இருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்கள் நாங்கள் செய்யும் சாதனம் திருப்தியாக இருக்கிறது என்னும், சாதனையில் அமைதியாக இருக்கிறது என்னும் போதையாக இருக்கின்றது என்று சொல்கிறார்கள். அவர் அனுபவங்களை எத்தனையோ விதமாக சொல்லினாலும் இதனினால் நமக்கு கிடைக்கும் பலன் என்ன? எந்த பலனுக்காக சாதனை செய்கின்றோம் என்னும் வார்த்தையை முழுமையாக மறந்தார்கள். ஒவ்வொரு வேலைக்கு ஒரு பலன் இருக்கும் தானே! நீங்கள் செய்யும் சாதனைக்கு எந்த பலன் இருக்கும் என்னும் சிலர்களை கேட்டால் எங்களுக்கு ஆத்மசாந்தியாக இருக்கிறது என்னும், முன்பை விட மனசு அமைதியாக இருக்கிறது என்று சொல்கிறார்கள். உண்மையான பலனை மறந்துப்போய் சாதனை செய்வது முக்கியம் என்று நினைத்துக்

கொண்டுயிருக்கிறார்கள். யோகம் செய்வது விட்டு இருக்கின்ற முறைகள் யோகம் அல்ல என்னும் தெரியாதவர்கள் சாஸ்த்திரமில்லாத முறையில் சாதனை செய்கின்றார்கள். அப்படிப்பட்ட சாதனையில் கர்ம நாசனமாகும் சக்தி கிடைக்காது. கர்ம நாசனமாகத சாதனை செய்தாலும் பிரையோஜனமில்லை. மற்றும் சிலர்கள் ஆத்மாவை பற்றி சாதனை செய்கின்றார்கள் என்று சொல்கின்றார்கள். ஆனால் அவர்கள் எங்கள் சாதனைனால் சில ஜென்மங்கள் பிறகு எங்களுக்கு தேவதைகள் ஜென்மங்கள் கிடைக்கும் என்று சொல்கின்றார்கள். யோகம் என்னும் எழுத்து உபயோகத்தை தேவதைகளாக மாறுவோம் என்பது ஆச்சர்யமாக இருக்கிறது. ஜீவாத்மா ஆத்மாவில் கலந்தப்போது யோகம் என்று சொல்கிறோம். யோகத்தினால் மோக்ஷம் கிடைக்கும் என்னும், புண்ணியத்தினால் நல்ல ஜென்மங்கள், தேவதை ஆராதனைனால் தேவதைகள் ஜென்மங்கள் கிடைக்கும் என்று யோகசாஸ்த்திரம் தெரிவிக்கின்றது. அப்படிப்பட்டப்போது யோகத்தினால் தேவதைகள் ஜென்மங்கள் கிடைக்கும் என்பது சாஸ்த்திரம் அல்ல தானே! எங்கள் சாதனைக்கு சாஸ்த்திரம் தேவையில்லை என்னும், எங்கள் குரு எங்கள் முன் வைத்த ஆகாரத்தை தின்பது எங்களுக்கு முக்கியம் என்னும் சிலர் சொல்கின்றார்கள். அப்படி தின்பது தவறு இல்லை தின்கிற அகாரத்தினால் நம் தேகத்திலுள்ள நோய் போகுமா, இல்லாத நோய் வருமா என்று யோசனை செய்வது முக்கியம். அதனால் எது எப்படிப்பட்டதோ விமர்சன சக்தி உங்களுக்குள் வர வேண்டும். விமர்சனத்தில் சத்தியம் தெரிந்துக் கொள்ளும் நிலை உங்களுக்கு வர வேண்டும்.

சந்தேகத்தை உடனே அதை நீக்கும் ஞானியாக வேண்டும். அப்போது யோக சாதனையில் அனுசரிக்கும் போது சில நிமிடங்களில் யோகத்தை சாதிக்காலம். அப்படியாகமல் உலகத்தில் சொத்து அதிகமாக உள்ளவர் பெரிய குரு என்னும் நினைத்து அவர் வார்த்தைகளை நம்பினால் ஜீவித காலம் வீணாகும். அவர் சொல்லும் வழியை யோசித்தால் சாஸ்த்திரம் முறையாகயிருந்தால் அதனை அனுசரித்தால் வாழ்கை உபயோகப்படும். ஆயிரம் பேர் போதிப்பவரில் ஒரு குரு இருக்கலாம், இருக்காமலும் போகலாம். குரு ஆயிரம் வருடத்திற்கு ஒரு தடவை பூமி மீது வரலாம், வராமலும் போகலாம். மற்றும் விஷயங்களில் ஜாக்கிரதையாக இல்லாமல் போனால் உன் ஜென்மம் உபயோகம் இருக்காது. ஒவ்வொரு வித்தை ஆறு சாஸ்த்திரம் சம்மந்தமாகவே இருக்கும். ஒவ்வொரு வித்தை சாஸ்த்திரமாக இருக்கும் போது பிரம்மவித்யா சாஸ்த்திரம் ஆகாமல் இருக்குமா? சாஸ்த்திரம் முறையில் யோகசாதனை செய்தால் மனிதன் யோக சக்தி அடைந்து கர்மத்திலிருந்து தப்பித்துக் கொள்ளுவார்கள். யோகசாஸ்த்திர அறிஞரான ஸ்ரீகிருஷ்ணன் தெரிவித்த யோகசாஸ்த்திரமான பகவத்கீதாவை பாருங்கள், அதிலுள்ள சாஷனங்கள் வெளியெடுங்கள், செயல்படுத்துங்கள், தவறாமல் யோகிலிருந்து பிரம்மரிஷி வரை வளரமுடியும். சாஸ்த்திரம் தெரிந்தவன் சாஷ்த்திரி, யோகம் செய்தவர் யோகி. அதனால் யோக சாஸ்த்திரம் தெரிந்து சாஸ்த்திரியாக, யோகம் செயல்படுத்தி யோகியாக, கர்மம் வராமல் செய்துக் கொண்டு சித்தனகிப்போக வேண்டும்

என்று தெரிவிக்கிறோம். சாஸ்திரியாகமல் யோகி யோகியாகாத சாஸ்த்திரி பரமாத்மாவை பெற முடியாது.

**வளைந்த பாதை**

பூமி மீது ஒரு சிறிய நாடுயிருந்தால் மற்றும் ஒரு பெரிய நாடு இருக்கிறது. அப்படி எத்தனை சிறிய பெரிய நாடுகள் பூமியில் நிறைந்து உள்ளது. சிறிய நாட்டில் மற்றும், பெரிய நாட்டில், அந்த நாட்டிற்கு சட்டம் பிரகாரம் ஒரு ஜனாதிபதி இருப்பார். அந்த ஜனாதிபதி சொல் பிரகாரம் அந்த நாட்டில் உள்ளவர்கள் நடந்துக் கொள்ளுவார்கள். சட்டம் பிரகாரம் அவரை எல்லோரும் கௌரவிக்க வேண்டும். வெறும் ஒரு நாட்டிற்கு நான்கு ஐந்து வருடங்கள் மட்டும் ஜனாதிபதி பதவியில் உள்ளவரை எவ்வளவோ கௌரவிக்கும் மக்கள், பூமி மீது எல்லாம் நாட்டிற்கும் விஸ்வத்தில் எல்லாம் கோளத்திற்கும் ஆதிகர்த்தாவாக, ஜனாதிபதியாக நிரந்தரமாகயிருக்கின்றவரை தெய்வத்தை யாரும் கௌரவிக்கவில்லை. உலகம் அனைத்துக்கும் ஆதிகர்த்தாவாக ஒருவர் பரமாத்மா இருக்கின்றார் என்னும் தெரிந்தவர் கோடியில் ஒருவர் இருப்பது கூட சந்தேகம் தான். இந்த வார்த்தை சிலருக்கு ஆச்சரியமாக இருக்கும். எத்தனையோ தேவாலையங்கள் உள்ளது, எத்தனையோ பக்தர்கள் இருக்கிறார்கள், எத்தனையோ விதமான ஆராதனைகள் நடக்கின்றது, எவ்வளவோ பணம் கடவுளுக்காக நாங்கள் செலவளிக்கிறோம் என்னும் அப்படிப்பட்டப்போது கோடியில் ஒருவர் கூட அரிதாக உள்ளார் என்னும் வார்த்தை எவ்வளவு உண்மையோ என்று

பல பேருக்கு சந்தேகம் வரலாம். உண்மை சொல்ல வேண்டும் என்றால் இன்று மனிதர்களில் பக்தி உள்ளது. மற்றும் அது உண்மையான கடவுள் ஒருவர் இருக்கிறார் என்று அல்ல. ஆயிரக்கணக்கான தேவதைகளை மனிதனே உருவாக்கி அதில் சிலர்களை ஆராதனை செய்கின்றார்கள். மனிதர்களில் பக்தி கடவுள் மார்க்கத்தில் இல்லாமல் எல்லாம் தேவதைகள் பக்கம் போய் எந்த நாளோ வக்ர மார்க்கத்தில் (தவறான மார்க்கத்தில்) போனார்கள். குணங்கள் இல்லாத கடவுளுக்கு ஆசை என்னும் குணங்களை ஏற்படுத்தி எனக்கு இந்த வேலையை நிறைவேற்று உனக்கு நான் இது கொடுக்கிறேன் என்னும் கடவுளுக்கு ஆசை காண்பித்து சீரழியும் நிலையில் நம் பக்தி வக்ரமார்க்கத்தில் போனது. சித்தாந்தம் பிரகாரம் கடவுள் ஒன்றும் செய்ய மாட்டார், சாக்ஷிபூதனாக பார்ப்பவர் மட்டும் என்னும் சாஸ்த்திரத்தில் அறிவித்து கூறினார்கள். கடவுள் என்றால் யார் என்னும் தெரியாதவர் எத்தனை கடவுளை இணைத்து உண்மையான கடவுளை அறிய வில்லை தெரிந்துக் கொள்ள வில்லை. தேவதை மாயையில் விழுந்தவற்கு அகம கோசரம் (காணமுடியாத) கடவுள் ஒருவர் இருக்கிறார் என்று தெரியாது. தொண்டையில் இருந்து வெளியே வரும் மெல்லிசையுடன் பஜனைகளை காட்டி அழகாக பார்ப்பதற்கு பொருத்தமான திருவிழாக்கள் இந்த நாள் உள்ளது. அந்த நாள் கடவுள் பெயரில் நடத்திக் கொண்ட திருவிழாக்கள் இன்று கூட்டம் நெரிசலில் ஏதோ கொள்ளையடிக்க தோன்றுகிறது இது தவறான மார்க்கம் அல்லவா! பூர்வம் தெய்வத்தை தெரிவிக்கும் அடையாளமாக (சின்னமாக) இருக்கின்ற

தேவாலையங்கள் தரிசனத்திற்கு டிக்கெட்டுகள், பூஜைகளுக்கு விலை வைத்து பணத்தை சம்பாதிப்பதற்கு போட்டிப்படுகிறார்கள். இது தவறான மார்க்கம் அல்லவா! பரமார்த்தம் யோசித்து அந்த பரமார்தத்தை போதித்து அதனை தெரிவிப்பது எங்கள் கடமை என்னும் பிரம்மவித்தையை குருக்கள் இன்று பரமார்தத்தை விட்டு உலக அர்த்தமான வித்தை போதனை செய்து சின்ன பள்ளிக்கூடத்திலிருந்து பெரிய மேல் நிலைப்பள்ளி வரை உருவாக்கினார்கள். இது தவறான மார்க்கம் அல்லவா! உலகத்திற்கு எல்லாம் ஒரு கடவுள் என்னும் தெரியாமல் மதத்திற்கு ஒரு கடவுள் என்னும் மத வெறுப்புகலை வளர்திக்கொள்ளுவது இன்று மக்கள் தவறான மார்க்கம் அல்லவா! குடும்பத்தில் நபரை இறந்துப்போகும் படி செய் எனக்கு வந்த சொத்தில் **25** பைசா பாகம் உனக்கு காணிக்கை போடுகிறேன் நீச்சமான கோரிக்கைகள் நிலைக்கு நம் பக்தி இப்படியிருக்கிறது என்றால் அது முழுமையான தவறான மார்க்கத்தில் போனார்கள் அல்லவா! மனிதர்கள் இந்த விதமாக மாறிப்போக காரணம் என்னவென்று யோசித்தால் ஒன்று உண்மையான தெய்வத்தை பற்றி தெரிவிக்க குரு மேலும் சாமிஜீகள் இந்த நாள் இல்லை. இரண்டு உண்மையான கடவுள் ஒருவர் உள்ளார் என்னும் யாராவது சொல்லுபவர்கள் இருந்தால் கேட்கின்றவர் இல்லாமல் போனார்கள். இந்த இரண்டு காரணத்தினால் தெய்வ மார்க்கம் தவறான மார்க்கமாகி போனது. இந்த நாள் குரு பக்தியை தெரிவிப்பவர் இருக்கின்றார்கள் அல்லவா! நீங்கள் இல்லை

என்னும் சொல்லுகிறீர்கள் அல்லவா! என்னும் சிலருக்கு கேள்வி வரும். அதற்கு எங்கள் பதில் தெய்வ ஞானம் தெரிந்தவர்கள் ஞானிகள் யாராவது இருந்தால் இப்போதே சமூகத்தை பார்த்து நாம் உண்மையை கூறினால் மனிதர்கள் கேட்கும் நிலையில் இல்லை என்னும், அப்படி உண்மையை சொல்லினால் இப்போது இருக்கின்றவருக்கு எதிரப்பாக தெரியும் என்னும், அதனால் எங்களுக்கே அச்சுறுத்தல் வரும் என்னும் தெரிந்து பயந்து ஒன்றும் சொல்லாமல் இருக்கின்றார்கள். சிலர் பெரியோர்கள் தெய்வ ஞானம் பற்றி தெரியாதவற்கு அவர் அனுசரிக்கிறது தவறான மார்க்கம் ஆகும் போது, அதே பெரியது என்னும் அதே மக்களுக்கு நல்லா பிடிக்கும் என்னும் தெரிந்து அதனில் இன்னும் சிலர்களை பிரவேசிக்க வேண்டும் என்று முயற்சிக்கிறார்கள். உதாரணத்திற்கு ஒரு விசயத்தை தெரிவித்துக் கொள்ளலாம். பூர்வம் பெரியோர்கள் தெய்வ மார்க்கத்தில் ஏற்ப்பட்ட நடைமுறைகளை முழுமையாக விட்டு, அவர்களுக்கு இஷ்ட வந்த ஒரு தேவதையோ கடவுளையோ ஏற்படுத்தி கொண்டு, அவர்கள் ஆராதனை செய்து தவறான மார்க்கத்தில் பல பேர் முயற்சி செய்கின்றார்கள் அப்படி இருப்பவர்கள் இன்னும் என்ன சொல்கின்றார் என்றால்! நம் லாபத்தை அடைய இந்த தேவதை இருக்கிறது என்னும், நாம் லாபம் அடைய வேண்டும் என்றால் அதற்கு ஒரு நடைமுறையிருக்கிறது என்னும், இந்த தேவதைக்கு இந்த பூஜை செய்தால் லாபம் வரும் என்னும், செய்யாதவற்கு நஷ்டம் வரும் என்னும் லாப நஷ்டங்கள் பட்டியல் (லிஷ்டு) எழுதி, அந்த எழுத்துக்கள் எல்லாம் அச்சிட்டு எல்லோருக்கும்

கொடுத்தார்கள். அது வரை நிறுத்தாமல் அந்த காகிதத்தை பார்த்தவரை அப்படிப்பட்ட காகிதத்தை தயார் செய்து வேறு அவர்களுக்கு கொடுக்க வேண்டும் என்னும் அப்படி கொடுக்காதவற்கு கஷ்டங்கள் நஷ்டங்கள் வரும் என்னும், கொடுப்பவற்கு சுகங்கள் லாபங்கள் வரும் என்னும். இந்த விதமாக செய்தவற்கு எவ்வளவு பணம் வந்தது, ஹேலனமாக விட்டு விட்டவர்களுக்கு அதிகமாக கஷ்டங்கள் நஷ்டங்கள் வரும் என்னும் அதில் எழுதி இருந்ததினால் அந்த காகிதத்தை படித்தவர்கள் ஒவ்வொருவர் அச்சிட்டு கொடுக்கின்றார்கள். படித்தவர்கள் லாபங்கள் வரும் என்னும் ஆசையில் அப்படி கொடுக்காமல் போனால் நஷ்டம் வரும் பயத்தில் அவர் அப்படி செய்கின்றார்கள். ஒன்றும் தெரியாத மக்களுக்கு அவ்வளவோ இவ்வளவோ தெரிந்தவா் இப்படி செய்து ஒரு நோய்யை பிரவேசிக்கும் படி செய்தால், அந்த நோய் காலரா கிருமியாக பரவிப்போனது. இந்த விதமாக அதிகமாக பிரச்சாரமாக உள்ள விஷயங்களே இன்று மனிதனுக்கு ஒட்டியிருக்கிறது. யாராவது இது தவறான மார்க்கம் சரியான மார்க்கம் இது அல்ல வென்று சொல்லினால் மனிதன் கேட்க்கும் நிலையில் இல்லை. கடவுள் அனு அனுவில் வியாப்பித்து (பரவி) உள்ளவர். கடவுள் நம்மில் கூட வியாப்பித்து உள்ளார். அந்த தெய்வம் கர்மம் என்னும் மூல சூத்திரத்தினால் உலகத்தை அனைத்தையும் நடத்துகின்றார். நாம் செய்த பாவ புண்ணியங்களே கர்மம் ஆகிறது. அந்த கர்மமே ஒவ்வொரு ஜீவியை தவறாமல் நடத்துகிறது. கர்மத்தினால் வாழ்க்கையில் சுகங்கள் துக்கங்கள் நடக்கின்றது. லாபம்

நஷ்டங்கள், சுகம் துக்கங்கள் கர்மத்தை அனுசரித்து உள்ளது என்னும் சாஸ்த்திரம் தெரிவிக்கும் போது அஞ்ஞானத்தில் உள்ள மனிதன் இந்த வேலை செய்தால் லாபம் வரும் என்னும், இதை செய்யாமல் போனால் நஷ்டம் வரும் என்னும், ஆசையையும் பயத்தையும் உருவாக்கியுள்ளனர். நம் கர்மத்தின் ரிக்காடில் (பதிவு) கஷ்டம் வருவது இருக்கும்போது கஷ்டம் வரும் என்னும், அப்படியே லாபம் வந்தப்போது லாபம் வரும் என்னும், அப்படி ஆகாமல் பூமி மீது எந்த தேவதைகள் லாபம் நஷ்டங்கள் செய்ய மாட்டார் என்னும் பல பேருக்கு தெரியாது. நாங்கள் இப்படி சொல்லும் போது, நாங்கள் சொல்வதும் யோக சாஸ்த்திரம் மற்றும் பூர்வம் மகாரிஷிகள் சொல்லும்போது உண்மையான மார்க்கத்தை அடையாளிக்காமல் தவறான மார்க்கத்திலேயே அனுசரித்து எங்களை ஹேலனமாக பார்கின்றவர்களும் கூட இருக்கிறார்கள். யார் என்ன சொல்லினாலும் கர்மம் பிரகாரம் தவிற எந்த தேவதையும், எந்த கடவுளும் லாபமும் நஷ்டமும் செய்ய மாட்டார்கள். பல நேரத்தில் மரணம் அடைய வேண்டிய கர்மம் இருக்கிறவர் எத்தனை தேவதைகளை கும்பிட்டாலும் அவன் மரணம் அடையுவான். மரணமில்லாதவன் கும்பிட்டாலும் கும்பிடாமல் போனலும் உயிர் வாழ்வான். இன்று காலத்தில் எவ்வளவோ புனிதமான தேவாலையங்கள் (கோவில்) பெயரிடப்பட்ட தேவாலையங்கள் சமீபத்தில் தெய்வ தரிசனத்திற்கு போனவர்கள் ஆபத்து வருகின்றது. அவரை அங்கு இருந்த சாமி எதற்கு காப்பாற்ற வில்லை? ஆலயத்தில் கோரிக்கை செலுத்தி இரண்டாவது

வருடம் கோவிலுக்கு வருவேன் கும்பிட்டு போனவர் வீடு திரும்பும் முன்பே அபாயம் வந்து விபத்துக்குள் ஆகிறார்கள். அப்போது எதற்கு அந்த சாமி அவரை ஆபத்திலிருந்து காப்பாற்றப்படவில்லை? அது கர்மம் பிரகாரம் நடக்கும் அதனால் அப்படி நடக்கின்றது. கர்மத்தை நீக்காத மாரக்கத்தை அனுசரித்தால் கடவுள் ஆராதனை செய்தால் எந்த பிரையோஜனமில்லை. தெய்வ ஞானத்தை தெரிந்த தூதர்கள் சொல்லிய முறை பிரகாரம், பகவத்கீதா சொல்லிய பிரகாரம் தெய்வ ஆராதனை செய்தால் அது சரியான மார்க்கங்கள் ஆகும், இல்லை என்றால் தவறான மார்கங்கள் ஆகும். முதல் தெய்வ மார்க்கத்தில் தவறான மார்க்கம் என்றால் என்ன, சரியான மார்க்கம் என்றால் என்னவென்று யோசனை செய்யுங்கள். மனிதர்கள் தெரிவிக்கும் ஆசைகளுக்கு கடவுள் அடிமை ஆகமாட்டார் என்று தெரிந்து கொள்ளுங்கள். ஏதோ கிடைக்கும் என்னும் ஆசைப்பட்டு பூஜை செய்யுபவர் லாபம் வந்த நாள் கடவுளை பூஜை செய்யுவர், நஷ்டம் வந்த நாள் தூசிப்பான் (திட்டுவான்). அப்படிப்பட்ட நடைமுறையில்லாமல் எல்லாத்துக்கும் காரணமான கர்மத்தைப்பற்றி தெரிந்துக் கொண்டு, அந்த கர்மத்தை இல்லாமல் செய்துக் கொண்டு உண்மையான தெய்வத்தில் சேருங்கள்.

## யோக சக்தி

மனிதன் தோல் ஆசனத்தை உபயோகித்து, யோக தண்டம் உபயோகித்து சரியான யோகத்தில் நின்று இருந்த சமயத்தில் யோக சக்தி மனிதன் தேகத்தில் நுழையும்

என்னும் தெரிந்துக் கொண்டோம். இங்கு சிலருக்கு யோக சக்தி என்றால் என்ன? அது எப்படி இருக்குமோ? அதன் பிரையோஜனம் எப்படி மனிதனுக்கு (ஜீவனுக்கு) என்ன இருக்கும்? என்னும் சந்தேகம் வரும் அதற்கு என்ன பதில் கேளுங்கள். யோக சக்தி என்றால் அதற்கு எத்தனையோ பெயர்கள் உள்ளது. ஞான சக்தி, பரமாத்மா சக்தி, ஆத்மா சக்தி, ஞானம் அக்னி என்னும் யோக சக்தியாக கூறுவார்கள். எத்தனை பெயர் இருந்தாலும் சக்தி மட்டும் ஒன்று தான். அது எப்படி இருக்கும் என்றால் அதற்கு உருவம் இல்லை, நிறம் இல்லை, ருசியில்லை, வாசனையில்லை, மற்றும் ஸ்தூலம் பார்வைக்கு அது தெரியாது. சூட்சம பார்வைக்கு, ஞானம் பார்வைக்கு தெரியும். மற்றும் அதனைப்பற்றி சொல்லுவதற்கு முடியும். உலகத்தில் ஜீவன்களுக்கு அதன் உபயோகம் வாயில் சொல்லுவதற்கு முடியாத அளவில் இருக்காது. ஞானம் (யோக) சக்தியில்லாத ஜீவிதம் பிரையோஜனம் இல்லை. புனிதமான மனிதன் ஜென்மம் அடைந்து, ஆத்மா விஷயத்தில் முக்கியமான ஞான சக்தியை தெரிந்துக் கொள்ளாத நிலையில் மனித ஜென்மத்திற்கு அர்த்தம் இல்லாமல் போகும். அப்படிப்பட்ட யோக சக்தியைப்பற்றி தெரிந்து கொள்ளலாம். யோக சக்திக்கு உருவமில்லை மேலும் உங்களுக்கு அர்த்தமாகுவதற்கு ஒரு உருவமாக நினைத்து சொல்கின்றோம். யோக சக்தி ஒரு விதமாக புகை உருவமாக உள்ளது என்று நினைத்துக் கொள்ளுங்கள். அது பூமியில் இருந்து ஆகாசம் வரை பரவி உள்ளது. என்றால் பிரக்ருதியில் (இயற்கையில்) இருக்கின்ற பஞ்சபுதங்களில்

அனைத்திலேயும் நிறைந்து உள்ளது. ஒரு மனிதனிலும் கூட சக்தி இருக்கும் அதே சக்தி மனிதனை சுற்றியும் இருக்கும். கடலில் ஜீவராசிகள் இங்கு இருந்தாலும் தண்ணீரிலேயே இருக்கின்றது போல அனைத்து ஜீவராசிகள் யோக (ஆத்மா) சக்தியிலேயே இருக்கின்றது. உனக்கும் எனக்கும் நடுவில் கண்ணுக்கு தெரியாமல் இருப்பது யோக சக்தியே. சக்தியில் இல்லாத ஜீவராசிகள் உலகத்தில் இல்லை அனு அனுவில் அது தான் பரவி உள்ளது இதை தான் பரமாத்மா சக்தி, பரமாத்மா என்னும் கூட சொல்கின்றார்கள். இந்த சக்தியில் நவக்கிரகங்கள் ஸ்தூல தேகங்களில் சூரிய கோளம், சந்திர கோளம், நட்சத்திர கோளங்கள் இணைத்து சூன்னியத்தில் மிதங்குவதுப்போல காணப்படுகிறது. இந்த யோக சக்தியை (ஞானம் சக்தியை) இவற்றைப்பற்றி தெரிந்துக் கொண்டால் ஜீவனுக்கு ஜென்மம் இருக்காது. யோக சக்தி யோகியில் நுழையும் என்னும் சொல்லினீர் அல்லவா! அதற்கு முன்பு மனிதனில் சிறிதளவு கூட சக்தி இருக்காதா என்னும் சந்தேகம் சிலருக்கு வரலாம். அதற்கு பதில், ஒரு மனிதனில் மற்றும் அனைத்து ஜீவராசிகளில் சக்தி சமமாகயிருக்கும். மற்றும் யோகி யோகத்தை செய்துக் கொண்டுயிருக்கும்போது அவரில் வெளியே உள்ள சக்தி நுழைந்து அதிகமாகிறது. அதனால் தான் கீதாவில் பரமாத்மா **“என்னை பூஜை செய்கின்ற மனிதர்கள் நான்கு ரகமாக இருக்கிறார்கள். அதில் ஞானி சேர்ஷ்டி, அவனில் நான் என்னில் அவன் இருப்பான்”** என்று சொல்லினார். சக்தி யோகி தேகத்தில் நுழைந்து சப்தஸ்தானத்தில் (ஏழாவது இடத்தில்)

நின்று இருக்கும். இப்படி நுழைந்த சக்தி ஒரு இடத்தில் சம்பூர்ண நிலை கிடைத்தப்பின் அந்த யோகிக்கு மோக்ஷம் கிடைக்கும். யோகத்தை செய்யும் யோகிகள் எல்லோரும் சமமாக மாட்டார். எதற்காக என்றால் யோக சக்தி ஒருவரிடம் அதிகமாக இன்னொருவரிடம் குறைவாக இருக்கலாம். மற்றும் அந்த சக்தியை பொருத்து யோகிகளிலும் கூட சிறியது பெரியது என்னும் வித்தியாசங்கள் இருக்கும் என்று சொல்லலாம். யோக சக்தியை புகை உருவமில் நினைத்தோம் அல்லவா! யோகி யோகம் செய்யும் சமயத்தில் அவர் தேகத்தில் உள்ள சூட்சம துவரத்தினால் யோக சக்தி அவருக்கு உள்ளே நுழைந்து கொண்டுயிருக்கும். இங்கு வெளியே உள்ள சக்தி உள்ளே நுழைந்து தேகத்தில் அதன் சாந்தரத்த வளர்ந்தால், வெளிய குறையாமல் இருக்குமா என்னும் சிலருக்கு சந்தேகம் வரும். அதற்கு பதில், வீட்டிற்குள்ளே அதிகமாக நிறைந்துள்ள புகை சிறிது ஜன்னலில் வெளியே போனால் வீட்டுக்கு உள்ளே இருந்த அந்த இடம் காலியாகாது மேலும் புகை மட்டும் குறையும். அப்படியே பரமாத்மா சக்தி அதிகமானது அதனில் அனு அளவு மட்டும் யோகியில் நுழைந்தால் காலியாக ஏற்படாது. சிறுதுக்கூட குறைகின்றது என்னும் சொல்லவும் முடியாது. யோகி முழுமையான நிலை அடைந்த பிறகு உலகமெல்லாம் நிறைந்துவுள்ள பரமாத்மா சக்தியில் கலந்து மோக்ஷம் அடைந்து ஜென்மம் எடுக்காமல் போனதினால் யோகியில் சேர்ந்த சக்தி பிறகு சூன்னியத்தில் சேருகின்றது. மற்றும் சக்தி எங்கும் குறையாமல் எப்போதும் இருப்பது போல் இருக்கும். இதனைப்பற்றி ஜீவ உருவம் தெய்வம்

உருவமாக மாறுவதற்கு சக்தி ஆதாரமாகயிருக்கிறது என்று தெரிகின்றது. சக்தியே தெய்வம், தெய்வமே சக்தி. நிறம், உருவம், ருசி, வாசனைவுள்ள கற்பூரம் சூன்னியத்தில் கலந்துப் போவதற்கு அக்னி தேவைப்படுவதுப்போல நிறம், உருவம், குணங்களிலுள்ள ஜீவன் சூன்யத்தில் (பரமாத்மாவில்) இணைவதற்கு சக்தி தேவையாகும். யோகிகள் சக்தி சம்பாதிக்கவில்லை என்றால் பரமாத்மாவில் இணையமாட்டார். மற்றும் ஒவ்வொரு யோகி கஷ்டப்பட்டு சாதனையை நடத்திக் கெள்ள வேண்டும். அப்படி இல்லாமல் போனால் தெய்வத்தில் இணையமுடியாது. அனைத்து சக்தியான பரமாத்மாவிலிருந்து வந்த ஜீவராசிகள் மறுபடி பரமாத்மா சக்திலேயே இணைய வேண்டும். அப்படி இணைவதற்கு அந்த சக்தியை பற்றி தெரிந்துக் கொள்ள வேண்டும். சக்தியை தெரிந்துக் கொண்ட பிறகு தன்னுடைய உண்மையான இடம் எது என்பது, தன்னுடைய உண்மையான பெயர் எது என்பது, உண்மையான நான் யார் என்று தெரிந்துக் கொள்ளுவான். சக்தியை தெரிந்துக் கொள்ளலாமல் போவது வரை தன் உண்மையான நிலை தெரியாமல், அவர் பெயர் கேட்டால் பிறந்தப்பிறகு வைத்தப் பெயர் தான் சொல்லுவோம். அது தனக்கு உலகப்புத்தி வந்த பிறகு வேறு நபர்கள் பெயரில் கூப்பிடும்போது அதுவே என் பெயர் என்னும் நினைத்து சொல்லுகின்றான். மேலும் உண்மைக்கு உன் பெயர் என்னவென்று கேட்டால் சொல்ல மாட்டான். நீ யார் என்னும் கேட்டால் பலனவன் மகன் என்று சொல்வான், அது அவர்க்கே பிறந்தேன் என்னும் சொல்லிக் கொள்ளும்போது அவரும் சொல்லிக் கொண்டு இருக்கிறார்கள்.

வேறவர்கள் முதலில் இவர் தான் உங்கள் தாய் தந்தை என்னும் சொல்லினால் அவரையே வாழ்கை எல்லாம் தாய் தந்தை என்று சொல்கின்றான், சக்தியை தெரிந்துக் கொண்ட பிறகு உண்மையாக உன் தாய் தந்தை யார் என்னும் கேள்வி கேட்டாலும் உலகத்தில் தேகத்திற்கு சம்மந்தப்பட்ட தாய் தந்தை பெயர்கள் சொல்லாமல் பரமாத்மாவே தந்தை என்னும் உண்மையான பதில் சொல்வான். ஆத்மா சக்தியை சம்பாதித்தவரை பெரியோர்கள் யோகி என்று சொல்கின்றார்கள். யோகி தேகத்தில் நுழைந்த ஆத்மா சக்தி அப்படியே இருக்குமா? என்றால் இல்லை என்னும் சொல்லலாம். எதற்கு இருக்காது என்றால் சாதரணமான அக்னிக்கு உலகத்தில் அனைத்து பொருள்கள் எரிக்கும் குணங்கள் உள்ளது. அப்படியே யோகியில் உள்ள ஞான சக்திக்கு (யோக சக்திக்கு) அனைத்து கர்மங்களை எரிக்கும் குணங்கள் உள்ளது. மற்றும் யோகி கர்மத்தை எரித்து சாம்பலாக்குவதற்கு சக்தி செலவு ஆகின்றது. யோகி சக்தியை சம்பாதித்து கொண்டு இருப்பதை அந்த சக்தி சிறிது கர்மத்தை எரிப்பதற்கு உபயோகப்படுகின்றது, சிறிது மிச்சமாகும். கர்மங்கள் சம்பூர்ணமாக எரிந்த நாள் ஜீவனில் குடியிருந்த சக்தி ஜீவனின் தன்னோடவே இணைந்து ஜென்மம் இல்லாமல் செய்யும். ஜென்மம் வரவேண்டும் என்றால் கர்மம் இருக்க வேண்டும் அல்லவா! மோக்ஷம் வரவேண்டும் என்றால் ஞான சக்தி இருக்க வேண்டும் அல்லவா! மேலும் கர்மம் இல்லாமல் போனால் ஜென்மம் இருக்காது, ஞானம் இல்லாதது மோக்ஷம் இல்லை. ஞான சக்திக்கு கர்மத்தை எரிக்கும் சக்தியிருக்கின்றது.

மற்றும் பகவத் கீதாவில் பரமாத்மா ஞான யோகமில் "எதைதாம்சி சமித்தோக்னி பஸ்ம சாத்துக்குரு தே அர்ஜீணா ஞானக்னி சர்வ கர்மானி பஸ்ம சாத்குருத்தே ததா" "அக்னியில் எத்தனை விறகுகள் பஸ்மமாகி நாசனமாகி போவது போல் ஞானம் என்னும் அக்னியில் அனைத்து கர்மங்கள் பஸ்மமாகி போகும் என்று கூறினார். இதனைப்பற்றி கர்மம் ஞானசக்தினால் முற்றிலும் இல்லாமல் எரிந்து போகின்றது என்று தெரிகின்றது. மற்றும் ஞானசக்தினால் யோகி தன் கர்மத்தையும் வேறு அவர் கர்மங்களையும் எரிக்கலாம். அக்னி எந்த விறகையும் எரிப்பதுப் போல ஞான அக்னி யார் கர்மத்தையும் எரிக்கும். அது எப்படி என்று கேளுங்கள். தேகத்தில் நுழைந்த யோக சக்தியை யோகி விருப்பத்தினால் வேறு அவற்க்கு நுழைக்க முடியும். அப்படி சக்தியை யோகி தேகத்திலிருந்து வெளியே அனுப்புவதற்கு நான்கு வழிகள் உள்ளது. ஒன்று கையில், இரண்டு பாதங்கள், மூன்று பார்வை, நான்கு வாக்கில் இந்த நான்கு யோக சக்தியை வெளியே அனுப்புவதற்கு யோகி தேகங்களில் துவாரமாக உள்ளது. ஸ்ரீ போத்துலூரி வீரபிரம்மம் அவர்கள் அச்சம்மா மகனை கண்கள் மீது கை வைத்ததினால் உள்ளங்கைனால் சக்தி அந்த கர்மம் ஜீவனில் நுழைந்து குருடனாகயிருந்த காரணமான பாவத்தை எரித்துவிட்டார். மற்றும் அச்சம்மா குமாரனுக்கு (மகனுக்கு) பார்வை வந்தது. அப்படியே இயேசுப்பிரபு குருடனுக்கு மண்னை பூசி பார்வை வரவைத்தார். உள்ளங்கை தொட்டு குஷ்ட வியாதிக்கூட நன்றாக செய்தார். மேலும் அவர் வாயினால் சொல்லிய உடனே பேய்கள் ஓடிவிட்டது.

ஸ்ரீகிருஷ்ணன் கண்னை பார்த்தவுடனே சிலருக்கு கஷ்டங்கள் போனது. இந்த விதமாக எத்தனையோ பெரியவர்களான யோகிகள் தன்னிலிருந்த யோகசக்தியை (ஞான அக்னியை) வேறு அவற்க்கு பார்வை, வாய், உள்ளங்கை, குதிக்காலினால் விருப்பத்தினால் அழுத்தி அவரில் உள்ள கர்மத்தை எரித்தார். மற்றும் யோக சக்தி இருந்தால் யாருடைய கர்மத்தையும் எரிக்கும். ஜீவன் ஜென்மத்திற்கு கர்மமே காரணம். கர்மத்தை எரிக்கும் பலம் பரமாத்மா சக்திக்கு மட்டும் இருக்கும். பரமாத்மாவை நம்பியவற்கு அந்த சக்தி கிடைக்கும். அது கிடைத்த ஜென்மங்கள் அந்தமாகிவிடும், ஜென்மம் இல்லாத ஜீவன் அனந்த சக்தியாக இருந்து பரமாத்மாவில் ஐக்கியமாகி விடுவான். ஆத்மாவில் ஐக்கியமான ஜீவன் ஜெகத்தில் இறப்புக்கும் பிறப்புக்கும் சம்மந்தமில்லாமல் நித்திய ஆனந்தத்தில் இணைந்து போவான். மேலும் நிரந்தரமான ஆனந்த பதவி வேண்டும் என்றால் எப்போதும் யோகத்தை செய்து யோக சக்தி சம்பாதிக்க வேண்டும் என்று தெரிவிக்கிறேன்.

## யோக தண்டம் எதற்கு தேவைப்படும்

எங்கும் நிறைந்தவர் பரப்பிரம்மா அல்லது பரமாத்மா, அல்லது கடவுள் அனைத்து ஜீவ ராசிகளில் தேகத்தில் நிவாசிக்கின்றார். மற்றும் ஜீவராசிகள் தேகத்தில் நிர்மானமான முக்கியமானதை பற்றி தெரிந்துக் கொள்ளுவதற்கு பிரம்மவித்தையில் முக்கியமான விஷயம். தேகங்கள் வேறு ஆனாலும் அதில் உள்ள பரமாத்மா அம்சம் ஒன்றே. ஜீவிகள்

எத்தனையானாலும் அவற்றில் ஆத்மாவினால் அசைகின்ற ஜீவராசிகள் தேகத்தைல் பிரித்தால் ஒவ்வொரு தேகம் இரண்டு பாகமாக தெரியும். அது வலது இடது பாகங்கள். வலதுப்பக்கம் எந்த உறுப்புக்கள் உள்ளதோ, அதுவே இடது பக்கமும் உள்ளது. இது ஒவ்வொரு ஜீவராசி தேகத்தில் கவனிக்கலாம். எறும்பில் இருந்து யானை வரை கட்டமைப்பு ஒன்றாகவே இருக்கும். மனிதன் உடம்பை பரிசோதித்து பார்த்தால் ஒரு பாகம் என்ன இருக்கின்றதோ இரண்டாவது பாகமும் அதுவே இருக்கிறது. ஒரு பக்கம் காது இருக்கும் அதற்கு மற்றும் ஒரு பக்கம் மற்றும் ஒரு காது இருக்கும். வலது பக்கம் கண் இருக்கிறது, அதன் இடது பக்கம் வேறு ஒரு கண் உள்ளது. வலதுப்பக்கம் மூக்கு துவாரம் உள்ளது. அதன் இடது பக்கம் வேறு ஒரு மூக்கு துவாரம் உள்ளது. வலது பக்கம் உள்ள கண், கண் புருவம், காது முதலியன உறுப்புகள் முடிவடை, முதல் எந்த திசையிருக்கின்றதோ அதற்கு எதிராக அதே உறுப்புக்கள் முடிவடை முதல் வேறு ஒரு திசையில் இருக்கும். மனிதன் வாயில் பல் எண்ணிக்கை **32** இருக்கின்றது அவற்றின் ஒரு பக்கம் **16** மற்ற ஒரு பக்கம் **16** வேறு பக்கம் இருக்கும். அப்படியே எல்லாம் சமமாக பிரிந்து இருக்கும். மேல் உள்ள பல் வரிசையாகயிருக்கின்ற முன்னால் அகலமாக பல்கள் இரண்டுயிருக்கும். அவற்றில் ஒன்று வலதுபக்கம் இன்னொன்று இடது பக்கம் இருக்கும். அவற்றிலிருந்து பார்த்தால் வலது பக்கம் மூன்றாவது கோரை பல் இருக்கும். அதே விதமாக இடது பக்கமும் மூன்றாவது

ஒரு கோரை பல் இருக்கும். அப்படியே வலது பக்கம் கடவாய் பல்கள் இருக்கின்றது இடது பக்கமும் அதே எண்ணிக்கையில் இருக்கும். அதே விதமாக வலது பக்கம் ஒரு கை அதன் எதிர் திசையில் வேறு ஒரு கை இருக்கும். அப்படியே தேகம் எல்லாம் இரண்டு பாகமாக காணப்படும். உள்ளே இருக்கும் உறுப்புகளும் இரண்டாக பிரிந்து உள்ளது. தேகம் இரண்டு பாகம் ஆனது அல்லவா! அந்த இரண்டு பாகங்கள் இணைந்து மேல் இருந்து கீழ்வரை ஒரு ரேகை ஏற்ப்பட்டு உள்ளது. அந்த ரேகை வலது இடது பாகங்களாக பிரிந்து தேகம் மேல் பாகத்தில் நேரடியாக காணப்படுகிறது. இது தேகம் மேல் மூக்குக்கு கீழ் பாகத்தில் மேல் உதடு மேல் வில் போல் வளைவாக காணப்படுகின்றது. சில பேருக்கு தாடி மீதுக் கூட நடுவில் குழியாக காணப்பட்டு ரேகை ஏற்ப்பட்டதுப்போல் தெரியும். மற்றும் கழுத்திலிருந்து லிங்கம் இடம் வரை முடிகள் நடுவில் உள்ள ரேகை பக்கத்தில் கலந்து ஒரு கோடு ஏற்பட்டதுப்போல் இருக்கிறது. முக்கியமாக ஆண்களுக்கு லிங்கம் கீழ் வீர்ய கிருந்தி நடுவிலிருந்து குதவஸ்தானம் துவாரம் வரை சிறிய கோடு கனமாக ரேகை காணப்படுகிறது. இந்த விதமாக தேகம் இரண்டு பாகமாக (வலது இடது) காணப்படுகிறது. பூர்வ காலத்திலிருந்து அர்த்தநாரீஸ்வரர் என்னும் பெயர் பயன்படுத்திக் கொண்டுயிருந்தார்கள். இந்த வாக்கியத்தை பார்த்தால் பாதி தேகம் பெண், பாதி தேகம் ஆண் உருவம் ஆனாதினால் அர்த்தநாரீஸ்வரர் என்னும் சிலர் சொல்கின்றார்கள். நாரீ என்றால் பிரக்ருதி என்னும், ஈஸ்வர என்றால் பரமாத்மா என்னும் அர்த்தம் பிரக்ருதி

பரமாத்மா இல்லாத தேகம் பூமி மீது இல்லை. மேலும் ஒவ்வொரு தேகம் அர்த்தநாரீஸ்வரர் என்று ஒவ்வொருவரும் தெரிந்துக் கொள்ள வேண்டும். அர்த்தநாரீஸ்வரர் உலகமெல்லாம் நிறைந்து உள்ளார், ஒவ்வொரு ஜீவராசிகளிலும் கூடி இருக்கிறார். எந்த விதமாக இருக்கிறார் என்றால்! அர்த என்றால் பாதி, நாரீ என்றால் அபலா அல்லது ஸ்ரீ (பெண்), ஈஸ்வர என்றால் பலா அல்லது ஆண். ஒவ்வொரு தேகத்தை ஆராய்ச்சி செய்தால் பெண் தத்துவம் ஆண் தத்துவம் காணப்படுகின்றது. எங்கு ஆண் தத்துவம் இருக்கிறதோ, அங்கு எதிரிப்பாக பெண் தத்துவம் உள்ளது. அதனால் தான் தேகம் இரண்டு பாகங்களாக பிரிந்து உள்ளது. ஒரு பாகம் ஆண் தத்துவம் வேறு பக்கம் பாகம் பெண் தத்துவம் இருக்கிறது. அதனால் தான் தேகம் ஒரு பக்கம் பலமாகயிருக்கும். வேறு ஒரு பக்கம் பலத்தில் வித்தியாசமாக இருக்கும். தேகத்தில் ஒரு பக்கம் உறுப்புகள் ஒரு அளவு இருக்கும், வேறு ஒரு பக்கம் உறுப்புகள் அளவில் வித்தியாசம் உள்ளது. அப்படியே பார்வையில், காது கேட்பதில், ஒவ்வொன்றில் வித்தியாசமாக இருக்கும். வலது கையில் கல்லை வீசியது போல இடது கையில் வீசமுடியாது. ஒரு கையில் எடுத்த பலுவை வேறு ஒரு கையில் எடுக்க முடியாது. இந்த விதமாக ஒவ்வொரு ஜீவ ராசி தேகம் அர்த்தநாரீஸ்வரர் உருவத்தில் உலகத்தில் நேரடியாக காணப்பட்டு இருக்கும்போது தெரியாமல் வெவ்வேறாக இருந்த பார்வதியை சிவனை இணைத்து பூரணங்களை உருவாக்கி அர்த்தநாரீஸ்வரர் கைலாசத்தில் இருக்கிறார் என்னும் சிலர் கூறினார்கள். அந்த

அரத்தநாரீஸ்வரன் காணப்பட மாட்டார். மேலும் நான் சொல்லும் அர்த்தநாரீஸ்வரர் நொடி நொடியில் தெரிந்துக்கொண்டு இருப்பார். யோசனை செய்தால் நீ தான் அர்த்தனாரிஸ்வர் உருவத்தில் இருக்கின்றாய். நீயும் மேலும் உன்னை சுற்றி உள்ள ஒவ்வொரு ஜீவராசிகள் அர்தனாரிஸ்வரன் உருவத்தில் இருக்கிறது. தேகம் இரண்டு பாகங்கள் விஷயங்கள் எல்லாம் ஜீவராசிகளுக்கு இருக்கும். இந்த வலது இடது விதானங்கள் மரங்களில் இல்லை என்னும் சந்தேகம் இருக்கக்கூடாது. மரங்களில் ஒவ்வொரு இலைகள் இரண்டு பாகமாக பிரிந்து காணப்படுகிறது. சிறிய இலைக்கூட புளியம் இலை, தும்ம இலைகளிலும் இரண்டு பாகங்கள் தெரிகின்றது. அவற்றிலும் வலது இடது வித்தியாசம் இருக்கும். இங்கு தேகம் இரண்டு பாகங்களாக எதற்கு பிரிக்க வேண்டும்? பாதி பலமாக, பாதி அபலம் குறைவாக அப்படி எதற்கு வைக்க வேண்டும்? என்னும் சந்தேகம் சிலருக்கு வரும். அதற்கு பதில் என்ன வென்றால்! ஜீவன் கர்மத்தினால் பூமி மேல் ஜென்மம் எடுத்து பிறகு மரணிக்கிறான். கர்மம் என்றால் பாவம் மற்றும் புண்ணியம். ஜீவன் கர்மத்தை அனுபவிப்பதற்கு தேகத்தை அடைகின்றான். தேகத்தை அடைவதற்கு இரண்டு காரணம். ஒன்று பாவம், இரண்டாவது புண்ணியம். மற்றும் தேகம் இரண்டாக பிரிந்து உள்ளது. தேகம் இல்லாமல் கர்மம் இல்லை. கர்மம் இல்லாமல் போனால் தேகம் இல்லை. இந்த இரண்டுக்கும் உள்ள நெருக்கமான உறவு உலகத்தில் எதற்கும் இல்லை. கர்மம் இரண்டு பாகங்கள் மற்றும் தேகமும் இரண்டு பாகங்கள்.

தேகம் இரண்டு பாகம் பிரிவதற்கு மற்றும் ஒன்று காரணமும் உள்ளது. அது என்ன வென்றால்! கர்மம் உருவத்தில் நின்ற உலகத்தை ஆள்வதற்கு பரமாத்மா அம்சம் கொண்ட சில உருவங்கள் குழுவாக இருக்கின்றது. அந்த உருவங்கள் தனித்துவமான சக்தியாக இருக்கின்றது. உலகம் கர்மம் உருவம் மற்றும் பாவம் புண்ணியங்கள் உருவத்தில் உள்ள கர்மத்தை தர்மம் தவறாமல் ஜீவராசிகளில் நடத்துவதற்கு ஆத்மா அம்சமே எம தர்ம ராஜனாக வந்தது. அதனால் தான் கீதா சாஸ்த்திரத்தில் "தண்டனை கொடுக்கும் அதிகாரி நான் தான்" என்று சொல்லினார். எம தர்ம ராஜா கால சக்கரத்திற்கு அதிகாரியாக இருக்கிறார். எமனே காலம், காலமே எமன். காலத்தில் பாவம் புண்ணியங்கள் சூட்சமமாக ஜீவிகள் மீது அழுத்துவதற்கு காலன் ஆதினத்தில் தனித்துவமான சக்திகள் ஏழு தயாரானது. அது என்னவென்றால் ஒன்று சூரியன் இரண்டாவது சந்திரன் மூன்றாவது அங்காரகன் நான்காவது புதன் ஐந்தாவது குரு ஆறாவது சூக்கிரன் ஏழாவது சனி இவர்கள் சிருஷ்டி ஆதியில் உருவாகினார்கள். இவர்கள் கர்ம சக்கரத்திற்கு தலைவர்கள். கவனிக்க வேண்டிய விஷயம் காலன் (எமன்) அனுசரித்து காலசக்கரம், அதிலிருந்து உள்ள சப்த கிரகங்கள் அனுசரித்து கர்ம சக்கரம் சுற்றுகின்றது. காலச்சக்கரம் ஆதினத்தில் கர்மம் உள்ளது. காலம் நடக்கும் போது கர்மம் நடந்துக்கொண்டு இருக்கும். காலம், கர்மம் கடவுள் ஆதினத்தில் உள்ளது. இவற்றைப்பற்றி பிறகு தெரிவிக்கிறேன். இப்போது தெரிவிப்பது என்ன வென்றால்! சூரியனிலிருந்து சனிவரை மொத்தம் ஏழு நபர்கள் இருக்கிறார்

அல்லவா! இந்த ஏழு நபருக்கு ஒவ்வொரு நாள் ஒவ்வொருவருக்கு உலகத்தை ஆளுவதற்கு ராஜா சிம்மாசனத்தில் உட்காரும் அதிகாரம் பெற்றவர். மற்றும் முதல் நாள் சூரியன் உலக சிம்மாசனத்தில் உட்கார்ந்தார். அதனால் அந்த நாள் ஆங்கிலத்தில் சண்டே தமிழில் ஞாயிற்று கிழமை என்னும் பெயர் வைத்தார். இரண்டாவது நாள் சந்திரன் உலக சிம்மாசனத்தில் உட்கார்ந்தார். மற்றும் அந்த நாளுக்கு தமிழில் திங்கட்கிழமை என்னும், ஆங்கிலத்தில் மூண்டே என்னும் பெயர் வைத்து கடைசிக்கு மண்டே ஆனது. மூன்றாவது நாள் அங்காரகன் உலக சிம்மாசனத்தில் உட்கார்ந்தார். மற்றும் அந்த நாளுக்கு செவ்வாய் கிழமை என்னும் பெயர் வந்தது. அப்படியே புதன், பிறகு குரு, பிறகு சூக்கிரன், அதன் பிறகு சனி வரிசையாக உலக சிம்மாசனத்தில் உட்கார்ந்ததினால் அந்த அந்த நாளுக்கு அவர்கள் பெயர் வைக்கப்பட்டது. சிருஷ்டி ஆதியில் முதல் நாள் ஞாயிற்று கிழமையில் இருந்து ஆரம்பமானது. அந்த நாள் இருந்து அந்த ஏழு கிரகங்கள் தவறாமல் உலகத்தை ஆண்டு வருகிறார்கள். இப்போதுக்கூட அந்த ஏழு நாட்களை வாரங்களாக கணக்கிடுகிறோம். சப்த கிரகங்கள் கர்மத்தின் பொருத்து இரண்டு பாகங்களாக இருப்பதினால், சப்த கிரகங்களும் கூட சில பாவங்கள் ஆளுகின்றதாக, சில புண்ணியங்கள் ஆளுகின்றதாக பிரிந்துப்போய் குரு வர்க்கம், சனி வர்க்கம் ஆனது. இரண்டு வர்க்கங்களில் நாயகன் குரு, சனி. மற்றும் குரு பார்டி, சனி பார்டி என்னும் அவர் பெயர்கள் அந்த வர்க்கங்களுக்கு சொல்லப்பட்டது. இரண்டு வர்க்கங்களுக்கு ஒழுங்குமுறை பார்த்து கொள்வார்கள் ராகு,

கேது கிரகங்கள். ஒவ்வொரு வேலை முறையாக நடக்க வேண்டும் என்றால் அந்த வேலைக்கு அந்த வேலை செய்வபனுக்கு ஒரு கண்காணிப்பாளர் வேண்டும். பாவம் புண்ணியம் அதிகாரிகள் இரண்டு வர்க்கங்களுக்கு கண்காணிப்பாளர் அதிகாரிகள் ராகு கேதுகள். முதல் இல்லாத ராகு கேதுகள் பிறகு கிரகங்கள் கூட்டத்தில் சேர்ந்து அவருக்கு எதிரான திசை திரும்பி எல்லோரையும் கலந்துக் கொண்டு வருவார்கள். சோதனை அதிகாரிகளாக வந்து சேர்ந்து அவரும் வேலை செய்து சப்தகிரகங்களுக்கு எதிராக வருகின்றார்கள். ராகு கேது சமமான துரத்திலிருந்து, சமமான வேகத்தில் எப்போதாவது ஏழு கிரகங்களை கலந்து அவர் மட்டும் எப்போதும் இணையாமல் இருப்பார்கள். எல்லாம் விஷயங்களில் இவர் தனித்தும் கொண்டவர்கள். மற்றும் இவருக்கும் ஒவ்வொரு நாளும் அதிகாரம் உள்ளது. ஓவ்வொரு நாளும் ராகு காலம் என்னும் பெயரில் **1.1/2** மணி நேரம் கொடுக்கப்படுகிறது. ஏழு நாளுக்கு **1.1/2** மணி பிரகாரம் **10.1/2** மணி நேரம் ஆகின்றது. அப்படியே ஏழு கிரகங்களுக்கு ஒவ்வொரு நாளும் சப்த கிரகங்களில் **10.1/2** மணி வரை ராகு கேதுக்கு இணைந்து வாரத்திற்கு **10.1/2** மணி வரை வருகின்றது. சப்தகிரகங்கள் ககோளத்தில் வலது இருந்து இடதுக்கு சுற்றும்போது ராகு கேது மட்டும் இடது இருந்து வலது பக்கம் சுற்றுகின்றார்கள். முக்கியமான சப்தகிரகங்கள் நிலை எப்படியிருக்கின்றது என்றால்! கிரகங்கள் மொத்தம் ஏழு இருக்கும்போது, என்றால் சிருஷ்டி முதலில் கிரகங்கள் இரண்டு பாகங்களாக பிரிந்துயிருக்கிறது அல்லவா! எதற்கு என்றால் கிரகங்களுக்கு

உலகத்தில் பாவ புண்ணியங்களை பார்த்துக்கொள்ளதானே நிர்மிக்கப்பட்டது. ஆனால் பாவங்களை பார்த்துக்கொள்ள சிலர்கள், புண்ணியத்தை பார்த்துக்கொள்ள சிலர்கள் உருவாகினர்கள். **1.** சூரியன் **2.** சந்திரன் **3.** அங்காரகன் **4.** குரு குழுவாக, **1.** புதன் **2.** சூக்கிரன் **3.** சனி ஒரு குழுவாக இருந்தார்கள். இந்த விதமாக சப்த கிரகங்கள் இரண்டு பாகங்கள் ஆனது. இரண்டு வர்க்கங்களாக (குழுவாக) தயாரான இவர்கள் ஒரு பக்கத்திற்கு மற்ற ஒரு பக்கத்திற்கு விரோதியாக இருந்தார்கள். பாவம் புண்ணியத்திற்கு எவ்வளவோ தூரமோ அப்படியே இணைந்து இருக்க முடியாது. குழுவை பொருத்து பரம எதிரிகள் இவர் உலகத்தில் உள்ள ஜீவராசிகள் மீது அதிகாரம் பெறுவார்கள். மற்றும் ஜீவிகள் தேகங்கள் கூட இருக்கவே இரண்டு பாகமாக தயாரானது. அது வலது, இடது, முக்கியமாக கவனியுங்கள் நம்மில் உள்ள சுவாசை கூட சிறுது நேரம் இடது பக்கம், சிறுது நேரம் வலது பக்கம் மூக்கு துவாரத்தில் ஆடும். அப்படி ஆடுவதற்கு காரணம் சப்தகிரகங்கள் இரண்டு பாகங்கள் ஆனதினால் தான் என்னும் நியாபகம் வைத்துக் கொள்ள வேண்டும். இரண்டு வர்க்கத்தில் கடைசியில் உள்ள குரு சனி இருவர் மட்டும் தான் முக்கியமானவர்கள். மற்றும் குரு வர்க்கம், சனி வர்க்கம் சொல்லப்படுகின்றது. குரு வர்க்கத்தில் சூரியன், சந்திரன், அங்காரகன் இந்த மூவர்கள், சனி வர்க்கத்தில் புதன், சூக்கிரன் இருவர்கள் உள்ளதினால் குரு வர்க்கத்தில் ஒருவர் அதிகமானார். மற்றும் அப்படி அதிகம் இல்லாமல் இரண்டு வர்க்கங்கள் சமமாகயிருப்பதற்கு,

பரமாத்மாவினால் கட்டளை மூலம் வாங்கிய எமன் (காலன்) சந்திரனுக்கு நிர்ணயித்த காலத்தில் (நேரத்தில்) குரு வர்க்கத்தில் இருப்பார், அதற்கு சமமான காலத்தில் சனி வரக்கத்தில் இருக்கும் படி நியமித்தார். அதனால் சந்திரன் காலத்திற்கு தகுந்த படி சிறிது காலம் ஒரு பக்கம், மற்றும் ஒரு காலம் வேறு ஒரு பக்கம் இருப்பார். இதனைப்பற்றி நம்மில் ஆடும் சுவாசைக்கூட சிறிது காலம் வலது, சிறிது காலம் இடது ஆக ஒவ்வொரு நாளும் ஆடுகின்றது. சந்திரன் குரு பக்கம் இருந்த நாளில் அபிவிருத்தியாகி, பௌர்ணமியாக ஏற்ப்படுகின்றது. எதிர்ப்பு பக்கமான சனி பக்கத்தில் சந்திரன் ஒவ்வொரு நாளும் குறைவாக ஆகி கொண்டு, இறுதியில் அமாவாசையாக ஏற்ப்படுகின்றது. இது எல்லோருக்கும் நேரடியாக காணப்படுகிறது. இது எல்லாம் கவனித்தப்பிறகு தேகம் நிர்மானத்திலும் தெரிகின்றது. தேகம் எதற்கு இரண்டு பாகமாய் தயாரானது என்றால்? பாவம் புண்ணியம் இந்த இரண்டுக்கு மட்டும் தான் தேகம் தேவை, மேலும் தேகம் இரண்டு பாகங்களாக தயாரானது. சப்த கிரகங்கள் பாவம் புண்ணியத்தை அனுசரித்து இரண்டு பக்கமாக தயாரானது. மற்றும் தேகமும் இரண்டு பக்கமாக தயாரானது. இதனால் தான் இந்த தேகத்திற்கு அர்த்தநாரீஸ்வரர் என்னும் பெயர் வந்தது. உள்ளே சூரிய சந்திர நாடி வேறு வேறாக, வெளிய வலது இடது பிரிந்ததுப்போல் உருவாக்கப்பட்ட தேகம் உறுப்புகளை பற்றி தெரிந்துக் கொண்டால் பரமாத்மா எப்படிப்பட்டவர் என்னும் சிறிது மார்க்கம் ஏற்ப்படும். **பகவத்கீதாவில் தேகம் சேக்த்தரமு, நான் சேக்த்ர வேக்தன் என்னும் பரமாத்மா**

**கூறினார்.** தேகம் என்னும் சேக்த்தரத்தைப்பற்றி தெரிந்துக் கொள்ளாமல் போனால் சேக்த்தர வேக்தனைப்பற்றி தெரிந்துக் கொள்ள முடியாது. மற்றும் பிரம்மவித்யாவில் தேகத்தை தெரிந்துக் கொள்ளுவது முக்கியம். வலது இடது இரண்டு பாகங்கள் கலந்து ஏற்ப்பட்ட தேகத்தில் மனிதன் பக்தி, தியானம், யோகத்தை செய்து ஆத்மாவை தெரிந்துக் கொள்ள வேண்டும். மற்றும் யோகத்தை அனுசரிக்கும் ஒவ்வொருவரும் குரு, சனி பக்கம் தவறாமல் தெரிந்து கொண்டு யோகத்தை அனுசரிக்க வேண்டும். அப்படி ஆகாதபோது அவர் யோகம் பலன் கிடைக்காது. குரு பக்கம் உள்ள தினங்களில் வலது பக்கம் தேகம் பிரம்ம சக்தியை கிரகிக்கும் படி இருக்கும். சனி பக்கம் உள்ள தினங்களில் இடது பக்கம் தேகம் பிரம்மசக்தியை உணரப்படுகின்றது. இதனை எப்போதோ நம் பெரியோர்கள் மஹரிஷிகள் தெரிந்துக் கொண்டு அதன் பிரகாரம் அவர்கள் யோகத்தை செய்வதற்கு யோக தண்டத்தை உபயோகித்தார்கள். காலப்போக்கில் அதிகமாக பக்தர்கள் உற்பத்தியாகி ஒரு விஷயத்தைக்கூட தெரிந்துக் கொள்ளாமல் போய் பெரியோர்கள் தெரிவித்த முறைகள் அவற்றை வீண் என்று கூறினார்கள். வீண் என்னும் கூறிய வார்த்தை, அனுசரிக்கும் முறைகள் வீண் என்பது உண்மையா என்று அவர்களுக்கே தெரியாது. புனிதமான மஹரிஷிகள் நடத்தி காட்டிய மார்க்கத்தை சரியானது அல்ல என்று சொல்கிறார்கள். சூத்திரங்கள் தெரியாத இந்த காலத்து பக்தர்கள் யோக தண்டத்தினால் வேலை என்ன என்று சொல்கின்றார்கள். யோகம் என்றால் ஆத்மாவில் இணைவது

என்று அர்த்தம் அல்லவா! யோக தண்டம் என்றால் இது ஏதோ ஆத்மாவுக்கு சம்மந்தப்பட்டதினால் உபயோகிப்பார்கள் என்னும், சுலபமாக தெரிகின்றது, அப்படிப்பட்ட யோக தண்டத்தை இந்த காலத்தில் பல பேர்கள் அதனை சுலபமாக எடுத்து விடுகின்றார்கள். அந்த காலத்தில் விஷ்வாமித்திரர் வஷிஸ்டதி முனிவர்கள் நம்மை விட விவரமில்லாதவரா! இல்லை என்னும் நடைமுறைகள் தெரியாதவரா! எவ்வளவோ பெரிய யோக வித்தியாவை சம்பாதித்து யோக தண்டத்தை உபயோகித்து யோகத்தை அடைந்து இருந்தால், அவரை விட குறைவான நாம் யோக தண்டத்தை இல்லாமல் யோகத்தை சாதிக்க முடியுமா! யோக தண்டம் இல்லாமல் யோகத்தை சாதிக்கமுடியும் என்னும் வார்த்தை கனவில் வாழ்வதுப்போல் இருக்கும். அதற்கு தான் இந்த நாள் பெரிய சாமி என்னும் பெயர் சம்பாதித்தவர்கள் பகவான் கீதா சாஸ்த்திரத்தில் அக்ஷரபரப்பிரம்மா யோகத்தில் சொல்லியது போல் இறுதி காலத்தில் இரவு நேரத்தில், தக்ஷிணாயனத்தில், கிருஷ்ணபக்ஷத்தில் மரணிக்கின்றார்கள். அதில் அவருக்கு மறுபடியும் ஜென்மம் இருக்கும் என்னும் நேரடியாக தெரிகின்றது. நாட்டில் பக்தியாகயிருந்தவர்களும் கூட பகல் அல்ல சுக்ல பக்ஷம் அல்ல, உத்தராயனம் அல்ல அந்த நேரத்தில் மரணிக்கின்றார்கள் என்றால், அவர்கள் இன்னும் தெரிந்துக் கொள்வது அதிகமாகயிருக்கிறது. முறை படி தெரிந்துக் கொள்வது அதிகமாக இருக்கிறது என்று தெரிகின்றது. கீதா சாஸ்த்திரத்தில் அக்ஷரப்பரப்பரம்மா யோகத்தில் 28 வது சுலோகத்தில் **“சுக்ல, கிருஷ்ண**

**பக்ஷத்தை தெரிந்தவன் வேதங்களினால், எக்னங்களினால், தபசுகளினால், தானங்களினால் கிடைக்கின்ற புண்ணிய பலன்களினால், இதை எல்லாம் மீறி"** பகவான் தெரிவித்தார். கீதா சாஸ்த்திரத்தை போதிப்பவருக்கே பக்ஷம் என்றால் என்ன வென்று தெரியாமல் போனால், சுக்ல கிருஷ்ண பக்ஷங்களை பற்றி என்ன தெரியும்? கீதா சாஸ்த்திரத்தில் பகவான் விஷயம் விரிவாக இருந்தால், இந்த காலத்தில் கதைகளை உவமையாக சொல்லி, பகவான் எண்ணங்களை விட்டு வேறு எண்ணங்களில் விழுகின்றார்கள். ஒரு நாளில் பகலும் இரவும், மாதத்தில் கிருஷ்ண சுக்ல பக்ஷங்கள், வருடத்தில் உத்தர (வடக்கு), தக்ஷண (தெற்கு) ஆயனத்தில் எதற்கு இருக்கிறது எப்போது தெளிவாக குருவினால் தெரிந்துக்கொள்வானோ அவன் தான் உண்மையானவன், அவன் தான் அனைத்தையும் தெரிந்தவன். பரமாத்மா உலகமெல்லாம் நிறைந்து உள்ளார் என்னும் தெரியும் என்று சொல்கிறார்கள். மேலும் யாரோ சொல்லிக் கொண்டுயிருந்தால் இவரும் சொல்கின்றார்கள். நிஜமாக எப்படி நிறைந்து உள்ளார் என்பது விரிவாக கூற முடிய வில்லை. சுக்ல, கிருஷ்ண பக்ஷங்கள் நமக்கு தெரிகின்றது அல்லவா என்னும் நினைத்துக் கொள்ளுகின்றார்கள். மற்றும் எதற்கு? இப்படி? நடக்கின்றது விவரமாக கூற முடிய வில்லை. கோயிலில் சாமி சூட்சமாக இருந்து பேசுவது பார்கின்றார்கள். பேய்கள் வேறுவரில் சென்று பேசுவதும் பார்க்கின்றார்கள். மற்றும் எதற்கு இப்படி நடக்கின்றது? இதன் உண்மையான நிலை என்ன? என்னும் விஷயம் மீது எந்தளவும் மனிதன் உணரவில்லை. இருக்கிறது எல்லாம் சுயநிலை.

முதலில் இருந்து இதே பூமி தான் இருக்கிறது. இதன் மீது எவ்வளவோ ஆசைப்பட்டு ஒன்றும் கொண்டு போகவில்லை என்னும் எல்லோருக்கும் தெரியும். மற்றும் அவர்களுடைய உண்மையான நிலை தெரிந்துக்கொள்ளாமல் எப்போதாவது விட்டு போகவேண்டும் என்னும் மனிதன் நேரத்தை உபயோகித்துக் கொள்ளுகிறான். சப்த கிரகங்கள் நவக்கிரகங்கள் மற்றும் முதலில் இருக்கின்ற விதானம் என்னவென்றால்! சப்த கிரகங்களுக்கு சப்த நாட்கள் குறிப்பிடப்பட்டுள்ளது அல்லவா! கிரகங்கள் இரண்டு பாகங்களாக பிரிக்கப்பட்டது அல்லவா! அவற்றை அனுசரித்து தினங்களும் இரண்டு பக்கமாக (பாகமாக) பிரிக்கப்பட்டது. ஞாயிற்று கிழமை, திங்கள் கிழமை, செவ்வாய் கிழமை, வியாழக் கிழமையை ஒன்றாக, புதன் கிழமை, வெள்ளி கிழமை, சனி கிழமையை ஒன்றாக நிர்னையித்தார்கள். இரண்டு பாகங்களாக சமமாகயிருப்பதற்கு சந்திரன் **15** நாள் ஒரு பக்கம், மற்ற **15** நாள் வேறு ஒரு பக்கம் மாறும். இந்த விதமாக மாறுவதே பக்ஷம் என்னும் சொல்வார்கள். இந்த விதமாக சந்திரன் மாறுவது நாள் இரண்டு பக்ஷம் கிரகங்களுக்கு சமமாக பலம் ஏற்ப்படுகின்றது. சந்திரன் குரு பக்கம் சேர்ந்தப்போது சுக்ல பக்ஷம் என்னும், சனி பக்கம் சேர்ந்தப்போது கிருஷ்ண பக்ஷம் என்று தெரிகின்றது. சுக்ல பக்ஷத்தில் ஞாயிற்று கிழமை, திங்கள் கிழமை, செவ்வாய் கிழமை, வியாழக் கிழமை ஒன்றாக, கிருஷ்ண பக்ஷத்தில் புதன் கிழமை, வெள்ளி கிழமை, சனி கிழமை, திங்கள் கிழமை ஒன்றாக இருக்கிறது. சுக்ல பக்ஷத்தில் ஞாயிறு, திங்கள்,

செவ்வாய், வியாழக்கிழமையில் தேகத்தில் வலது பக்கம் மட்டுமே பிரம்மசக்தியை கிரகிக்கும் (உணரும்) பலம் இருக்கும். அந்த நாளில் தேகம் இடது பாகத்தில் பிரம்மசக்தியை சிறுது அளவு கூட உணரமுடியாது. கிருஷ்ண பக்ஷம் புதன், வெள்ளி. சனி, திங்கள் கிழமையில் இடது பக்கம் தேகம் மட்டும் பிரம்மசக்தியை உணரும் சாமர்த்தியம் இருக்கும். இந்த நாளில் தேகம் வலது பக்கம் சிறிது அளவு கூட பிரம்மசக்தியை உணரமுடியாது. மற்றும் யோகம் செய்துக் கொண்டுயிருக்கும் நேரத்தில் எந்த நாள் நாம் யோகம் செய்கின்றோமோ, அந்த நாள் தேகத்தில் எந்த பாகத்திற்கு சேர்ந்ததோ தெரிந்துக் கொண்டு அந்த பாகத்திலேயே நம்மில் ஆடுகின்ற சுவாசையை நடத்தும். சுவாசை எந்த பாகத்தில் அதிகமாக நடந்தால் அந்த பாகத்தில் தளபதியாக இருந்த கிரகங்கள் பிரம்மசக்தியை தேகத்துக்குள்ளே போகும் படி செய்யுவார்கள். அப்படியாகாமல் எதிர்ப்பு திசையில் சுவாசை ஆடிக் கொண்டு இருக்கும்போது பிரம்மசக்தியை கிரகிக்கும் சாமர்த்தியத்தை இழந்து விடும். இதில் உதாரணத்திற்கு தெரியுப்படுத்தும் விஷயம் இது. ஒரு யோகி செவ்வாய் கிழமை யோகத்தை செய்துக் கொண்டு இருப்பார் என்னும் நினைத்து கொள்ளுங்கள். செவ்வாய் கிழமை குரு பக்ஷத்தில் சேர்ந்தது. மற்றும் குரு பக்ஷம் தேகத்தை வலது பக்கம் அதிகாரம் பெற்று இருக்கின்றது. மற்றும் அந்த யோகி சுவாசத்தை வலது மூக்கு துவாரத்தில் ஆடும் படி செய்துக் கொள்ள வேண்டும். சுவாசை வலது மூக்கு துவாரத்தில் ஆடும் வரை, யோக செய்யும் வரை யோக சக்தி வலது

பக்கம் தேகம் சூட்சம துவாரத்தினால் உள்ளே நுழையும். அப்படியாகாமல் சுவாசை இடது மூக்கு துவாரத்தில் ஆடிக் கொண்டுயிருக்கும் போது யோகி எவ்வளவோ நேரம் யோகத்திலிருந்தாலும் பிரம்மசக்தி அவரில் நுழையாது. துவாரங்கள் முடியிருக்கம். அதனால் சக்தி உள்ளே நுழையாது. சுவாசை இடது பக்கம் மாறியதினால் இடது பக்கம் தேகத்தில் சூட்சம துவாரங்கள் திறந்துக் கொண்டு இருக்கும். அந்த நாள் குரு பக்ஷம் நாள் ஆனது, அதனால் பிரம்மசக்தி இடது பக்கம் நுழையாது. எதற்கு என்றால் இடது பக்கம் உள்ள கிரகங்கள் நாள் அல்ல. இதனை பற்றி என்ன தெரிகின்றது என்றால்! சுவாசை எந்த பக்கம் ஆடுகின்றதோ அந்த பக்கம் தேகம் பாகம் மட்டும் சக்தியை உணரும். தினங்கள் எந்த பக்ஷத்தில் உள்ளதோ அந்த பக்ஷம் பாகங்களில் பிரம்மசக்தி இருக்கும். அதனால் பிரம்மசக்தியை சம்பாதித்து கொண்ட யோகிகள் பூர்வம் யோகம் நேரத்தில் எந்த பக்ஷம் தினங்களில் அந்த பக்கத்தில் சுவாசை நடத்துவர். குரு சனி பார்டி தினங்களில் காலத்திற்கு (நேரத்திற்கு) தகுந்தப் படி மாறிக் கொண்டுயிருக்கும். மற்றும் நம்மில் உள்ள சுவாசை மட்டும் முறையாக மாறாது. சுவாசை அதற்கு அதுக்கு இஷ்டம் வந்தப்படி எந்த பக்கமும் மாறிக் கொள்ளும். அப்படிப்பட்ட ஒரு முறையில்லாத சுவாசையை ஒரு பக்கம் நிறுத்தி யோகத்தை சார்ந்தாக செய்துக் கொள்ளுவதற்கு உபயோகிக்கும் தண்டத்தை “யோக தண்டம்” என்று சொல்வார்கள். யோக தண்டத்தை உபயோகித்தால் அது எப்படி இருக்குமோ சிலருக்கு தெரிந்து இருக்கும். நம்மில்

உள்ள சுவாசை ஒரு பக்கம் அதிகமாக ஆடும்படி செய்ய வேண்டும் என்றால், அதற்கு எதிர்ப்பு தேக பாகத்தை யோக தண்டத்தை உபயோகப்படுத்த வேண்டும். தோல்பட்டை கீழ் முனங்கை மேல் பாகத்தில் யோக தண்டம் மேல் வலைவாக இருக்கின்ற இடத்தில் தோல்பட்டை கீழ் முனங்கை மேல் நடுவில் வைத்து யோக தண்டம் கீழ் பாகத்தை பூமியில் ஒட்டி இருக்க வேண்டும். அப்படி வைப்பதினால் அந்த கை நரம்புகளுக்கு தண்டத்தின் அழுத்தத்தினால் சுவாசை அதற்கு எதிர்ப்பு திசையில் மாறும். உதாரணத்திற்கு புதன்கிழமை யோகத்தை செய்கின்றப்போது இடது பக்கம் சுவாசை ஆட வேண்டும். மற்றும் வலது பக்கம் கீழ் யோக தண்டத்தை வைத்துக் கொள்ள வேண்டும். வலது பக்கம் தண்டத்தை வைத்துக் கொள்ளுவதினால் சுவாசை அதுக்கு தானே இடது பக்கத்திற்கு போகும். வலது மூக்கு துவரத்தில் அதிகம் காற்று வருவதினால் அதனை சூரிய நாடி என்னும், இடது மூக்கு துவாரத்தில் அதிகம் காற்று வருகின்றதை அதனை சந்திர நாடி என்னும் பெரியோர்கள் சொல்லிக் கொண்டார்கள். சூரிய சந்திர நாடிகள் நம் சுவாதினத்தில் இருந்து நடத்துவதற்கு யோக தண்டம் தவறாமல் இருக்க வேண்டும். இதனை விவரமாக தெரிந்த விசிஷ்டாதி மகா முனிவர்கள் யோக தண்டத்தை விடாமல் அவர்களிடமே எல்லாம் நேரத்திலும் வைத்துக் கொண்டுயிருப்பார்கள். மற்றும் அவர்கள் மான் தோலை எங்கு போனாலும் விடாமல் கொண்டுப்போவார்கள். மற்றும் இந்த காலத்தில் மான் தோல் இல்லாமல் போனால் என்ன? கடவுள்

ஒப்புக் கொள்ள மாட்டாரா? என்பவர்கள் தயாரானார்கள். அந்த காலத்தில் பெரியோர்கள் கஷ்டத்தைக்கூட கணக்கிடாமல் அவர் எங்கு போனாலும் யோகம் செய்ய வேண்டும் என்னும் அங்கே தோலை, யோக தண்டத்தை கொண்டு போய் யோகத்தை செய்யுவார்கள். மற்றும் இந்த காலத்தில் நாம் அவற்றை வெளியேற்றுவதை விட, அவற்றை உபயோகித்தவரையும் மற்றும் உபயோகித்துப் கொண்டுயிருப்பவரையும் கூட ஏலனமாக பேசுகிறோம். சந்திரன் இரண்டு பக்கம் மாறுவார். மேலும் இந்த விஷயத்தை நன்றாக அர்த்தம் செய்துக் கொள்ள வேண்டும். யோகம் செய்யும் யோகிகள் எல்லோரும் இந்த விதானம் அனுசரிக்கும்போது யோக சக்தி தவறாமல் உங்களில் சேரும். அப்படியாகாதபோது சக்தியை நஷ்டமானவார் ஆவார். **(யோகங்கள் மொத்தம் மூன்று ரகம் என்னும், அவற்றில் வெறும் ஒரே பிரம்மயோகத்தில் மட்டும் யோக தண்டத்தை உபயோகிக்க வேண்டும் என்னும் மற்ற இரண்டு யோகத்திற்கு அதனின் வேலை இல்லை என்னும் நியாபகம் வைத்துக் கொள்ள வேண்டும்.)**

1. **ஞாயிற்று கிழமை சூரியன் நாள்:** சூரியன் குரு பார்டிக்கு சேர்ந்தவர். குரு பார்டிக்கு தேகத்திற்கு வலது பக்கம் அதிகாரம் பெற்றுயிருக்கின்றது.

மற்றும் அந்த நாளில் பிரம்மசக்தி வலது பக்கமே வருவதற்கு வாய்ப்பு இருக்கும். சக்தி தேகதிற்கு உள்ளே நுழைவதற்கு வலது பக்கம் சூட்சம துவாரம் திறந்து கொண்டு இருக்க வேண்டும். சூட்சம துவாரம் திறந்து கொள்ள வேண்டும் என்றால் சுவாசை வலது பக்கமே ஆடவேண்டும் என்றால்

சூரிய நாடி பக்கம் ஆடவேண்டும். அதனால் யோக தண்டம் இடது கைக்கு கீழ் வைத்துக் கொள்ள வேண்டும்.

**2. திங்கள் கிழமை சந்திரன் நாள் :** சுக்ல பக்ஷம் திங்கள் கிழமை குரு பக்கம் இருப்பார். மற்றும் சுவாசை வலது மூக்கு துவாரத்தில் (சூரிய நாடியில்) ஆட வேண்டும். கிருஷ்ண பக்ஷம் திங்கள் கிழமை சனி பார்டியில் சேர்ந்துயிருக்கும். மேலும் சுவாசை இடது மூக்கு துவரத்தில் (சந்திர நாடியில்) ஆட வேண்டும். சுக்ல பக்ஷத்தில் வரும் திங்கள் கிழமையில் யோக தண்டத்தை இடது பக்கம் வைத்துக் கொள்ள வேண்டும். கிருஷ்ண பக்ஷத்தில் வரும் திங்கள் கிழமை யோக தண்டத்தை வலது பக்கம் வைத்துக் கொள்ள வேண்டும்.

**3. செவ்வாய் கிழமை அங்காரகன் நாள்** : மேலும் குரு பக்ஷம் இருக்கும் (சூரிய நாடியில்) ஆட வேண்டும். யோக தண்டத்தை இடது பக்கம் வைத்துக் கொள்ள வேண்டும்.

**4. புதன் கிழமை புதன் நாள்** : மேலும் சனி பக்ஷத்தில் இருக்கும். அதனால் சுவாசை இடது பக்கம் (சந்திர நாடியில்) ஆட வேண்டும் யோக தண்டத்தை வலது கைக்கு கீழ் வைத்துக் கொள்ள வேண்டும்.

**5. வியாழக்கிழமை குரு நாள்** : மேலும் குரு பக்ஷத்தில் இருக்கும். சுவாசை வலது பக்கம் (சூரிய நாடியில்) ஆட வேண்டும். யோகதண்டத்தை இடது கைக்கு கீழ் பக்கம் வைத்துக் கொள்ள வேண்டும்.

**6.வெள்ளி கிழமை சுக்கிரன் நாள்** : மேலும் சனி பக்கம் சேர்ந்துயிருக்கிறது. சுவாசை இடது பக்கம் (சந்திரன் நாடியில்)

ஆடும். யோக தண்டத்தை வலது பக்கம் வைத்துக் கொள்ள வேண்டும்.

**7.சனி கிழமை சனி நாள் :** மேலும் சனி பக்கத்தில் சேர்ந்துயிருக்கிறது. சுவாசை இடது பக்கம் (சந்திர நாடியில்) ஆடும். யோக தண்டத்தை வலது பக்கம் வைத்துக் கொள்ள வேண்டும்.

விண்ணப்பம் : யோக சாதனை செய்பவர் ஒரு முக்கியமான கவனிப்பு சுவாசை வலது இடது ஆடுகின்றது என்னும் சொல்லினோம் அல்லவா! குரு பக்ஷம் தினங்களில் யோகம் செய்கின்றப்போது வலது பக்கம், சனி பக்ஷம் தினங்களில் யோகம் செய்கின்றப்போது இடது பக்கம் சுவாசை ஆடும். அதனால் யோக தண்டத்தை எதிர்ப்பு திசையில் உபயோகிக்க வேண்டும் என்னும் தெரிவிக்கின்றோம். மற்றும் இந்த விதமாக யோக சாதனை செய்பவரில் அரிதாக (குறைவாக) சிலருக்கு மட்டுமே சுவாசை நாங்கள் சொல்லிய விதானத்தில் மாறாது. அப்படி மாறாதப் போது எங்களுக்கு சுவாசை யோக தண்டத்தை உபயோகப்படுத்தினாலும் மாற வில்லையே? என்னும் யாரும் யோசிக்க வேண்டியது இல்லை. நாங்கள் எந்த விதமாக சொல்லினோமோ அந்த விதானத்தில் யோக தண்டத்தை உபயோகபடுத்தி சாதனை செய்ய வேண்டும். இந்த விஷயத்தைப் பற்றி இன்னும் விவரமாக தெரிவிப்பது என்ன வென்றால்! தேகத்தில் வலது பாகத்தில் பெரியதாக சூரிய நாடியிருக்கிறது. அப்படியே இடது பாகத்தில் பெரியதாக சந்திர நாடியிருக்கிறது. நம் தேகத்தில் அந்தகரணத்தில் இரண்டாவது மற்றும் முக்கியமானது மனசு விழித்துக் கொண்டுயிருக்கும்போது இந்த சூரிய சந்திர

நாடியில் மீது இருக்கும். ஓரு நாளில் சூரிய நாடி மீது சில நேரம், சந்திர நாடி மீது சில நேரம் மனசு நிவாசிக்கும். மனசு வலது பக்கம் சூரிய நாடி மீது இருக்கும்போது சுவாசை வலது மூக்கு துவாரத்தில், இடது பக்கம் சந்திர நாடி மீது இருக்கும்போது சுவாசை இடது பக்கம் மூக்கு துவாரத்தில் அதிகமாக வரும். அந்த நாள் உள்ளே இருக்கும் மனசு எந்த பக்கமிற்க்கு போனால் அந்த பக்கமில் சுவாசை ஆடும். மனசு ஒரு நாடி மீது வைப்பதற்கு யோக தண்டத்தை உபயோகிக்க வேண்டும் என்னும் தெரிவிக்கிறோம். யோக தண்டத்தை உபயோகித்த திசையில் மனசு இருக்காமல் அதற்கு எதிர்ப்பு திசையிருக்கும். மற்றும் சுவாசை கூட யோக தண்டத்தை உபயோகித்த திசையில் இல்லாமல் அதற்கு எதிர்ப்பு திசையில் ஆடும். மற்றும் நூற்றுக்கு ஒன்று, இரண்டு சதவீதம் சிலருக்கு சாதனை செய்யும் நேரத்தில் யோக தண்டத்தை உபயோகித்த சுவாசை மாறாமல் யோக தண்டம் உபயோகித்த பக்கமே இருக்கும். மற்றும் உள்ளே மனசு அப்படி இல்லாமல் எதிர்ப்பு திசையில் மாறியிருக்கும். யோகத்திற்கு மனசு முக்கியமானது மேலும் சுவாசை முக்கியம் அல்ல. ஆனால் மாறாத சுவாசைக்காக யாரும் சிந்திக்ககூடாது. யோக தண்டத்தை உபயோகித்தவுடனே மேல் சுவாசை மாறாமலிருந்தாலும் உள்ளே மனசு மாறியிருக்கும். மற்றும் யோக சக்திக்கூட மனசு இருக்கும் பக்கம் தேகத்தில் நுழைந்துக் கொண்டே இருக்கும். யோக தண்டத்தை உபயோகித்து சுவாசை மாறாதவற்கு கூட யோக சக்தி நஷ்டமாகாமல் அதனை அடைவார்கள் என்னும்

தெரிவிக்கிறோம். முக்கியமாக உள்ளே மனசு வலது இடதாக மாறும் போது யோக தண்டத்தை உபயோகிக்கின்றார் என்னும் ஒவ்வொருவர் தெரிந்துக் கொள்ள வேண்டும். அதனால் நாங்கள் தெரிவித்தப்படி யோக தண்டத்தை உபயோகித்து யோகம் செய்ய வேண்டும். பூர்வமில் மனசு குரு சனி பக்ஷத்தில் சூரிய சந்திர நாடிகள் மீது மாற்றிக் கொள்வதற்கு சங்கரன் யோக தண்டத்தை உபயோகித்தார் என்னும், விஷ்ணு தன் தலை கீழ் வலது இடது கையை வைத்துக் கொண்டு படுத்து யோகம் செய்தார் என்பதை மறக்ககூடாது. விஷ்ணு, சங்கரன் செய்தப்போது, நாம் செய்யாமல் போனால் பெரிய குறைபாடு. அதனால் எல்லோரும் கிரந்தத்தில் சொல்லியதுப்போல பிரம்மயோகம் செய்யும் நேரத்தில் யோக தண்டத்தை உபயோகிக்க வேண்டும்.

## தோல் ஆசனம் எதற்கு தேவை?

பூர்வம் மகரிஷிகள் அனைவரும் யோக தண்டம் மான் தோலை கையில் வைத்துக் கொண்டு போனார் என்று எல்லோருக்கும் தெரியும். யோக தண்டம் இல்லை என்றால் யோகம் செய்வது கஷ்டம் என்று தெரிந்துக் கொண்டோம். இனியும் மகரிஷிகள் தோலை எதற்கு உபயோகித்தார் என்னும் விஷயம் தெரிந்துக் கொள்ளலாம். யோகம் செய்துக் கொண்டுயிருக்கும்போது பிரம்மசக்தி அல்லது யோகசக்தி தேகத்தில் நுழைந்துக் கொண்டுயிருக்கும். இந்த விதமாக நுழைந்துக் கொண்ட சக்தி தேகத்தில் பிரம்ம நாடியில் சென்று சப்த இடத்தில் சஹஸ்ர

சக்கரத்தில் கூட்டமாக கூடியிருக்கும். சஹஸ்ரத்தில் கூட்டமாக சேர்ந்த சக்தியை விஷ்ணு, ஈஸ்வர படத்தில் அவர் தலை பின் பாகத்தில் வெளிச்சமாக வரைந்து காண்பிக்கப்பட்டது. தலை பின் பாகத்தில் வெளிச்சம் வரைந்து அவருடைய ஞானசக்தி என்று தெரிந்துக் கொள்ளுங்கள். இந்த பிரகாசமான சக்தியை தேவதைகள் முறை பிரகாரம் யோகத்தை செய்து சம்பாதித்துக் கொண்டார்கள். முறை என்றால் யோக தண்டத்தை உபயோகித்து, தோல்களை உபயோகித்து செய்வது. தோலை உபயோகிப்பதன் ரகசியம் என்ன வென்றால்? விவரிக்கின்றோம் கேளுங்கள். யோகி பிரம்மயோகம் செய்யும்போது ஞானசக்தி அவரில் நுழையும். தேகத்தில் நுழைந்த சக்தி பிரம்ம நாடியில் சென்று, மேல் திசையாக பயணம் செய்து, தலையில் ஏழாவது சக்கரத்தில் சேரும். அப்படி சேரும்போது கீழ் பூமி ஈர்ப்பு சக்தியினால் சிறிது யோகசக்தி பிரம்ம நாடியினால் கீழ் வந்து குதவஸ்தானத்திலிருந்து ஆதார கமலத்திலிருந்து நாடிமையத்திலிருந்து பூமிக்கு சேரும். மற்றும் யோகி யோகம் செய்யும்போது சக்தி எல்லாம் பூமி ஈர்ப்புக் கொள்ளாது. வெறும் பாதி மட்டும் நஷ்டமாகி விடும். பாதி பாகம் மட்டும் பூமியில் நுழைந்தால் அந்த சக்தி மறுபடியும் சூன்னியத்தில் சேர்ந்துப்போகின்றது. பூமிக்கு இப்படிப்பட்ட சக்தி இருக்கிறது என்று நம் பெரியோர்கள் எப்போதோ தெரிந்துக் கொண்டு, அவர் பிரம்மயோகம் செய்யும் நேரத்தில் தோல் ஆசனத்தை உபயோகித்தார்கள். தோலை பூமி மீது விரித்து அதன் மீது யோகி உட்கார்ந்துயிருக்கும்போது, யோகி தேகத்தில்

நுழையும் சக்தியை பூமி இழுத்துக் கொள்ளாது. சுவரை தாண்டி சூரிய வெளிச்சம் எப்படி போகாதோ அப்படியே தோலை தாண்டி சக்தி போகாது. சக்திக்கு தோல் தடுப்பு. நாட்டில் தோல் தவிற எந்த பொருளும் சக்தியை தடுக்காது. பாய் மீது உட்கார்ந்துயிருந்தாலும், கட்டில் மீது உட்கார்ந்துயிருந்தாலும், எங்கு உட்கார்ந்துயிருந்தாலும் தவறாமல் நஷ்டமாகும். தோல் மீது உட்கார்ந்துயிருந்த யோகி சக்தி நஷ்டப்படாது. பூமி பஞ்சபூதத்தில் ஒன்று ஆனது மற்றும் அதற்கு விசித்திரமான ஈர்ப்பு சக்தி உள்ளது. மேல் பரந்த பொருள்களை மட்டும் பூமி தன் பக்கம் இழுத்துக் கொள்ளுவது போல யோகி யோகம் செய்யும்போது என்றால் யோகசக்தி தேகத்தில் நுழையும்போது மட்டும் சக்தியை தன் பக்கம் இழுத்துக் கொள்ளும். பூமி தன் மீது உள்ள பொருள்களை அசைக்காததுப்போல சஹஸ்ர சேர்ந்த சக்தியை சிறிதுக்கூட ஈர்ப்புக் கொள்ளாது. இதனைப்பற்றி யோகி யோகம் செய்யும்போது மட்டும் சக்தி நஷ்டம் ஆகுவதற்கு மட்டுமே முடியும். மற்ற நேரத்தில் நஷ்டமாகுவதற்கு வாய்ப்பு இல்லை. யோகி யோகம் செய்யும் நேரத்தில் பாதி சக்தி மட்டும் எதற்கு நஷ்டமாகும். நஷ்டமாகும் சக்தி பாதிக்கு மேல் அதிகமாகவோ! அல்லது குறைவாகவோ எப்படி சொல்ல முடியும்? என்னும் சந்தேகம் சிலருக்கு வரும். அதற்கு பதில், சக்தி தேகத்தில் நுழைந்து பிரம்ம நாடியில் சேரும் அல்லவா! பிரம்ம நாடியில் நாபி இடத்திலிருந்து கீழ் பக்கம் நுழையும் சக்தியை எல்லாம் பூமி இழுத்துக் கொள்ளும். நாபி இடத்திலிருந்து மேல் போகும் சக்தியை பூமி இழுக்காது.

நாபியிலிருந்து மேல் நுழையும் சக்தியை இழுத்துக் கொள்ளுவதற்கு பூமிக்கு ஈர்ப்பு பலம் குறையலாம். மற்றும் ஆறு சக்கரத்தில் மூன்று சக்கரம் வரை பூமி ஈர்ப்பு சக்தி போகும். மேலும் யோகி பாதி பாகம் சக்தியை மட்டும் நஷ்டமாகும். ஆசனமில் தோலை உபயோகித்தால் யோகசக்தி தோலை தாண்டிப்போகாது. பூமி ஈர்ப்பு தோலை தாண்டி இழுக்காது. மின்சாரம் சக்தியை ரப்பர் எப்படி தடுக்கின்றதோ அப்படியே பூமி ஈர்ப்பு சக்தியை நிறுத்துகின்றது. பூர்வம் காலத்தில் யோகிகள் எல்லோரும் தோல்களை உபயோகித்து சக்தியை நஷ்டப்போகாமல் பெரிய சக்தியானவரானார்கள். இந்த காலத்தில் தோலை பற்றி தனித்துவம் தெரியாதவர்கள் தோல்கள் எதற்கு தேவைப்படுகிறது? என்னும் வாதிக்கின்றார்கள். தேவை இல்லாதது கீதாவில் ஆத்மா சம்யமயோகத்தில் யோகி மான் தோல் மீது உட்கார வேண்டும் என்று பகவான் எதற்கு சொல்லினார்? இந்த காலத்தில் யோக தண்டங்கள், மான் தோல்கள் நாகரிகமில்லாத பழைய முறைகள் என்னும் சொல்பவார்களும் இருக்கின்றார்கள். பழைய காலம் முறைகளில் பழைய காலத்தவர் சொல்லிய சொல்லுக்கு பிரக்ருதியே தலை கீழ் ஆன வேலை நடத்தியது. மற்றும் புதிய காலத்தில் புதிய முறைகளில் அவர்கள் சாதித்தாரா தெரிய வில்லை. சிவன் தோலை எப்போதும் இடுப்புக்கு சுற்றிக் கொண்டுயிருப்பார். வஷிஷ்டன், விஷ்வாமித்திரன் முதலியவர் பெரியவர்கள் தோலை, யோக தண்டத்தை பக்கத்தில் வைத்துக் கொண்டு எவ்வளவோ பத்திரமாக பார்த்துக் கொண்டுயிருப்பார்கள். மேலும் இந்த காலத்தில்

அவ்வளவு புனிதமான பொருட்களை சிறிது அளவுக்கு கூட மனிதர்களில் மதிப்பு இல்லாமல் போனது என்றால் மனிதன் குறைந்தவனாக தெரிகின்றது. யோக சக்தியை நிறுத்துவதற்கு ஒரு மான் தோல் மட்டும் தான் உபயோகப்படுமா என்னும் கேள்வி சிலருக்கு வரும். அதற்கு பதில் என்ன வென்றால் யோகி தேகத்திற்கு வேறு எந்த ஜீவராசி தோலும் சக்தி நிறுத்தும் பலம் இருக்கும். அந்த தோல் சஜீவமாகயிருக்கலாம் அல்லது நிர்ஜீவமாகயிருக்கலாம். அதனால் தான் பூர்வம் சிவன் எப்போதாவது யானை தோலை போட்டு கொள்வார், மற்றும் புலி தோலை போட்டு கொள்வார், இன்னும் மான் தோலையும் போட்டு கொள்ளுவார். இதனைப்பற்றி எந்த ஜீவராசி தோல் ஆவது ஒன்றே என்று தெரிகின்றது. கிறிஸ்துவ மதம் கர்த்தாவான இயேசு பிரபுக்கு குருவாகயிருந்த யோஹன் ஒட்டகம் தோல் போட்டு கொள்ளுவார். ஸ்ரீ மகாவிஷ்ணு உயிரோடுயிருந்த பாம்பு மீது இடது கை மீது மற்றும் வலது கை மீது படுத்துக் கொண்டு சூரிய சந்திரன் நாடியை மாற்றி யோகம் செய்ததாக தெரிகின்றது. பாம்பு மீது படுத்ததினால் மற்றும் பாம்பு தோல் சக்தியை நிறுத்துகின்றது. இப்படி பரிசோதனை செய்தால் சஜீவமானலும் நிர்ஜீவமானலும் தோல் தவறாமல் இருக்க வேண்டும் என்று தெரிகின்றது. மற்றும் இந்த காலத்தில் நாம் அஹம்காரத்தினால் தெரியும் என்னும், யாராவது சொல்லினாலும் அதனை கேலி செய்து குறைவாகின்றோம். விஷ்ணு, ஈஸ்வர, மகரிஷிகள் விட நாம் பெரியவர்களா! பார்வை இல்லாத குருடன் குழியில் விழுந்தது போல, ஞானம் பார்வையில்லாத மனிதன் மாயை என்னும்

குழியில் விழுந்து அதில் மூழ்கி மிதங்கி ஒவ்வொரு நாளும் ஒவ்வொருவன் செய்யும் வேலை செய்து, சிறிதுக்கூட பரமாத்மா மார்க்கம் அடையாளிக்காமல் இருக்கின்றார்கள். தெரியாததை தெரிவிப்பவர், காணாததை காண்பித்தவர், அஞ்ஞானத்தில் இருக்கும்போது ஞானம் கொடுத்தவர், இருட்டில் தீபமாக வந்தவர் “குரு” என்னும் நம்பி குரு சேவையில் வாழ்கையை நன்றாக செய்துக் கொண்டு, ஞான பார்வை சம்பாதித்துக் கொண்டு சர்வக்ஞன் ஆகவேண்டும் என்று வேண்டிக் கொள்ளுகிறேன்.

## ஆசிரமங்கள்

இப்போது ஆசரமங்கள் பற்றி தெரிவிக்கிறேன். இங்கு தெரிவிக்கும் விஷயங்கள் எல்லோருக்கும் அல்ல சில பேர்களுக்கு மட்டும் ஆசரம வாசிகளுக்கு எதிர்ப்பாக தெரியலாம். அவருக்கு என் மீது கோபம் வரலாம். இதில் என் தவறு என்ன இருக்கிறது? இந்த விஷயமாக என் பொறுப்பு அல்ல. எனக்கு ஒன்றும் தெரியாது. இந்த கிரந்தம் எல்லாம் ஆத்மா எழுத வைத்ததினால் எழுதுகிறேன். மற்றும் எழுதுவது நான் அல்ல. மேலும் என்னை தூசித்தாலும், புகழ்ந்தாலும் மற்றும் இதனினால் நல்ல பெயர் வந்தாலும் வராமல் இருந்தாலும் என் தந்தையான பரமாத்மாவுக்கு மற்றும் என் சகோதரனான ஆத்மாவுக்கு சேரும். இந்த காலத்தில் பூமி மீது சில பேர் பக்தர்கள் என்னும் சொல்லிக் கொண்டு ஆசரமங்களை உருவாக்குகின்றார்கள். அதில் சில ஆசரமங்கள் வெளி உலகத்தில் பெயர் இல்லாமல் எவ்வளவோ புனிதத்தன்மையாக இருக்கின்றது. மேலும் சில

உலகத்தில் பெயர் சம்பாதித்துக் கொண்டு புனிதம் இல்லாமல் போனது. இன்னும் சில ஆசரமங்கள் விக்ரகம் (சிலை) வைத்துக் கொண்டதால் இது கோயிலா, அல்லது ஆசரமங்களா என்று சந்தேகமாக இருக்கும். இன்னும் சில ஆசரமங்கள் இது கோயிலா, பள்ளிக்கூடமா அல்லது ஆசரமங்களா என்று சந்தேகம் வரும். இது எல்லாம் தெரிந்து கொண்டு போனால் இன்னும் சில காலத்திற்கு ஆசரங்மங்கள் நிலை எப்படியாகுமோ என்று அர்த்தமாகவில்லை. பூர்வ காலத்தில் பக்தர்கள் சில பேர்கள் பூமி மீது ஆசரமங்கள் உருவாக்கிக் கொண்டுயிருந்தார்கள். அவர் பரம பவித்திரர்களாக இருந்து, அவர்கள் நிவாசிக்கும் இடமும் புனிதமான இடம் என்னும் பெயர் வரும் படி செய்தார்கள். அப்படிப்பட்ட ஆசரமங்களை நாம் போய் பார்த்தால் அதில் அவர் யோக சாதனைக்கு உபயோகிக்கின்ற பொருள்களான தோல்களை, யோக தண்டங்களை பாதுகாப்பாக வைத்துக் கொண்டு இருப்பார்கள். இந்த காலத்தில் பார்த்தால் ஆசரமங்களில் அது எங்கும் காணமுடியாது. காணப்பட்டாலும் காண்பிப்பதற்கு அவற்றை ஆசரமத்தில் வைத்துக் கொண்டு இருப்பார்கள் மேலும் அவர்கள் உபயோகிக்கமாட்டார்கள். பூர்வ காலத்தில் ஆசரமங்களில் தேவதைகள் சிலைகள் மேலும், தேவதைகள் படங்கள் எங்கும் காணமுடியாது. இந்த காலத்தில் தேவதை சிலைகளை ஆசரமங்களில் வைத்தார்கள். மற்றும் தேவதைகள் படங்களை பல ஆசரமங்களில் வைத்தார்கள். பூர்வ காலத்தில் பிரம்மவித்யாவை பழகி அதனினால்

சாதனை செய்து, பிரம்மாவை தெரிந்துக் கொள்ளுபவர் இருந்தார்கள், இந்த காலத்தில் உலக வித்தையான சமஸ்கிருதத்தை நல்ல பழகி, எழுதுக்களுக்கு அர்த்தம் சொல்வதற்கு தெரிந்துக் கொண்டார்கள். பிரம்மவித்தை தெரிந்துக் கொள்ளாமல் இருந்தாலும் சமஸ்கிருதம் தெரிந்துக் கொண்டால் போதும் ஆசரமங்களில் சாமிகள் ஆகிவிடுகிறார்கள். ஆசரமங்கள் எப்படியிருக்க வேண்டும் என்றால் ஆசரமங்களில் பிரம்மவித்தை தெரிந்தவர்கள் மற்றும் பயற்சி பெற்ற யோகிகள் இருக்க வேண்டும். யோக தண்டம், தோல் ஆசனம் யோகத்திற்கு தேவைப்படும் பொருள்கள் அது தவறாமல் இருக்க வேண்டும். தேவதைகளை கும்பிடுபவர்கள், தேவதைகளை பற்றி போதிப்பவர் இருக்கக்கூடாது. பரமாத்மாவை தெரிந்துக் கொண்டவர்களும், பரமாத்மா வித்தை போதிப்பவர்கள் ஆசரமத்தில் இருக்க வேண்டும். தேவதைகள் சிலைகள் மற்றும், தேவதைகள் படங்கள் ஆசரமங்களில் வைக்கக்கூடாது. நிராகாரனே சாகாரமாகயிருக்கிற ஸ்ரீகுரு தேவன் படம் இருக்கலாம். குரு உருவம் படம் தவிற வேறு தேவதை படங்கள் ஆசரமங்களில் இருப்பதற்கு அருகதையில்லை. கீதா சாஸ்த்திரத்தில் விஞ்ஞானயோகத்தில் **“பிரக்ருதிக்கு சமந்தப்பட்ட பாவங்களினால் கோரிக்கை இருப்பவராக அஞ்ஞானமாகி எல்லா தேவதை ஆராதனை செய்கின்றார்கள். அதனால் காம்யர்தசித்தி கிடைக்கும் மோக்ஷசித்தி கிடைக்காது. அறியாதவர்கள் புத்தி அடையும் பலன் கூட குறைவாகவே இருக்கும். தேவதை பக்தி கொண்டவர்கள்**

**தேவதைகளில் சேருவார்கள். என் பக்தன் என்னை சேருவன்" என்று** பரமாத்மா தெரிவித்து உள்ளார். மற்றும் தேவதைகளை பூஜை செய்தால் மோக்ஷம் எப்பவும் கிடைக்காது. பரமாத்மாவை ஆராதனை செய்பவற்கு மோக்ஷம் கிடைக்கும். ஆசரமங்கள் மோக்ஷத்திற்காக வேண்டும் காரியத்திற்காக இருக்கக்கூடாது. ஆசரமங்கள் எப்போதும் பரப்பிரம்மா நிலையம் போல் இருக்க வேண்டும். மற்றும் தேவாலையங்களில் இருப்பதுப்போல் இருக்கக்கூடாது. ஆசரமங்களில் உள்ளவர்கள் எல்லோரும் வேறு அவர்களுக்கு தேவ தேவனான பரமாத்மாவை பற்றியே சொல்ல வேண்டும். விஷ்ணு, ஈஸ்வரனும் கூட சூரிய சந்திரன் நாடியை அனுசரித்து உண்மையான பரமாத்மாவை பற்றி எப்போதும் யோகம் செய்துக் கொண்டுயிருக்கும்போது நாம் ஆசரமங்களில் தேவதை பூஜைகள் செய்துக் கொண்டுயிருந்தால் நன்றாக இருக்காது. மோக்ஷம் அடைவதற்கு பரமாத்மாவினால் முடியும் என்னும் நாங்கள் எப்போதும் கஷ்டப்பட்டு யோகம் செய்துக் கொண்டுயிருக்கும்போது, எங்களை மோக்ஷத்தை கேட்பவர் புத்தியில்லாதவன் என்னும் சங்கரன் சொல்லினார். பூர்வகாலம் மோக்ஷத்தை வேண்டுபவர் அவர் உண்மையான முறையாகயிருந்து இறுதிக்கு மோக்ஷம் அடைந்தார், அது சரியான நடைமுறை. அப்படியாகாமல் ஆசரமங்களை உருவாக்கி தேவதைகள் சிலை வைத்து கொண்டு, ஒவ்வொரு நாளும் பூஜை செய்து, மோக்ஷம் வேண்டும் என்பவரிடம் போய் பிச்சை கேட்பதுப்போல இருக்கும். தேவதைகளே மோக்ஷத்திற்காக தேடிக் கொண்டுயிருக்கும்போது உனக்கு

எங்கு இருந்து கொடுப்பார்கள். அஞ்ஞான மக்கள் தேவதைகளை பூஜை செய்வார்கள், ஆசரமங்களில் இருப்பவரும் தேவதைகளை பூஜை செய்துக் கொண்டுயிருந்தால் அஞ்ஞானிகளுக்கும் ஆசரமங்களில் இருப்பவருக்கு என்ன வித்தியாசம் இருக்கும்? மற்றும் ஆசரமங்களில் இருப்பவர் தேவதைகளை பூஜை செய்யாமல் தேவதைகளிலும் உள்ள ஆத்மாவை அதற்கு ஆதாரமான பரமாத்மாவை நம்ப வேண்டும். தேவதைகளில் பக்தியில் மற்றும், அன்மீக (ஆத்மா ஞானம்) வித்தையை தெரிந்துக் கொண்டுயிருக்க வேண்டும். **ஜீவன் மாயை என்னும் கடலில், விஷயங்கள் என்னும் முதலையிடம், மனைவி பிள்ளை திமிங்கலம் போல், சொத்துக்கள் அலைப்போல் கவலைப்பட்டு, கடலில் நீந்தாமல் முழ்கிப்போகும் நேரத்தில், என்னை இந்த மாயை கடலில் காப்பாற்றுவர் யாரும் இல்லையே என்னும் கவலைபடும் நேரத்தில் கப்பல் போல் தெரிந்து, அவனை மாயை என்னும் கடலிலிருந்து காப்பாற்றி இடம் கொடுத்தது ஆசரமம். அஞ்ஞானம் என்னும் இருட்டில் வழி தெரியாமல் அவஸ்தைப்பட்டு, காலம் என்னும் சர்பம் (பாம்பு) கையில் சிக்கிக் கொண்டு நிமிட நிமிடத்திற்கு அதன் கவலையை பொருக்காமல் தள்ளாடிக் கொண்டுயிருப்பவனுக்கு இருப்பதற்கு இடம் கொடுத்தது ஆசரமம், அஞ்ஞானத்தில் இருப்பவரை எடுத்து விட்டு காலசர்ப்பத்திலிருந்து விடுவித்தவர் ஆசரம வாசிகள்.** தேகம் நோய்களுக்கு நன்றாக குணப்படுத்துவதற்கு மருத்துவமனை, அந்த மருத்துவமனையில் டாக்டர்கள் இருப்பதுப்போல், பாவம்

புண்ணியங்கள் மனநிலை நோய்யாளியை நன்றாக குணப்படுத்துவதற்கு ஆசரமங்கள், அந்த ஆசரமத்தில் ஆசரம வாசிகள் இருப்பார்கள். உலக வித்தைகள் பழகுவதற்கு பள்ளிக்கூடங்கள் அதில் ஆசிரியர் இருப்பதுப்போல், பரமாத்மா (பிரம்மா) வித்யா பழகிக் கொடுக்கின்ற ஆசரமங்கள் இருக்க வேண்டும். மற்றும் ஆசரம வாசிகள் பிரம்மவித்யா நன்றாக பயிற்சி கொடுத்து சொல்பவராக இருக்க வேண்டும். பிரம்மவித்யாவுக்கு பிரண (உயிர்) வாயு ஆசரமங்கள், ஆசரமம் வாசிகளே ஆனதினால் மற்றும் இப்படி சொல்கின்றோம். இதனைப்பற்றி யாரும் தவறாக நினைக்கூடாது என்று வேண்டிக் கொள்ளுகிறேன்.

## குரு போதனை தனித்துவமானது

குரு என்னும் எழுத்து மகத்தானது, மற்றும் எல்லையற்ற சக்தி வாய்ந்தது. குரு எழுத்து உலகத்தில் எந்த மனிதன் மீது விழுகிறதோ அவரே சாகார குரு. குரு தன் உருவத்தை போதிப்பார். தன்னை பின்பற்றுங்கள் என்னும் சொல்லுவார், தனகுள்ளே சேர்த்து கொள்ளுவார். குரு பற்றி தெரிந்துக் கொள்ளுவதற்கு முடியாது. அவர் கற்பனைக்கே எட்டாதவர். அப்படிப்பட்ட குரு சாகாரத்திலிருந்து எந்த நாள் ஜீவன் சக்தியை அடைகிறானோ அந்த நேரத்திலிருந்து நிராகாரமிலிருந்த சக்தி தனக்குள்ளே நுழைவதற்கு ஆரம்பிக்கும். அப்படி சாகாரமிலிருந்து போதனை (உபதேசம்) அல்லது பாப்திசம் இல்லை என்றால் நிராகாரத்திலிருந்து சக்தி ஜீவனுக்கு உள்ளே வராது. எதற்கு என்றால் சாகாரமே

நிராகாரம், நிராகாரமே சாகாரம். ஜீவன் சாகாரத்தில் இருக்கின்றான் மேலும் நிராகாரனான சாகார குருவை அனுசரிக்க வேண்டும். குருவை அனுசரித்து நான்கு ரகங்கள் சேவை செய்து குருவிடம் வினையமாக இருந்து எப்போதாவது குருவுக்கு சிஷ்யன் மீது ஆர்வம் வந்து தன் ஞானம் பார்வையை கொடுப்பார். அதனுடன் சிஷ்யன் ருதையத்தில் (ஞானகண்ணில்) ஞானம் விதை ஏற்ப்பட்டு அது வளர்ந்து மோக்ஷம் என்னும் பலன் கொடுக்கும். சம்பூர்ணமாக விஸ்வாசம் வைத்து சிஷ்யன் குரு சேவை செய்து, அனைத்தும் தெரிந்த குரு சிஷ்யன் நம்பிக்கையை அடையாளித்து, அவனுக்கு உபதேசம் கொடுத்து அதனை சரியான நடைமுறையில் உபயோகிப்பான இல்லையா? என்னும் தெரிந்துக் கொண்டு உடனே உபதேசம் கொடுப்பார் அந்த உபதேசம் சமயத்தில் கண் பார்வைக்கு என்ன நடக்கின்றது என்றால்! குரு சம்பூர்ண சக்தி மையம். உபதேசம் சமயத்தில் குருவிலிருந்து ஞான சக்தி புரப்பட்டு சிஷ்யனில் நுழையும். அது வரை அவனில் நுழையாத வெளியே சக்தி குரு உபதேசத்தினால் உடனே நுழையும். அப்போது இருந்து சிஷ்யன் யோகம் செய்யும் நேரத்தில் அவனில் சக்தி நுழைந்துக் கொண்டேயிருக்கும். சிஷ்யன் யோகம் செய்துக் கொண்டுயிருந்தப்போது அவனில் யோகம் சக்தி விருத்தியாகும். அது தவிர குருவை அனுசரிக்காமல், சாஸ்த்திரத்தினால் விஷயங்களை தெரிந்துக் கொண்டு, எல்லாம் தெரிந்துக் கொண்டு குரு எதற்கு சொல்லி, தெரியாதவற்கு நான் தெரிவிப்பேன் என்னும் யாராவது குரு உபதேசம் இல்லாமல் யோகம் செய்யுவரோ, அவனில் யோக

சக்தி அனுவுக்கூட நுழையாது. யோக சக்தியை முதலில் தன்னில் நுழைவதற்கு முதலில் கண்டிப்பாக குரு தேவை. நெருப்பு இல்லாத அடுப்பு எவ்வளவு ஊதினாலும் விறகு சிறிதாகவும் அல்லது பெரிதாகவும் எரியாது. முதலில் வேறு அவரிலிருந்து நெருப்பு சம்பாதித்து தன்னுடைய அடுப்பில் போட்டு கொண்டு, அந்த நெருப்பை ஊதினால் அது பெரியாதாகி பரவி எவ்வளவு பெரிய விறகையும் எரித்து விடும். மற்றும் ஞான அக்னியை நீ குருவிடம் இருந்து அடைய வேண்டும். அதன் பிறகு நீ சாதனை செய்யும்போது ஞான அக்னி உன்னில் அதிகமாக நுழைந்து எவ்வளவு பெரிய கர்மத்தையும் எரித்துவிடும். சில பேர் குரு உபதேசம் சம்பாதித்துக் கொண்டு இனி போதும் நன்றி என்னும் சாதனை செய்யாமல் இருக்கின்றார்கள். அவர் விஷயம் எப்படி என்றால் பக்கத்திலிருப்பவரிடம் நெருப்பு கொண்டு வந்து நம் அடுப்பில் போட்டப்பின் அதனை ஊதாமல் இருந்தாலும் சிறிது நேரத்திற்கு இருக்கின்ற நெருப்புக்கூட அனைந்து விடும். அப்படியே குரு போதனை சம்பாதித்து சாதனை செய்யாமல் இருந்தால் குரு கொடுத்த ஞானம் என்னும் அக்னி சிறிது காலத்திற்கு அவரில் சிறிது அளவு கூட இல்லாமல் போகும். முதலில் குரு போதனை கண்டிப்பாக தேவை, அதன் பிறகு யோக சாதனைக்கூட தேவை. குளத்தில் இருக்கின்ற நீர் பண்ணைக்கு போக வேண்டும் என்றால் குளத்திற்கு உள்ள கால்வாய்னால் தான் போக வேண்டும். மேலும் வேறு வழியிருக்காது. அப்படியே ஞான மையமான குருவில் உள்ள ஞானசக்தி சிஷயர்களில் போக வேண்டும் என்றால் குரு போதனையால் தான் போக

வேண்டும் வேறு வழியில்லை. குளத்தில் உள்ள நீர் பண்னைக்கு வந்தால் தான் பயிர்கள் வளரும். அப்படியே குருவில் உள்ள ஞானசக்தி உன்னில் வந்தால் தான் சாதனை வெற்றியாகும். அப்படியாகாமல் நீர் இல்லாமல் பண்னையில் கஷ்டப்பட்டாலும் பலன் இல்லை என்பது போல், குரு போதனை இல்லாத தேகத்தில் யோகசக்தி அபிவிருத்தியாகது. ஆதனால் உலகத்தில் ஒவ்வொரு ஜீவராசிகளுக்கு குரு போதனை தேவையாகும். உண்மை தெரிந்துக் கொண்டு நம்மிலுள்ள அஹத்தை விட்டு, குரு அனுசரித்து, ஞானசக்தி அடைந்து உண்மையான சாதனை செய்து, நீங்களும் தெரிந்துக் கொள்ள வேண்டும் என்று தெரிவிக்கிறேன்.

## இன்றைய காலத்தில் குருவின் நிலை

### (போதிப்பவரை குரு என்னும் சொல்லினால் பரவயில்லை, குருவை போதிப்பவர் என்னும் சொல்லக்கூடாது)

குரு என்பவர் அரிதாக (குறைவாக) பல வருடங்களுக்கு ஒரு தடவை பூமி மீது வருவார். அதனால் எல்லா நேரத்தில் பூமி மீது குரு இருக்கமாட்டார். எல்லா நேரத்தில் பூமி மீது போதிப்பவர் இருப்பார்கள். போதிப்பவர் எல்லோரும் குரு அல்ல, போதிப்பவர்கள் ஆவர். பூமி மீது குரு இருக்கும்போது குரு போதிப்பவரிடம் கலந்துப்போய் இவர் குரு என்னும் அடையாளிப்பதற்கு முடியாது. மனிதன் தனக்கு போதிப்பவரில் யார் குரு என்னும் அடையாளிக்காத நிலையில் இருக்கிறார்கள். அப்படிப்பட்டப்போது போதிப்பவர் எல்லோரையும் குருவாக

எண்ணிக் கொள்ளுவதில் தவறு இல்லை. மேலும் குருவை போதிப்பவராக கணக்கிடக்கூடாது. மற்றும் கீழ் கட்டுரையில் போதிப்பவர் என்னும் எழுதும் இடத்தில் குரு என்று எழுதினோம். உலகத்தில் எத்தனையோ வித்தைகள் உள்ளது. அவற்றை தெரிவிப்பவரை குரு என்று சொல்கிறோம். எல்லாம் வித்தையில் பெரிய வித்தை பிரம்மவித்தையை. ஏதாவது வேலை சந்தர்ப்பத்தில் “இது என்ன பிரம்மவித்தையா” என்னும் பழமொழியினால் அதன் பெருந்தன்மை அர்த்தமாகும். எல்லா வித்தைகளுக்கு இருக்கும் படி பிரம்மவித்தை பழகுவதற்கு குருவுகள் பூமி மீது இருக்கின்றார்கள். எல்லாம் வித்தைகள் பூமி மீது ஜீவன் இருக்கும் வரை மட்டும் நன்றாக செய்தால் பிரம்மவித்தை மட்டும் அப்படியாகாமல் இறந்து போன பிறகு கூட நமக்கு நன்மை செய்து கடைசிக்கு ஜெனன மரணத்திலிருந்து வெளியே போட்டு விடும். அதனால் பூர்வம் பிரம்மவித்தை தெரிந்த குருக்களை ராஜாக்கள் கௌரவிப்பவர்கள், பூஜை செய்வார்கள். அந்த நாள் என்றால் பூர்வம் பிரம்மவித்தையை புனிதமான எண்ணத்தில் வைத்து கொண்டு இருந்தார்கள். அதனால் அந்த வித்தை தெரிவிக்கும் குருக்களுக்கு ராஜாக்களும் பிரம்மரதத்தை (தேர்) பிடிப்பார்கள். எப்போதாவது ஒரு நாள் ராஜா மாளிகைக்கு குரு வந்தப்போது சபையில் எல்லோரும் முன்பு ராஜ்ஜீயத்திற்கு அதிபதியான ராஜா எந்திரித்து வணக்கத்தை தெரிவித்து அவரை அமருங்கள் என்று சொல்வார்கள். வீட்டில் குரு பாதங்களை கழுவி அந்த தண்ணீரை புனிதமாக எண்ணி அவர் தலை மேல் தெளித்துக் கொள்வார்கள். சாதரண மனிதன் ஆனால் மேலும் பெரியதாக பிரம்மவித்தையை

ஆதரித்து குருவை கௌரவம் கொடுப்பார்கள். இப்படி காலம் கடந்து கொண்டுயிருக்கும்போது இன்று பிரம்மவித்தை என்பது என்னமோ தெரியாத நிலை மனிதர் சமூகத்தில் ஏற்ப்பட்டது. பிறந்ததிலிருந்து உலக படிப்புகள் பழகுவதில் **25** வருடங்கள் வயது ஆகிவிடுகிறது. படித்ததிலிருந்து வேலை வியாபாரமோ அல்லது ஏதோ ஒரு வேலையில் தன் வாழ்க்கை கடத்துவதற்கு புத்தியை உபயோகித்து அந்த வேலையில் பணம் சம்பாதிப்பதற்கு சூழ்ச்சி தேடுகின்றார்கள். சில காலத்திற்கு பிறந்த பிள்ளைகளை தன்போலவே வளர்த்து லக்னமாகிப்போய் வாழ்க்கையில் இறுதி நிலையில் முதியவர் ஆகிப்போகின்றார்கள். அந்த முதியோரில் முதல் இருந்து என்ன நினைக்கின்றாரோ அதே நமக்கு வந்து கொண்டுயிருக்கும் மேலும் வேறு வராது. அதனால் உலகம் யோசனையில் ஜீவிதம் முடிந்துப்போகின்றது. இப்படி நடந்துப்போகின்ற இந்த உலகத்தில் பிரம்ம வித்தை என்னமோ, ஆத்மாவை பற்றி சிந்திப்பது என்னமோ, பிரம்மவித்தை குருக்கள் என்னமோ தெரியத நிலையில் மனிதன் இருக்கின்றான். இப்படிப்பட்ட மனிதர்களில் நடுவில் பிரம்மவித்தை குருக்கள் நிலமை எப்படி இருக்கிறதோ சில விவரங்களினால் தெரிந்துக் கொள்ளலாம். ஒரு குரு நான் குரு என்னும் எந்த ஆடம்பரம் இல்லாமல் ஒரு சின்ன ஆபீஸ்க்கு ஏதோ ஒரு வேலைக்காக போனார் என்னும் நினைத்துக் கொள்ளலாம். அங்கு உள்ள சின்ன பியூன் கூட பேசமாட்டான். ஜீவிதம் சாராம்சத்தை தெரிவிப்பவர் குரு என்னும் அர்த்தம் தெரியாது அங்கு உள்ளவர்கள் உட்கார் என்று கூட சொல்ல மாட்டார்கள். சாதார்ண மனிதனை விட

அவரை குறைத்து பேசி அனுப்புவார்கள். பூர்வ காலத்தில் தேசத்தை ஆளும் ராஜாக்களே கௌரவிக்கும் குருவை, இன்று குரு சாம்பிரதாயம், அதன் அர்த்தம் தெரியாமல் போனதினால் சின்ன அரசு அலுவலகத்தில் குருவுக்கு மதிப்பில்லை. பிரம்மவித்தையை மக்கள் நடுவில் பிரச்சாரம் செய்ய வேண்டும் என்னும் குரு ஒரு கிராமத்திற்கு போனார் என்னும் நினைத்துக் கொள்ளுங்கள். நான் ஆத்மா ஞானத்தை சொல்கின்றேன் கேளுங்கள் என்று சிலர்களிடம் கூறிய போது வயதானவர்கள் எங்களுக்கு வயது ஆகிப்போனது ஞானம் கேட்டு என்ன செய்யலாம்? இறந்துபோகும் வரை நன்றாக நடந்தால் போதும் இனி ஒன்னும் வேண்டாம் என்று சொல்கின்றார்கள். இளைஞருக்கு தெரிவிக்க வேண்டும் என்றால் எங்களுக்கு நேரமில்லை வேலை இல்லாதவர்களுக்கு சொல்லுங்கள் என்று கூறுகிறார்கள். பூர்வ காலத்தில் ராஜ்ஜீயங்கள் ஆளும் ராஜாக்கள் கூட வேலையாக குருவிடம் போய் ஞானத்தை தெரிந்துக் கொள்ளுவார்கள், மேலும் இந்த காலத்தில் இப்போதுயிருக்கின்ற நிலமையில் சம்சாரத்திற்கு நேரமில்லை என்று சொல்பவர்களும் இருக்கின்றார்கள். கேட்பதற்கு நேரமில்லை என்றால் நேரம் இருக்கும் போது படிப்பதற்கு புத்தகத்தையாவது வாங்கி படியுங்கள் என்னும் ஒரு குரு சொல்லினார் என்று நினைத்துக் கொள்ளுங்கள். அந்த புத்தகங்களை இலவசமாக கொடுங்கள் என்னும் சிலர் சொல்வார்கள். புத்தகங்களை இலவசமாக எப்படி கொடுப்போம். நாங்கள் காகிதங்களை வாங்கி பிரிண்டிங்

செலவு செய்து புத்தகங்கள் உங்களுக்காக கஷ்டப்பட்டு தயார் செய்தோம் அந்த செலவு ஆவது கொடுக்க வேண்டும் அல்லவா! என்னும் குரு கேட்டார் என்னும் நினைத்துக் கொள்ளுங்கள். உங்களுக்கு என்ன எத்தனையோ பக்தர்கள் அதிகமாக பணம் கொடுப்பார்கள் என்று சொல்பவர் இருப்பார்கள். பூர்வகாலத்தில் பிரம்மவித்யா குருக்களுக்கு செலவு எல்லாம் அவருடைய ராஜாக்களே அளிப்பார்கள். என்ன வேண்டும் என்னும் கேட்டாலும் கொண்டு வந்து கொடுப்பார்கள். மற்றும் தற்போது உள்ள குருக்கள் பணம் இருப்பவரிடம் போய் வட்டிக்கு பணம் கேட்டால் கொடுக்காத காலம் இது. நான் இலவசமாக கொடுத்தேன் என்னும் ஆலோசனை செய்யாமல் பேசுபவர் புத்தகத்தை வாங்கி படிப்பார்களா! இனிபோனால் பக்தர்கள் பற்றி பார்த்தால் ஒரு குருவிற்கு சில பக்தர்கள் என்னும் சிஷ்யர்கள் இருக்கிறார்கள் என்று நினைத்துக் கொள்ளுங்கள். அதில் சிலர் குருவிடம் இருந்து லாபம் அடைய வேண்டும் என்று பார்த்துக் கொண்டுயிருப்பார்கள். ஒரு காலத்தில் மண் பானையை வைத்து சொம்பை கொண்டுபோரவர் இருந்தார்கள். தற்ப்போது காலத்தில் மண் பானையை காண்பித்து சொம்பை கொண்டுபோரவர் இருக்கின்றார்கள். ஏதாவது ஞானத்தினால் தவறு செய்தால் இது தவறு என்னும் குரு தண்டித்தால் நாங்கள் வராமல் போனால் உங்களுக்கே பற்றாகுறை என்று அங்கு வராமல் போவார்கள். எதற்கு குருவிடம் போகவில்லை என்னும் கேட்டால் குருவில் பலான தீமை இருக்கின்றது, நான் நல்லவன் அங்கு போவது நல்லது அல்ல அல்லவா என்னும் குருவையே கெட்டவராக செய்து நான் சிறந்தவன்

என்று நினைப்பார்கள். அப்படியானால் சிறிது ஆன்மிகத்தில் சிந்தனை கொண்டுயிருப்பவர் ஒரு குரு எழுதிய புத்தகங்களை படித்துக் கொண்டுயிருக்கிறார்கள். அதில் உள்ள விஷயங்கள் அவர்களுக்கு சாதகமாக இருக்க வேண்டும் என்று நினைத்துக் கொண்டுயிருப்பார்கள். மற்றும் எழுதிய விஷயங்கள் சத்தியமா அல்லது அசத்தியமா என்னும் அலோசனை செய்யமாட்டார்கள். அவர் முதலிலேயே எந்த விதமாக தெரிந்து இருந்தால், படிக்கின்ற புத்தகங்கலையும் அந்த விதமாக இருந்தால் தான் சரியானது என்னும், அப்படியாகாமல் போனால் சரியான விஷயங்கள் அல்ல என்பவர்கள் கூட இருக்கின்றார்கள். அப்படிப்பட்டப்போது குரு எழுதிய சத்தியமான விஷயங்களும் மதிப்பு இல்லாமல் போகும். அப்படியே ஒரு குரு மேடை ஏறி விரிவுரை சொல்கின்றார் என்னும் நினைத்துக் கெள்ளலாம். குரு வெறும் பிரம்மவித்தையைப்பற்றி ஆத்மா ஞானத்தைப்பற்றி கூறினால் யாரும் ஒப்புக் கொள்ளமாட்டார்கள். விரிவுரை நடுவில் அவ்ப்போது, அரிகதை நடுவில் குருவி கதை இருக்கின்றதுப்போல, கேடப்பவருக்கு சிரிப்பதற்கு சில குருவி கதை இருக்க வேண்டும். அது தேவையில்லாதது, ஞானத்தை சொல்ல வேண்டும் என்னும் குரு நினைத்தால் சொல்லும் குருவிற்கு ஞானம் தெரியாது என்று சொல்வார்கள். பூர்வம் ஞானத்தை விவரமாக தெரிவிப்பவரை குரு என்று நினைப்பார்கள். இந்த நாள் அணிந்திருக்கும் ஆடைகளை பொருத்து, வளர்க்கும் தாடி பொருத்து குரு என்னும் நினைத்துயிருப்பார்கள் மேலும் சொல்லும் ஞானத்தை பொருத்து அல்ல. இப்படிப்பட்ட

காலத்தில் உண்மையான குருக்கு சமூகத்தில் மதிப்பு இல்லாமல் போனது. பூர்வத்தில் குருக்களை ராஜாக்கள் மற்றும் வேறவர்கள் கவனித்துக் கொண்டுயிருப்பார்கள். மேலும் அந்த நாளில் குரு மூளை பாகமெல்லாம் ஞானம் மீது உபயோகப்பட்டு, எத்தனை சத்தியமான விஷயங்களை தெரிந்துக் கொண்டு மக்களுக்கு தெரிவிப்பார். மேலும் இந்த நாள் குருக்கள் நிலமை மாறிப்போனது. வேறு ஞானம் மீது அவர் மனம் புத்திகளை நினைத்துக் கொண்டு இருப்பதற்கு நேரமில்லை. சிறிது மட்டும் உலகம் விஷயங்கள் மீது நினைத்துக் கொண்டு அவர் வயிற்றுக்காக அவர் சம்பாதித்துக் கொண்டுயிருப்பார்கள். இப்படிப்பட்ட நிலமையில் தங்களில் ஞானம் இருந்தாலும் அது வேலைக்காகது என்னும் தெரிந்தாலும் குருக்கள் விதியில்லாமல் சிலர் ஜோதிடம் சொல்லிக் கொண்டு காலம் கடத்திக் கொண்டுயிருக்கின்றார்கள், சிலர் என்னமோ வைத்தியம் செய்கின்றார்கள், சிலர் தயத்துகள் மந்திரங்கள் என்னும் காலத்தை கடத்துகின்றனர், மற்றும் சிலர் சுற்றி உள்ள மக்களுக்கு சாதகமாக அவர் பார்வைக்கு எது பக்தியாக தெரிகின்றதோ அதே செய்கின்றார்கள். ஏதே ஒரு சில வேலை செய்யாமல் போனால் சாமி என்னும் கூறமாட்டார் என்னும், தனக்கு பிரியம் இருந்தாலும் பிரியம் இல்லாமல் போனாலும் நாக சிலைகள், நவக்கிரக சிலைகள் என்னும் மக்களில் கவர்ந்து செய்யுபவர்கள் இருக்கின்றார்கள். இது எல்லாம் கற்பனை கதைகள் என்னும் தெரிந்தப்போதும் மக்களுக்கு பிடித்த புராணங்களை படித்து சொல்லி

தெரிகின்றது. அவர் அந்த நாள் தனுசுக்கு (வில்) ஒரு அம்பு விட்டு இது சஹஸ்ரமரணஸ்ரம், இது ஆயிரம் பேரை கொன்று என்னும் சொல்லுவார்கள். ஒரு அம்பு ஆயிரம் பேரை எப்படி கொன்றுவிடும் என்று சந்தேகம் வரலாம். அதற்கு பதில்! விட்ட ஒரு அம்பு மந்திர விளைவுகளினால் ஆயிரம் பேரை கொன்றது. அஸ்ரம் ஒன்று இருந்தாலும் பலன் ஆயிரம் பேர் கொன்றும், ஆயிரம் பேர் கொன்றும் சக்தி அந்த நேரத்தில் அந்த குச்சிக்கு (அம்புக்கு) ரகசியமாக உள்ளது. பூர்வகாலத்திலிருந்து இன்று வரை மந்திரங்கள் பல விதமாக உள்ளது. பாம்புக்கு ஒரு விதம் மந்திரம், தேள்க்கு ஒரு விதம் மந்திரம், பேய்களுக்கு ஒரு விதம் மந்திரம், மரணத்திற்கு ஒரு விதம் மந்திரம் இப்படி பல விதமான மந்திரங்கள் கூட உள்ளது. ஒவ்வொரு விதம் மந்திரத்திற்கு ஒவ்வொரு முறைகள் இருக்கும். அந்த முறைப்பிரகாரம் இருந்தால் அந்த மந்திரம் பலிக்கும். அந்த முறை தவற விட்டால் அந்த மந்திரம் பலிக்காது. முக்கியமாக சொல்ல வேண்டும் என்றால் மந்திரம் எழுத்துக்களால் கூடிய, எத்தனை முறையாக இருக்கும். முறைகளை மீற வில்லை என்றாலும் மந்திரம் விளைவுகள் அப்படியே இருக்கும். ஒரு கத்தியை வாங்கி விறகு வெட்டுவதற்கு உபயோகித்தால் அந்த கத்தி சானை குறைந்துப்போகும். அப்போது அந்த கத்திக்கு மறுபடி சானை பிடிக்க வேண்டும். இல்லை என்றால் கத்தி விறகை வெட்ட முடியாது. அப்படியே மந்திரங்களை சித்தி செய்த பிறகு அதனை ஒரு வேலை உபயோகித்தால் அந்த வேலை முடியும். மேலும் இரண்டாவது அந்த மந்திரம் பலன்

குறைந்து இருக்கும். அதற்கு பலம் வர வேண்டுமானால் மந்திரத்தை சில தடவை சொல்ல வேண்டியதுயிருக்கும். மந்திரங்களை முறை பிரகாரம் எப்போதும் சொல்லிக் கொண்டுயிருந்தால் வேலை நிறைவேற்றுவதற்கு அந்த மந்திரம் பலமாக இருக்கும். அப்படி சொல்லாமல் போனால் கத்தி இருந்தாலும் சானை குறைந்து அறுக்காததுப் போல, மந்திர சித்தி அடைந்தாலும் அந்த மந்திரம் வேலை செய்யாமல் போகும். மந்திரங்கள் விளைவுகளினால் சிலர் பேர் தேவதைகளை வசம் செய்துக் கொண்டு, அவர்களை தங்கள் சொந்த வேலைக்காக பயன்படுத்துகின்றனர். காளி சக்தியை வசம் செய்துக் கொண்டவர், பகளமுகி சக்தியை வசம் செய்துக் கொண்டவர், காட்டேரி தேவதை வசம் செய்துக் கொண்டவர், ஆஞ்சநேயனை வசம் செய்துக் கொண்டவர் இந்த காலத்திலும் இருக்கின்றார்கள். அப்படி வசம் செய்துக் கொண்டவர்களுக்கு சில காலத்திற்கு அந்த தேவதைகளினால் ஆபத்து வருவதும் நடக்கின்றது. அப்படி எதற்கு நடக்கும் என்றால்! ஒரு பலம் உள்ளவனை சிறையில் போட்டு அவனிடம் வேலை செய்துக் கொண்டுயிருகிறோம் என்று நினைத்து கொள்ளுங்கள். அவர் எப்போதவது சிறையில் இருந்து விட்டு வெளியே போக வேண்டும் என்னும் ஆலோசனை செய்து கொண்டுயிருப்பார். எப்போது நேரம் வந்தால் அப்போது அந்த சிறையில் இருந்து தப்பித்துக் கொள்ளுவார். அப்படியே பலமான தேவதைகளை வசம் செய்துக் கொண்டால், அந்த தேவதைகள் அவன் மந்திரத்திற்கு கட்டுப்பட்டு அவன் சொல்லிய வேலை செய்வார்கள், மேலும் அந்த தேவதைகள் இவனிடமிருந்து

எப்போது தப்பித்துக் கொள்ளலாம்? என்னும் ஆலோசனை செய்துக் கொண்டுயிருப்பார்கள். எப்போதாவது நேரமிருந்தால், என்றால் அந்த மந்திரத்திற்கு உள்ள முறைகள் தவறும் நேரத்தில் அந்த தேவதைகள் மந்திரகாரன் மீது அவர் விளைவுகளை காட்டி அவனை மரணிக்கும் படி செய்து, தப்பித்துக் கொண்டு இஷ்டம் வந்த படி போவார்கள். சில தேவதைகள் மந்திரக்காரனை கொன்றுவிடாமல் கால், கை வராமல் அல்லது பேச முடியாமல் செய்து போவார்கள். மந்திரகாரரை ஒன்னும் செய்யாமல் விட்டு போகாமல் அப்படி எதற்கு செய்துப் போவார் என்றால்! அவன் இத்தனை நாட்கள் என்னை அவன் ஆதீனத்தில் வைத்துக் கொண்டு என்னிடம் வேலை செய்ய வைத்தான் அல்லவா! என்னும் கோபத்தில் இருந்ததினால், மற்றும் சும்மா விட்டுப்போனாலும் மறுபடி என்னை மந்திரத்தினால் தன் சுவாதினம் செய்துக் கொள்ளுவானோ என்னும் பயப்பட்டு இருந்ததினால், அவன் மறுபடி மந்திர சாதனை செய்யாமல் இருக்கும் படி அந்த தேவதைகள் மரணம் அடைந்ததுப் போல உறுப்புகள் வேலை செய்யாமல் செய்து போவார்கள். மற்றும் தேவதைகளை வசம் செய்து கொள்ளுவது வேலைக்காத வேலை. அதனால் இறுதிக்கு நஷ்டம் நடக்கும் என்று தெரிகின்றது. மந்திரத்தை பழகியதினால் தற்போது பலன் இருக்கும். மற்றும் அவற்றினால் நஷ்டங்கள் அதிகமாகயிருக்கும். மந்திரத்தினால் கண்ணுக்கு தெரியும் படி தேள்களை பாம்புகளை இன்னும் சில பொருள்களை தயார் செய்யலாம். மற்றும் அது எல்லாம் சில நிமிடங்கள் அல்லது சில மணி நேரம் இருக்கும், அதற்கு மேற்பட்டு இருக்காது. மறுபடி அது

காணாமல் போகும். இந்த காலத்தில் பெரிய மந்திரங்களை சாதித்த மந்திரகாரர்கள் இல்லாமல் சிறிய சிறிய மந்திரங்களை பழகியவர்கள் சிலர் அங்கு அங்கு இருக்கின்றார்கள். எவ்வளவோ சிறிய மந்திரங்களை கஷ்டப்பட்டு பழகி எங்களை விட பெரியவா் இல்லை என்ற அவர்களும் இருக்கின்றார்கள். சுத்திர தேவதைகளை வசம் செய்துக் கொண்டு அவற்றினால் நம் கண்ணுக்கு தெரியாத பொருள்களை பலான இடத்தில் இருக்கிறது என்று சொல்கின்றார்கள். அப்படிப்பட்டவர்கள் அவர் ஞானம் தெரிந்தவர்களா? அல்ல, அல்லவே அல்ல. கர்ன பேய்யை கேட்டால் எங்கயோ நடந்த விஷயங்களை கேட்டு தெரிந்துக் கொண்டு, அங்கு இப்படி நடந்தது என்று சொல்கின்றார்கள். அப்படிப்பட்டவர் ஜோதிடம் தெரிந்தவா்களா? அல்ல, அல்லவே அல்ல. மந்திரப் பரிசோதனை (செய்வினை) செய்து ஒரு நபரை மரணிக்கும் படி செய்து, அல்லது உறுப்புகளை வேலை செய்யாமல் செய்து, நான் எப்படி செய்ய வேண்டும் என்றால், அப்படி செய்வேன் பெரிய சாபம் வைத்த மஹரிஷிகள் போல தனக்கு தானே புகழ்ந்துகின்றார். அப்படி செய்தால் அந்த மந்திரக்காரர் மஹரிஷி ஆகுவாரா? ஆகமாட்டார்? எப்போதும் ஆகமாட்டார். மந்திரங்களை பழகி அவற்றின் சித்தி அடைந்தவர் அவர் முடிவுகள் யோகம் பழகிக் கொண்டுயிருந்தவர்களுக்கு காட்டி, அதனை பார்த்த சில பேர் யோகம் பழகிக் கொண்டவர்கள் அஞ்ஞானம் வசமாகி மந்திரங்கள் விளைவுகள் தெரிந்துக் கொள்ளாமல், நாங்கள் எத்தனை நாட்கள் யோகம் செய்தால் இவர் உருவாக்கியதுப்போல் ஒரு சிறிய தேள்யாவது

உருவாக்காமல் போனேன் அல்லவா! இவன் எங்களை விட பெரியவன். எங்கள் வழியை விட இவன் வழி பெரியது என்னும் அவர் மந்திரக்காரனை அனுசரிக்கின்றார்கள். ஞானம் வெளிச்சத்தினால் யோகத்திற்கு மந்திரத்திற்கு உள்ள வித்தியாசம் தெரிந்துக் கொண்டவர் அப்படி செய்யமாட்டார்கள். எதற்கு என்றால் மந்திரங்கள் வேறு வேறு முறைகளில், விலங்கு பலிகளினால், பரிதாபகரமான நெய்வேத்தியத்தினால் பல நடமுறைகளில் கூடி உள்ளது. யோகம் அப்படி நடைமுறையில் இல்லாமல், விலங்கு பலிகள், நெய்வேத்தியம் இல்லாமல், மந்திரத்திற்கு சம்மந்தமில்லாமல், வெளியே பொருள்களுக்கு எதற்கு சம்மந்தமில்லாமல் இருக்கின்றது. மந்திரத்தினால் தேவதை வசம் ஆகுவார் என்னும் மந்திரவாதி மீது கோவமாக இருப்பார். யோகத்தினால் தேவதைகள் வசம் ஆகமாட்டார் மேலும் தேவதைகளும் யோகியிடம் பக்தி எண்ணங்களில் கீழ் படிந்து நடந்துக் கொள்ளுவார்கள். எப்படிப்பட்ட மந்திரம் முயற்சி யோகியை ஒன்றும் செய்யாது. மந்திரம் பலம் நல்லது அல்ல என்னும் சொல்லினால் யோகி மீது மந்திரவாதிகளுக்கு பொறாமை (கோபம்) கொண்டு, மந்திரம் பிரயோகம் செய்து அவர் பரிசோதனை பலிக்காமல் பயந்து இருக்கின்றார்கள். மந்திரவாதி மந்திர சக்திக்கு பெரியது (மீறியது) யோக சக்தி. மேலும் மந்திர சக்தி யோக சக்தி இருக்கின்ற யோகிகளை ஒன்றும் செய்யாது. மந்திரவாதி பரிசோதனை யோகிகள் மீது நிறைவேறாது. யோகிகள் நினைத்தால் மந்திரவாதியிடம் உள்ள மந்திர சக்தி எல்லாம் இல்லாமல் போகிவிடும். பிறகு அவர்

மந்திரத்தினால் ஒன்றும் செய்யாமல் போய் விடுவார்கள். மந்திர வாதிக்கு வசமாகி உள்ள தேவதைகள் யோகிகளை ஹிம்சை செய்ய முடியாது. ஒரு நேரம் யோகிகளை கஷ்டப்படுத்துவதற்கு மந்திரவாதியின் தூண்டுதலால் அந்த தேவதைகள் வந்தாலும், அக்னி குண்டம் இடத்திற்கு வந்த வெட்டுக்கிளிகள் சாம்பலாகுவதுப்போல், யோகிகளிடம் ஞான அக்னிக்கு பஸ்மம் ஆகிப்போவர்கள். இல்லையோ நெருங்கிவந்தால் ஞான அக்னி சூடுக்கு தாங்க முடியாமல் ஓடிப்போவார்கள். பூர்வம் மந்திரத்தினால் செய்த அஸ்ரங்களும் யோகியை ஒன்றும் செய்யாமல் போய்விடும். எல்லாத்தை விட அதிக சக்தி கொண்ட பிரம்மா அஸ்ரமத்தை வசிஷ்டன் மீது விட்டப்போது அது யோகி வசிஷ்டனை ஒன்றும் செய்யாமல் அவரில் உள்ளே நுழைந்து இனைந்து போய் ஒன்றும் செய்ய வில்லை. பரஸ்பரம் ஸ்ரீராமன் ஆஞ்சநேயனையன் யயாத்தி ராஜாவுக்காக போர் செய்யும் போது, ஸ்ரீராமன் பிரயோகித்த அஸ்ரம் (வில்) ஆஞ்சநேயனை ஒன்றும் செய்யாமல் அவரில் உள்ள யோக சக்திக்கு கட்டுப்பட்டு அவர் கழுத்தில் பூமாலையாக விழுந்ததாம். ஒரு தடவை போய்ய விசக்காரர்ரான மஹாயோகியான ஈஸ்வரன் மீது அர்ஜீணன் திவ்ய அஸ்ரமத்தை பிரயோகித்தப்போது அது ஈஸ்வரனை ஒன்றும் செய்யாமல் போனது. எல்லாம் சக்திக்கு மீறியது ஞானசக்தியானதினால் அதற்கு முன்பு எந்த சக்தி வேலை செய்ய வில்லை. ஞானசக்தியை விட பவித்திரமானது (புனிதமானது), அதற்கு சமம் எந்த சக்தியும் உலகத்தில் இல்லை. அதனால் தான் பகவத்கீதையில்

ஞானம் யோகத்தில் பகவான் **“நாஹீஞானேன சதுர்ஷியம், பவித்தரமிஹ வித்தியதே”** “ஞானத்திற்கு இந்த ஜெகத்தில் சமமானது இல்லை அதை விட பவித்திரமானது இல்லை என்னும்” சொல்லினார். மேலும் மந்திரம், எந்திரம், தந்திரங்கள் கஜகர்னா, கோகர்னா, எந்திரஜால மஹேந்திரஜால வித்தைகள், மேலும் யக்ஷ, ராக்ஷச, கின்னர, கிம்புருஷா, கருட, கந்தர்வா, நாக, பூத்தா, பிரேதபிசாசுகள் எல்லாம் ஞானத்தை விட ஹினமானது. எல்லாத்தை விட உயர்ந்த ஸ்தானம் கொண்டது பரமாத்மா ஞானம். ஆத்மா ஞானத்தை அடைந்தவன் லோகத்தில் எந்த சக்திக்கும் பயப்படமாட்டான். வேறு அவரையும் பயப்படுத்தமாட்டான். பயம், எந்த கவலையும் இல்லாமல் சாந்தமாக இருப்பார். அப்படிப்பட்டவன் பரமாத்மாவுக்கு அதிகம் இஷ்டம் கொண்டுயிருப்பான். மேலும் கீதா சாஸ்த்திரத்தில் பக்தியோகத்தில் பகவான் **“யஸ்மன்னோதுவிஜத்தே லோகோ லோகானோ துவிஜத்தேசயஹ ஹர்ஸ்மர்ஷ பையோதுவேகைருமுத்தோ கோத்யஸ்சச்சமே பிரியம்” “ஜகதிசெ எப்படிப்பட்டவனுக்கும் ஜடுப்பு (கோபம்) இல்லையோ, ஜடுப்பு இருக்காதோ அவன் சந்தோசத்தை, கோபத்தை மனோவேதனையும், பயத்தை அடையமாட்டான். அவனே எனக்கு பிடிக்கும்.”** என்னும் கூறினார். மேலும் ஞானியானவன் மந்திர தந்திரங்களை அனுசரிக்காமல் யோக சக்தியை சம்பாதித்துக் கொள்ளுவார். இன்று நாட்டில் சிலர் மந்திரங்களை அனுசரித்து, சுத்திரதேவதைகளை ஆராதனை செய்து

உண்மையான பக்தர்கள் என்னும் நினைத்துக் கொண்டு, எங்களை விட ஞானிகள் இல்லை என்று பிரமிக்கிறார்கள். மந்திரத்திற்கு யோகத்திற்கு உள்ள வித்தியாசம் தெரிந்துக் கொண்டால், எது நல்லதோ உண்மையாக தெரியும். சிலர் மந்திரவாதிகள் மந்திர விளைவுகளினால் யோகிகள் மீது கோபம் கொண்டு அவர்களையே அவமானிக்கின்றார்கள். யோகிகள் சாமான்யமாக யார் என்ன சொன்னாலும் அமைதியாக இருப்பார்கள். ஒரு நேரம் கோபம் வந்தால், அவர் ஞானநேத்திரத்தை சிவப்பாகியதோ மந்திரவாதிகள் சக்தி பஸ்மமாகிவிடும். பிறகு நஷ்டமோ கஷ்டமோ மந்திரவாதிகளுக்கே இருக்கும். பூர்வம் யோகிகள் மீது மந்திரத்தை பயன்படுத்துபவர், மந்திரத்தினால் கெட்டுப்போய் மறு ஜென்மத்தில் எத்தனையோ கஷ்டங்களை அனுபவித்தார்கள். மேலும் மந்திரவாதிகள் யோகிகளை அவமானிக்காமல் இருந்துயிருக்க வேண்டும். மந்திரவாதிகள் எப்போதோ ஒரு நேரத்தில் தனக்கே நஷ்டம் வரும் மந்திரங்களை விட்டு, பரமாத்மாவை நினைத்து, தெய்வ சாதனை செய்தால் எவ்வளவோ நல்ல இருக்கும் என்னும் நான் தெரிவிக்கிறேன். மந்திர சாதனை விட யோக சாதனை புனிதமானது. மந்திர சாதனைனால் உலகங்களிலுள்ள காரியங்கள், உலகங்களில் கௌரவம் அடையலாம். மற்றும் மோக்ஷத்தை சிறிது அளவுகூட சம்பாதித்துக் கொள்ளமாட்டார். மேலும் மந்திரங்கள் விஷயம் தெரிந்தவர்கள் மந்திரங்களிடம் போகாமல், மந்திரத்தை பழகிக் கொடுக்கும் குருவை அனுசரிக்காமல், யோக வழியை தேடி, பரமாத்மாவைப்பற்றி போதனை செய்யும் குருவை

அனுசரித்து ஜென்மத்தை சார்த்தகம் செய்துக் கொள்ள வேண்டும் என்று வேண்டுகிறோம்.

**கிரகங்கள் - விக்கிரகங்கள்**

பிறந்த ஒவ்வொரு ஜீவிகள் தவறாமல் மரணம் அடைய வேண்டும். மரணிக்கும் நிலையை இறப்பு என்று சொல்வார்கள். இறப்பு கர்மத்தை அனுசரித்து இரண்டு ரகமாக இருக்கிறது. அது ஒன்று காலமரணம் இரண்டு அகாலமரணம். “**காலமரணம் என்றால் ஜீவனுக்கு இருக்க வேண்டிய ஆயுள் எல்லாம் முடிந்தப்பின் வருவது. அகாலமரணம் என்றால் ஜீவனுக்கு இருக்க வேண்டிய ஆயுள் எல்லாம் முடிந்துப் போகாமல் சம்பவிக்கின்றது.”** காலமரணத்தில் ஜீவன் ஸ்தூல, சூட்சம தேகத்தை விட்டு போகும். அகால மரணத்தில் ஜீவன் ஸ்தூல தேகத்தை மட்டும் விட்டு, சூட்சம தேகத்தை அணிந்து இருக்கும். அகால மரணத்தை அடைந்தவர் காலமரணம் சம்பவிக்கும் வரை இருந்து, காலமரணம் சம்பவிக்கும் உடனே அது வரை இருந்த சூட்சம தேகத்தை கூட விட்டு வேறு தேகம் அணிகிறான். அதனால் பகவத்கீதையில் சாங்கியயோகத்தில் **“தேஹி தேகத்தை அணிந்து அதிலிருந்து வரிசையாக பால்யம், எவ்வனம், கௌமாறம், ருத்தியாப்பியம் அப்படியே மரணத்தை அடைகிறான். மரணம் அடைந்த உடனே மற்ற ஒரு புதிய தேகத்தை அணிந்துவிடுகிறான்.”** என்னும் பரமாத்மா தெரிவித்து உள்ளார். பல பேருக்கு அகாலமரணம் எதற்கு இருக்கின்றது? அகால மரணம் அடைந்த பிறகு ஜீவன் உருவம் எப்படியிருக்கும்? அகாலமரணம் அடைந்த

பிறகு காலமரணம் சம்பவிக்கும் வரை ஜீவன் என்ன செய்யுவான்? என்னும் எத்தனையோ சந்தேகம் வரும். அவர் கேடக்கும் கேள்விக்கு, கேட்காத கேள்விக்கும் என் பதில் என்னவென்றால்! ஜீவன் பாவம் புண்ணியங்கள் சம்பாதித்துக் கொண்டு இருக்கிறான் அல்லவா! அவற்றை தான் நாம் கர்மம் என்னும் சொல்லுவது. கர்மம் இரண்டு ரகங்களாக இருக்கின்றது. ஒன்று மானசீக கர்மம், இரண்டு தேக கர்மம். மானசீக கர்மம் என்றால் ஜீவன் தேகத்தினால் அல்ல மனசினால் சம்பாதித்து கொண்டது. மற்றும் மனசினால் அனுபவிக்கின்றது. தேகம் (உடல்) கர்மம் என்றால் மனசினால் ஆகாமல் ஜீவன் தேகத்தினாலும் ஏற்படுத்திக் கொண்டது. மேலும் தேகத்தினாலும் அனுபவிக்கப்படுகிறது. இதை இன்னும் விவரமாக தெரிந்துக் கொண்டால் மானசீக கர்மம் என்றால் ஜீவன் சூட்சம தேகத்தினால் என்னும், தேகத்தினால் கர்மம் என்றால் ஜீவன் ஸ்தூல தேகத்தினால் அனுபவிக்கப்படுகிறது என்று தெரிகின்றது. இந்த கர்மங்கள் கிட்டதட்ட சமமாக இருப்பவன் இரண்டையும் அனுபவித்துப்போய் பிராரப்த்தம் முடிந்தப் பின்னால் காலமரணம் அடைகின்றான். அப்படியாகாமல் தேகத்தின் கர்மம் குறைவாக இருந்தால் மானசீக கர்மம் அதிகமாக இருந்தால், பிராரப்தத்தின் முன்பே முடிந்து மானசீக கர்மம் ஒன்று மட்டும் மீதியிருக்கும். தேகம் கர்மம் எப்போது முடிகின்றதோ இனி ஸ்தூல தேகத்தில் வேலையில்லாததால் அகால மரணம் சம்பவிக்கின்றது. அகால மரணம் மீதியாகின்றது சூட்சம தேகம். அதனுடன் மானசீக கர்மம் எல்லாம் அனுபவிக்கப்படுகின்றது. பாவம்

புண்ணியங்கள் (கர்ம) தேகம், மானசீக என்னும் இரண்டு ரகமாக இருக்கின்றது. மேலும் காலமரணம், அகாலமரணம் என்னும் இரண்டு ரகமான மரணத்தையும் பரமாத்மா உலகத்தில் வைத்தார். ஜீவன் ஸ்தூல தேகத்தில் இருக்கும்போது உயிரோடு இருக்கின்றார் என்று சொல்வார்கள். ஸ்தூல தேகம் பிரிந்த உடனே உயிரை விட்டார் என்று சொல்வார்கள். மேலும் அந்த மரணம் காலமரணமா? அகாலமரணமா? என்னும் அடையாளிக்க முடியாது. அப்படியே நாம் எத்தனையோ பேர் மரணிப்பது பார்த்தோம். ஜீவன் கால மரணத்தை அடைந்தான, அகாலமரணத்தை அடைந்தான என்று அடையாளிக்காமல் போகின்றோம். ஜீவன் அகாலமரணத்திற்கு பிறகு, சூட்சம தேகம் மட்டும் இருக்கின்றது அல்லவா! அதன் உருவம் எப்படி இருக்கும் என்றால் முதல் எந்த ஸ்தூல தேகத்தில் கூடி சூட்சம தேகம் இருந்ததோ அதன் உருவமாகவே சூட்சம தேகம் அடைந்து இருக்கும். மேலும் சூட்சம தேகத்திற்கே வேறு பெயர் இருக்கின்றது. அதனை **“கிரஹ”** என்னும் சொல்வார்கள். கிரஹ என்பதை சில பேர் பேய் என்னும் சொல்வார்கள். இன்னும் சிலர் பேர் பூதம் என்றும் சொல்வார்கள். பேய், பூதம், கிரஹ என்று சூட்சம தேகத்தையே சொல்வார்கள். ஜீவம் ஒரு தடவை அகால மரணத்தினால் தனக்கு இருக்கின்ற ஸ்தூல தேகத்தை விட்ட பின் அதற்குள்ளே பிரவேசிக்க முடியாது. அப்படியே மரணம் அடைந்தப் பின் எந்த ஸ்தூல தேகத்தில் நுழைய முடியாது. மேலும் உயிரோடுயிருக்கின்ற எந்த ஜீவி தேகத்திலேயும் நுழையுவார். அதனால் மரணித்தவர்கள் வந்து

உயிரோடுயிருக்கின்ற அவரில் நுழைந்து பேசுவது நேராக அங்கு அங்கே பார்த்துக் கொண்டுயிருக்கிறோம். இங்கு சில பேருக்கு "உயிரோடுயிருக்கின்ற தேகத்தில் சூட்சம தேகம் இருக்கின்றது அல்லவா! வேறு ஒரு சூட்சம தேகம் எப்படி நுழையும்? முதலில் அந்த தேகத்தில் இருந்த சூட்சம தேகம் அந்த நேரத்தில் எங்கு போகும்? " என்னும் சந்தேகம் வரலாம். அதற்கு பதில் என்ன வென்றால்! சூட்சம தேகம் உயிரோடு இருக்கின்ற தேகத்தில் சுலபமாக நுழையும். எப்படி என்றால் சூரிய வெளிச்சம் கண்ணாடியில் நுழைந்தது போல் சூட்சம தேகம் ஸ்தூல தேகத்திலேயும் நுழையும். மேலும் ஜீவன் தேகத்தில் சூட்சம தேகம் இருக்கும் அல்லவா! என்றால் அது வேறு ஒரு சூட்சம தேகம் தன் ஸ்தூல தேகத்திற்கு வந்தப்போது தூங்கிக் கொண்டு இருக்கும். அதனால் வேறு கிரஹ (சூட்சம தேகம்) தன்னில் நுழைந்து என்ன செய்தது என்று ஜீவனுக்கு தெரியாது. குதிரையை ஏறி ஓட்டுகின்றவன் இஷ்டம்வந்தது போல் நடத்தியது போல ஸ்தூல தேகத்திற்கு எந்த சூஸ்ம தேகம் சேர்ந்தால் அந்த சூட்சம தேகம் பிரகாரமே ஸ்தூல தேகம் நடந்துக் கொள்ளும். எந்த விதமாக என்றால், வெற்றிலை தின்ன பழக்கமில்லாதவரிடம் வேறு கிரஹ (சூட்சம தேகம்) நுழைந்த அந்த கிரஹத்திற்கு தாம்பூலம் பழக்கமிருந்தால், அந்த சமயத்தில் தாம்பூலம் போட்டுக் கொள்ளும். மற்றும் தமிழ் பாஷை வராதவனிடம் தமிழ் பாஷை பேசும் கிரஹம் நுழைந்தால் அந்த சமயத்தில் தமிழ் பாஷையே பேசும். அப்படியே பாட்டு வராதவனுக்கும் பாட்டு பாடும் கிரஹ பிடித்தாலும் அந்த நேரத்தில் பாட்டு பாடும். இந்த விதமாக

சூட்சம தேகம் எந்த பழக்கம், எந்த குணங்களோடு, அது நுழைந்ததினால் ஸ்தூல தேகத்தில் அதே காணப்படும். உலகத்தில் எத்தனையோ பேர் அகால மரணத்தினால் கிரஹுங்களாக மாறி இருக்கின்றார்கள். மாறியவர்கள் எல்லோரும் வேறவரில் நுழையமாட்டார்கள். சிலர் மட்டும் வேறவரில் நுழைந்து இருப்பார்கள். மேலும் இன்னொன்று ரகசியம் என்ன வென்றால் எத்தனையோ ஜாதிகள் ஜீவராசிகளில் ஸ்தூல தேகம் வேறானலும், ஜீவன் மட்டும் ஒன்று தான் அல்லவா! அதனால் கிரஹுங்கள் (சூட்சம தேகங்கள்) தன் ஜாதி தேகத்திலும் மேலும் வேறு ஜாதி தேகங்களிலும் கூட நுழைகின்றது. மனிதன் தேகத்திற்குள் மனித கிரங்ஹுங்கள் நுழைகின்றது. மற்றும் பாம்பு கிரஹுகள் மேலும் வேறு கிரஹும் ஜாதி ஜீவன்கள் கிரஹுங்களும் நுழைந்து இருக்கின்றார்கள். மனிதனில் மனிதன் கிரஹுங்கள் நுழைந்தால், மனிதன் பழக்கம் போலவே இருக்கும். மனிதன் பேசுவது போல பேசுவார்கள் மனிதனில் பாம்பு ஜாதி கிரஹும் நுழைந்த போது பாம்பு நெலிவது போலவே போகும், பாம்பு புஸ் என்னும் சத்தம் போல வரும், எந்த பாஷை பேசாமல் போகும். இதனைப்பற்றி பார்த்தால், ஒரு மனிதன் சூட்சம தேகத்திலும் எத்தனையோ ரகம் ஜீவராசியிலும் சூட்சம தேகங்கள் உலகத்தில் இருக்கின்றது என்று தெரிகிறது. சூட்சம தேகங்கள் அணிந்துயிருந்த ஜீவராசிகள் எல்லாத்தையும் ஞானம் பார்வையில் பார்த்தால் இரண்டாவது உலகமா என்னும் தோன்றுகின்றது. மனிதர்களுக்கு இந்த விஷயம் தெரிந்தாலும் தெரியாமல் போனாலும் ஸ்தூல கண்ணுக்கு காணப்படாத உலகம் இருக்கின்றது.

அதனிலும் இங்கு அனைத்து ஜீவராசிகள், மனிதர்கள் பாவம் புண்ணியங்கள் முடிவுகள் போல சுகம் துக்கங்கள் அனுபவிப்பது போலவே அனுபவிக்கின்றார்கள். இந்த உலகத்தில் நம் எல்லோரும் கஷ்டப்படுவது போலவே கிரஹங்களும் கஷ்டப்படுகின்றது. நம் எல்லோரும் ஒருவரில் ஒருவர் இணைந்து உள்ளது போல் அதுவும் (கிரஹங்கள்) ஒன்றுக்கு ஒன்று இணைந்து உள்ளது. நம் ஒருவருக்கு ஒருவர் பேசுவது போல் அதுவும் (கிரஹங்கள்) ஒருவருக்கு ஒருவர் பேசிக் கொண்டு இருக்கின்றது. எந்த ஜாதிக்கு எந்த பழக்கம் இருக்குதோ, அந்த ஜாதிக்கு அந்த பழக்கவழக்கம் இருக்கும். சூட்சம தேகத்தில் புத்தி, மனசு, அஹங்காரம் இருக்கின்றது. அதனால் மனிதர்களுக்கு உள்ள குணங்களே மனிதர்கள் கிரஹங்களுக்கும் இருக்கும். சூட்சம தேகத்தில் உள்ள இரண்டாவது உலகம் நமக்கு கண்ணுக்கு தெரியாது. சூட்சம தேகங்கள் நம் கண்ணுக்கு தெரியது மேலும் சூட்சம தேகம் பார்வைக்கு சூட்சம தேகம் தவிர ஸ்தூல தேகத்திற்கும் காணப்படும். என்றால் அவற்றை நாம் பார்க்காமல் இருந்தாலும் நம்மை கிரஹங்கள் பார்க்கப்படுகின்றது. சில பேர் நாங்கள் கிரஹங்களை பார்த்தோம் என்று சொல்கின்றார்கள். அதற்கு எங்கள் பதில் என்ன வென்றால்! பகல் நேரத்தில் கிரஹங்கள் சாதரணமாக யாருக்கும் காணப்படாது. இரவு நேரத்தில் தெரிவதற்கு வாய்ப்பு இருக்கின்றது. அது எப்படி என்றால் இரவு நேரத்தில் ஜாக்கிரதையாக இருப்பவற்கு காணப்படாது. ஜாக்கிரதையாக இல்லாதவற்கு ஜாக்கிரதையிலேயே தூக்கத்தில் இருப்பவற்கு, என்றால் வழியில் நடந்துக்

கொண்டு போகும் போது தூக்கத்தில் இருப்பவற்கு ஸ்தூல தேகம் முழுமையாக ஜாக்கிரதையாக இருக்காது. அதனால் அவன் சூட்சம தேகம் பார்வைக்கு கிரஹங்கள் தெரியும். அதுவும் முழுமையாக உருவம் காணப்படாது. பலானது ஜாதி என்னும் தெரியும். அதனால் தான் தூக்கம் அதிகமாக உள்ள மனிதர்கள் இரவு நேரத்தில் வெளியே போகும் போது அவர்களுக்கு கிரஹங்கள் காணப்படுகின்றது. அதுவும் மனிதர்கள் கிரஹங்களும் வேறு ஜாதி கிரஹங்களும் தெரியும். அதனால் சிலருக்கு எனக்கு பேய் நாய்ப்போல தெரிந்தது, எனக்கு எருமையாக தெரிந்தது, எனக்கு ஆடு போல தெரிந்தது என்னும் ரகரகமாக சொல்வார்கள். இப்படி தெரிந்தாலும் ஸ்தூல பார்வைக்கு எந்தளவுக்கும் தெரியாது. சூட்சம தேகம் பார்வைக்கு சிறிது காணப்படலாம். ஜீவன் அகாலமரணம் அடைந்து சூட்சம தேகத்தில் பல நாட்கள் காலம் இருக்க வேண்டும் அல்லவா! அது வரை எங்கு நிவாசிக்கின்றார்கள். சில பேர் சுடுகாட்டில் நிவாசிக்கின்றார்கள். சில பேர் கைவிடப்பட்ட வீடுகளில் நிவாசிக்கின்றார்கள். மற்ற சில பேர் புளியமரங்களில், ஜீம்மிமரங்களில், ஆலமரங்களில், மெடிமரங்களில் வசிக்கின்றார்கள். சில பேர்கள் மரணிக்கும் இடத்திலேயே இருப்பார்கள். நமக்கு பகல் முழிப்பு இரவு தூக்கம் இருப்பது போல சூட்சம தேகத்திற்கு இரவு முழிப்பு, பகல் தூக்கம் இருக்கும். மேலும் கிரஹங்கள் இரவு நேரத்தில் வெளியே அதிகமாக சுற்றிக் கொண்டுயிருக்கும். நமக்கு பசியிருப்பது போல சூட்சம தேகத்திற்கு கூட பசியிருக்கும். நம் பசிக்காக பல கஷ்டம்

படுவது போல சூட்சம தேகமும் பசியைதீர்த்துக் கொள்ளுவதற்கு பல கஷ்டங்கள் படுகின்றது. நம் சாப்பிடும் ஆகாரங்களே கிரஹங்களும் சாப்பிடுகின்றது. நமக்கு தெரியாமலேயே நம் ஆகாரத்தையும், தானியங்களை கிரஹங்கள் கொண்டுப்போகும். அப்படி கொண்டு போகுவது யாரும் காணமுடியாது. மேலும் பூர்வம் ஞான பார்வை உள்ளவர் பெரியோர்கள் கிரஹங்கள் பற்றி தெரிந்துக் கொண்டவர்கள் தானியங்களை கும்மியாக போட்ட நேரத்தில் கிரஹங்களுக்கு பயப்பட்டு கும்மியிடம் வரமால் இருப்பதற்கு கத்தி, ஒலக்கை, கொடாலியை, தேங்காய்யோ எதோ ஒன்றை அந்த கும்மி மீது வைப்பார்கள். மற்றும் கும்மி சுற்றியிலும் கோடு போடுவார்கள். அந்த வேலையை சில பேர் சில பகுதிகளில் இப்போதும் செய்துக் கொண்டுயிருக்கின்றார்கள். மேலும் எதற்கு செய்கின்றார் என்னும் சிறிதளவு கூட தெரியாது. தானியங்களை கொட்டி பரப்பும்போது பரப்பியிருக்கும் போது கிரஹங்கள் கும்மியிலிருந்த தானியத்தை அதுர்ஷம் (தெரியாமல்) உருவம் செய்துக் கொண்டு போகுவதற்கு அதிகமாக வாய்ப்பு இருக்கின்றது. மற்றும் யாராவது கும்மி போடும் நேரத்தில் தானியத்து மேல் ஏதோ ஒன்று வைக்காமல் போனால் 100 மூட்டை ஆகும் என்னும் நினைக்கும் போது தானியங்கள் மூட்டையில் போட்டு எண்ணி பார்க்கும்போது 80 மூட்டை தான் ஆகும். இப்படி பல இடத்தில் நடக்கும். கிரஹங்கள் வசிக்கும் வீட்டுகளில் சம்சாரம் அபிவிருத்தியில்லாமல் போகுவதற்கு காரணம் அதுவே. சில பண்ணைகளில் கூட பயிர் உள்ள கொட்டைகளையும் கிரஹங்கள் மாயை செய்து விடும்.

மற்றும் அப்படி செய்யாமல் இருப்பதற்கு பூர்வம் பெரியோர்கள் பண்னைகளில் **“போழி”** என்னும் பெயரில் கோழி அல்லது ஆடுகளையோ அறுத்து கிரஹங்களுக்கு விருந்து செய்யுவார்கள். அந்த விருந்தை சாப்பிட்டு கிரஹங்கள் அவர் மீது இரக்கத்தை காட்டி அவர் பண்ணையில் வராமல் போகும். இந்த காலத்தில் சில இடங்களில் இப்போதும் போழி செய்கின்றார்கள். மேலும் அது எதற்க்காகவோ யாருக்கும் தெரியாது. போழி கிரஹங்களுக்கு விருந்து என்னும் பல பேருக்கு தெரியாது. தெரிந்தால் தெரியாமல் போனாலும் போழி மட்டும் கிரஹங்களுக்கு விருந்து தான். இந்த விஷயம் தெரியாமல் போழி செய்யாத பண்ணைகளில், மற்றும் கும்மிகளில் குறைந்து போகும். இது மட்டும் அல்லாமல் சோறு (சாப்பாடு) கும்மிகளிலும் இப்படியே நடந்துக் கொண்டுயிருக்கும். ஆடுகளை அறுத்து துண்டு துண்டாக கும்மி போட்ட இடத்தில் கிரஹங்கள் திருடுகின்றது. சில இடத்தில் முதல் போட்ட மாமிசத்தை மறுபடி எடைப்போட்டால் அதிக எடை குறையும். காரணம் கிரஹங்கள் எடுத்துக் கொண்டுப்போகும். இந்த விதமாக அதுர்ஷ உருவத்தில் உள்ள சூட்சம தேகங்கள் தன் ஆகாரங்களை சம்பாதித்துக் கொள்கின்றது. கிரஹங்கள் ஓர் இடத்திலிருந்து மற்ற ஒரு இடத்திற்கு போக வேண்டும் என்றால் நம்மைப்போலவே ரயில்களில், பஸ்களில் பயணம் செய்கின்றது. அவற்றுக்கு டிக்கெட்டு கேட்பவர் யாரும் இல்லை. ஆண் பெண் வித்தியாசம் சூட்சம தேகங்களில் இருக்கின்றது அல்லவா! அதனால் நம்மை போலவே சூட்சம தேகங்கள் ஆண் பெண் சம்யோகங்கள்

செய்கின்றது. கிரஹங்களாக மாறியிருக்கின்றவர்கள் உயிரோடு இருக்கிறவர்களை சம்யோகம் செய்ய வேண்டும் என்னும் கோரிக்கை இருக்கின்றவர்கள் உயிரோடு இருக்கிறவர்களை சம்யோகம் செய்கின்றார்கள். மேலும் எப்படி என்பது சாமான்யமாக யாருக்கும் தெரியாது. கிரஹங்களாக இருக்கிறவர்கள் அவரிலேயே அவர்கள் ஒருவருக்கு ஒருவர் சண்டைபோடுகின்றார்கள். மற்றும் திட்டிக் கொண்டே இருக்கின்றார்கள். மொத்தத்திற்கு வாழ்கை எல்லாம் நமக்கு இருப்பதுப் போலவே இருக்கும். இது எல்லாம் நம் கண்ணுக்கு தெரியாது. மேலும் சில பேர் நம்பாமல் போகலாம். நம்பாதவற்கு அகால மரணம் வந்தால் அப்போதாவது சொல்லியது எல்லாம் உண்மை என்று நம்புவார்கள். கிரஹங்கள் என்றால் யாரும் அல்ல நம்மில் உள்ள ஜீவ ஆத்மாவே. கிரஹங்களுக்கு அஞ்ஞானிகள் பயபடுவார்கள். அது அவரையே துன்புறுத்தும். ஞானிகள் மட்டும் பயப்படமாட்டார்கள் அது அவரை பயப்படுத்தாது, கஷ்டப்படுத்தாது. அஞ்ஞானி தேகத்தில் நுழைவது போல ஞானிகள் தேகத்தில் நுழையமுடியாது. எதற்கு என்றால் எரிகின்ற அக்னி குண்டத்தில் நாம் நிற்கமுடியுமா? அல்லது கால் அடியாவது வைக்கமுடியுமா? அப்படி கிரஹங்கள் ஞான அக்னி உள்ள தேகத்தில் நுழையமுடியாது. ஒரு நேரம் அருகில் வந்தால் ஞான அக்னி சூட்டுக்கு நிற்காமல் தூரமாக சென்று விடும். ஞானம் தெரிந்த யோகிகளுக்கு கிரஹங்கள் பயப்படும். அதனால் தான் இயேசு பிரபுவை பார்த்து சில கிரஹங்கள் ஓடிப்போனது. ஞானம் தெரிந்தவர்களுக்கு கிரஹங்கள் பல இடத்தில் அடங்கிப்போனது. ஞானிகள் தவிற

அஞ்ஞானியானவர்கள் ஞானம் தெரிந்தவர்களை கேலி செய்து நாங்கள் பெரிய படிப்பு படித்தோம் அல்லவா! எங்கள் படிப்பில் பேய்கள் இருக்கிறது என்னும் எழுதவில்லையே என்று நினைத்தவர்களும் இருக்கின்றார்கள். உலகம் படிப்பு படித்தால் கண்ணுக்கு தெரிகின்றதே தெரியும். மேலும் பரமாத்மா படிப்பு படித்தால் கண்ணுக்கு தெரியாததும் கூட தெரியும். அஞ்ஞானத்தில் உள்ளவரை கிரஹங்கள் பல ரகமாக துன்புறுத்துகின்றது. சில கஷ்டங்கள் கிரஹங்களினால் நடக்கின்றது என்னும் பல பேருக்கு தெரியாது. அந்த கஷ்டம் எப்படி இருக்கும் என்றால், சில பேருக்கு தேகத்தில் கிரஹங்கள் நுழைந்து வயிற்றில் அதிகம் வலி வரும் படி செய்கின்றது. இந்த வயிற்று வலிக்கு மருந்து எந்தளவும் வேலை செய்யாது. மருந்துகள் வேலை செய்யாமல் போனதினால் எக்ஸ்ரே எடுத்துப்பார்த்தாலும் அந்த பிலிமில் எந்த தோசம் தெரியாது. சில பேருக்கு கிரஹங்கள் நுழைந்து நுரையீரலில் வலிவரும் படி செய்கின்றது. சில பேருக்கு தலைவலி வரும் படி செய்கின்றது. மற்றும் சில பேரை ஒல்லியாகும் படி செய்கின்றது. சில பேர் பெண்களுக்கு மாதவிடாய் (ரத்தம் போக்கு) செய்கின்றது. மற்றும் வலிப்பு வரும் படி சுயநிலையில் விழுந்தப்போது கூப்பிட்டாலும் பேசாதப்படி செய்கின்றது. சிலருக்கு ஒரு கால் ஒரு கை வேலை செய்யாமல் செய்கின்றது. இந்த விதமாக கிரஹங்கள் மனிதர்களை துன்புறுத்துகிறது. ஒரு மனிதர்களுக்கு மட்டும் அல்லாமல் வேறு ஜாதிகளுக்கும் கிரஹங்கள் கஷ்டமிருக்கும். கிரஹங்கள் கஷ்டங்களில் தப்பித்துக் கொள்ள வேண்டும் என்றால் யாருமே பக்தி

வழியை அனுசரிக்க வேண்டும். அப்படி ஆகாமல் மந்திரத்தினாலும் எந்திரத்தினாலும் தப்பித்துக் கொள்ளலாம் என்னும் நினைத்தால் சிறிது காலம் தப்பித்துக் கொள்வார்களோ தவிற எப்போதும் தப்பிக்கமுடியாது. ஞான சக்தி மீறி எந்த சக்தியும் இல்லை. மேலும் அதன் மூலமாக தப்பித்துக் கொள்வதற்கு முடியும். இப்போது கிரஹங்கள் என்றால் என்ன? அவற்றினால் வேலைகள் என்ன? என்னும் அந்த விஷயம் தெரிந்தது. விக்கிரஹங்கள் பற்றி தெரிந்துக் கொள்ளலாம். மனிதன் சூட்சம தேகம் **கிரஹம்** என்னும் சொல்கின்றோம் அல்லவா! அப்படியே ஒரு பிரதிமையில் (விக்கிரஹம்) இருக்கும் சூட்சம தேகத்தை **விக்கிரஹம்** என்னும் சொல்கின்றோம். மனிதர்களுக்கு சூட்சம தேகம் ஸ்தூல தேகத்தில் பொதிந்து உள்ளது. மேல் மனிதனின் ஸ்தூல தேகம் தெரியும், சூட்சம தேகம் தெரியாது. அந்த விதமாக கோயிலில் உள்ள சாமிக்கு ஸ்தூல தேகம் பிரதிம, சூட்சம தேகம் விக்கிரஹம். பிரதிமையில் விக்கிரஹம் பொதிந்து உள்ளது. மேல் அந்த சாமி உருவம் தெரியும் மேலும் சூட்சம தேகம் (விக்கிரஹம்) உருவம் காணப்படாது. பிறந்த ஒவ்வொரு மனிதனுக்கு சூட்சம தேகம் இருப்பது போல் வைத்த ஒவ்வொரு பிரதிமைக்கு விக்கிரஹம் இருக்கும். மனிதர்களுக்கு சூட்சம தேகம் போய் ஸ்தூல தேகம் இருப்பது போல், பிரதிமையில் விக்கிரஹம் போனால் ஸ்தூல தேகம் பிரதிமை மட்டும் இருக்கும். என்றால் மரணித்த மனிதன் தேகம், விக்கிரஹம் இல்லாத பிரத்திமை இரண்டும் ஒன்று தான். மனிதனின் சூட்சம தேகம் ஸ்தூல தேகம் போலவே இருக்கும். அதன் போலவே

பிரதிமை உருவம் போலவே விக்கிரஹம் இருக்கும். மற்றும் கிரஹங்களுக்கு விக்கிரஹங்களுக்கு சில விஷயங்களில் அதிகம் வித்தியாசம் இருக்கும். அவற்றைப்பற்றி விவரிக்கிறோம் கேளுங்கள்.

1.கிரஹம் ஒரு தடவை தன் ஸ்தூல தேகம் விட்டு வெளியே வந்தப்பின் மறுபடி அதற்கு உள்ளே நுழையாது. விக்கிரஹ தன் ஸ்தூல தேகத்தை விட்டு வந்தப்பின் மறுபடி உள்ளே நுழையும்.

2.கிரஹகம் வேறு தின்பண்டங்களை திருடும். விக்கிரஹம் அந்த விதமாக திருடாது.

3.கிரஹம் வேறவர்களை நோய் உருவத்தில் பாதிக்கும். விக்கிரஹங்களும் சில பேர்களை பாதிக்கும், மற்றும் சில பேர்களை பாதிப்பிலிருந்து (கஷ்டத்திலிருந்து) இல்லாமல் செய்யும்.

4.கிரஹங்கள் சிலது ஞான சக்தியிலிருக்கும். சிலது மட்டும் ஞான சக்தி இல்லாமல் இருக்கும். விக்கிரஹங்கள் எல்லாம் ஞான சக்தியில் இருக்கும். மேலும் சிறியதிலிருந்து பெரியதுவரை அடுக்கு அடுக்கான சக்தியில் இருக்கும்.

5.கிரஹம் நீதி நேர்மை இல்லாமல் நடந்துக் கொள்ளும். விக்கிரஹங்கள் அதன் போல் நடந்துக் கொள்ளாது. கிரஹங்களுக்கு விக்கிரஹங்களுக்கு சில வித்தியாசம் இருக்கும் மற்றம் கிரஹங்களை சிறிய பேய்கள் என்னும் சொல்லலாம். செய்த கர்மம் ஜீவன் கர்மசக்கரத்தினால் வந்த, வேறு தாய் கர்பத்தில் ஜென்மித்த குழந்தை தேகத்தில் நுழைந்து, குழந்தை தேகத்திற்கு உயிர் வந்ததுப்போல், சிற்பியினால் தயாரான பிரதிமையில்

கர்மத்தினால் ஒரு ஜீவன் நுழைந்து பிரதிமைக்கு உயிர் வருகின்றது. அப்படி நுழைந்த ஜீவனுக்கு ஸ்தூல தேகம் பிரதிமா, சூட்சம தேகம் விக்கிரஹம், இந்த விதமாக பிரதிமாவுக்கு உயிர் இருக்கும். மனிதன் தேகம் போல பிரதிமை தேகம் அசையாது. மனிதன் சூட்சம தேகம் திரிவது போல, பிரதிமை சூட்சம தேகம் திரிகின்றது. அனைத்து ஜீவராசிகளிலேயும், சுகத்தை அனுபவிக்கின்றவர்களிலேயும், பாவம் செய்தவர்களிலேயும், விலங்குகளிலேயும் மற்றும் கோயில்களில் உள்ள தேவதைகளிலேயும் எல்லாம் ஜீவராசிகளில் சமமாக இருக்கின்றது ஆத்மா. தேவ பிரதிமையில் ஜீவன் சேருவதற்கு நல்ல கர்மம் தேவை. நல்லா இருக்கின்றவரில் கர்மத்தினால் தெய்வ பிரதிமையில் ஜீவனாக சேர்ந்து, அதில் யோகம் அனுசரித்து தெய்வ சக்தி அதிகமாக அடைந்தவருக்கு, உள்ள கர்மம் இல்லாமல் போனப்பின் பரமாத்மாவில் ஐக்கியம் ஆகின்றார்கள். சில பேர் அப்படியாகமல் தெய்வ பிரதிமையில் ஜீவனாக சேர்ந்து சரியாக யோகம் அனுசரிக்காமல் உலக மாயத்தில் மிதங்கி உள்ளார்கள். இங்கு கோயில்களில் தேவதைகள் பெரியவர் என்னும் நம்பிக் கொண்டுயிருப்பவற்கு நான் சொல்லுவது அர்த்தமாகமல் போவது எல்லாம் சொல்லியதினால் என்னை கூட தவறாக நினைப்பார்களோ என்னமோ! தயவு செய்து விக்கிரஹங்களை அர்த்தம் செய்துக் கொண்டாலும் அர்த்தம் செய்யாமல் போனால், என்னை மட்டும் தவறாக நினைக்காமல் முன்னுக்கு உங்கள் பார்வை போக வேண்டும் என்று வேண்டிக் கொள்கின்றேன். பகவத்கீதா சாஸ்த்திரத்தில் விஞ்ஞான யோகத்தில் **“பிரக்ருதி சம்மந்தப்பட்ட பாவங்களில்**

**கோரிக்கையில் மிதங்கி அஞ்ஞானமாகி, என்னை பூஜை செய்யாமல் எல்லாம் தேவதை ஆராதனை மனிதர்கள் செய்கின்றார்கள். யார் இந்த விதமான ஆர்வத்துடன் தேவதைகளை பூஜை செய்யுவார்களோ, அவனுக்கு அதன் மேல் நம்பிக்கையிருக்கும் படி செய்து அந்த தேவதையே ஆர்வத்துடன் பூஜை செய்யுவதுப்போல செய்யுவேன். அவன் அந்த தேவதையே நம்பிக் கொண்டு ஆர்வத்துடன் ஆராதனை செய்யும் போது, அந்த ஆராதனை பலனாக அவருக்கு வேண்டிக்கொண்ட கோரிக்கைகள் நிறைவேற்றுவேன்"** என்னும் பரமாத்மா தெரிவித்தார். இதனால் கோயிலில் உள்ள சாமிகள் ஒன்றும் செய்யமாட்டார்கள். கோயிலில் உள்ள சாமிகளில் உள்ளே அந்தர் ஆத்மாவான பரமாத்மாவே அனைத்தையும் செய்கின்றார் என்னும் தெரிகின்றது. நமக்கு என்ன செய்தாலும் பரமாத்மாவே செய்ய வேண்டும். உலகத்தில் உள்ள மக்களுக்கு, தேவாலயங்களில் உள்ள தேவதைகளுக்கு, அண்ட, பிண்ட, பிரம்மாண்டத்திற்கு தளபதி பரமாத்மாவே. பரமாத்மாவை நம்பி சிறிது ஞான சக்தியை சம்பாதித்துக் கொண்டவரும் கூட பிரதிமையில் விக்கிரஹங்களாக மாறி புண்ணியங்கள் செய்துக் கொண்டதினால் பல பூஜைகளை, நெய்வேத்தியங்களையும், சாப்பிடுகின்றார்கள். தெய்வ பிரதிமையில் உள்ள ஜீவன்கள் பேய்கள் நுழைவதுப்போல வேறு மனிதர்கள் தேகங்களில் நுழைந்து எங்களுக்கு பலான பூஜைகள் செய்யுங்கள் என்று சொல்கின்றார்கள். மற்றும் தன் நேராக பலான பொருள்களை கொடுப்பேன் என்னும் சொல்லிய போது கொடுக்காமல் போனால் அவனையும் வேறவரில் நுழைந்து எனக்கு

காணிக்கையை கொடுங்கள் என்று கேட்க்கின்றார்கள். இன்னும் எனக்கு பூஜைகள் சரியாக செய்ய வில்லை உங்களை என்ன செய்ய வேண் என்னும் மிரட்டுபவர்களும் இருக்கின்றார்கள். இவர் எல்லாம் பிரதிமையிலிருந்து மாயையில் விழுந்தார் என்று தெரிகின்றது. சில பேர் பிரதிமையில் உள்ள ஜீவன்கள் தனக்கு பூஜை செய்தாலும் செய்யாமல் போனாலும், திட்டினாலும், புகழ்ந்தாலும் ஒன்றும் நினைக்காமல் மௌனமாகயிருந்து யோகம் செய்கின்றார்கள். ஒரு பெயர் வைத்த மனிதர்கள் எத்தனையோ பேர் இருந்ததுப்போல, ஒரு பெயர் வைத்த தேவதை பிரதிமைகள் எத்தனையோ இருக்கின்றது. எல்லன்னா என்னும் பெயர் இருந்த மனிதர்கள் எத்தனையோ பேர் இருந்ததுப்போல, ஸ்ரீராமன் என்னும் பெயர் இருந்த பிரதிமைகள் எத்தனையோ இருக்கின்றது. ஒரு பெயர் இருந்த எல்லன்னா எல்லோரும் ஒரே விதமாக இருக்க மாட்டார்கள். ஒரு பெயர் இருந்த ஒரு எல்லன்னாவுக்கு மற்ற ஒரு எல்லன்னாவுக்கு உருவத்தில், குணங்களில் வித்தியாசம் இருப்பதுப்போல, ஒரு பெயர் வைத்த ராம பிரதிமைகள் எல்லாம் ஒரு விதமாக இருக்காது. ஒரு ராம பிரதிமைக்கு மற்ற ஒரு ராம பிரதிமைக்கு புண்ணியத்திலும், உருவத்திலும், ஞான சக்தியிலும், குணத்திலும் வித்தியாசம் இருக்கும். அதனால் தான் உலகத்தில் உள்ள ஒரு பெயரில் உள்ள பிரதிமைகளுக்கு வேறு வேறு ரகமாக பூஜைகள் நடந்துக் கொண்டுயிருக்கும். ஆஞ்சநேயன் சாமி பெயரில் உள்ள பிரதிமைகள் உலகத்தில் எத்தனையோ இருக்கும். மேலும் பிரதிமைகளில் உள்ள

ஜீவன்கள் ஒரு சக்தியில் இருக்க மாட்டார்கள். மற்றும் ஒரு புண்ணியத்தில் இருக்காது. மேலும் பலரகமான ஆஞ்சநேயனுக்கு பலரகமான பூஜைகள் நடந்துக் கொண்டுயிருக்கும். ஒரு கோயிலில் ஆஞ்சநேயனுக்கு தினமும் பூஜைகள் நடந்துக் கொண்டுயிருக்கும். வேறு ஒரு கோயிலில் ஆஞ்சநேயனுக்கு ஒன்றும் நடக்காது. எல்லாரும் ஆஞ்சநேய சாமி என்னும் பெயரில் இருந்தாலும், விரோதியான கிரஹங்கள் கோயிலில் வந்தால் சில பேர் ஆஞ்சநேய சாமிகள் அவற்றை ஒன்றும் செய்யாமல் போனார்கள். சில பேர் ஆஞ்சநேய சாமிகள் கிரஹங்களிடன் சண்டைப்போட்டு அவர்களே தோல்வி அடைகின்றார்கள். சில பேர் விசேஷபலம் இருக்கின்றவர்கள் கிரஹங்களை அடித்து துரத்துகின்றார்கள். மனிதர்களில் கிரஹங்கள் நுழைந்தப்போது பலம் அதிகமாக இருக்கின்ற ஆஞ்சநேய சாமி பிரதிமையிடம் போய் வேண்டியதால் அந்த சாமிகள் அந்த கிரஹங்களை துன்புறுத்தி இனி எப்போதும் அவரிடம் போகாமல் செய்கின்றார்கள். இது எல்லாம் நாம் சில இடத்தில் நேரில் பார்த்துக் கொண்டுயிருக்கிறோம். கிரஹங்களான மனிதர்களுக்கு விக்கிரஹமாகயிருந்த ஆஞ்சநேய சாமிக்கு தினந்தோறும் சாயந்திரம் சண்டை நடக்கும் **அனந்தபுரம் மாவட்டம் குந்தகல்லு பக்கத்தில் காசபுரத்தில் சண்டை நடக்கும்.** தெரியாதவர்கள் தெரிந்துக் கொள்ளுவதற்கு அங்கு போய் கவனிக்காலாம். யோக சக்தியிருக்கின்ற மனிதர்களுக்கு விக்கிரஹங்கள் கூட பேச்சு கேட்கும். எதற்கு என்றால் தெய்வ சக்தி விக்கிரஹங்களை விட யோகிகளில் அதிக சக்தி இருக்கும். மேலும் விக்கிரஹங்கள் எல்லோரிடம்

நடந்துக் கொள்ளுவது போல் நடந்துக் கொள்ளாமல் யோகிகள் விக்கிரஹங்களிடம் வந்தப்போது தாழ்மையாக கீழ்ப்படிந்து இருக்கும். ஒரு கோயிலில் யோகி படுத்துக் கொண்டுயிருக்கும் போது ஒவ்வொரு நாளும் ஒருவரில் நுழைந்து பேசி பூஜையை வாங்கிக் கொண்ட அந்த தேவாலயத்தில் உள்ள தேவதை அந்த நாள் எத்தனையோ பூஜைகள் செய்தாலும் ஒருவரில் கூட நுழைந்து பேசவில்லை. எதற்கு என்றால் தன் செய்யும் வேலை யோகி பார்த்து கோபம் கொள்வாறோ என்னும், இங்கும் யோகிக்கு விக்கிரஹம் பயந்தது என்று தெரிகின்றது. அதனால் தெரிந்த யோகிகள் சிலர் எந்த தேவாலயத்திற்கு மற்றும் தேவர்ளு (திருவிழாக்கள்) நடக்கும் இடத்திற்கும், பீர்கள் பண்டிகைக்கு பீர்கள் இடத்திற்கு, தேவதைகள் உடம்பில் வந்து பேசுவர்கள் என்னும் அந்த இடத்திற்கு போனார்கள். ஒரு நேரத்தில் போனாலும் ஞான அக்னி சூடுக்கு அந்த கிரஹங்கள் கஷ்டப்பட வேண்டும். ஓ மனிதர்களே! தேவாலயங்களில் உள்ள தேவதைகளிலும் அந்தர்யாமியான பரமாத்மாவை தெரிந்துக் கொள்ளுவதற்கு யோகியான குருவை அனுசரித்து, அவர் கொடுக்கும் போதனைகளில் அமிர்தம் குடித்து முருத்திஞ்சையன்னாகு. அப்படியில்லாமல் போனால் இறப்பது பிறப்பது, கஷ்ட சுகங்கள் அனுபவிக்க தவறாது. கடினமான கஷ்டம் வந்த போது பரமாத்மாவை நினைத்தால் பரமாத்மா ஒன்றும் செய்யமாட்டார். கர்மத்திலிருந்து தப்பித்துக் கொள்ள வேண்டும் என்றால் ஞானம் முக்கியமானது. அதனால் கீதா சாஸ்த்திரத்தில் ஞான யோகத்தில் **“கர்மத்தை எரிப்பதற்கு ஞானம் என்னும் அக்னி வேண்டும்”** ஞானம் வேண்டும்

என்றால் ஞானம் தனம் இருக்கின்றவரிடம் போய் கேளுங்கள் என்னும் பகவான் கூறினார். மேலும் ஒவ்வொருவரும் ஞானத்தை சம்பாதித்துக் கொள்வதற்கு ஆரம்பிக்க வேண்டும். முதலில் தேவாலயங்களில் பூஜைகள் செய்து, கோரிக்கைகள் வேண்டிக் கொள்ளாமல், தேவாலயங்களை வெளியே அர்த்தங்களை தெரிந்துக் கொண்டு, அதன் பிறகு குருவிடம் உபதேசம் அடைந்து யோக சாதனை செய்து யோக சக்தியை சம்பாதித்துக் கொண்டு, யோகி சக்தி பரிபூர்ணநிலை அடைந்து ஆத்மாவில் ஐக்கியம் ஆகவேண்டும். தேவாலயங்கள் தேவதை பிரதிமையில் கூட பரமாத்மா இருக்கிறார் என்னும் உண்மை தெரிந்துக் கொண்டு ஞானிகள், அஞ்ஞானிகள் செய்யும் பூஜைகளில் வழிபடுபவர் பரமாத்மாவுக்கே, எல்லாம் பூஜைகள் சேரும் என்று தெரிந்துக் கொள்ள வேண்டும். அதனால் தான் கீதா சாஸ்த்திரத்தில் ராஜவித்யா ராஜகுஹ்ய யோகத்தில் பரமாத்மா **“ஆர்வத்துடன் யார் எல்லா தேவதைகளை ஆராதனை செய்யுவனோ அவரும் தனக்கு தெரியாமலே என்னை ஆராதனை செய்யுரவனாகுவன்”** என்னும் கூறினார். யார் பரமாத்மா எல்லாம் ஜீவனில் இருப்பது போல எல்லாம் தேவதைகள் பிரதிமையிலும் இருக்கின்றது என்னும், நம் பூஜைகள் எல்லாம் பரமாத்மாவுக்கு சேரும் என்னும் உண்மையை தெரிந்துக் கொள்ளுவானோ அவனுக்கு பரமாத்மா பிராப்த்தி கிடைக்கும். அப்படியாகாமல் தெய்வ பிரதிமையில் அந்தர்யாமியான பரமாத்மாவை தெரிந்துக் கொள்ளாதவர் பூஜைகள் செய்துக் கொண்டுயிருந்தாலும், அதனால் புண்ணியம் கிடைத்து அந்த புண்ணியத்தினால் சுகம்

கிடைக்கும். அந்த புண்ணியம் முடிந்தப்பின் சுகமும் முடிந்து விடும். அதனால் பிரதிமையில் அந்தர்யாமியான பரமாத்மாவை அடையாளிக்காதவர்கள் சுகத்தை அடையுவார்கள், மேலும் அந்த சுகம் முடிந்தப்பின் அவருக்கு கஷ்டங்களும் கூட வரும். மற்றும் கீதாவில் ராஜவித்யா ராஜகுஹ்ய யோகத்தில் பரமாத்மா **"அனைத்து தேவதைகளுக்கு செய்யும் எக்னத்தில் இருக்கிறது நானே மேலும் பிரபுவும் நானே"** என்னை உண்மையாக தெரிந்துக் கொள்ளாதவற்கு அவர் எல்லோருக்கும் சுகம் கொண்டு பிறகு அந்த சுகங்களில் இருந்து தவிர்ந்துப்போவதற்கு சம்பவிக்கும் என்று கூறினார். அதனால் யாராவது கிரஹங்கள் என்றால் என்ன? விக்கிரஹங்கள் என்றால் என்ன? என்னும் விவரமாக தெரிந்துக் கொண்டால், கிரஹங்களில் விக்கிரஹங்களில் இருக்கின்ற பரமாத்மாவைப் பற்றி தெரிந்துக் கொண்டால் அவனை விட ஞானி இன்னொருவன் இல்லை என்று சொல்லலாம். அப்படிப்பட்ட ஞானி எண்ணம் எல்லாம் பரமாத்மாவை நம்பிக் கொண்டு இருப்பான். மேலும் அவன் பரமாத்மாவிலேயே சேருவான்.

### மகரிஷி - ஆனந்தா

பூமி மீது எத்தனையோ மனிதர்கள் இருக்கின்றார்கள். அவரில் மான்யுளு (ஞானமார்க்கத்தில் உள்ளவர்) சிலர்கள் சாமான்யமானவர்கள் அதிகமானவர் இருக்கின்றார்கள். பிறந்தபோது எல்லோரும் சாமான்யமானவர்களாக இருந்தால் வளர்ந்து பெரியவராகி கொண்டுயிருக்கும்போது எத்தனையோ பேர் சாமான்யமானவராகயிருந்தால், சிலர் மட்டும்

மான்யுளுவாக (பூஜை செய்யுபவராக) தயாராகின்றார்கள். வெறும் ஞான மார்க்கத்தில் உள்ளவர் மட்டுமே மான்யுளுவாக தயாராகுவது அடையாளிக்க வேண்டிய விஷயம். பணம் உள்ளவனே மான்யுளு என்று சிலர் நோக்கத்துடன் நினைத்துக் கொண்டு இருக்கும்போது அவர் நினைப்பது பிரமை மட்டும் தான். முழுமையாக மான்யுளுவாக ஞான மார்க்கத்தில் உள்ளவர்கள் சிறிது ஞானசக்தி இருக்கின்றவர்கள் அவர்களை மான்யுளுவாக (ஞானம் தெரிந்தவர்களாக) அடையாளிக்கின்றோம். ஆத்மா தர்மங்களை தெரிந்தவர்களாக அவற்றை அனுசரிக்கின்றவர்களிடம் ஞானி அக்னி என்னும் சக்தி ஒன்று உற்பத்தியாகி இருக்கும். அப்படிப்பட்ட ஞான அக்னி இருக்கின்றவர்களை யோகிகள் என்னும் சொல்ல வேண்டும். ஆத்மா தர்மங்களை அனுசரிப்பது யோகம் என்று சொல்கின்றோம். அப்படி அனுசரிக்கின்றவரை யோகி என்று சொல்கின்றோம். அப்படிப்பட்ட ஆத்மா தர்மத்தை அனுசரிக்கின்றவர்கள் சிலர்கள் பூமி மேல் இருக்கலாம். அப்படிப்பட்டப்போது அவரில் யார் பெரியவர், யார் சிறியவர், யார் எப்படிபட்டவரோ கூட நாம் கண்டிப்பாக தெரிந்துக் கொள்ள வேண்டும். உதாரணத்திற்கு பள்ளிகூடத்திற்கு போகின்ற எல்லோரும் மாணவர்கள், மாணவர் என்னும் பெயர் இருக்கின்றவர் படிப்பில் அவர் எல்லோரும் ஒரு வகுப்பு சேர்ந்தவர் அல்ல அல்லவா! அப்படியே ஆத்மா தர்மங்கள் தெரிந்து அனுசரித்தவர்கள் எல்லோரும் யோகியானாலும் யோகிகள் எல்லோரும் சமமானவர்கள் அல்ல. யோகிகளிலும் கூட சிறியவர் பெரியவர் இருப்பது சஹஜம் தான். அதனால்

பூர்வத்தில் தெரிந்த பெரியோர்கள் யோகிகளிலும் கூட வகுப்பு நிர்ணயிக்கப்பட்டு அவர் நிலை அடையாளித்து பெயர் வைத்து இருந்தார்கள். யோகிகளில் நான்கு வகுப்புகள் பூர்வத்தில் பிரித்து பெயர்கள் வைத்தார் என்று தெரிகின்றது. கடவுளில் ஐக்கியமாகுவதற்கு முயற்சி செய்கின்றவர்கள் யோகிகளில் நான்கு வகுப்புகள் தாண்டவேண்டியது இருக்கும். நான்கு வகுப்புகள் தாண்டிய பிறகு மோக்ஷம் என்பதை அடையுவார்கள். அந்த நான்கு வகுப்புகளில் இருக்கின்றவர்கள் பெயர் இப்படியிருக்கிறது. 1.மஹரிஷி 2.ராஜரிஷி 3.தேவரிஷி 4.பிரம்மரிஷி. பரமாத்மாவில் ஐக்கியமாகுவதற்கு ஒரு சம்பூர்ண சக்தி வேண்டும். அந்த சம்பூர்ண சக்தியில் காலாண்டு (கால்வாசி) (1/4) பாகம் சக்தியை சம்பாதித்த யோகியை மஹரிஷி என்னும் அழைப்பார். பாதி (1/2) பாகம் சக்தியை சம்பாதித்த யோகியை ராஜரிஷி என்னும் அழைப்பார். முக்கால் (3/4) பாகம் சக்தியை சம்பாதித்த யோகியை தேவரிஷி என்னும் அழைப்பார். இந்த விதமாகவே முக்காலிருந்து முழுமை வரை சக்தியை சம்பாதித்துக் கொண்ட யோகியை பிரம்மரிஷி என்னும் அழைப்பார். இப்போது சில சந்தேகங்கள் சிலருக்கு வரலாம். அது என்னவென்றால்! ஒன்று சம்பாதித்துக் கொண்ட சக்தி கண்ணுக்கு தெரிகின்றதா? இரண்டு அந்த சம்பாதித்துக் கொண்ட சக்தி கால்வாசி, பாதி என்னும் எப்படி தெரியும்? இப்படி எத்தனையோ சந்தேகங்களுக்கு பதில் தேட வேண்டியது இருக்கும். அவற்றுக்கு எங்கள் பதில் என்ன வென்றால்! யோகி சம்பாதித்துக் கொண்ட யோக சக்தி கண்ணுக்கு தெரிகின்றது அல்ல. அதனால் தான் இது

எவ்வளவு இருக்கின்றது என்று தெரியாது. அதனால் தான் எப்பேர்ப்பட்ட யோகிக்கும் தன் நிலை தெரியாது. அதனால் தான் கடந்த காலத்தில் பிரம்மரிஷி ஆக வேண்டும் என்னும் விஷ்வாமித்திரனுக்கு நீ பிரம்மரிஷியானய் எதிரே உள்ள நபர் சொல்லும் வரை தன் நிலை தனக்கு தெரியாது. ஒரு யோகியில் உள்ள சக்தி மகத்துவம் எதிரே உள்ள யோகிக்கு மட்டும் தெரியும். அதுவும் வேறு பிரம்மரிஷி நிலையில் உள்ள யோகிக்கும் மட்டும் எதிரே உள்ள யோகியை மட்டும் அடையாளிப்பார். அதனால் விஷ்வாமித்திரன் பிரம்மரிஷியான விஷயம் மற்றும் ஒரு பிரம்மரிஷியான வஷிஷ்டன் மட்டும் அடையாளித்தார். இதனின் பற்றி ஒரு யோகி தன்னில் எந்த நிலைக்கு தகுந்த சக்தி இருக்கின்ற விஷயம் (தன் மஹரிஷி அல்லது ராஜரிஷி அல்லது தேவரிஷியா அப்படியே பிரம்மரிஷியா என்னும் விஷயம்) தனக்கு தானே அடையாளிக்க முடியாது என்று தெரிகின்றது. ஒரு பிரம்மரிஷி மட்டும் எதிரே உள்ள யோகி சக்தியை உணர்ந்து எவ்வளவு இருக்கிறது! எந்த நிலைக்கு தகுந்தவன் என்று சொல்வார். பூர்வ காலத்தில் மனிதர்களுக்கு மஹரிஷிகள் வகுப்புகள் இருக்கின்றது, இவர் பலான மஹரிஷி என்னும் நன்றாக தெரிந்துக் கொண்டுயிருப்பார்கள். இன்று உலகத்தில் உள்ள மனிதர்களுக்கு மஹரிஷிகள் என்னும் வார்த்தைக்கு அர்த்தம் தெரியாமல் போனது. அவற்றில் எங்களுக்கு என்ன வேலை என்று தயாராகி உள்ளார்கள். மக்களை ஞானிகளாக மாற்ற வேண்டிய சாமிஜிக்கள், பீடாதிபதிகள் கூட கதை சொல்லிக் கொண்டு காலத்தை கடத்தினார்கள். அதனால்

பூர்வத்திலிருந்த அர்த்தங்கள் இப்போது தெரியாமல் போனது. இப்போது நாம் மஹரிஷி என்னும் வார்த்தைக்கு பூர்வம் இருந்த அர்த்தம் என்ன வென்று தெரிந்துக் கொள்ளலாம். ஹர்ஷம் என்றால் சந்தோசம். ஹர்ஷி என்றால் சந்தோசப்படுகிறான் என்னும் அர்த்தம். மஹ என்றால் பெரிய என்னும் மஹரிஷி என்றால் பெரும் மகிழ்ச்சி என்று அர்த்தம். ஒரு யோகியை பெரிய சந்தோஷி (மஹரிஷி) சொல்வது எதற்கு? என்னும் சொல்லினால் அதற்கு பதில் யோகி ஆத்மா அனுபவங்களை அனுபவிக்கின்றார் என்று சொல்லுவோம். ஆத்மா அனுபவங்கள் எப்படிப்பட்டது என்னும் கேட்டால் அது வார்த்தைக்கு எட்டாத அனுபவம். அதனைப்பற்றி வேறவருக்கு சொல்ல வேண்டும் என்றால் அது ஒரு ஆனந்தம் என்று வர்ணித்தார்கள். அனுபவத்தில் உயர்ந்தது ஆனந்தமே அல்லவா! அதனால் தான் ஆத்மா அனுபவங்களை ஆனந்தமாக வர்ணித்தார்கள். மேலும் அது ஆனந்தமும் அல்ல. ஆனாலும் அதனை வர்ணிப்பது முடியாததினால் ஆனந்தம் என்னும், பிரம்மானந்தம் என்னும் பெரியோர் சொல்லினார்கள். யோகம் என்பதை ஆனந்தம் என்னும் வர்ணித்தவர் யோகத்தை அனுபவிக்கின்றவனை ஆனந்தா என்று வர்ணித்தார்கள். இந்த காலத்திலும் தற்போது சாமிகளாக உள்ளவர் எல்லோரும் ஆனந்தம் என்னும் பெயரிலேயே இருக்கின்றார் என்று நினைத்துக் கொள்ளலாம் ஆனாலும் யார் எவ்வளவு ஆனந்தமோ கால்வாசி ஆனந்தமோ, முக்கால் ஆனந்தமோ யாருக்கும் தெரியாது. இந்த காலத்தில் ஆனந்துகள் பரம்பரையாக பெயர் வைத்துக் கொண்டு ஆனந்தர்களாக இருக்கின்றார்கள், மேலும் பூர்வகாலம் போல

கால்வாசி, முக்கால் வகுப்பு தெரிந்து வைத்துக் கொண்ட பெயர் அல்ல. அப்படி தெரிந்து இருந்தால் இவர் எல்லோரும் வெறும் ஆனந்தா இல்லாமல் ராஜானந்தா, தேவானந்தா பிரம்மானந்தாவாக மாறியிருப்பார்கள். இப்போது நாங்கள் சொல்லியது எல்லாம் சிலருக்கு புதியதாக தெரிகின்றது என்னும் இது எல்லாம் பூர்வ காலத்தில் இருந்தது என்று தெரிந்துக் கொள்ள வேண்டும். ஆனந்தா என்னும் வார்த்தை மஹரிஷி என்னும் சொல்லலாம். அவற்றின் இரண்டு அர்த்தங்களும் ஒன்று தான். அதனால் யோகியானவனை மஹரிஷி என்று சொல்லலாம். மஹரிஷி சக்தியை விட அதிக சக்திக் கொண்டவனை ராஜரிஷி சொல்வதில் ஒரு அர்த்தமிருக்கும். எல்லாத்தை விட பெரியதை ராஜா என்னும் சொல்வது சஹஜம் தான். அதனால் மஹரிஷி பிறகு பெரியதை ராஜரிஷி என்று சொல்லினார்கள். மனிதர்களில் ராஜா விட பெரியது தேவதைகள் அதனால் ராஜரிஷி பிறகு தேவரிஷி என்று சொல்லினார்கள். தேவதைகள் விட பெரியது பரமாத்மா (கடவுள்). அதனை பிரம்மா என்னும் சொல்லுவதில் சஹஜம் என்னும் எல்லாத்தை விட கடைசியில் இருப்பதை பிரம்மரிஷி என்று சொல்லினார்கள். மஹரிஷி, ராஜரிஷி, தேவரிஷி, பிரம்மரிஷி என்னும் வரிசைப்பிரகாரம் ஆனந்தா, ராஜானந்தா, தேவானந்தா, பிரம்மானந்தா என்று பதவிகள் இருக்கிறது. இந்த காலத்தில் கூட யோகிகளில் பெரிய சக்தியிருக்கின்றவர்கள் மஹரிஷிகளிலிருந்து ராஜரிஷி தேவரிஷி பிரம்மரிஷி வரை பூமியில் இருக்கலாம். மேலும் வேறு ஒருவர் சொல்லும் வரை அவர் அருகதை அவருக்கே தெரியாது, மேலும் நாங்கள் எப்படிப்பட்டவர்கள் என்னும்

தெரியாத நிலையிலும் இருக்கின்றார்கள். சிலர் இது எல்லாம் உனக்கு எப்படி தெரியும்? இந்த விஷயம் யாரும் எங்கும் சொல்ல வில்லை அல்லவா! அப்படிப்பட்டப்போது நீ சொல்லும் வார்த்தை சத்தியம் என்னும் எப்படி நம்ப வேண்டும் என்று கேள்வி கேட்கின்றவர்களும் இருப்பார்கள். அதற்கு எங்கள் பதில், நீங்கள் சொல்லியது போல் பல பேர் யாரோ எங்கயோ சொல்லிய விஷயங்களே மறுபடி மறுபடி எழுதுவதினாலும் அப்படிப்பட்ட விஷயங்கள் படித்து கொண்டதினால், இந்த விஷயங்கள் அப்படி இல்லை என்னும் கேட்பதில் தவறு இல்லை. ஒரு மரம் இனிப்பு காய்கள் காய்கின்றதுப்போல பெயர் வாங்கியது என்று நினைத்து கொள்ளலாம். அப்போது காயை விற்று கொண்டுயிருப்பவன் தன் கூடையில் காய்கள் எந்த மரமோ பலான மரம் உடையது என்னும் அந்த இனிப்புள்ள மரம் உடையது பெயரை சொல்லி காயை விற்று கொண்டுயிருப்பான். அப்படியே சிலர் கடந்த காலத்தில் மக்களில் அனைவரில் பெயர் உள்ள சாமிகள் பெயர்களை சொல்லிக் கொண்டு இது அவர்கள் வார்த்தை தான், இது அவர்கள் எழுதியது என்று சொல்லிக் கொண்டுயிருப்பார்கள். அப்படியே புத்தகங்களில் எழுதுவார்கள். உதாரணத்திற்கு நம் நாட்டில் காளிகாதேவியை பூஜை செய்துக் கொண்டுயிருந்த ஒரு குரு பெரிய புகழ் கொண்டார். அவர் சிஷ்யனும் புகழ் கொண்டவர் தான். அவர் எழுதியது, அவர் சொல்லியது என்றால் நன்றாக கேட்பார்கள் நன்றாக படிப்பார்கள். அப்படிப்பட்ட விஷயம் தெரிந்து இந்த காலத்தில் உபன்யாசிகள், எழுதுபவர்கள் அவர் பெயர் இல்லாமல் ஒன்றும் சொல்ல முடியாது

எழுதமாட்டார்கள். அந்த குரு அந்த சிஷ்யன் பகவத்கீதா எழுதப்படவில்லை என்றாலும் பலானவர் எழுதிய பகவத்கீதா என்னும் அவர் பெயர் வைத்து எழுதியவரும் இருக்கிறார்கள். **இந்த விதமாக சங்கராச்சாரியர் சொல்லினார் என்னும், ராமகிருஷ்ணபரமஹும்ஷர் சொல்லினார் என்னும், விவேகானந்தர் சொல்லினார் என்னும், ரமணமஹரிஷி சொல்லினார் முதலியன பெரியவர் பெயர்களை சொல்லி** அவர் சொல்லிய விஷயத்தை மறுபடியும் அதே சொல்லியவரும் இருக்கின்றார்கள். மேலும் இங்கு யார் பெயரை உபயோகித்து கொள்ளாமல், அவர் சொல்லிய விஷயங்கள் தவிர, இந்த காலத்தில் தெரியாமல் போனது, பூர்வ காலத்தில் உள்ள விஷயங்கள் சொல்கின்றோம். அதனால் சத்தியம் அல்ல என்னும் சொல்வதற்கு வாய்ப்பு இல்லை. எதற்கு என்றால் நாங்கள் சொல்லிய விஷயங்கள் இன்று அர்த்தமில்லாத நடைமுறைகளாக இருக்கின்றது. மற்றும் அதுவே எங்கள் வார்த்தைக்கு நேரடி சத்தியமாக நிற்கின்றது. பூர்வ காலத்தில் மஹரிஷி, ராஜரிஷி, தேவரிஷி, பிரம்மரிஷிகள் இருக்கின்றார்கள் என்னும் விஷயம் எல்லோருக்கும் தெரிந்த விஷயம் தான். அது இந்த நாள் தெரியாத விஷயங்களாக இருந்து அவர்கள் பெயர் அர்த்தம் தெரியாததுப்போல இருக்கின்றது என்னும் எல்லோருக்கும் தெரியும். அதனால் நாங்கள் சொல்லிய வார்த்தையில் சத்தியம் இருக்கிறது என்னும் சிலர்களாவது நம்புவார்கள் என்று நம்புகின்றோம். எங்கள் பெயர் பிரபோதானந்தா என்னும் குரு வைத்தார். ஆனந்தா என்பது எங்கள் பெயரிலும்

உள்ளது. மேலும் வகுப்புகள் பிரகாரம் நான் எந்த ஆனந்தனோ எனக்கு தெரியாது. அதனால் பிரம்மரிஷிகள் யாராவது இருந்தால் நீ இவ்வளவு ஆனந்தனே தெரிவித்தால் நாங்கள் சந்தோசமாக கேட்ப்போம். பிரபோதானந்தா தவிர யோகிஸ்வரர் நிலைமையிலிருக்கின்ற நாங்கள் எந்த வகுப்புக்கு சேர்ந்தவரோ உங்கள் அனுபவத்தில் சொல்லுங்கள்.

**சிவம்**

உலகத்தில் ஒவ்வொரு ஜீவி நிர்ணயிக்கப்பட்ட வாயு (ஆய்வு) பிரகாரம் வாழ்கையை கடந்து இறப்பது இயற்கையானது. இந்த வாழ்கை நிர்ணயித்த வாயு பிரகாரம் ஒரு தேகத்தில் நடக்கின்றது. தேகம் என்னும் வாகனத்தில் **“வாயு அளவு”** எங்கு முடிகின்றதோ அங்கு தேகத்திலிருந்து இறங்கிவிட வேண்டும். ஒவ்வொரு ஜீவனுக்கு வாழ்கையில் நடக்கின்ற விஷயம் தான். நாம் ஒரு ஊருக்கு பயணம் செய்யும் போது அந்த ஊர் எவ்வளவு தூரம் இருக்கிறது, நாம் எங்கு இறங்க வேண்டும் என்னும் நியாபகம் வைத்துக் கொண்டு பயணம் செய்துக் கொண்டு இருப்போம். சேர வேண்டிய இடம் தூரமானால் அதுக்கு தகுந்த செலவுக்கு எவ்வளவு பணம் வேண்டுமோ அது மட்டும் வைத்துக் கொள்ளுவோம். அதனுடன் அந்த பயணத்தில் யாருடையாவது நட்பு செய்தால் இறங்கும் வரை தான் அந்த நட்பு இருக்கும் என்னும் தெரிந்து அது வரை மட்டும் அறிமுகம் செய்துக் கொள்ளுவோம். இது செல்லுமிடம் பயணம் என்னும் இந்த பயணத்தில் பந்தங்கள் அனுபந்தங்கள் எதுவும் வைத்துக் கொள்ள மட்டோம்.

ஜீவனம் பயணத்தில் மரணத்தையும் "கம்யம்" எல்லோருக்கும் இருக்கின்றது தெரியும். மேலும் அந்த கம்யம் எவ்வளவு தூரமிருக்கிறது என்னும் யாருக்கும் தெரியாது. அது எப்போது வருகின்றது என்று தெரியாது. **50** கிலோ மீட்டர் வேகத்தில் வாகனத்தில் பயணம் செய்தால் டெல்லி போக வேண்டும் என்றால் **8** நாட்கள், அமெரிக்கா போக வேண்டும் என்றால் ஒரு மாதம் பயணம் செய்ய வேண்டும் என்னும் தெரிந்து வேறு ஒருவரிடம் பயணம் செய்தப்போது ஒட்டும் ஒட்டாத நட்பு செய்வோம். மேலும் நம் தேகம் என்னும் வாகனம் பயணம் **"இவ்வளவு நேரம் என்னும்"** தெரியாதப்போது நம் கூடயிருக்கின்ற பயணிகளிடம் முழுமையான பந்தங்கள் ஏற்படுத்திக் கொள்ளுகிறோம். நம் பயணம் நாள், அரை நாள் என்னும் தெரியாதப்போது பந்தங்கள் ஏற்படுத்திக் கொள்வதால் அர்த்தமில்லை. டெல்லி பயணம் தவறாமல் வாரம் நாள் என்னும் தெரியும்போது கூடயிருக்கும் பயணம் செய்பவரிடம் பந்தம் வைத்துக் கொள்ளமாட்டோம். நம் தேகம் பயணம் வாரம் நாளும் என்னும் நம்பிக்கையில்லாத போது பந்தங்கள் ஏற்படுத்திக் கொள்ளுவது ஞானம் இல்லை என்று தெரிந்துக் கொள்ள வேண்டும். ஞானம் பிரகாரம் யோசித்தால் கூடயிருக்கும் பயணிகளாக எத்தனையோ தேகத்தில் வாழ்கை கடந்துக் கொண்டுயிருக்கும் போது யாருடைய கம்யம் அவருடையது. யாருடையது கம்யம் வரை பயணமோ அது வரை வந்து நின்று விடும். உன்னுடன் கண்டிப்பாக உன் கம்யம் வரை பயணம் செய்கின்றவர்கள் யாரும் இருக்க மாட்டார்கள். அந்த விஷயம் எல்லோரும் ஒப்புக் கொள்ள வேண்டியது தான்.

மேலும் இது சிறிது வரை உண்மை தான். ஆனால் நமக்கு தெரியாத உண்மை மற்றும் ஒன்று இருக்கின்றது. அது என்ன வென்றால் சஹஜமாக வெளியே காணப்படும் உன் கூடவே பயணம் செய்பவன் உன் கம்யம் வரை வராமல் போனாலும் உனக்கு காணப்படாமல் உன்னோடு பயணம் செய்கின்றவர் மேலும் **"இரண்டு பேர் இருக்கின்றார்கள்"** அவரில் ஒருவர் பெயர் இருக்கின்றவர் மற்ற ஒருவர் பெயர் இல்லாதவர். ஒருவனுக்கு **"ஆத்மா"** என்னும் பெயர் இருக்கும். இரண்டாம் அவனுக்கு பெயர் இல்லாததால், "ஆத்மா" பரமாக இருக்கின்றதால், அவரை **"பரமாத்மா"** என்னும், அவரையே **"ஈஸ்வரன்" (தளபதி)** என்னும், **"சிவன்"** என்னும், **"கடவுள்"** என்னும் பல விதமான நிலையில் அழைக்கபடுகின்றது. நீ "ஜீவாத்மா" என்று உனக்கும் தெரியும். மேலும் நீ தேகம் என்னும் வாகனத்தில் பயணம் செய்கின்றாய் என்று மறந்து போனாய். மற்றும் உன்னுடன் எப்போதும் மற்ற "இருவர்" இருக்கின்றார் என்று தெரியாது. சிறிது ஞானம் பார்வையில் கவனித்து பார்த்தால் உன் தேகத்தில் "மூன்று பேர்" பயணிக்கின்றார்கள். இந்த விதமாக எல்லாம் ஜீவராசி தேகத்திலேயும் "பயணம்" நடக்கின்றது. தேகத்தில் "ஆத்மா", "பரமாத்மா" உடன் உனக்கு (ஜீவாத்மாவுக்கு) இருக்கின்ற சம்மந்தம் என்ன? அவருடன் எவ்வளவு நட்பாகயிருக்கின்றாய் என்னும் யோசனை செய்தால் ஜீவாத்மா சிறிதளவும் அவருடன் சம்மந்தம் வைத்துக் கொள்ள வில்லை. இப்போது இது படிக்கின்றவனுக்கு உனக்கு இருக்கின்றதா! என்னும் சொல்லினால்

எந்தளவும் இல்லை என்று சொல்லலாம். இருப்பது எல்லாம் நம் முன்பு போகுபவருடன், நம் பிறகு போகுபவருடன் சம்மந்தங்கள் வைத்துக் கொண்டு, அவருடன் காலத்தை எல்லாம் கடந்துப் போனால், உள்ளே உள்ள ஆத்மா பரமாத்மாவை அவருடன் சம்மந்தங்கள் ஏற்படுத்தி கொள்ளும் நேரம் பொறுமை யாருக்கும் இல்லை. மேலும் நீ உள்ளே இருப்பவரை பார்க்காமல் போனாலும் அவர் உன் பக்கம் பார்த்துக் கொண்டுயிருக்கின்றார். அவருடன் சம்மந்தம் வைத்துக் கொள்ளாமல் இருந்தாலும் அவர் பந்தம் எப்போது உன்னுடன் இருக்கின்றது. அவர் சம்மந்தமில்லாமல் போனால் தேகத்தில் நாம் ஒரு நிமிடமும் இருக்க முடியாது. தேகம் என்னும் வாகனத்தில் ஜீவாத்மா, ஆத்மா, பரமாத்மா பயணம் செய்து "கம்யம்" சேர்ந்த உடனே தேகம் என்னும் வாகனத்திலிருந்து ஜீவாத்மா இறங்கிவிடும். அவர் ஒருவர் அல்ல அவருடன் ஆத்மாவும் இறங்கிவிடும். உன்னுடன் ஜீவயாத்ரா முதலிட்டு உன்னுடன் இறங்கிப்போறவர் ஆத்மா ஒருவர் தான். இந்த விஷயத்தை பகவத்கீதாவில் புருசோத்தம பிரப்தியோகத்தில் அத்தியாயம் எட்டாவது சுலோகத்தில் சொல்லப்பட்டது. உன் கம்யத்தில் உன்னுடன் பயணம் செய்பவரில் இருவரில் ஒருவர் மட்டும் இறங்கிவிடுவார். பரமாத்மா ஆத்மாவிட வேறாக இருக்கின்றதால் பரமாத்மா அப்படியே தேகத்திலிருந்துவிடுவார். சஜீவயாத்திரையில் ஜீவன் சுகம் துக்கத்தை அனுபவித்துக் கொண்டுயிருப்பார். அந்த சுகம் துக்கத்தை அனுபவங்களுக்கு தேவைப்பட்ட காரியங்களுக்கு சக்தியை கொடுத்து தேகத்தை அசைக்கின்றவர் இரண்டாவதான ஆத்மா மூன்றாவதான

பரமாத்மா சாக்ஷியாக எல்லாத்தையும் பார்த்து ஒன்றும் செய்யாமல் மௌனமாக இருக்கின்றார் பரமாத்மா. ஜீவன் தேகத்தில் இருக்கின்றபோதும் மற்றும் இல்லாதப்போதும் எப்போதும் இருப்பவர் சிவன் அல்லது ஈஸ்வரன் அல்லது பரமாத்மா. ஒன்றும் ஆகாத இந்த மூன்றாவதானவரை பரமாத்மா என்னும் சொல்லுவதில் அர்த்தம் தெரிந்துக் கொண்டோம் அல்லவா! அப்படியே ஈஸ்வரன் என்னும் எதற்கு சொல்கின்றோம் விவரமாக தெரிந்துக் கொள்ளலாம். தளபதி என்றால் உயர்ந்தவர், பெரியவர் என்னும் அர்த்தமாகின்றது. அப்படியே லட்சாதிபதி என்றால் லட்சத்திற்கு தளபதி என்னும், லட்சத்திற்கும் உயர்ந்தவர் என்னும், லட்சாதிபதி என்று அர்த்தமாகிறது. அந்த விதமாக லட்சாதிஸ்வரன், கோடிஸ்வரன் சொல்வதில் லட்சத்திற்கு கோடிக்கு, தளபதி என்னும் அவற்றை விட பெரியவர் என்று தெரிகின்றது. இந்த உலகத்தில் லட்சம், கோடி, அது, இது, என்னும் சொல்லாமல் எல்லாவற்றுக்கும், அனைத்துக்கும் தளபதியானவர் "பரமாத்மா" ஒருவரே. மேலும் பலானதுக்கு ஈஸ்வரன் என்னும் சொல்லாமல் மொத்ததிற்கும் ஒரு சொல்லாக ஈஸ்வரன் என்று சொல்லப்பட்டது. எங்கும் அடையாளிக்காததை, அனைத்திலும் இருக்கின்றதை, எதற்கும் தெரியாதது என்னும், வாழ்ந்துயிருக்கின்றவனுக்கு ஞானிகளுக்கு, யோகிகளுக்கும் கூட தெரியாதது, யாருக்கும் தெரியாததால் மேலும் அதற்கு "சிவம்" என்று பெயர் வைக்கப்பட்டது. "சிவம்" என்றால் தெரியாதது என்று அர்த்தம். ஞானிகளுக்கு யோகிகளுக்கு "சிவம்" என்பது ஒன்று இருக்கிறது என்று தெரியும். அது எது என்பது மட்டும்

தெரியாது. ஜீவன் ஞானயோகத்தினால் தேகத்தில் உள்ள ஆத்மாவை தெரிந்துக் கொள்ளலாம் மேலும் “சிவம்” என்பதை மட்டும் தெரிந்துக் கொள்ள வில்லை. கர்மம் முடிந்தப்பின் ஜென்மமில்லாத நிலை சேரும் யோகிகள் சிவமில் ஐக்கியமாய் போவார்கள். அது ஏதோ அப்போது தெரியும் முதலில் தெரியாது. தேகத்தில் ஜீவயாத்திரையில் மரணத்தில் “கம்யத்தில்” ஆத்மா, ஜீவ ஆத்மாக்கள் தேகத்திலிருந்து போனவுடன் இறுதிக்கு தேகத்தில் இருக்கின்றது “சிவம்” வாழ்ந்துயிருந்தப்போது நீச்சமான குணங்களில் சம்மந்தமுள்ள “ஜீவன்” தேகத்தில் இல்லை. எந்த நீச்சமான எண்ணம் அதில் இல்லை. அப்போது அது தூய்மையான “சிவ” நிலையம். அதில் பரமாத்மா தவிர மற்றவர் யாரும் இல்லை. மேலும் அந்த விஷயம் தெரிந்த ஞானிகள் யோகிகள் ஒரு நபர் மரணித்தால் அந்த இறந்த தேகத்திற்கு இறுதி சடங்கு முன்பு இறந்த தேகத்தை முழுமை பக்தியாக பூஜை செய்யுவார்கள். தெய்வ சம்மந்தமான விபூதி நாமத்துடன் அலங்கரித்து கோவிந்தா நாமத்துடன் வைத்து பூஜை செய்து எல்லோரையும் கும்பிடுங்கள் என்று சொல்வார்கள். அப்படிப்பட்ட சாம்பிரதாயம் இப்போதும் இருக்கும்போது அது அர்த்தம் தெரியாத முறையானது. இப்போது கும்பிடுபவர் பக்தியில்லாமல் பயத்தில் கும்பிடுகின்றார்கள். ஒரு வேலை கும்பிடாமல் போனால் இறந்துப்போனவர் மறுபடி பேய்யாக வருவார் என்னும், அவர் பீடை விட்டை சுற்றிலும் இருக்கும், கும்பிட்டால் அத்துடன் போகும் என்று கும்பிடுகின்றார்கள்.

பூர்வம் அப்படி செய்ய வில்லை. அவர்கள் ஒவ்வொரு காரியம் அர்த்தம் தெரிந்து செய்யுவார்கள். ஜீவன் போனப்பிறகு இறுதியில் மீதி இருப்பது “சிவம்” என்று அவர்களுக்கு தெரியும். அதனால் மரணித்துயிருந்த தேகத்தை (முருத்த தேகம்) என்னும் சிவம் என்று கும்பிடுவார்கள். காலம் கடந்தப்போது அந்த எண்ணங்கள் மாறி போனது. இறுதிக்கு “சிவம்” என்னும் வார்த்தை **“ஷவமு” (பிணம்)** ஆனது. “சிவம்” ஷவமாக மாறியபோது பூர்வத்திலிருந்து பூஜைகள் முதலியன முறைகள் அப்படியே இருக்கின்றது. மேலும் அதன் உண்மையான அர்த்தம் இன்று மறைந்து போனது என்று தெரிகின்றது. கர்ம சேஷமாக முடிந்த யோகிகள் மறு ஜென்மத்திற்கு போகாமல் மூன்றாவது புருஷனான பரமாத்மாவில் ஐக்கியமாகிபோவார். அப்படிப்பட்டவர் மரணித்த நேரத்தில் தன் தேகம் விட்டு போகமாட்டார். தேகத்திலேயே சிவமில் ஐக்கியமாகி போவார்கள். அப்படிப்பட்ட தேகத்தை இறுதி நாளில் பூஜை செய்து மேலும் சமாதியில் வைத்து இப்போதும் புஜைகள் செய்யுவதும் பெரியோர் முடிவு. அப்படி செய்வதில் சாக்ஷத்து பரமாத்மாவை ஆராதனை செய்யும் பலன் இருக்கும் என்று அவர்களுக்கு தெரியும். ஷவம் விஷயத்தைப் பற்றி இப்போது நாம் சிறிது தெரிந்துக் கொண்டோம். அது ஷவம் அல்ல சிவம் என்று உண்மை தெரிந்தது. மேலும் ஷவத்தை ஒரு நல்ல அறிகுறியாக நினைக்க வேண்டும். எல்லோர் போல பீடை, பேய், என்று நினைக்கக்கூடாது. எந்த பூஜையிலும் கலந்துக் கொள்ளலாமல் போனாலும் பரவாயில்லை. ஷவத்தை

“சிவமாக” பாருங்கள். இறுதி சடங்கு செய்யாதவர்களுக்கு உதவி செய்யுங்கள். முஸ்லிம் மதத்தில் ஒன்றும் தெரியாதவர்களும் ஷவத்தை பார்த்தாலே வேலை எல்லாத்தையும் விட்டு போய் போட்டியாக ஷவ பெட்டியை தூக்குவது நாம் எல்லோரும் பார்த்துயிருப்போம். அதே கிறிஸ்துவ மதத்தில் மத குரு பைபிள் படித்துக் கொண்டு பக்தியாக இறுதி சடங்கு செய்வது பார்த்திருப்போம். எல்லாத்தை விட முதல் பிறந்த ஹிந்து மதங்களிலும் இஷ்டமில்லாமல் போனாலும் முருத்த தேகத்திற்கு ஸ்நானம் செய்து பொட்டு வைத்து அனுப்புகின்றார்கள். பக்தி ஞானம் தேய்ந்து போகின்றது. அர்த்தம் தெரியாத முறையில் பூஜை செய்து “சிவம்” என்னும் சொல்பவர் எல்லோரும் ஷவத்தை சிவமாக பார்த்து நிஜமான பக்தியில் இறந்து போனவனுக்கு அல்ல, அவனில் உள்ள கடவுளுக்கு என்னும் எண்ணத்தில் பூஜை செய்து இறுதி சடங்கு செய்ய வேண்டும். இறந்து போனவர் யோகியானாலும் அப்படிப்பட்ட தேகம் கிடைத்ததே அதிர்ஷ்டம் என்னும் நினைத்துக் கொண்டு, குறிப்பிட்ட இடத்தில் சமாதி செய்து, நித்திய (தினமும்) பூஜை செய்வது மிகவும் நல்லது. அப்படிப்பட்ட தேகம் சமாதி தெய்வ சக்தி நிலையமாக இருக்கும். அந்த சமாதிக்கு பூஜை செய்பவற்கு கர்மங்கள் எரிந்துப்போகும்.

## பிராணாயாமம்

ஜீவன் தேகத்தில் ஐந்து வாயுகள் இருக்கின்றது. அவற்றை பஞ்ச பிராணங்கள் என்று சொல்வார்கள். இந்த

ஐந்து வாயுகளுக்கு ஐந்து உப வாயுகள் இருக்கின்றது. அது இந்த ஐந்து வாயுகளிலே இருக்கும். பஞ்ச பிராணங்கள் என்னும் பெயர் கொண்ட இந்த ஐந்து வாயுகள் ஒன்று ஆகும்போது "பிராணாயாமம்" என்னும் சொல்வார். பிராணாயாமம் இரண்டு ரகமாக இருக்கின்றது. அந்த இரண்டு ரகம் எப்படி இருக்கின்றது என்றால்! ஜீவிகள் சுவாசியை உறிஞ்சுவதை நிரப்பி உள் இழுத்தம் (உச்சுவாசம்) என்னும், சுவாசையை வெளியே விடுவதை வெளியேற்ற சுவாசம் (நிச்சுவாசம்) என்னும், உள்ளே உறிஞ்சிய சுவாசையை வெளி விடாமல் உள்ளேயே அடைத்து வைப்பதை கும்பகம் என்னும் சொல்வார்கள். கும்பகமினால் சுவாசையை அடைத்து உள்ளே வாயுகள் அனைத்தையும் ஒன்றாக செய்வது ஒரு விதமான பிராணாயாமம். ஜீவன் கும்பித்த சுவாசையை நிறுத்தாமல் யோகத்தினால் சுவாசை தனக்கு தானே நின்று போய் உள்ளே உள்ள வாயுகள் எல்லாம் ஒன்று ஆகுவதை வேறு ஒரு விதமான பிராணாயாமம். இந்த இரண்டு விதங்களில் எது நடந்தாலும் பிராணாயாமம் என்னும் சொல்வார்கள். இரண்டு ரகம் பிராணாயாமத்தில் கும்பின்ச்சி சுவாசையை நிறுத்தும் முறை மிக அதிகமான கஷ்டமானது, மற்றும் ஆபத்தானது. இரண்டாவது முறை கஷ்டமில்லாதது, மேலும் ஆபத்துயில்லாதது. இரண்டு முறைகளை மூலத்திலிருந்து தெரிந்துக் கொள்ளலாம். ஒவ்வொரு மனிதன் தேகத்தில் பிரம்ம நாடிகள் இருக்கின்றது. அதனை முள்ளந்தண்டு வடம் என்னும் சொல்வார். பிரம்ம நாடி மூளையிலிருந்து ஆரம்பித்து முதுகிலிருந்த முள்ளந்தண்டு வழியாக குதவஸ்தானம் வரை

நீட்டிக்கப்படுகிறது. மூளையிலிருந்து கீழ் வரை நீட்டிக்கப்பட்ட பிரம்ம நாடியில் முக்கியமான நராஷிய மையம் ஏழு உள்ளது. இந்த நராஷிய மையங்களை சப்த ஸ்தானங்கள் என்னும், சப்த சக்கரங்கள் என்னும், சப்த கமலங்கள் என்னும் யோகிகள் சொல்கின்றார்கள். இந்த நராஷிய மையங்களே மனிதனை எல்லாம் வேலையும் செய்யும் படி செய்கின்றது. மற்றும் தேகம் உள்ளே இருக்கின்ற உறுப்புக்களையும், வெளியே உள்ள உறுப்புக்களையும் வேலை செய்யும் படி செய்கின்றது. இந்த நராஷிய மையத்திலிருந்து அமைந்து உள்ள நரம்புகளே நுரையீரலை சுருங்குவது விரிவது செய்கின்றது. நுரையீரல் சுருங்கியப்போது சுவாசை வெளியே போகின்றது அதனை நிச்சுவாசை என்று சொல்வார்கள். நுரையீரல் திறந்துயிருக்கும் போது சுவாசை உள்ளே நுழைகின்றது. அதனை உச்சுவாசை என்று சொல்கின்றார்கள். பிரம்ம நாடியில் நரம்பு மையங்கள் அங்குயிருந்து புறப்பட்டு வந்த நரம்புகள் நுரையீரலை ஆடவைக்கும், ஜீவனுக்கு உச்சுவாசை நிச்சுவாசைகள் நடக்கும் படி செய்கின்றது. ஜீவனுக்கு சுவாசை உள்ளே போய் வெளியே வந்தால் ஒரு சுவாசையாகும். சுவாசையை ஹம்ச என்னும் சொல்வார்கள். இப்படி ஒரு நாளுக்கு **21,600** சுவாசைகள் ஜீவனுக்கு நடக்கும். இந்த **21,600** சுவாசைகள் நடப்பதற்கு பிரம்ம நாடியில் உள்ள மையங்களே செய்கின்றது. அந்த மையங்கள் சுவாசைகளை எப்படி நடத்துகின்றது என்றால்! பிரம்ம நாடியில் ஏழு மையங்கள் இருக்கிறது அல்லவா! அதில் எல்லாத்தை விட கீழ் உள்ள மையங்களை ஆதாரகமலங்கள் என்று

சொல்கின்றார்கள். இந்த மையங்கள் குதவஸ்தானத்திற்கு சமமாக உள்ள முள்ளந்தண்டுல் பிரம்மநாடியில் உள்ளது. மேலும் **ஆதாரகமலம் (ஆதார சக்கரம்)** குதவஸ்தானத்தில் இருக்கின்றது என்னும் பெரியோர்கள் சொல்கின்றார்கள். இந்த ஆதார சக்கரம் என்பது நராஷிய மையத்திலிருந்து வந்த சில நரம்புகள் பக்கத்தில் உள்ள சூரிய சந்திர நாடியில் கலந்து நுரையீரலுக்குப் போய் இருக்கும். சூரிய சந்திர நாடி என்பது பிரம்ம நாடிக்கு இரண்டு பக்கத்தில் இரண்டும் இருக்கின்றது. பிரம்ம நாடிக்கு வலது பக்கத்தில் உள்ள நாடியை சூரிய நாடி என்னும், இடது பக்கம் உள்ள நாடியை சந்திர நாடி என்னும் பெரியோர்கள் சொல்லிக் கொண்டுயிருப்பார்கள். இவற்றை இட, பிங்கல நாடி என்னும் சொல்வார்கள். இவற்றை டாக்டர்கள் சிம்பதிடிக் மாலைகள் **(Sympathetic chains)** என்னும் சொல்வார்கள். கடைசியாக இருக்கின்ற ஆதார நராஷிய மையம் தன் நரம்பினால் நுரையீரலை சூரியோதையத்திலிருந்து **600** சுவாசைகள் கடந்தும் வரை நடக்கும். **600** சுவாசைகள் கடந்த உடனே தன் வேலையை நிருத்திக் கொள்ளும். அதன் பிறகு இரண்டாவது நராஷிய மையமாக இருக்கிறது அல்லவா! அந்த இரண்டாவது அதன் பெயர் **சுவாதிஷ்டானபத்மம் (சுவாதிஷ்டான சக்கரம்)** என்று சொல்வார்கள். இந்த மையம் பெண்களுக்கு யோனி பகுதிக்கு சரியாக, ஆண்களுக்கு லிங்க பகுதிக்கு சமமாக இருக்கின்ற முதுகெலும்பில் பிரம்ம நாடியில் இருக்கும். மேலும் சுவாதிஷ்டானம் சக்கரம் லிங்கம் இடத்தில் உள்ளது என்று

சொல்கின்றார்கள். இந்த சுவாதிஷ்டானம் சக்கரம் என்பது நராஷிய மையத்திலிருந்து போகின்ற சில நரம்புகள் பக்கத்தில் உள்ள சூரிய சந்திர நாடியில் கலந்து நுரையீரலுக்கு போய் இருக்கும். இரண்டாவது மையமான இந்த சுவாதிஷ்டான மையம் தன் நரம்பினால் நுரையீரலை முதல் மையம் வேலை முடித்துக் கொண்டது முதலில் **6000** சுவாசைகள் கடந்தும் வரை நடத்துக் கொண்டுயிருக்கும் **6000** சுவாசைகள் கடந்தப்பின் தன் வேலையை முடித்துக் கொள்ளும். அதன் பிறகு மூன்றாவது நராஷிய மையம் இருக்கிறது அல்லவா! அந்த மையம் பெயர் மணிபூரக்கபத்மம் (மணிபூரக்க சக்கரம்) என்னும் சொல்கின்றார்கள். இந்த மையம் நாபி (தொப்புள்) சமமாக இருக்கின்ற முதுகெலும்பில் பிரம்ம நாடியில் உள்ளது. மேலும் மணிபூரக்க சக்கரம் நாபியிடத்தில் இருக்கிறது என்று சொல்கிறார்கள். இந்த மணிபூரக்கபத்மம் என்பது நராஷிய மையத்திலிருந்து ஆரம்பமாகி நரம்புகள் சிலது பக்கத்திலிருந்த சூரிய சந்திர நாடிகளில் கலந்து நுரையீரலுக்கு போகும். மணிபூரக்கநரம்பு மையங்களில் தன் நரம்புகளில் நுரையீரலை இரண்டாவது மையம் தன் வேலையை செய்கின்றது முதலில் **6000** சுவாசைகள் முடிந்தப்பின் தன் வேலையை முடித்துக் கொள்ளும். அதன் பிறகு நான்காவது நராஷிய மையங்கள் இருக்கிறது அல்லவா! அந்த நான்காவது நராஷிய மையங்கள் பெயர் **அனாஹத்த நராஷிய மையம் அல்லது அனாஹத்த பத்மம் (அனாஹத்த சக்கரம்)** என்று சொல்கின்றார்கள். இந்த மையங்கள் இதயத்திற்கு

சரியாக இருக்கும் முதுகெலும்பில் பிரம்ம நாடியில் இருக்கிறது என்று சொல்கின்றார்கள். நான்காவது சக்கரம் அனாஹத்தம் மையத்திலிருந்து போகின்ற சில நரம்புகள் பக்கத்தில் உள்ள சூரிய சந்திர நாடியில் கலந்து நுரையீரலுக்கு போயிருக்கும். அனாஹத்த நரம்பு மையம் தன் நரம்பினால் நுரையீரலை மூன்றாவது மையம் தன் வேலை செய்கின்றது. முதலில் **6000** சுவாசை முடியும் வரை நடத்தும். **6000** சுவாசைகள் முடிந்தப்பின் தன் வேலையை முடித்துக் கொள்ளும். அதற்கு பிறகு ஐந்தாவது நராஷிய மையம் இருக்கிறது அல்லவா! அந்த ஐந்தாவது நராஷிய மையம் பெயர் **விசுத்தபத்மம் (விசுத்த சக்கரம்)** என்று சொல்கின்றார்கள். இந்த மையம் கழுத்து இடத்தில் சரியாக இருக்கின்ற முதுகெலும்பில் பிரம்ம நாடியில் இருக்கின்றது. விசுத்த சக்கரத்திலிருந்து போகின்ற சில நரம்புகள் பக்கத்திலுள்ள சூரிய சந்திர நாடியில் கலந்து நுரையீரலுக்கு போகும். விசுத்த நராஷிய மையத்தில் தன் நரம்பில் நுரையீரலை நான்காவது மையம் வேலையை செய்து முடித்துக் கொண்டது முதலில் **1000** சுவாசைகள் முடியும் வரை நடத்தும். **1000** சுவாசைகள் முடித்தவுடன் தன் வேலையை முடித்துக் கொள்ளும். அதன் பிறகு ஆறாவது நராஷிய மையம் இருக்கிறது அல்லவா! அந்த ஆறாவது நராஷிய மையம் பெயர் **ஆக்னேயபத்மம் (ஆக்னேய சக்கரம்)** என்று சொல்கின்றார்கள். இந்த மையம் புருவத்திற்கு நடுவில் சரியாக (பூ மத்திய ஸ்தானத்திற்கு சரியாக) தலையில் பிரம்ம நாடியில் உள்ளது. மேலும் ஆக்னேய சக்கரம் பூ மத்திய ஸ்தானத்தில் இருக்கின்றது என்று சொல்கின்றார்கள்.

ஆறாவது நராஷிய மையம் ஆக்னேய சக்கரத்திலிருந்து போகின்ற சில நரம்புகள் பக்கத்தில் உள்ள சூரிய சந்திர நாடியில் கலந்து நுரையீரலில் சேர்ந்து இருக்கும். ஆக்னேய நராஷிய மையம் தன் நரம்பினால் நுரையீரலை ஐந்தாவது சக்கரம் வேலை செய்து முடித்துக் கொண்டது. முதலில் 1000 சுவாசைகள் முடியும் வரை நடத்தும். 1000 சுவாசைகள் முடித்தவுடன் தன் வேலையை முடித்துக் கொள்ளும். அதன் பிறகு ஏழாவது நராஷிய மையம் இருக்கிறது அல்லவா! அந்த ஏழாவாது நராஷிய மையம் பெயர் **சஹஸ்ரபத்மம் (சஹஸ்ர சக்கரம்)** என்று சொல்கின்றார்கள். இந்த மையம் சிரசு (தலை) நடு பாகத்தில் உள்ளது. இந்த மையத்திலிருந்து போகின்ற சில நரம்புகள் பக்கத்திலுள்ள சூரிய சந்திர நாடியில் கலந்து நுரையீரலில் சேர்ந்து இருக்கும். ஏழாவது நராஷிய மையம் சஹஸ்ரபத்மம் தன் நரம்பினால் நுரையீரலை ஆறாவது மையம் வேலையை செய்து முடித்துக் கொண்டது. முதலில் 1000 சுவாசைகள் நடத்தும் வரை நடத்தும். 1000 சுவாசை முடித்தப்பின் மறுபடி முதல் மையம் ஆதார சக்கரம் நுரையீரலை நடத்துவதற்கு ஆரம்பிக்கும். அதன் பிறகு இரண்டாவது மையம் நுரையீரலை நடத்திக் கொண்டுயிருக்கும். ஏழாவது மையம் முடிந்தப்பின் முதல் மையம் வேலை ஆரம்பிக்கும். மேலும் எல்லாம் நேரத்திலும் சுவாசைகள் நடந்துக் கொண்டுயிருக்கும். எல்லாம் சக்கரம் கலந்து மொத்தம் 21,600 சுவாசைகள் நடத்திக் கொண்டுயிருக்கும். சூரியோதயத்திலிருந்து எல்லாம் சக்கரம் வேலை செய்வதற்கு மறுபடி சூரியோதயம் வருகின்றது.

மேலும் ஒரு நாளுக்கு **21,600** சுவாசைகள் நடக்கின்றது என்று தெரிகின்றது. சில கிரந்தங்களில் உள்ளேயிருந்தாலும் சக்கரங்களுக்கு சுவாசை பிரதக்ஷனை செய்து வரும் என்று எழுதினார்கள். சுவாசை சக்கரங்களிடம் போய் பிரதக்சனை செய்து வரும் என்னும் வார்த்தை பொய்யானது. சுவாசை சக்கரங்களுக்கு பிரதக்சனை செய்து வரும் என்னும் டாக்டர்கள் கேட்டவுடன் இந்த வார்த்தை பொய் என்று சொல்கின்றார்கள். இதனுடன் உடல் பரிசோதனை செய்யும் டாக்டர்கள் பிரம்ம வித்தை எல்லாம் பொய் என்னும் நினைக்கும் நிலை ஏற்பட்டது. இந்த விஷயத்தில் பிரம்ம வித்தையில் அனைத்து பரிசோதனை செய்யாதவர் முதல் ஒருவர் சொல்லியப்போது அதே வார்த்தை எல்லோரும் சொல்லிக் கொண்டு போனார்கள், மேலும் சுவாசை எங்கேயோ போய் வருகின்றது என்று தெரிவித்தார்கள். எங்கேயோ போய் வரும் என்னும் வார்த்தை பொய்யானது. சுவாசை நுரையீரல் வரை போய் வரும் என்னும் தெரிந்துக் கொள்ள வேண்டும். பிரம்மவித்தையை பரிசோதனை செய்யாமல், முடிவுகளை கண்டுபிடிக்காமல் போனாலும், யாரோ ஒருவன் சொல்லும் வார்த்தையை பிடித்துக் கொண்டு எல்லோரும் அதே வார்த்தையை சொல்லிக் கொண்டுப்போனார்கள். இது நிஜம் தானா? பொய் தானா என்னும் சிறிதுக்கூட நல்லது கெட்டது எது யோசனை செய்யாமல் சாதனைனால் தெரிந்துக் கொள்ள வில்லை. அப்படிப்பட்டவர் குண்டலி சக்தி பாம்பு போல் இருக்கிறது என்னும், அது தூங்குகின்றது என்னும், ஸ்பிரிங்கு போல் உருவத்தில் நாபி இடத்தில் இருக்கிறது என்னும் பல விதமாக

சொல்கின்றார்கள். அவர் சொல்கின்றது உண்மை தானா என்னும் அவர்களுக்கு தெரியாமல் போனாலும் தெரிந்தவர்கள் சொல்லினாலும் அவர் வார்த்தை கேட்காமல் உண்மையாக பார்த்தது போல் வாதிக்கின்றார்கள். வார்த்தைகள் பல விதமாக பழகி வாதிப்பதில் கெட்டிகாரர் என்னும், எத்தனையோ பேர் இடம் புகழ்கள் கொண்டு, உண்மை தெரியாதது ஒன்றும் பிரயோஜனமில்லை. பரமாத்மா நம் வாதனைகளை ஒப்புக் கொள்ள மாட்டார். மேலும் ஒவ்வொரு விஷயங்களை நீங்கள் தெரிந்துக் கொண்டால் எவ்வளவோ நன்றாக இருக்கும். அவர் சொல்லினார், இவர் சொல்லினார் என்னும் அவர் போலவே நம் சொல்லிக் கொண்டுப் போனால், ஒரு ஆடு கிணற்றில் குதித்தால் மற்ற ஆடுகள் கிணற்றில் குதித்ததுப்போல் இருக்கும். மேலும் குண்டலி சக்தி என்றால் என்ன? அதற்கு உருவம் இருக்கின்றது? அதற்கு தூக்கமும் முழிப்பும் நமக்கு இருப்பதுப் போல் இருக்குமா? என்னும் கேள்விக்கு சரியான பதில் தெரிந்துக் கொள்ளுங்கள் என்று வேண்டிக் கொள்கிறேன். பிரம்ம நாடியில் மொத்தம் ஏழு மையங்கள் இருக்கின்றது அல்லவா! அதில் ஏழு மையங்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு சக்தியாக இருக்கும். அந்த சக்திகள் சில பேர் தேவதைகள் சக்திக்கு சமமாக உள்ளது. மேலும் பெரியோர்கள் அந்த அந்த சக்கரத்தில் அந்த அந்த தேவதைகள் இருக்கின்றார்கள் என்று தெரிவித்தார்கள். ஏழு மையங்களில் உள்ள சக்தி குண்டலியே **“குண்டலி சக்தி”** என்னும் சில பெரியோர் சொல்லிக் கொண்டுயிருக்கின்றார்கள். சிலர்கள் அஞ்ஞானம் உள்ளவர் குண்டலி சக்தி தூங்குகின்றது, அதனை தூக்கத்திலிருந்து எழுப்ப வேண்டும்

என்று சொல்கின்றார்கள். ஏழு மையத்தை கலந்துயிருப்பதை குண்டலி என்னும் சொல்லப்படுகின்றது. அந்த குண்டலி சக்தி எப்போதும் நுரையீரலை ஆடும் வேலை செய்து, மற்றும் தேகத்தில் சில வேலைகளை செய்வதற்கு லக்னமாகி, எப்போதும் வேலை செய்கின்றப்போது எப்படி தூங்குவது என்று சொல்ல முடியும். ஏழு மையங்கள் உணர்வு (குண்டலி) நியாபகத்தில் இல்லாமல் போய் மறப்புக்கு (தூக்கத்திற்கு) போன ஜீவன் மரணம் அடையுவான். சுயமாக பரிசோதனை செய்யாத பக்தர்கள் சிலர் தவறாக குண்டலி சக்தியை வேறு ஒரு விதமாக நினைத்துக் கொண்டு அவஸ்தைப்படுகின்றார்கள். குண்டலி சக்தி என்பது பிரம்ம நாடியில் சைதன்ய சக்தி, அதுவே ஆத்மசக்தி பிரம்மநாடி ஏழு பாகமாக யோக வித்தையில் பிரிந்து உள்ளது. அதில் ஏழு பாகங்களில் வரை இருக்கும் சைதன்ய சக்தியை குண்டலி சக்தி என்னும் அழைக்கின்றோம். ஏழாவது மையத்தில் சக்தி இல்லாமல் போனால் ஆறு மையத்திலும் சக்தியில்லாமல் போகும். ஏழாவது மையத்தில் உள்ள சக்தி எந்த தேவதை சக்திக்கும் சமமானது அல்ல. ஏழாவது மையத்தில் உள்ள சக்தியை தெரிந்துக் கொண்டவர்கள் யோகிகள். பிரம்ம நாடியில் போகின்ற சில நரம்புகள் பக்கத்தில் உள்ள சூரிய சந்திர நாடியில் போய், அங்குயிருந்து நுரையீரலுக்கு போய் நுரையீரலை ஆடும் படி செய்கின்றது. இந்த விதமாக ஆடும் சுவாசைகளை மனிதன் இரண்டு முறையினால் நிறுத்துகின்றான் என்றால் அசையாத இருக்கின்ற உறுப்புகளை ஆடும் படி செய்யும் சக்தியை ஒரு யோகிகளுக்கும் மட்டும் முடியும்.

யோகிகளுக்கு சுவாசை இரண்டு முறையால் எப்படி நிற்க்கின்றதோ தெரிவிக்கிறேன். சுவாசையை இழுத்து நிறுத்தி மனசுவை பிரம்ம நாடியில் சேர்க்க வேண்டும் என்னும் நினைத்த யோகி, ஒரு இடத்தில் அசையாமல் உட்கார்ந்துயிருந்து முதலில் சுவாசையை நுரையீரலில் எங்கும் காலியில்லாமல் உறிஞ்ச வேண்டும். உறிஞ்ஜிய சுவாசையை வெளியே விடாமல் மூன்று அல்லது நான்கு நிமிடம் இருக்கும். இப்படி இருந்த பிறகு மற்றும் வெளி காற்றை உள்ளே இழுப்பார். இங்கு கவனிக்க வேண்டிய விஷயம் முதல் நுரையீரல் காலியில்லாமல் காற்று இழுத்தான் அல்லவா காலியில்லாத நுரையீரலில் மறுபடி காற்று எப்படி நுழைந்தது என்று சந்தேகம் வரும். அதற்கு பதில் முதலில் காலியில்லாத நுரையீரலில் மூன்று நான்கு நிமிடங்கள் பிறகு சிறுது காலி ஏற்படும். அந்த காலியிடம் எப்படி ஏற்ப்பட்டது என்றால் நுரையீரலில் உள்ள காற்று மூன்று நான்கு நிமிடங்களுக்கு வெளியே வர வேண்டும் என்று முயற்சி செய்யும். மற்றும் வெளியே வராமல் நிறுத்திக் கொண்டதினால் கழுத்து வழியினால் சிறிதாக வயிற்றில் சேர்ந்து இருக்கும், நுரையீரலில் உள்ள மூலைகளுக்கு காற்று சேர்ந்ததினால் நுரையீரலில் சிறிதாக காலி ஏற்பட்டு இருக்கும். அந்த காலி முழுமையாக ஆகும் படி இரண்டாவது தடவை யோகி வெளி காற்றை இழுத்து நிறைக்கின்றார். இப்படி இரண்டாவது தடவை காற்று இழுத்த யோகி மூன்று அல்லது நான்கு நிமிடங்கள் வரை சுவாசையை வெளியே விடாமலிருந்து, பிறகு இன்னும் தன்னில் காற்று நுழையுமோ

என்னும் மூன்றாவது தடவை சுவாசிப்பார். அப்போது காற்று சிறிதாக உள்ளே போகும். இப்படி இரண்டு மூன்று தடவை சுவாசையை இழுத்து வயிற்றில் நுரையீரலில் காற்றை நிறைத்து வைத்துக் கொண்டு வெளியே விடாமல் முயற்சி செய்து நிறுத்திக் கொள்ளுவார். இதனை **"கும்பகம்"** என்று சொல்வார்கள். இந்த விதமாக நிறுத்திக் கொண்ட காற்றை பந்தில் இருப்பதுப்போல் இருக்கும்.

1.காற்றின் மூலம் செய்துக் கொண்டு ஆடுகின்ற நுரையீரல் காற்று அசையாமல் நின்ற உடனே நின்று போகின்றது.

2.நுரையீரல் நின்ற உடனே நுரையீரலை நடத்தும் நரம்பில் சைதன்யம் கூட நின்று போகும்.

3.நரம்பில் சைதன்யம் நின்ற உடனே அந்த நரம்பில் சம்மந்தம் உள்ள சூரிய சந்திர நாடியில் உள்ள சைதன்யம் நின்று போகும்.

4.சூரிய சந்திர நாடியில் சைதன்யம் நின்ற உடனே சூரிய சந்திர நாடியில் ஆதாரமாக செய்துக் கொண்டு அசைந்துக் கொண்டுயிருந்த மனசு அசையாமல் நின்று போகும்.

5.மனசு நின்ற உடனே மனசு ஆதாரமாக செய்துக் கொண்டு ஜீவிகள் தேகங்களை நடத்திக் கொண்டுயிருந்த ஆறு மையத்தில் சைதன்ய சக்தி நின்று போகும். என்றால் குண்டலி சக்தி ஆட்டம் நின்றது. நரா மையங்களுக்கு சைதன்யத்திற்கு ஆதாரமாக இருந்த ஏழாவது மையம் ஒன்று தன் சக்தியை இழக்காமல் இருக்கும். ஆறு மையங்கள் சைதன்ய சக்தி நின்று போனாலும் ஏழாவது மையங்களில் உள்ள சைதன்ய சக்தி (ஆத்மா சக்தி) நிற்காமல் இருக்கும். ஏழாவது மையங்களில் உள்ள சக்தி மகத்தானது,

எதிர்பாராதது, சொல்வதற்கு முடியாதது, அதனை ஆத்மா என்னும் யோகிகள் சொல்கின்றார்கள். இந்த ஏழாவது மையத்தில் உள்ள சைதன்யம் ஜீவனுக்கு தூக்கம், முழிப்பு, கனவிலும் சமமாகயிருக்கும். அதனால் தான் எழாவது மையத்தில் உள்ள சைதன்யம் மூன்று நிலையில் சாட்சியாக உள்ளது என்று சொல்லலாம். கும்பகத்தினால் நின்ற மனசு பிரம்ம நாடியில் ஏழாவது மையத்தில் அதில் சேர்ந்து விடும். மனசுவுடன் அந்தர்கரனமான ஜீவனும் கூட ஏழாவது மையத்தில் சேர்ந்து ஆத்மாவில் சேர்ந்துவிடுவான். ஜீவன் ஆத்மாவில் சேர்வது **"யோகம்"** என்னும் சொல்கின்றார்கள். கும்பகத்தை பூர்வம் யோகியான ஸ்ரீவிரபிரம்மம் அவர் பாட்டு வடிவத்தில் ஒரு தத்துவமாக சொல்லி உள்ளார். குண்டலி சக்தியை வேறாக அர்த்தம் செய்துக் கொண்டவர்கள், குண்டலி சக்தி தூங்கிக் கொண்டுயிருக்கின்றது என்னும் சொல்லியவர்கள் இருப்பதினால் அந்த தத்துவத்திற்கு அர்த்தமே தெரியாமல் போய், இறுதிக்கு பிச்சைகாரர்கள் பாடுவதற்கு உபயோகப்படுகின்றது. குருடனுக்கு வைரம் கிடைத்தாலும் பயன் இல்லாதது போல் ஸ்ரீவீரப்பிரம்மம் அவர் எவ்வளவோ ஞானத்தை உபயோகித்து சொல்லிய வார்த்தையை தெரியாத நாம் பயன் இல்லாமல் செய்கின்றோம். குண்டலியை பெரியதாக வைத்துக் கொண்டவர்கள் மற்றும் கேட்டவர்கள், ஸ்ரீபோத்துலுரி வீரப்பிரம்மம் அவர் சொல்லிய கீழ் தத்துவங்களை தெரிந்துக் கொள்ளுங்கள் என்று தெரிவிக்கின்றேன். ஆஹா பிரம்மாண்டமானது ஆதிமந்திரம் நம் பிரம்மம் அவர் சொல்லியது பெரிய மந்திரம்.

1.ரக்கை முக்குயில்லாத பறவை இரவும் பகலும் தபசு செய்து ஒரு ஏரி மீன்கள் அனைத்தையும் ஒரே தடவை முழுங்கியது "ஆஹா"

2.வீட்டு பின்புறம் துட்டே புலுவு வீட்டில் உள்ள எல்லோரையும் முழுங்கியது, பார்க்க வந்தவர்களையும் பார்த்து முழுங்கியது. "ஆஹா"

3.கால் கை இல்லாதவன் சிறிய பானை கையில் வைத்து நிறைந்த கிணறு தண்ணீர் எல்லாம் ஒருவனே மோன்டுவான். "ஆஹா"

4.ஏரி மீது வெள்ளை கொக்கு வேட்டையாடிக் கொண்டு வருகையில் பக்கத்தில் உள்ள மீன் குஞ்சை அப்படியே முழுங்கியது. "ஆஹா"

5.சொல்லினார் வீரதாஸ்சு கேள்வியாக ஆத்மா தத்துவங்கள், பெரியவர் இதனை விவரித்து சொன்னால் போதும் "ஆஹா"

இதன் அர்த்தம் என்னவென்றால் :- பெரிய மந்திரம் பிரம்மம் அவர் சொல்லியது. அந்த மந்திரம் நம் சுவாசை தான். சுவாசை உள்ளே நுழைந்தப்போது "சோ" என்னும் சப்தத்தில், வெளியே வந்தப்போது "ஹம்" என்னும் சப்தத்தில் நடக்கின்றது. இந்த இரண்டு சப்தம் கலந்து "சோஹம்" என்னும் சப்தம் ஏற்பட்டது. இந்த சப்தம் மஹிமை கொண்டதினால் இதனை மந்திரம் என்று சொல்லினார். மற்றும் எழுத்துகள் கூடி உள்ளதினால் மந்திரம் என்று சொல்லப்படுகின்றது. "சோஹம்" என்னும் மந்திரம் ஆதிமந்திரமாக மாறுகின்றது. அது எப்படி இருக்கின்றது என்றால்! "சோ" என்னும் சப்தமில் இறுதியாக "ஓ" என்னும்

சப்தம் உள்ளது. “ஹம்” என்னும் சப்தமில் இறுதியில் “மம்” என்னும் சப்தம் உள்ளது. ஒரு தடவை சுவாசை உள்ளே போய் வெளியே வந்தால் “சோஹம்” என்னும் மந்திரம் ஏற்படுகின்றது. அந்த சோஹம் மந்திரத்திலேயே “ஓம்” என்னும் சப்தம் இருக்கின்றது. மேலும் “சோஹம்” தாய் “ஓம்” குழந்தை. உலகம் பிறப்பில் முதலில் பிறந்த சப்தம் மேலும் இதனை ஆதிமந்திரம் என்று ஏற்பட்டது.

**1)ரக்கை மூக்குயில்லாத பறவை இரவு பகலும் தபசு செய்து ஒரு ஏரி மீன்கள் அனைத்தையும் ஒரே தடவை முழுங்கியது.**

1)மூக்கு தூவாரத்தில் நுழையும் சுவாசைக்கு உருவமில்லை என்னும் ரக்கை மூக்கு இல்லாத பறவை என்று சொல்லினார். சுவாசை இரவும் பகலும் விடாமல் சோஹம் என்னும் மந்திரத்தை ஜெபிக்கின்றது. மேலும் பறவை இரவும் பகலும் தபசு செய்கின்றது என்று சொல்லினார். இந்த சுவாசை தேகத்தில் நுழைந்து கும்பகத்தினால் நின்று தேகத்தில் உள்ளே அசைவுகளை (சைதன்யங்களை) எல்லாத்தையும் நிறுத்தி விடுகின்றது. மேலும் ஏரியில் பல விதமாக அசைகின்ற மீன்களை எல்லாத்தையும் முழுங்கியது என்று சொல்லினார்.

**2)வீட்டு பின்புறம் துட்டே புலுவு விட்டில் உள்ள எல்லோரையும் முழுங்கியது, பார்க்க வந்தவர்களையும் பார்த்து முழுங்கியது.**

2)சுவாசை எப்போதும் “சோஹம்” என்னும் சப்தம் செய்கின்றது மேலும் ‘கீ’ என்னும் கத்தும் துட்டே புலுவாக சொல்லினார். சுவாசைக்கு ஆதாரம் தேகத்தில்

காணாமல் இருந்த பிரம்ம நாடியில் உள்ள சைதன்யம். மேலும் வீட்டு பின்புறம் துட்டே புலுவு என்னும் சொல்லினார். வீடு என்றால் தேகம். சுவாசை கும்பகத்தினால் தேகத்திலுள்ள வியான, சமான, உதான, பிராண, அபான வாயுகள் அனைத்தும் கைப்பற்றப்பட்டது. மேலும் வீட்டிலுள்ள எல்லோரை முழுங்கியது என்று சொல்லினார். சுவாசை கும்பித்தப்பிறகு நுரையீரல் இரண்டு அல்லது மூன்று தடவை சிறிதாக வெளி காற்று உள்ளே நுழைந்து, நுழைந்த காற்று வெளியே வராமல் நின்றதால் பார்க்க வந்தவர்களை பார்த்து முழுங்கியது என்று சொல்லினார்.

**3) கால் கை இல்லாதவன் சிறிய பானை கையில் வைத்து நிறைந்த கிணறு தண்ணீர் எல்லாம் ஒருவனே மோன்டுவான்.**

3) சுவாசைக்கு உருவமில்லாததால் மேலும் கால் கை இல்லாதவன் என்று சொல்லினார். சுவாசை மூக்கு தூவாரத்தில் ஒரு தூவாரத்தில் அதிகமாக ஒரு தூவாரத்தில் குறைவாக உள்ளே வெளியே சுற்றுகின்றது, அதிகம் சுவாசை பானை என்னும் குறை சுவாசை சிறிய பானை என்று ஒப்பிட்டு சொல்லினார். மேலும் சிறிய பானை கையில் வைத்து என்று சொல்லினார். தேகத்தில் உள்ளே நடக்கின்ற வேலைகள் அனைத்தும் சுவாசை ஒன்று நின்றதால் நின்று போகின்றது. மேலும் கிணறு தண்ணீர் எல்லாம் ஒருவனே மோன்டுவான் சொல்லினார். தேகத்தை கிணறாக ஒப்பிடப்பட்டது.

**4)ஏரி மீது வெள்ளை கொக்கு வேட்டையாடிக் கொண்டு வருகையில் பக்கத்தில் உள்ள மீன் குஞ்சை அப்படியே முழுங்கியது**

4)சுவாசை தேகத்தில் நின்றதினால் நுரையீரல் பிறகு நரம்புகள், அதன் பிறகு சூரிய சந்திர நாடிகள், ஷட் (7) சக்கரங்கள் ஒன்று பிறகு ஒன்று அது அது சைதன்யத்தை (சக்தியை) இழந்து விடுகிறது. மேலும் ஏரி மீது வெள்ளை கொக்கு வேட்டையாடி வருகின்றப்போது என்று சொல்லினார். ஒன்று பிறகு ஒன்று சைதன்யத்தை இழந்தாலும், இறுதியில் உள்ள ஏழாவது மையம் சுவாசை நிறுத்திக் கொண்டதினால் தன் சக்தியை இழக்காமல் நின்றதினால், எல்லாம் சைதன்யத்தை நிறுத்திய சுவாசை ஏழாவது மையத்திற்கு வந்து தன் சக்தி குறைந்து நின்றதினால், பக்கத்தில் உள்ள மீன் குஞ்சு கொக்கை முழுங்கியது என்று சொல்லினார். இப்படிப்பட்ட தத்துவங்கள் பிராணாயாமம் பற்றி எத்தனையோ பெரியோர்கள் சொல்லி உள்ளார். மேலும் இன்று மக்கள் அவற்றுக்கு சரியான அர்த்தம் தெரிந்துக் கொள்ளாமல் ஜென்மத்தை வீண் செய்துக் கொண்டார்கள். காற்று தத்துவமில் ஆகாசம் தத்துவத்தில் கலந்து மனசு பிறந்தது. மேலும் மனசு சுவாசைக்கு ஒருங்கினைந்த உறவு உள்ளது. சுவாசை நின்றால் மனசு நிற்கும், அல்லது மனசு நின்றால் சுவாசை நிற்கும். சுவாசை நின்ற பின் மனசு நிற்பதை கும்பகம் என்று சொல்வார்கள். கும்பகம் நடைமுறை தாரக்கயோகத்திற்கு சம்மந்தப்பட்டது. மனசு நின்றப்பிறகு சுவாசை நிறுத்துவதை பிராணாயாமம் என்று சொல்லலாம். மேலும் இந்த நடைமுறை அமனஸ்கயோகத்திற்கு சேர்ந்தது. அமனஸ்க முறையினால் யோகிகள் பிராணாயாமம் எப்படி செய்கின்றார்கள் என்றால்:- யோகி அசையாமல் உட்கார்ந்து மனசை முயற்சியினால்

ஆலோசனை இல்லாமல் செய்யும். பிரம்ம நாடியில் நரமையத்தில் சைதன்யத்தை மனசை அசையும் படி செய்யும். மனசு அசையாமல் நின்றவுடனே மனசு இடத்தில் சூரிய சந்திர நாடிகள் தன் சைதன்யத்தை இழந்து விடும். சூரிய சந்திர நாடி நடுவில் உள்ள பிரம்ம நாடியில் மனசு நுழைகின்றது. மனசு பிரம்ம நாடியில் நுழைந்தவுடனே பிரம்ம நாடியில் உள்ள நரமையங்கள் தன் சைதன்யத்தை இழந்து விடுகின்றது. இப்படி மனசு நின்றதினால் சூரிய சந்திர நாடிகள், பிரம்ம நாடி ஆறு மையங்கள் தன் சக்தியை இழந்து விடுகின்றது. சுவாசை நடத்தும் சக்தி சூரிய சந்திர நாடியின் மீது பிரம்ம நாடி ஆறு மையங்களுக்கு உள்ளது. அதனால் இந்த மையங்கள் எல்லாம் நின்றவுடனே சுவாசையும் நின்று விடும். இந்த விதமாக சில யோகிகள் மனசுனால் சுவாசையை நிறுத்துகின்றார். இதனினால் பிராணாயாமம் இரண்டு விதமாக உள்ளது என்னும், **ஒன்று தாரக்க முறை, இரண்டாவது அமனஸ்க்க முறை** என்று சொல்லலாம். சுவாசைக்கு மனசுக்கு சூரிய சந்திர நாடியினால் சம்மந்தம் உள்ளது. அதனால் தான் மனசு நின்றப்போது சுவாசை நிற்கின்றது என்று சொல்கின்றோம். இங்கு சிலருக்கு ஒரு சந்தேகம் வரலாம். தூக்கத்தில் மனசு நிற்கின்றது அல்லவா! அப்போது சுவாசை கூட நிற்க வேண்டும் அல்லவா! அப்படியாகாமல் சுவாசை சாதார்ணத்தை விட தூக்கத்தில் அதிகமாகின்றது. இதனின் பொருத்து மனசு நின்றாலும் சுவாசை நிற்கும் என்னும் எப்படி சொல்ல முடியும்? என்று கேட்கலாம். அதற்கு எங்கள் பதில் தூக்கத்தில் மனசு தனக்கு தானே பிரம்ம நாடியில் நிற்கின்றது. மேலும் சூரிய

சந்திர நாடிகள் தன் சைதன்யத்தை இழக்காமல், மனசு அந்த நாடிகள் மீது இல்லாமல் இருப்பதினால் சுகந்திரமாக தன் இஷ்டம் போல் சுவாசையை நடத்தும். மனசு சூரிய சந்திர நாடிகள் மீது இருக்கும் போது சுவாசை மனசை அனுசரித்து நடக்கும். இப்போது ஜீவனுக்கு தெரியாமலே மனசு தனக்கு தானே பிரம்ம நாடியில் இணையுமோ அப்போது சுவாசை மனசை அனுசரித்து சுற்றாமல் தன் இஷ்டம் வந்ததுப்போல் நடப்பதற்கு ஆரம்பிக்கும். அதனால் தான் சிலர்களுக்கு தூக்கம் வந்த உடனே சுவாசை அதிகமாக வரும். யோகத்தில் அப்படியாகாமல் மனசு ஜீவன் முயற்சியில் பிரம்ம நாடியில் கலந்துப்போகின்றது. யோகத்தில் ஷட்சக்கரங்கள் (7) தன்னுடைய சைதன்யத்தை இழக்கின்றது, சூரிய சந்திர நாடிகளும் தன் சைதன்யத்தை இழந்து தன்னால் ஆடும் சுவாசைகளுக்கு பலமில்லாமல் போனது. யோகத்திற்கு தூக்கத்திற்கு அதிக வித்யாசம் உள்ளது. தூக்கம் அஞ்ஞானத்திற்கு சம்மந்தப்பட்டது. யோகம் ஞானத்திற்கு சம்மந்தப்பட்டது. தூக்கத்தில் ஜீவன் தன்னை மறந்துப்போவான். யோகத்தில் ஜீவன் தன்னை தெரிந்துக் கொள்ளுவான். தூக்கத்தில் ஞானசக்தி தேகத்தில் நுழையாது. யோகத்தில் ஞானசக்தி தேகத்தில் நுழையும். தூக்கத்திற்கு யோகத்திற்கு ஒரு சுவாசை தவிற மேலும் தேகத்தில் பல காரியங்களில் வித்தியாசம் உள்ளது. ஓவ்வொரு மனிதனுக்கு சுவாசை மூக்கு துவாரத்திலிருந்து சாதாரணமாக 12 இன்ச்கள் போகும். யோக சாதனையினால் மனசு சிறிது நின்றவர்களுக்கு சுவாசை 12 இன்ச் வெளியே வராமல்

சில இன்ச்கள் மட்டும் வந்துப்போகும். மனசு நின்றுக் கொண்டுயிருக்கும்போது சுவாசை வேகம் குறைந்து விடும். மனசு முழுமையாக நின்றால் சுவாசை எந்தளவும் வெளியே வராமல் நின்றுப்போகும். அப்படியே மனசு நகரும்போது சுவாசை வேகம் அதிகமாகும் மனசு அதிக வேகம் நடக்கும்போது சுவாசை **12** இன்ச்யிலிருந்து **18** இன்ச்கள் வரை வந்துப்போகும். மனிதன் ஆயுஷ் சுவாசை மீது நிர்ணயிக்கப்படும். சுவாசை மீது கால, கர்ம சக்கரங்கள் திட்டம் பொறுத்து இருக்கின்றது நாம் நொடிகளினால் நிமிடங்கள், நேரத்தை அடையாளித்து, பரமாத்மா சுவாசைனால் ஜீவனுக்கு காலத்தை, கர்மத்தை அடையாளிக்கும். நம் ஒரு தீர்மானிக்கப்பட்ட சுவாசியை ஒரு சுவாசை (ஒரு ஹம்ச) என்னும் அடையாளிக்கலாம். பரமாத்மா பார்வையில் ஜீவன் நாசிக (மூக்கு) துவாரம் அகலத்திற்கு **24** மடங்கு அதிகம் நீளம் கொண்ட மூச்சை ஒரு சுவாசை என்று சொல்கின்றோம். அதனால் தான் மனிதர்களுக்கு சாதார்ணமாக **12** இன்ச் சுவாசை ஆடும் என்று சொல்லலாம். இங்கு சிலருக்கு **"மனிதன் மூக்கு துவார அகலம் 24 மடங்கு அதிகம் என்று எந்த ஆதாரத்தில் சொல்ல முடியும்"** என்னும் சந்தேகம் வரலாம். அதற்கு பதில், நம் தலையில் கால கர்ம சக்கரங்களுக்கு பாகத்திற்கு மனிதன் மூக்கு துவாரத்திற்கு சம்மந்தம் இருக்கிறது. மேலும் அப்படி சொல்ல முடியும். மனிதனில் மூக்கு துவாரத்தை அனுசரித்து **12** இன்ச் என்று சொல்லலாம். யானை மூக்கு துவாரத்தை அனுசரித்து ஆறு அடி நீளம் உள்ள சுவாசையை ஒரு சுவாசையாக கணக்கிட முடியும், அப்படியே

ஈ மூக்கு சுவாசையை அனுசரித்து அதற்கு ஒரு சுவாசை இருக்கின்றது என்று சொல்லலாம். இந்த சூத்திரம் பிரகாரம் எந்த தேகத்திலுள்ள ஜீவனுக்காவது சுவாசையை நிர்ணயித்து சொல்லலாம். யோக சாதனையினால் சுவாசை நீளம் **12** இன்ச்யிலிருந்து ஒரு இன்ச் வரை குறைக்கலாம் மற்றும் நிறுத்திவிடலாம். மனிதனுக்கு **12** இன்ச் சுவாசை 21,600 தடவை வெளியே வந்துப்போனால் பரமாத்மா பார்வையில் ஒரு நாளாக ஜீவனுக்கு கணக்கிடப்படுகின்றது. யோக சாதனையினால் ஒரு இன்ச் சுவாசை ஆடினால் **11** இன்ச் சுவாசை மீதியாகின்றது அல்லவா! ஒரு இன்ச் சுவாசை **21,600** தடவை வெளியே வந்துப்போனாலும் பரமாத்மா பார்வையில் ஒரு நாளாக கணக்கிடப்படாது. கால கர்ம, சக்கரத்தில் சுற்றுவதும் **11** தடவை குறைந்து விடும். சாதாரண மனிதனுக்கு **12** இன்ச் சுவாசை **21,600** தடவை ஆடினால் ஒரு நாள் கணக்கிடபட்டாலும், யோக சாதனை செய்யும் மனிதனுக்கு ஒரு இன்ச் சுவாசை **21,600** ஆடினாலும் ஒரு நாளாக கணக்கிடாமல் **12** நாளுக்கு ஒரு நாள் முடிந்தது என்று கணக்கிடப்படும். மேலும் மனிதன் ஆயுள் ஏறுவதற்கு குறைவதற்கு சுவாசை மீது பொருத்து இருக்கும். சில பேர் யோகிகள் சுவாசை முழுமையாக அடைத்து ஆயுள் வளர்த்திக் கொண்டவர் பூர்வம் அதிகமாக இருந்தார்கள். பிராரப்தத்தை அனுசரித்து ஜீவனுக்கு (மனிதனுக்கு) சில சுவாசைகள் பரமாத்மா நிர்ணயித்து இருப்பார். நிர்ணயிக்கப்பட்ட சுவாசையில் ஒவ்வொரு நாளும் **21,600** சுவாசைகள் செலவாகிவிடும். இப்படி செலவாகிப்போய் நிர்ணயிக்கப்பட்ட சுவாசைகள் எல்லாம் முடிந்தப்பின் ஜீவன்

தேகத்தை விட்டு போவான். சில பேர் ஞானிகள் பிராணாயாமமினால் சுவாசை ஒரு நாளுக்கு குறைவாக செலவு செய்துக் கொண்டு, அதனினால் ஆயுள்ளை அபிவிருத்தி செய்துக் கொண்டார்கள். அது எப்படி என்றால் ஒரு சின்ன உதாரணம் சொல்கிறேன். மனிதனுக்கு பிராரப்தத்தை அனுசரித்து **31,53,60,000** சுவாசைகள் நடக்கும் வரை ஜீவன் தேகத்தில் இருக்கும் படி கர்ம நிர்ணையம் இருக்கும். ஒரு நாளுக்கு **21,600** சுவாசைகள் நடந்தால் **31,53,60,000** சுவாசைகள் முடிவதற்கு **40** வருடம் காலம் பிடிக்கும். அதனால் அவன் ஆயுள் **40** வருடம் என்று சொல்லலாம். மேலும் அந்த மனிதன் **20** வருடம் வயதிலிருந்து பிராணாயாமம் செய்யுவது ஆரம்பித்தார். ஒவ்வொரு நாளும் **2** மணி நேரம் பிராணாயாமம் செய்துயிருந்தார். அந்த **2** மணி நேரம் சுவாசை ஆடாமல் **2** மணி நேரத்திற்கு **1800** சுவாசைகள் ஜீவனுக்கு மீதியாகின்றது. அந்த ஜீவனுக்கு ஒரு நாளுக்கு **1800** சுவாசை மீதியாகிய **19,800** சுவாசைகள் செலவாகின்றது இதன் பிரகாரம் அந்த ஜீவனுக்கு நிர்ணையிக்கப்பட்ட சுவாசைகள் முடிவதற்கு **41** வருடம், **8** மாதம், **3** நாள் காலம் பிடிக்கும். அப்போது அந்த ஜீவன் ஆயுஷ் ஒரு வருடம், **8** மாதம், **3** நாள் காலம் அதிகமானது. இந்த விதமாக யோகிகள் சிலர் பிராணாயாமமினால் ஆயுள் வளர்த்திக் கொண்டு அதிகம் காலம் வாழ்வதற்கு வாய்ப்பு உள்ளது. பூர்வம் சில பேர் ஆயுள் வளர்த்திக் கொண்டு சில நூற்று கணக்கான வருடங்கள் வாழ்ந்தார்கள் என்னும் வரலாற்றில் தெரிகின்றது.

**பிரம்ம, கால, கர்ம, குணச்சக்கரங்கள்**

ஜீவன் இறப்புக்கு பிறப்புக்கு காரணம் கர்மம். கர்மத்தை ஜீவன் அனுபவித்துக் கொண்டு இருப்பான். மற்றும் சம்பாதித்துக் கொண்டே இருப்பான். போன ஜென்ம கர்மம் இந்த ஜென்மத்தில், இந்த ஜென்ம கர்மம் வரும் ஜென்மத்தில் அனுபவித்து கர்ம சக்கரத்திலிருந்து வெளியே வராமல் பல கஷ்டங்கள் சுகங்கள் அனுபவித்துக் கொண்டே இருப்பான். கர்ம சக்கரத்திலிருந்து தப்பித்துக் கொள்ள வேண்டும் என்றால், கர்மம் என்றால் என்ன? எங்கிருந்து நம் மீது விழுந்து துன்புறுத்துகின்றதோ? அதனில் இருந்து விமுர்த்தி எப்படி? என்னும் தெரிந்துக் கொண்டால், கர்ம சக்கரத்திலிருந்து ஜீவன் தப்பித்துக் கொள்ளுவதற்கு சிறிது வழி கிடைக்கலாம். மேலும் கர்ம சக்கரத்தைப்பற்றி சிறிது தெரிவிக்கிறேன். கர்மம் என்றால் பாவம் புண்ணியம் அல்லவா! இந்த பாவம் புண்ணியங்கள் இரண்டு சுற்றி ஒரு உருவமாக சக்கரம் போல் தயாராகி ஜீவனை அந்த சக்கரத்திலேயே சுழலாக சுற்றிக் கொண்டு பாவம், புண்ணியங்களை அனுபவிக்கும் படி செய்கின்றது. நம் சம்பாதித்துக் கொண்ட பாவம், புண்ணியம் கர்ம சக்கரத்தில் சேர்ந்து இருந்து காலம் போகும்போது கர்ம சக்கரம் சுற்றி நம் மீது ஒளிக்கும். யாருடைய கர்மம் அவன் கர்ம சக்கரத்திலேயே போய் சேரும், மறுபடி அவனுக்கே ஒளிக்கும். கர்ம சக்கரம் ஒவ்வொரு ஜீவன் மூளையில் உள்ளது. பாவம், புண்ணியங்கள் கண்ணுக்கு தெரியாது, மேலும் பாவபுண்ணியம் கலந்துயிருக்கிற இந்த சக்கரம் மூளையில் கண்ணுக்கு யாருக்கும் தெரியாது. பார்க்க

வேண்டும் என்றால் நான்காவது கண் ஞானம் நேத்திரத்தில் பார்க்கலாம். மூளையில் இந்த சக்கரம் 12 பாகமாக பிரிக்கப்பட்டு இருக்கிறது. கர்ம சக்கரத்தை பிறகு 1 ஆம் பக்கம் படத்தில் பார்க்கலாம். இந்த விதமாக 12 பாகமாகயிருக்கின்ற கர்ம சக்கரத்தில் ஜீவன் பாவம் புண்ணியங்கள் நிர்ணயிக்கப்பட்ட பாகத்தில் போய் சேரும். அது எப்படி என்றால் கர்ம சக்கரத்தில் உள்ள ஒன்று, ஐந்து, ஒன்பதாவது பாகமில் ஜீவன் புண்ணியம் சேரும். அப்படியே மூன்று, ஏழு, பதினோன்று பாகமில் ஜீவன் பாவம் சேரும். மற்ற ஆறு பாகமில் பாவம் புண்ணியம் இரண்டும் சேரும்.




**1 ஆவது படம்**

**மூளையில் கர்மச்சக்கரம் பாகங்கள்**

சில பாகத்தில் பாவம், சில பாகத்தில் புண்ணியம் சில பாகமில் பாவ புண்ணியம் இரண்டும் எதற்கு சேருகின்றது சிலர்களுக்கு சந்தேகம் வரலாம். அதனைப்பற்றி பெரியோர்கள் என்ன சொல்லினார்கள் என்றால் மனிதன் தன் வாழ்கையில் ஒரு ரகம் புண்ணியம், ஒரு ரகம் பாவம் சம்பாதித்துக் கொண்டான். பல ரகமான வேலை செய்து பல ரகமான பாவ புண்ணியங்கள் சம்பாதித்துக் கொள்ளுவான். ஒவ்வொரு ரகம் புண்ணியம் கர்ம சக்கரத்தில் ஒவ்வொரு நிர்ணயித்த பாகத்தில் சேரும். அப்படியே ஒவ்வொரு ரகம் பாவம் கர்ம சக்கரத்தில் ஒவ்வொரு நிர்ணயித்த பாகத்தில் சேரும். அதனால் தான் சில பாகமில் புண்ணியம், சில பாகமில் பாவம், மற்ற சில பாகமில் பாவ புண்ணியம் இரண்டும் சேரும். அது எப்படி இருக்கின்றது என்றால் பிறகு வரும் பக்கத்தில் இரண்டாவது பக்கம் படத்தில் பார்க்கலாம்.

இந்த விதமாக பல ரகமான பாவ புண்ணியங்கள் ஜீவன் சம்பாதித்துக் கொண்டது தலையில் உள்ள கர்ம சக்கரத்தில் சேர்ந்து இருக்கும். கர்ம சக்கரத்தில் உள்ள கர்மத்தை ஜீவன் மீது அழுத்துபவர் நவக்கிரகங்களான சூரிய, சந்திர, அங்காரக, புத, குரு, சுக்ர, சனி, ராகு, கேது. கிரகங்கள் மொத்தம் **12** உள்ளது. தற்போது **9** கிரகங்கள் பற்றி சொல்கின்றோம். துவாதசை கிரகங்கள் விவரத்தை நாங்கள் எழுதும் **ஜோதிடம் கிரந்தத்தில்** விவரிக்கிறோம்.




**2 ஆவது படம்**

அந்த ஒன்பது பேர் காலசக்கரத்தில் சிக்கிக் கொண்டு காலசக்கரம் பிரமித்ததுப்போல் இவர்கள் சுற்றிக் கொண்டு கர்மசக்கரத்தில் பாவ புண்ணியங்களை காலத்துக்கு தகுந்தப்படி ஜீவன் மீது விடுகின்றார்கள். கால சக்கரத்தில் நவக்கிரகங்கள் சுற்றிக் கொண்டுயிருப்பதினால் பாவ புண்ணியங்கள் ஒரே நேரம் ஒளிபரப்பாமல் சிறிது சிறிதாக கூடி ஒளிபரப்பாகின்றதை அதனை பிராரப்த்தம் என்று

சொல்வார்கள். கர்ம சக்கரம் நம் தலையில் இருப்பதினால் ஒவ்வொருவர் என் கர்மம் (தலை எழுத்து) என்னும் தலைப்பக்கம் கை வைப்பார்கள். மற்றும் ஒரு வேலை நிறைவேறாதப்போது என் தலை எழுத்து அப்படி இருக்கின்றது என்று சொல்கின்றார்கள். வேறு அவர்களுக்கு அதிக லாபம் வந்தப்போது அவன் புண்ணியம் அப்படி இருக்கின்றது என்னும், ஒருவனுக்கு நஷ்டம் வந்தப்போது அவன் பாவம் செய்தான் என்னும், நாம் சொல்லிக் கொண்டு இருப்போம். நடந்த வேலை புண்ணியம், நடக்காத வேலைக்கு பாவம் என்னும் நமக்கு தெரியாமலே நம் வாயில் வருகின்றது. மற்றும் அப்படியே என் தலை எழுத்து என்னும், என் கர்மம் என்னும் நமக்கு தெரியாமலே வாயில் சொல்லி நம் கை தலை பக்கம் காட்டுகின்றது. தனக்கு முழுமையாக தெரிந்து தலை பக்கம் என் கர்மம் என்னும் காட்டினான என்றால் எந்தளவுக்கும் தெரியாது. இங்கு தெரிந்துக் கொள்ளுவது என்னவென்றால்! கர்ம சக்கரத்தில் நாம் செய்துக் கொண்ட பாவம், புண்ணியம் இருக்கின்றது. அந்த பாவ புண்ணியங்களை நாம் அனுபவிக்கின்றோம். அதனால் தான் நம் தலையில் கர்ம சக்கரம் பக்கமே நமக்கு தெரியாமலே விதி செயல்பாடாக கையை காட்டுகின்றோம். கர்ம சக்கரத்திலுள்ள கர்மத்திற்கு தலைவர்கள் நவகிரகங்கள் கர்ம சக்கரத்திலுள்ள கர்மத்தின் படி ஜீவன்களை நவகிரகங்கள் சுற்றுகின்றது.




**3 ஆவது படம்**

கர்ம சக்கரம்போல் காலசக்கரம் 12 பாகங்களானது. 12 பாகத்திற்கு ஆதியிலிருந்து உள்ள சப்த கிரகங்கள் தலைவர்களாக நியமித்தார்கள். காலசக்கரத்தில் 12 பாகங்களுக்கு 12 பெயர் வைக்கப்பட்டது. அது என்னவென்றால் 1) மேஷம் 2) ரிஷபம் 3) மிதுனம் 4) கடகம் 5) சிம்மம் 6) கன்னியா 7) துலாம் 8) விருச்சிகம் 9) தனுசு 10) மகரம் 11) கும்பம் 12) மீனம். இந்த 12 பாகத்திற்கு சப்தகிரகங்கள் சொந்த உரிமை கொண்டு இருக்கும். இந்த விதமாக என்றால் சூரியன் சிம்ம ராசிக்கு தலைவர் என்னும் சிம்மம் என்னும் பெயர் கொண்ட பாகம் சூரியன் சொந்த இடம் என்று அர்த்தம். அப்படியே சந்திரனுக்கு

கடகம் பாகம், அங்காரகனுக்கு மேஷம் மற்றும் விருச்சிகம் என்னும் இரண்டு பாகங்கள் புதனுக்கு மிதுனம், கன்னியா என்னும் இரண்டு பாகங்கள், குருவுக்கு மீனம் தனுசு என்னும் இரண்டு பாகங்கள் சுக்கிரனுக்கு ரிஷபம், துலாம் என்னும் இரண்டு பாகங்கள் சனிக்கு மகரம், கும்பம் என்னும் இரண்டு பாகங்கள் சொந்த பாகங்களாக கணக்கிடப்படுகின்றது. இந்த விதமாக 12 பாகங்களுக்கு 7 தலைவர்கள் ஆதியிலிருந்து இருக்கின்றார்கள். நடுவில் வந்த ராகு சனி சொந்த பாகமில் கும்பத்தில், கேதுவும் குரு சொந்த பாகமில் மீனத்தில் சொந்த இடத்தை ஏற்படுத்திக் கொண்டார்கள். 9 கிரகங்கள் 12 பாகத்திற்கு தலைவர்கள் ஆனார்கள். இன்னும் மூன்று தெரியாத கிரகங்கள் சொந்த இடத்தைப்பற்றி பிறகு **ஜோதிட சாஸ்த்திரம் கிரந்தத்தில்** தெரிவிக்கிறோம். இந்த கால சக்கரம் கர்ம சக்கரத்தில் ஒட்டிக் கொண்டு மேல் சுற்றிக் கொண்டு இருக்கும். அதை மூன்றாவது படத்தில் பார்க்கலாம் கர்ம சக்கரத்தில் கர்மத்தை திருப்புபவர் நவகிரகங்கள். அப்படியே காலசக்கரத்தில் நவகிரகங்களை திருப்புபவர் ஆத்மா. ஆத்மா என்பவர் தன் ஆதினத்திலிருந்த நவகிரகமினால் கர்மத்தை ஜீவன் மீது செயல்படுத்துகின்றார். ஜீவராசிகளில் தேகத்திலுள்ள தலை ஸ்தானத்தில் கர்மசக்கரம், கால சக்கரம் சுற்றுகின்றது. கர்மசக்கரம் மீது அதிகார நவகிரகங்கள் கொண்டு இருக்கும். கால சக்கரம் மீது அதிகாரம் ஆத்மாவுக்கு இருக்கும். ஆத்மா தர்மங்கள் தவறாமல் காலசக்கரத்தை நடத்தும். கர்மத்தை நவகிரகங்கள் நடத்தும்போது, நவகிரகங்களை எமன் (ஆத்மா)

நடத்தும்போது, இவற்றை எல்லாத்தையும் குரு (பரமாத்மா) நடுவில் இருந்து குருத்துவாக்க ஈர்ப்பு சக்தியுடன் தன்னை சுற்றி சுற்றும் படி செய்கின்றார். நடுவில் உள்ள குருத்துவாக்க சக்தியை பிறகு பக்கமில் 4 ஆவது படத்தில் பார்க்கலாம்.




**4 ஆவது படம்**

கர்ம, கால, சக்கரத்திற்கு நெருக்கமாக பரமாத்மாயிருந்து காலன் என்னும் பெயர் கொண்டு நவகிரகங்களை, கர்மத்தை தன் ஈர்ப்பு சக்தியினால் நடத்திக் கொண்டு சாட்சியாக ஒரு நண்பனாக இருக்கின்றார். மேலும் கீதாசாஸ்த்திரத்தில் ராஜவித்யா ராஜகுஹயத்தில் இப்படி கூறினார். **“பூமி மீது பிரக்ருதிக்கு (இயற்கைக்கு) தலைமை தாங்கிவுள்ளேன். என்னால் ஜீவராசிகள் பிறக்கின்றது**

**மற்றும் இறக்கின்றது. இந்த காரணத்தினால் ஜெகம் சக்கரம் போல் சுற்றுகின்றது.** அனைத்து ஜீவராசிகளுக்கு பிரம்ம நாடியில் நடுவில் புருஷனாக ஆத்மா இருக்கின்றார். பிரம்ம நாடியில் சப்தஸ்தானத்தில் ஆத்மா சக்தி மையமாக இருக்கின்றது. சப்தஸ்தானத்தை மையமாக செய்துக் கொண்டு அதன் சுற்றி கர்ம, கால, சக்கரங்கள் சுற்றுகின்றது. காலசக்கரத்தில் இரவும் பகலும், சுக்லபக்ஷம், கிருஷ்ணபக்ஷங்களும், மாதங்கள், உத்தர தக்ஷணாயனங்கள் (வடக்கு தெற்கு அயனங்கள்), வருடங்கள் நடந்துக் கொண்டு இருக்கின்றது. இரவும் பகலும் இருந்து வருடம் காலம் வரை கர்மத்தை ஜீவராசிகள் அனுபவிக்கின்றது. காலசக்கரத்தில் இரவும் பகலும் எப்படி நடக்கின்றது என்றால்! கர்ம சக்கரத்தில் உள்ள பாகங்கள் காலசக்கரத்தில் உள்ள சூரியனை தாண்டி பயணிப்பார். ஒவ்வொரு பாகத்தை தாண்டுவதற்கு கிட்டதட்ட இரண்டு மணி நேரம் ஆகும். சூரியன் உதிக்கும் ஆரம்பத்திலிருந்து ஆறு பாகங்கள் தாண்டுவதற்கு 12 மணி நேரம் ஆகும். அதனை பகலாக நாம் பார்கின்றோம். அப்படியே மற்ற ஆறு பாகங்கள் தாண்டுவதற்கு 12 மணி நேரம் ஆகும். இதனை இரவு என்னும் சொல்கின்றோம். நம் தலையில் உள்ள கர்மசக்கரத்தை தாண்டி சூரியன் கால சக்கரத்தில் பயணிக்கின்றார். இப்படி காலசக்கரத்தில் பயணித்து கர்ம சக்கரத்தில் 12 பாகங்களை தாண்டுவதற்கு 24 மணி நேரம் ஆகும். 24 மணி நேரத்தை ஒரு நாள் என்று சொல்கின்றோம். கர்ம சக்கரத்தில் நடுவில் ரேகை உள்ளது. நடுவில் உள்ள ரேகைக்கு இடது பக்கம் 6 பாகங்கள் பகல், வலது பக்கம் 6

பாகங்கள் இரவாக சூரியன் சுழற்சியில் தெரிகின்றது. பிறகு பக்கத்தில் **5** வது படத்தில் இரவு பகல் பாகங்களை பார்க்கலாம்.




**5 ஆவது படம்**

சூரியன் கால சக்கரத்தில் சுற்றுகின்றார் அல்லவா! காலசக்கரம் **12** பாகங்கள் அல்லவா!! சூரியன் காலசக்கரத்தில் ஒவ்வொரு பாகங்களை தாண்டுவதற்கு ஒரு மாதம் காலம் ஆகும். கால சக்கரத்தில் உள்ள **12** பாகங்களை சூரியன் முழுமையாக தாண்டுவதற்கு **12** மாதம் ஆகும். அதனை ஒரு வருடம் என்று சொல்கின்றோம். காலசக்கரத்தில் நடுவில் ஜீவரேகை உள்ளது. ஜீவரேகைக்கு இடது பக்கம் உள்ள ஆறு பாகங்களை சூரியன் தாண்டுவதற்கு **6** மாதம் ஆகும்.

அந்த காலத்தை உத்தராயணம் (வடக்கு அயனம்) என்று சொல்கின்றோம். அப்படியே ஜீவன் வலது பக்கம் உள்ள ஆறு பாகங்களை தாண்டுவதற்கு 6 மாதம் ஆகும். அந்த காலத்தை தக்ஷிணாயனம் (தெற்கு அயனம்) என்று சொல்கின்றோம். உத்தர தக்ஷிணாயனங்களை கீழே உள்ள 6 பாகத்தில் பார்க்கலாம்.




**6 ஆவது படம் (காலச்சக்கரம்)**

கால சக்கரத்தில் சந்திரன் ஒவ்வொரு பாகம் தாண்டுவதற்கு இரண்டரை நாள் பிடிக்கும். ஜீவன ரேகைக்கு ஒரு பக்கம் உள்ள ஆறு பாகங்களை தாண்டுவதற்கு 15 நாட்கள், மற்ற ஒரு பக்கம் உள்ள ஆறு பாகங்களை தாண்டுவதற்கு 15 நாட்கள் பிடிக்கும். சந்திரன் 12 பாகங்களை தாண்டுவதற்கு 30 நாட்கள் பிடிக்கும். சந்திரன்

ஜீவன ரேகைக்கு இடது பக்கம் உள்ள பாகங்களை தாண்டும் நேரத்தை சுக்லபக்ஷம் என்னும், வலது பக்கம் உள்ள பாகங்களை தாண்டும் நேரத்தை கிருஷ்ணபக்ஷம் என்னும் சொல்வார்கள். கிருஷ்ண, சுக்லபக்ஷங்கள் கீழ் உள்ள ஏழாவது படத்தை பார்க்கலாம்.




**7 ஆவது படம் (காலச்சக்கரம்)**

இந்த விதமாக காலசக்கரத்தில் இரவும் பகலும், சுக்ல, கிருஷ்ணபக்ஷங்கள் அயனங்கள் நடக்கின்றது. ஜீவனுக்கு யோகமினால் கிடைத்த யோகசக்தியல்லாம் கர்ம காலசக்கரம் நடுவில் உள்ள குரு மையங்களை சேருகின்றது. யாருக்கு யோக சக்தி பரிபூர்ணமாக வருமோ அவனுக்கு சூரியன் ஜீவன ரேகை இடது பக்கத்தில் உள்ள போது, மற்றும் சூரியன் கர்ம சக்கரம் மீதும் ஜீவரேகைக்கு இடது பக்கம் இருக்கும்போது, சந்திரனும் கூட காலசக்கரத்தில்

ஜீவன் ரேகைக்கு இடது பக்கம் உள்ளப்போது மரணம் சம்பவிக்கும். அந்த விதமாக மரணித்து ஜீவன் நடுவில் உள்ள மையத்திற்கு போகுகின்றான். என்றால் ஆத்மாவில் சேருகின்றான். வேறு நேரத்தில் இறந்து போன ஜீவன் மையத்தில் உள்ள ஆத்மாவிடம் சேர முடியாது. பகல், சுக்லபக்ஷம் உத்தராயணம் இணைந்த நேரத்தில் ஆத்மாவை சேருவதற்கு ஜீவனுக்கு வழி ஏற்படும். அப்படியாகாமல் போனால் வழி இருக்காது. இந்த வழியை கீழ் எட்டாவது **8** படத்தில் பார்க்கலாம்.




**8 அவது படம்**

இரவு, சுக்லபக்ஷம், தக்ஷிணாயனத்தில் மரணித்த ஜீவன் ஆத்மா சேர முடியாது. அந்த நேரத்தில் மரணித்த ஜீவனுக்கு காலசக்கரத்தில் ஆத்மா சேரும் வழி

கிடைக்காது. இரவு, சுக்லபக்ஷம் தக்ஷிணாயனத்தில் கால சக்கரத்தில் வழி எப்படி இருக்கின்றது. பிறகு பக்கம் 9 வது படத்தில் பார்க்கலாம்.




**9 ஆவது படம்**

(சாமிஜிகள்) வேலையாக இருக்க வேண்டும். படிப்பு, வைத்தியம், சாப்பாடு, ஆடை எல்லாம் கர்மம் பிரகாரம் யாருக்கு எவ்வளவு கிடைக்க வேண்டுமோ அவ்வளவு கிடைக்கும் படி முதலிலேயே அமைப்பு இருக்கும். எந்த நேரத்திற்கு எது கிடைக்க வேண்டுமோ அது யாரில் இருந்தாவது கிடைக்கும். மேலும் ஞானம் ஒரு ஞானிகளில் இருந்து தான் கிடைக்கும். அதனால் ஞானிகள் உலகத்திற்கு சம்மந்தப்பட்ட உதவி செய்யாமல் பரமாத்மா ஞானத்தை கொடுக்க வேண்டும். (தெய்வ ஞானம் சொல்ல வேண்டும்) ஒரு சந்தர்பத்தில் சிலர் எங்களை இந்த விஷயத்தை கேள்வி கேட்டு நீங்கள் சமூக சேவை என்ன செய்கின்றீர் என்னும் கேட்டார்கள். அப்போது நாங்கள் "ஞான சேவை தவிற மனிதர்கள் சேவை செய்யமாட்டோம்". மனிதர்களுக்கு சேவை செய்வதற்கு அரசாங்கம் இருக்கின்றது, பணக்காரர்கள் இருக்கின்றார்கள். அரசாங்கம் உங்களுக்காகவே என்றும் சொல்லும்போது, பல துறைகள் ஏற்ப்படுத்தி அவற்றினால் மனிதர்களை நிர்வாகம் செய்து கொண்டு இருக்கும்போது ஏதாவது குறைந்தால் அரசாங்கத்தை கேட்க வேண்டும். இப்படி புனிதமான ஞானத்தை கொடுக்க வேண்டும் என்று எங்களை கேட்க வேண்டும் என்னும் சொல்லினோம். இன்று பல பேர் சாமிஜி உலக கீர்த்தியை சம்பாதித்துக் கொள்ளுவதற்கு, தான் சம்பாதித்துக் கொண்ட தனத்தை வேறவர் தேவைக்கு செலவு செய்து பெயர் அடைகின்றார்கள். முதலில் ஏதோ ஒரு விதமாக தன் பெயரில், மஹத்தியத்திலும் பணக்காரர்களிடம் இருந்து தனத்தை சம்பாதித்துக் கொண்டு

அந்த தனத்தை உபயோகித்து மருத்துவமனை பள்ளிக்கூடங்கள், எப்போதும் அன்னதானங்கள் இன்னும் எத்தனையோ வைத்து இலவசம் படிப்பு, இலவசம் மருத்துவமனை, இலவசம் சாப்பாடு என்னும் பிரச்சாரம் செய்துக் கொண்டு கீர்த்தியை அடைகின்றார்கள். இந்த விதமாக பல சாமிஜிகள் உலகத்தில் தேவைப்படும் உதவிகள் எல்லோருக்கும் தெரியும் படி செய்து, தான் சாமிகள் ஆனதினால் நாங்கள் ஞானத்தை தெரிவிக்கின்றோம் என்னும் பெரிய சபைகளை வைத்து அங்கு ஞானம் போதனை என்னும் பெயரில் வந்து போதனைகள் சொல்வார்கள். அங்கு நற்செய்தியில் கடந்த காலத்தில் கீர்த்தியை சம்பாதித்தவரை பற்றி சொல்லிக் கொண்டோம். கடந்த காலத்தில் அவர் பெருந்தன்மையை பற்றி சொல்லி, அவர் பெயரில் பாட்டுகளை உருவாக்கி அந்த பாட்டுகளில் அவர் பெருந்தன்மையை கீரத்தியை சொல்லிக் கொண்டியிருக்கின்றார். இப்படி பல பேர் சாமிகள் தனக்கு தெரிந்த தத்துவ போதனை (ஆத்மா போதனை) சொல்லாமல் தனக்கு முன்பே பிறந்து இறந்துப்போன சாமிகள் பற்றி, அவர் மஹத்தியங்களைப்பற்றி, அவர் வாழ்கை வரலாறு பற்றி, அவர் சொல்லிய ஞானத்தைப் பற்றி சிறிது வார்த்தையில், சிறிது பாட்டுகளில் சொல்லிக் கொண்டியிருப்பார்கள். இறுதி வரைக்கும் அவர் போதனைகள் கேட்டப்பின்னால் அதில் கீர்தனை தவிற ஆத்மா ஞானம் இருக்காது. மற்றும் சிலர் சாமிகள் பாட்டுகச்சேரிப்போல் எல்லாம் வாத்தியங்களில் பாட்டுகளே பாடிக் கொண்டு இருப்பார்கள். கேட்பவர் தலை ஆட்டிக் கொண்டு இருந்தால், ஆனந்தமாக கேட்டுக்

கொண்டுயிருந்தால், சொல்பவர் அதுவே ஞானம் என்பது போல சொல்லிக் கொண்டுயிருப்பார்கள். உன் பெயர் கேட்டால் கர்மங்கள் போகும், உன் தரிசனம் கிடைத்தால், ஜென்மங்கள் போகும் என்னும் ஒரு சாமிஜி பாடினால் மற்ற ஒருவர் காயிநாதா உன்னை தவிற எந்த தெய்வமில்லை, உன்னை தொட்டால் எங்கள் நோய்கள் போகும் என்னும் உன் பார்வையில் எங்களுக்கு லாபங்கள் வரும் என்னும் பாடுவார்கள். ஒருவர் பூராணங்களிலுள்ள கதைகள் சொல்லினால், மற்ற ஒருவர் புண்ணியசேத்திரங்கள் கதை சொல்கின்றார்கள். ஒருவர் பாரத ராமாயணம் சொல்லிக் கொண்டுயிருந்தால் மற்ற ஒருவர் தேவதைகள் மஹத்தியங்களைப் பற்றி சொல்லிக்கொண்டுயிருப்பார்கள். இஷ்ட தேவதைகளைப்பற்றி சிலர் சொல்லினால், இஷ்டங்கள் தீர்த்து கஷ்டங்கள் இல்லாமல் செய்யும் தேவதைகளைப்பற்றி சிலர் சொல்லிக் கொண்டுயிருப்பார்கள். இந்த விதமாக பல விதமான போதனைகள் இன்று சாமிஜீகள் சொல்லிக் கொண்டு இருப்பார்கள். அவற்றை எல்லாம் பரிசோதனை செய்து பார்த்தால் ஆத்மாவைப் பற்றி ஞானம், ஜீவாத்மாவைப் பற்றி ஞானம், பரமாத்மாவைப்பற்றி ஞானம் சுத்தமாக இருக்காது. அப்படிப்பட்டபோது சாமிஜிகள் சொல்லும் ஞானம் தெய்வ ஞானம் அல்லவா? என்னும் சொல்லினால் சரியானது அல்ல என்று சொல்லலாம். அவர் சொல்லியது எல்லாம் பிரக்ருதி ஞானம் என்று சொல்லலாம். வேறவர் கீர்த்தியைப்பற்றி சொல்லியதினால் மற்றும் அவர் சொல்லியது வேறவர் கீர்த்தி என்னும், அவர் பாடும்

பாட்டுகள் எல்லாம் கீர்த்தனைகள் என்று தெரிகின்றது. எங்கேயாவது ஆத்மா ஞானத்திற்கு சம்மந்தப்பட்ட பகவத்கீதாவை எந்த சாமிஜி சொல்லுகின்றார் என்றால் அந்த உபன்யாசங்கள் ஸ்ரீகிருஷ்ணன் சொல்லிய ஞானம் இருக்கும்போது அந்த சாமிஜி சொல்லும் வார்த்தையில் ஜீவாத்மா இருக்கும், பரமாத்மா இருக்கும். மேலும் நடுவில் உள்ள ஆத்மா மட்டும் இருக்காது. ஆத்மாவை பற்றி சொல்லாதப்போது அங்கு சொல்லப்பட்டது பரமாத்மா ஞானமாகும், ஜீவாத்மா ஞானமாகும் ஆத்மா ஞானம் அல்ல என்னும் தெளிவாக சொல்லலாம். இந்த விதமாக பகவத்கீதா உபன்யாசங்களில் கூட ஆத்மாவை இல்லாமல் செய்கின்றார்கள். நடந்துக் கொண்டு இருக்கும் காலத்தில் ஆத்மாவை மறந்துப்போவார் என்னும் பூர்வம் பெரியோர்கள் ஆலோசனை செய்து அப்படி மறந்துப்போகாமல் இருப்பதற்கு ஆத்மாவுக்கு சம்மந்தப்பட்ட எத்தனை வாக்கியங்களை நம் நடுவில் வைத்தார்கள். அப்படி வைத்த வாக்கியங்கள் **"ஆத்மா தற்கொலை என்னும், ஆத்மா போதனை என்னும், ஆத்மா பலம் என்னும், ஆத்மா உணர்வு என்னும், ஆத்மா இயக்கம் என்னும், ஆத்மா சாட்சி, ஆத்மா உறவினர், ஆத்மா சுயமரியாதை, ஆத்மா சக்தி, ஆத்மா விஷ்வாசம், ஆத்மா விமர்சனை, ஆத்மா ஞானம் என்னும், ஆத்மா தேஜஸ் என்னும்"** சொல்லிய பகவத்கீதாவில் சுலோகத்தில் ஆத்மா என்னும் சொல்லை உபயோகித்தார். எனினும் இன்று மனிதன் சாமிஜியாக மாறியப்போது ஆத்மாவை பற்றி தெரிந்துக் கொள்ளாமல் எல்லோரையும் கீர்த்திப்பது, எல்லாம் தேவதைகளை ஆராதனை செய்து

தான் சொந்தமாக கீர்த்தியை சம்பாதித்துக் கொள்ளுவதற்கு உலக சம்மந்த உதவி காரியங்களும் செய்கின்றார்கள். அதனால் ஒவ்வொரு மனிதன் முக்கியமானவனா அல்லது சாதாரணமானவனா என்னும் நான் வேறவரை கீர்த்திக்கின்றேனா? நான் கீர்த்தியை சம்பாதித்துக் கொள்கின்றேனா? என்னும் கேள்வி கேட்டு ஆலோசனை செய்து, அப்படியாகாமல் ஆத்மா ஞானத்தை தெரிந்துக் கொண்டுயிருக்கின்றேனா? வேறவருக்கு ஆத்மஞானம் தெரிவிக்கின்றேனா? என்னும் பார்த்துக் கொள்ள வேண்டியது இருக்கும். அதனால் மனிதன் தன் வாழ்க்கையில் புண்ணியத்தை சம்பாதித்துக் கொண்டு கீர்த்தியை விட்டு மோக்ஷத்தை தெரிவிக்கும் ஆத்மா ஞானத்தை (தத்துவ ஞானத்தை) தெரிந்துக் கொள்ளுவதற்கு வாய்ப்பு ஏற்படும்.

## தேகம் ஒரு வாடகை வீடு

ஒரு மனிதனை பிரித்து தனியாக பார்த்தால் தேகம் மற்றும் ஜீவன் என்னும் சொல்லலாம். ஜீவன் இல்லாத தேகத்தை “பிணம்” என்னும் சொல்கின்றோம். அப்படியே தேகமில்லாத ஜீவனை “பேய்” என்னும் சொல்கிறோம். ஒரு பேய், ஒரு பிணம் இணைந்தப்போது “மனிதன்” என்னும் சொல்கின்றோம். விவரமாக சொல்லிக் கொண்டால் ஒரு ஜீவன் ஒரு தேகத்திலிருந்து நிவாசித்து ஜீவிதகாலத்தை கடத்துகின்றான். ஜீவனுக்கு தேகம் வீடு போன்றது. தேகம் என்னும் வீட்டில் ஜீவன் சிறிது காலம் நிவாசிக்கின்றார். ஜீவன் தேகத்தில் நிவாசித்த மொத்தம் காலத்தை ஜீவிதகாலம் என்று சொல்கின்றோம். ஜீவித காலத்தை பூர்வம்

“ஜீதகாலம்” (சம்பளக்காலம்) என்று சொல்வார்கள். ஜீத என்னும் இரண்டு எழுத்துக்களில் நடுவில் “வி” என்னும் எழுத்து காலம் போக்கில் சேர்ந்துப்போனது. அதனால் ஜீதகாலம் என்பது ஜீவிதகாலம் என்னும் எழுத்தாக மாறிப்போனது. மாறிய எழுத்து விட்டு பார்த்தால் தேகத்தில் ஜீவன் இருக்கின்ற காலத்தை ஜீதகாலம் சொல்வதில் சிறிது அர்த்தம் இருக்கின்றது. ஒரு வேலைக்கு ஒவ்வொரு விலை கொடுப்பது ஜீதம் (சம்பளம்) என்று சொல்கின்றோம். அல்லது வாடகை என்று சொல்கின்றோம். ஜீவன் தன் சொந்தமில்லாத வேறவர் வீட்டில் நிவாசிக்கின்றான், மேலும் அந்த வீட்டு எஜமானுக்கு வாடகை கொடுக்க வேண்டியது இருக்கும். தேகம் ஜீவனுக்கு சொந்த வீடு அல்ல என்னும் விஷயம் ஒவ்வொரு மனிதன் நியாபகம் வைத்துக் கொள்ள வேண்டும். தேகம் ஜீவனுடையது அல்ல என்றால் மேலும் யாருடையது கேள்வி கூட உடனே வரும். அதற்கு பதில் என்ன வென்றால்! சில நகரங்களில் சிலர் எஜமான்கள் தன் சொந்த வீட்டை முழுமையாக அவர்களே புழங்காமல், வீட்டில் சிறிது பாகத்தை அல்லது அறையை வேறவற்கு வாடகைக்கு கொடுக்கின்றார்கள். உதாரணத்திற்கு ஒரு வீடு எஜமான் தன் வீட்டிலுள்ள ஒரு அறையை மற்ற ஒருவருக்கு கொடுத்தார் என்னும் நினைத்துக் கொள்ளுங்கள். அப்போது வாடகை இருப்பவற்கு தண்ணீர் உடன் எல்லாம் அனைத்து வசதிகளும் கொடுத்து அதற்கு பதிலாக வாடகை அவரிடமிருந்து வாங்கிக் கொள்வார். இது எல்லோருக்கு தெரிந்த விஷயம் தான். இன்னும் தெரியாத முக்கியமான விஷயம் என்ன வென்றால்! விசாலமான வீட்டில் அந்த வீட்டு

எஜமானுக்கு வாடகை கொடுத்து ஒரு அறையில் குடியிருக்கின்ற வாடகைகாரர் போல் ஜீவன் தேகம் என்னும் வீட்டில் நிவாசிக்கின்றார். தேகம் என்னும் வீடு எல்லாத்துக்கும் ஆத்மா என்பவர் எஜமான் (தளபதி), மற்றும் தேகம் என்னும் வீட்டில் சிறிது பாகத்தில் ஜீவாத்மா நிவாசிக்கின்றார். ஜீவன் தன் வீட்டில் நிவாசிப்பதற்கு தேவைப்படும் வசதிகள் எல்லாம் ஆத்மா என்னும் எஜமான் செய்கின்றார். அதற்கு பலனாக ஜீவன் என்பவர் வாடகைக்கு இருப்பவர் ஆத்மா என்னும் தேகம் என்னும் வீட்டு எஜமானுக்கு ஆகாரம் என்னும் வாடகை கொடுக்க வேண்டியது இருக்கும். ஜீவன் கொடுக்கின்ற ஆகாரத்தை வாடகையாக ஆத்மா தன் வாழ்விற்காக அதை பயன்படுத்துகிறது. வெளியே வீட்டு எஜமான்கள் மாதத்திற்கு ஒரு தடவை பணத்தை வாடகையை வாங்கிக் கொள்வார்கள். உள்ளே தேகம் என்னும் வீட்டு எஜமான் ஒரு வேலைக்கு ஒரு தடவை ஆகாரம் உருவத்தில் வாடகை கேட்டு வாங்கிக் கொள்கின்றார். வெளியே வீட்டு எஜமான் மாதத்திற்கு ஒரு முறை கேட்டு தன் வாடகை வாங்கிக் கொண்டால், உள்ளே எஜமான் ஒரு வேலைக்கு ஒரு தடவை பசியை உண்டாக்கி தன் வாடகையை வாங்கிக் கொள்ளுவார். ஆத்மா என்னும் எஜமானுக்கு ஆகாரம் என்னும் வாடகை கட்டுவதற்கு மனிதன் எத்தனையோ வேலையை செய்ய வேண்டியது இருக்கும், அந்த வேலையை செய்வதற்கு எத்தனையோ வித்தைகள் பழக வேண்டியது இருக்கும். அதனால் ஒரு வேளை **சாப்பிடுவதற்கு கோடி வித்தைகள்** என்று பெரியோர்கள் சொல்லினார்கள். கோடி வித்தைகள் ஆகாமல் போனாலும்

சிறிது வித்தைகளாவது பழக வேண்டியது இருக்கும். இன்று காலத்தில் மனிதன் சராசரி ஆயுள் **60** வருடங்கள் என்றால் சாப்பிடுவதற்கு பழக வேண்டிய படிப்பு கிட்டதட்ட **30** வருடங்கள் பிடிக்கின்றது. இப்போது காலத்திலுள்ள மனிதன் நாங்கள் அறிவுக்காக படிக்கின்றோம் என்னும், இறுதிக்கு அந்த அறிவும் மனிதன் வாழ்வதற்கு தான், ஆகாரத்திற்காக தான் என்று மாறக்கூடாது. எத்தனை வித்தைபழகினாலும், எந்த டிகிரி (பட்டம்) சாதித்தாலும், அந்த வித்தை எல்லாம் வெளியே பார்வைக்காக இருக்கின்றது. நான் ஒருவர் ஆதினத்தில் வாடகைக்கு இருக்கின்றேன் என்னும், எனக்கு ஒரு எஜமான் இருக்கின்றார் என்னும், அவர் இஷ்டம் பிரகாரம் நான் வாழ்கின்றேன் என்னும், வாழ்வது என்றால் தேகத்தில் நிவாசிப்பது என்னும் எந்த விஞ்ஞானம், எந்த வித்யாவும் மனிதனுக்கு தெரிவிக்காமல் போனது. தேகம் எஜமானியான ஆத்மாவை பற்றி தெரிவிப்பது பிரம்ம வித்தை. பிரம்மா என்றால் பெரியது என்று அர்த்தம். உனக்கு பெரியவர் இருக்கின்றார் என்னும், அந்த பெரியவா் உன் தேகத்தில் உள்ள ஆத்மா என்னும் தெரிவிக்கும் வித்தை பிரம்மா வித்யா. உலகம் ஞானம் தெரிவிக்கும் வித்தைகள் எத்தனையோ ரகமாக டாக்டர் என்னும், இன்ஜீனியர் என்னும், லாயர் என்னும், இன்னும் எத்தனையோ இருக்கின்றது. வெளியே எந்த சயின்ஸ்சையும் படித்தால் அது தெரிகின்ற தேகத்திற்கு உபயோகப்படும் என்னும், தெரிகின்ற தேகத்திற்கு தளபதியான ஆத்மாவை தெரிவிப்பது அல்ல. இப்போது ஒரு கதையை சொல்லிக் கொள்ளலாம்! பூபதி என்னும் பெயர் உள்ள நபர் ஒரு பெரிய வீட்டில், ஒரு

அறையில் மட்டும் வாடகைக்கு இருக்கின்றார், அந்த வீட்டு எஜமான் பெயர் பதி. பதி வீடு பெரியதாக இருந்ததால் பதி தன் வீட்டில் முன்னுயிருந்த அறையை பூபதிக்கு வாடகைக்கு கொடுத்து தான் மட்டும் பின்னாடியிருந்து மற்ற அறையில் இருந்தார். பதிக்கு வேலைக்காரர்கள் இரண்டு டஜன் பேர் இருந்தார்கள். பதி அத்தனை பேரை வேலை செய்ய வைத்துக் கொண்டுயிருந்தப்போது, அத்தனை பேருக்கு எஜமானாக இருக்கும்போது, தான் சிறிது அளவுக்கூட பெருமைப்படமாட்டார், தான் பெரியவன் என்னும் சொல்பவர் அல்ல. தன் வீட்டு வேலை எல்லாம் தன் மனிதர்களுக்கு ஒப்பிட்டு தன் எல்லோரையும் கவனித்துக் கொண்டுயிருப்பார். வெளியே விவகாரம் எல்லாம் தன் மனிதர்களே பார்த்துக் கொள்ளுவார்கள். வீட்டு முன் இருந்த பாகத்தில் உள்ள பூபதி அந்த வீட்டுக்கு வருபவரை, போகுபவரை பார்த்துக் கொண்டுயிருப்பார். தன் முன்பு அறையிருந்ததினால் வெளியே இருந்து வரும் எல்லோரையும் பார்பார், எல்லாம் விஷயங்களை தெரிந்துக் கொள்ளுவார். பதியிடம் இருந்த வேலைக்காரர்கள் **24** பேர் பூபதிக்கு நல்ல அறிமுகமிருந்ததினால் எல்லாம் விஷயங்கள் பூபதிக்கு சுலபமாக தெரியம். பதி மனிதர்கள் எல்லோரும் பூபதிக்கு பொருத்தமாக இருப்பதினால் பூபதி அவர் எல்லோரையும் தன் மனிதர்களாக கணக்கிட்டு தன் தான் அவர்களுக்கு எஜமான் என்னும் எண்ணத்தில் இருப்பார். விவரமாக சொல்லிக் கொண்டால் **24** பேரை வேலையில் வைத்துக் கொண்டது பதி தான் மேலும் **24** பேரில் சிலர் மட்டும் பதிக்கு எதிர்ப்பாகயிருந்து பூபதிக்கு பொருத்தமாக இருந்தார். துஸ்சு

தஸ்சு என்பவர் இருவர்கள் வேலைக்காரர்கள் பதிக்கு எதிர்ப்பாக இருந்தார்கள். துஸ்சு என்பவர் ஒவ்வொரு விஷயங்களை பூபதிக்கு சொல்லி பூபதி மனிதனாக நடந்துக் கொண்டுயிருந்தார். இனி தஸ்சு என்பவர் பதிக்கு முழுமையாக எதிராக தனக்கு எஜமானன் பூபதி என்னும், பூபதியே இங்கு வேலைக்கு எல்லாம் மற்றும் இந்த வீட்டுக்கு எல்லாம் பெரியவர் என்று சொல்லுவான். துஸ்சு தஸ்சுவினால் தன் வேறவர் வீட்டில் உள்ளேன் என்ற விவேகம் கூட இல்லாதவனாக பூபதி தஸ்சு வார்த்தையில் தான் சந்தோசப்படுவார். வீட்டிலுள்ள வேலைக்காரர்கள் பல ரகமான வேலை செய்வார்கள். சிலர் சின்ன சின்ன வேலைகளுக்கு மட்டும் இருந்தால் சிலர் முக்கியமான வேலையை பார்த்துக் கொள்ளுவார்கள். வீட்டில் முக்கியமான வேலை பார்த்துக் கொள்ளுபவர்கள் நான்கு பேர் மட்டும் தான். அந்த நான்கு பேரில் இருவர் துஸ்சு, தஸ்சு மற்றும் இருவர் சத்தி, கித்தி. முக்கியமான அந்த நான்கு பேரில் துஸ்சு, தஸ்சு இருவர் ஒரு குழுவாக சத்தி, கித்தி ஒரு குழுவாக இருக்கின்றார்கள். முக்கியமான இந்த நான்கு பேர் பூபதிக்கு பொருத்தமாக பதிக்கு எதிர்ரானவர் என்னும் சொல்லியப்போது, நூற்றுக்கு நூறு சதவீதம் துஸ்சு தஸ்சு பதிக்கு எதிர்ரானவராக இருக்கின்றார்கள். இனி மற்ற இருவர் சத்தி, கித்தி கண்டும் காணாதவராக இருப்பார்கள். பூபதியில் என் ஆலோசனை இல்லாமல் ஒன்றும் நடக்காது என்னும் சத்தி, சத்தி சொல்லினால் நான் ஒப்புக் கொண்டால் தான் எந்த ஒன்றும் நடக்கும் என்னும் கித்தி சொல்லி தங்கள் பூபதிக்காக வீட்டில் வேலை செய்கின்றேன் என்னும் பதிக்காக

அல்ல என்று சொல்லிக் கொண்டுயிருப்பார்கள். பூபதி, பதி வீட்டில் வாடகையிருந்து மாதம் மாதம் வாடகை கட்டிக் கொண்டுயிருக்கும்போது நான் யாருக்கும் வாடகை கட்டவில்லை. இந்த வீடு என்னுடையது தான் என்று சொல்கின்றார். மேலும் வீட்டிலுள்ள வேலைக்காரர்கள் எல்லோரும் என்னுடையவர் தான் என்று சொல்கின்றார். இவன் என் துஸ்சு, இவன் என் கித்தி என்று சொல்லிக் கொண்டுயிருக்கின்றார். இந்த விஷயம் எல்லாம் பதிக்கு தெரியும் ஆனால் பூபதியை ஒன்றும் சொல்லவில்லை. தன் வீட்டில் வாடகையிருந்த ஒரு பிச்சைக்காரன் தன் எஜமான் என்னும் சொல்லிக் கொண்டால் பதி மௌனமாக இருப்பதற்கு காரணம் சிறிது இருக்கின்றது. அது என்ன வென்றால்! வீடு தன்னுடையதுயிருந்தாலும் அது வேறவரிடம் அடமானத்திற்கு உள்ளது. வீடு தன் பெயர் மீது இருக்கின்ற பத்திரங்கள் அந்த அடமானம் வைத்தவனிடம் இருக்கின்றது. பூபதி என்ன சொல்லினாலும்! அவன் வார்த்தை செல்லாது. எழுத்து மூலமாக இருப்பது பதி பெயர் மீது தான். பதியின் வீடு என்னும் சாட்சியமாக பரபதி என்னும் மூன்றாவது நபரிடம் வீடு அடமானத்திற்கு உள்ளது. வீடு பதிவுடையதாக இருந்தாலும் அடமானத்திற்கு இருப்பதினால், வீடு பத்திரங்கள் பரபதியிடம் இருப்பதினால், தற்போது எஜமான் பரபதியே என்னும் வீடு எல்லாம் அவர் ஆதினத்தில் உன்ளது என்று சொல்லலாம். அதனால் பூபதி வீடு என்னுடையது என்னும் நினைத்துக் கொண்டாலும் எந்த கவலையும் இல்லை. பரபதியிடம் பாக்கிதீரும் வரை, அடமானம் முடியும் வரை, பதி பூபதிக்கு இருவருக்கு

எஜமான் பரபதி என்னும் சொல்லலாம். பதி பாக்கி பரபதியிடம் தீர வேண்டும் என்றால் பூபதி தன் கட்டும் வாடகை நேராக பரபதிக்கே கட்ட வேண்டியது இருக்கும். பரபதி பெயர் மீது கட்டினால் அதனை தன் பாக்கியில் வரவு வைத்துக் கொண்டுப்போய் இறுதிக்கு தீர்ந்துப்போன நாள் தன் பாக்கியை ரத்து செய்து பாக்கியிலிருந்து பதியை விடுதலை அடையும் படி செய்வார். பூபதி பாக்கி கட்டுவது என்ன? பதி பாக்கியிலிருந்து விடுதலை அடைவது என்ன? என்னும் கேள்வி கேட்டால் அதற்கு பதில் இந்த விதமாக இருக்கும். **உண்மையான பூபதியே பரபதிக்கு பாக்கியானவர்.** மேலும் பூபதியிடம் நான் உன் பாக்கி கட்டவைப்பேன் என்னும் நடுவில் பதி என்பவர் உத்திரவாதம் கொடுத்தார். அதனால் பூபதி என்பவர் எவ்வளவு வேலைக்கு ஆகாதவன் ஆனாலும் பொருத்துக் கொண்டு தன் வீட்டில் முதல் அறையிலேயே வைத்துக் கொண்டார். பூபதி என்பவர் பரபதியிடம் கடன் செய்து, பதியை நடுவில் வைத்து வீட்டை அடகு வைத்து, தன் எல்லாம் மறந்துப்போய், நான் யாருக்கு பாக்கியில்லை என்னும் எண்ணத்திலிருந்து, தன் இருந்துக் கொண்டுயிருந்த வீடு என்னுடையது என்று சொல்கின்றான். பூபதி என்ன நினைத்துக் கொண்டால் பதி, பூபதி இருவர் என்னிடம் சிக்கிக் கொண்டார் என்னும் பரபதி நினைத்துக் கொண்டுயிருக்கின்றார். பூபதியை பாக்கி திரும் வரை விட மாட்டேன் என்னும் பதி நினைக்கின்றார். பூபதி தன் கட்டுவது பரபதிக்கு என்னும் நினைத்துக் கொண்டால் அது பரபதி பாக்கிக்கும் சேரும். அப்படியாகாமல் தன் கட்டுவது பதிக்கு என்னும் நினைத்தால் பதி பாக்கிக்கு சேரும். பதிக்கு

காட்டினால் இறுதிக்கு அதனை பரபதிக்கே சேரும் படி பதி செய்யுவார். ஏதோ ஒரு விதமாக வீட்டு வாடகை உருவமாக கட்டினால் அதனை பாக்கிக்கு சேரும் படி ஏற்பட்டுயிருக்கும்போது பூபதி தன் யாருக்கும் வாடகை கட்ட வேண்டியது இல்லை என்னும், வீடு தன்னுடையது என்னும், ஆகாரம் உருவத்தில் கட்டியது தன் வாழ்வதற்காக என்னும், மற்றும் யாருக்காக அல்ல என்னும், பதி, பரபதி என்பவர் யாரோ எனக்கு தெரியாது என்னும் நினைத்துக் கொள்ளுவதினால் பூபதி பாக்கி சிறிது அளவுக்கூட தீராமல் போனது. பூபதி பரம முட்டாள் என்னும் நினைத்த பரபதி பாக்கி விஷயத்தில் சிறிது சலுகை கூட அறிவித்தார். அந்த சலுகை என்ன வென்றால்! பூபதி கட்டியது எதாவது பதி பெயரில் கட்டினால் எவ்வளவு கட்டியிருந்தால் அவ்வளவே பாக்கி தீரும். அப்படியாகாமல் நேராக பரபதி பெயரில் கட்டினால் எவ்வளவு கட்டியிருந்தால் அந்தளவுக்கு 1000 மடங்கு அதிகம் கட்டியதுப்போல் கணக்கிடப்படும். அப்படி எதற்கு என்றால்! பரபதி தன் மனைவியிடமிருந்து பூபதிக்கு பாக்கி கொடுத்தார். பதி கூட பூபதி பாக்கி விஷயமில் பரபதி மனைவியிடம் உத்தரவாதம் கொடுத்தார். அதனால் மனைவி சக்குருத்திதேவி எவ்வளவு வரவு கொடுத்தால் அவ்வளவு வரவு வைத்து கொள்ளும். தன் மனைவி சக்குருத்திதேவி துல்லியமாக கணக்கிடும் என்னும் இந்த பாக்கி எல்லாம் சுலபமாக தீருவது அல்ல என்னும் பரபதியே பூபதியிடம் நல்லது செய்ய வேண்டும் என்னும் சக்குருத்திதேவி கூட அதிபதியான பரபதி தன் இஷ்டம் வந்தப்படி தள்ளுபடி அறிவித்தார். நேராக கட்டுவது பாக்கி விஷயத்தில் எவ்வளவு

கொடுத்தால் அவ்வளவு வரவு கட்டுப்பாடுகள் இருக்காது என்று சொல்லினார். எனக்கு பிடித்தால் உன் பாக்கி எல்லாத்தையும் ஒரு நாள் வரவு வைத்துக் கொள்ளுவேன் என்று சொல்லினார். இந்த முறைப்பிரகாரமானல் பூபதி பாக்கி விரைவாக முடிந்து விடும் பாக்கியில் இருந்து வெளியே வருவார். ஆனால் இவ்வளவு தள்ளுபடி பரபதி அறிவித்தப்போது பதி யார்? பரபதி யார்? நான் பூபதி, நான் யார் ஆதினத்தில் இல்லை. நான் சுதந்திரமானவன், என் இஷ்டம் வந்த படி செய்யுவேன் என்று நினைத்துக் கொள்கின்றான். அதனால் பூபதி பாக்கியில் சாதாரணமாக வரவு, தள்ளுபடி வரவு இல்லை. சிறிது அளவு கணக்கும், வரவு இல்லாத பூபதி நிரந்தரமாக பூமி மீது வாடகை வீட்டிலேயே இருக்கின்றார். பாக்கியிருந்து பாக்கியை மறந்துப்போவது அநியாயம் தானே? தனக்காக நடுவில் நின்றவரை சிறுது அளவு கூட கணக்கிடாமல் யாரோ இவன் என்னும் சொல்லுவது அநியாயம் தானே? சாதாரணமாக பார்த்தால் பாக்கி விரைவாக தீராது என்னும் ரூபாயிக்கு ஆயிரம் வரவு என்னும் சொல்லியவனை மறந்து நடந்துக் கொள்ளுவது பெரிய அநியாயம் தானே! வட்டியில்லாமல் வரவு வைத்துக் கொள்கின்றேன் சொல்லிய பதிக்கு, ஆயிரம் மடங்கு வரவு வைத்து கொள்கிறேன் என்னும் சொல்லிய பரபதிக்கு, சிறிது அளவும் தாழ்மையான கீழ்ப்படிதல் காட்டாத பூபதியை என்ன சொல்ல வேண்டுமோ நீங்களே சொல்லுங்கள். கெட்டவன், மிக கெட்டவன், மிக குறைவானவன், பொல்லாதவன் என்னும் என்ன சொல்லினாலும் குறைவு தான் அல்லவா! இந்த கதையில்

பூபதியை யாரும் ஒப்புக் கொள்ளமாட்டார் என்னும் நினைக்கிறேன். எவ்வளவோ பொறுமையான பதி பாக்கிதீருவதற்கு தள்ளுபடி பெயரில் சிறந்த வாய்ப்பு கொடுத்த பரபதியை பாராட்டாமல் இருக்க முடியாது. இப்போது இவ்வளவு கதை நாம் சொல்லிக் கொள்ள வேண்டியது என்ன தேவை என்று சிலர் கேட்கலாம். அதற்கு எங்கள் பதில் என்ன வென்றால்! இந்த கதையை தவறாமல் தெரிந்துக் கொள்ள வேண்டியது இருக்கும். எதற்கு என்றால்! இது கதை அல்ல உண்மையானது. இதில் பூபதியாகயிருந்தவர் வேறு யாருமில்லை நேராக நீதான். வாடகை வீடு நீ இருக்கின்ற தேகமே (உடல்). பதி உன் தேகத்திற்கு தளபதியான ஆத்மாவே. பரபதி வேறு யாருமில்லை ஆத்மாவை விட வேறாகயிருக்கின்ற பரமாத்மாவே. பதிக்கு வேலைக்காரர்களாகயிருந்தவர்கள் **24** பேர் **24** தேகம் பாகங்களே என்னும் நியாபகம் வைத்துக் கொள்ள வேண்டும். பதிக்கு எதிராக பூபதிக்கு சாதகமாக இருக்கின்ற முக்கியமானவரில் நான்கு பேர் துஸ்சு என்றால் மனசு, தஸ்சு என்றால் அஹம் என்று தெரிந்துக் கொள்ள வேண்டும். மேலும் சத்தி என்றால் நமக்குள் புத்தி என்னும், கித்தி என்றால் நமக்குள் சித்தம் என்று அர்த்தம் செய்துக் கொள்ள வேண்டும். பூபதி கட்டும் வாடகை நமக்கு உள்ளே தேகத்துக்குள்ளே செலுத்தும் ஆகாரம் என்று தெரிந்துக் கொள்ள வேண்டும். பூபதி பாக்கி என்பது ஜீவாத்மா கர்மம் என்னும், கர்மம் இல்லாமல் செய்துக் கொள்ளுவதே பரமாத்மா பாக்கி தீர்ப்பது என்று அர்த்தம் செய்துக் கொள்ள வேண்டும். பதி, பரபதி விஷயம் பூபதி

என்பவனுக்கு தெரியாமல் போனது ஆத்மா, பரமாத்மா ஞானத்தை ஜீவாத்மா அறிந்துக் கொள்ளாமல் போனார் என்று தெரிந்துக் கொள்ள வேண்டும். பதி பூபதிக்கு உத்திரவாதமாக இருப்பது என்றால் ஆத்மா ஜீவாத்மா துணையிருக்கின்றது என்னும், ஜீவன் வேலைகளை சுயமாக ஆத்மாவே தான் செய்கின்றது என்று அர்த்தம் செய்துக் கொள்ள வேண்டும். பதிக்கு வரவு கட்ட வேண்டும் என்றால் ஆத்மாவை பிரம்ம, கர்மயோகத்தினால் ஆராதனை செய்வது என்னும், பரபதிக்கு வரவு கட்ட வேண்டும் என்றால் பரமாத்மாவை பக்தியோகத்தினால் ஆராதனை செய்ய வேண்டும் என்று தெரிந்துக் கொள்ள வேண்டும். பக்தி யோகத்தினால் கர்மம் விரைவாக இல்லாமல் போய் கர்மத்திலிருந்து விமுக்தி அடையலாம், மேலும் பரபதிக்கு வரவு சேர்த்தினால் ஆயிரம் மடங்கு தள்ளுபடிவுள்ளது என்று சொல்லினோம். சக்குருத்திதேவி என்றால் பிரக்ருதி சக்தி என்று தெரிந்துக் கொள்ள வேண்டும். கட்டுப்பாடுகள் என்றால் தர்மங்கள் என்னும், தர்மத்தை கூட மீறி மோக்ஷத்தை கொடுக்கும் அருகதை ஒரு பரமாத்மாவுக்கே இருக்கின்றது என்னும், அதனால் பரபதி தனக்கு இஷ்டம் வந்தபடி தள்ளுபடி கொடுத்தார் என்று சொல்லினோம். பரமாத்மா பிரக்ருதியினால் ஜெகத்தை நடத்துகின்றார் மேலும் பரபதி தன் மனைவியினால் பாக்கி வாங்கிக் கொடுத்தேன் என்று சொல்லினோம். இவ்வளவு பெரிய கதை நம் தேகத்தில் நடக்கின்றது என்னும், இந்த கதையில் உண்மையை தெரிந்தவர் தன் கர்மத்தை பாக்கியை விரைவாக தீர்த்துக் கொண்டு மோக்ஷத்தை அடையுவான் என்று தெரிவிக்கிறோம்.

| கற்பனையானது | | உண்மையானது |
|---|---|---|
| 1. பூபதி | : | ஜீவாத்மா |
| 2. பதி | : | ஆத்மா |
| 3. பரபதி | : | பரமாத்மா |
| 4. வீடு | : | தேகம் |
| 5. வாடகை (வாடகை) | : | ஆகாரம் |
| 6. வேலைக்காரர்கள் | : | தேகபாகங்கள் |
| 7. துஸ்சு | : | மனசு |
| 8. தஸ்சு | : | அஹம் |
| 9. சத்தி | : | புத்தி |
| 10. கித்தி | : | சித்தம் |
| 11. பாக்கி | : | கர்மம் |
| 12. உத்திரவாதம் இருப்பது | : | துணையாக இருப்பது |
| 13. பதியை மறப்பது | : | ஆத்ம ஞானம் தெரியாமல் போவது. |
| 14. பதிக்கு வரவு கட்டுவது | : | பிரம்மா, கர்மயோகத்தை அனுசரிப்பது. |
| 15. பாக்கி முழுமையாக ரத்து செய்வது | : | மோக்ஷம் அடைவது |
| 16. சக்ருத்திதேவி | : | பிரக்ருதி சக்தி |
| 17. கட்டுப்பாடுகள் | : | தர்மங்கள் |
| 18. பாக்கி தள்ளுபடி | : | கர்மத்தை ரத்து செய்வது |

## இறுதி மரணம்

ஒரு மனிதன் வாழ்கின்றான் என்றால் அந்த மனிதன் தேகம் பெரிய எந்திரம் போல் வேலை செய்கின்றது என்று

அர்த்தம். தேகம் என்னும் எந்திரத்தில் தெரிகின்றது சிலது, காணாத சில எந்திரம் பாகங்கள் உள்ளது. தெரிகின்றது பத்து (10) பாகங்கள், காணாமல் இருப்பது பதினான்கு (14) பாகங்கள் உள்ளது. தேகம் என்னும் எந்திரம் வெளியே இருக்கும் இரும்புபோல் இருப்பது அல்ல. இரும்பு துண்டுகள் எந்திரங்களில் எல்லாம் பாகங்கள் இருந்தாலும், அதில் எந்திரத்திற்கு சம்மந்தப்பட்ட எண்ணெய் இருந்தாலும் அதை ஆட்டுவதற்கு ஒரு மனிதன் தேவை. அவனை ஜென்திரகாரன் என்னும் தெலுங்கில், டிரைவர் என்னும் ஆங்கிலத்தில் சொல்கின்றோம். தெரிகின்ற சில பாகங்களில் கூடியிருக்கின்ற மாமிச துண்டில் தேகம் என்னும் எந்திரங்களில் எரிபொருளாக ரத்தம் இருந்தாலும் தேகம் என்னும் எந்திரத்தை ஆட்டுவதற்கு ஒருவன் தேவை. வெளியே எந்திரத்தை ஆட்டுவது மனிதன், மனிதன் தேகம் எந்திரத்தை ஆட்டுபவர் மிஸ்டர் X என்னும் நினைத்துக் கொள்ளலாம். **வெளியே எந்திரத்தை ஆட்டும் மனிதனை ஜென்திரகாரன் என்று சொல்கின்றோம். இங்கு தேகம் என்னும் எந்திரத்தை ஆட்டுபவரை மந்திரகாரன் என்றும் சொல்கிறோம்.** இரும்பினால் தயாரான பொருள் எந்திரத்தை ஓட்டுபவரை டிரைவர் ஜென்திரகாரன் என்னும் சொல்லினால், மாமிசமினால் உறுப்புகளில் தயாரான தேகம் என்னும் எந்திரத்தை ஓட்டுகின்ற டிரைவரை மந்திரகாரன் என்று சொல்ல வேண்டும். பூர்வம் இந்த விதமாக ஜென்திரகாரன், மந்திரகாரன் என்னும் பெயர் பிறந்தது. இன்னும் விவரமாக சொல்லிக் கொண்டால் வெளியே தெரிகின்ற எந்திரபாகங்களை நடத்தும் தெரிகின்றவனை ஜென்திரகாரன் என்னும், உள்ளே

காணமல் இருக்கின்ற தேகம் எந்திர பாகத்தை நடத்தும் தெரியாதவரை மந்திரகாரன் என்னும் சொல்கின்றோம். தெரியாமல் வேலை செய்யுவதை மந்திரம் என்னும் சொல்கின்றோம், அதனை வேலை செய்கின்றவரை மந்திரகாரன் என்னும் சொல்கின்றோம். தேகம் என்னும் எந்திரங்களில் தெரியாத பாகங்கள் 14 இருக்கின்றது என்று சொல்லினோம். அதில் ஒவ்வொன்று ஒவ்வொரு வேலை செய்கின்றது. அவற்றில் இப்போது நாம் சொல்லிக் கொள்ளுவதற்கு சந்தர்ப்பம் வந்தது, **மனசு என்னும் பாகம். நியாபகம் செய்வது, அல்லது நியாபகம் இருப்பதை மனசு என்று சொல்கின்றோம்.** தேகத்தில் எல்லாம் நியாபகத்திற்கு முக்கியமானது மனசு. ஒரு மனிதன் வாழ்க்கையில் கடைசியாக அழிந்துப்போவது மனசு என்று சொல்லலாம். தேகத்திலுள்ளே தெரியாத பாகங்கள் எல்லாம் வேலை செய்யாத நிலையில் வந்து, அழிந்துப்போன பிறகு எல்லாத்தை விட கடைசியில் அழிவது மனசு. மனசு அழிந்தப்பிறகு ஜீவனும் தேகத்தை விட்டு போகுவான். அதனை மரணம் என்னும் சொல்கின்றோம். இங்கு கவனிக்கவேண்டியது என்ன வென்றால் மரணத்தில் அழிகின்றது உள்ளே தெரியாத எந்திரம் பாகங்கள் 14 என்று தெரிந்துக் கொள்ள வேண்டும். ஜீவன் மட்டும் அழியவில்லை என்று நியாபகம் வைத்துக் கொள்ள வேண்டும். மரணத்தில் வெளியே 10 பாகங்களில், உள்ளே 14 பாகங்களில் ஜீவனுக்கு சம்மந்தம் (உறவு) முறிகின்றது. மனிதன் வாழ்ந்துக் கொண்டு இருக்கும்போது, தேகத்தில் எல்லாம் பாகங்கள் வேலை செய்கின்றபோது, தேகத்தை நடத்துகின்ற

டிரைவர் (மந்திரகாரன்) ஒருவன் இருக்கின்றான் என்னும் சொல்லினோம் அல்லவா! **அந்த டிரைவர் ஜீவன் அல்ல என்னும் நன்றாக நியாபகம் வைத்துக் கொள்ள வேண்டும். தேகம் என்னும் வாகனத்தில் ஜீவன் பயணம் செய்பவன் மட்டும் தான் டிரைவர் அல்ல.** ஜீவன் (ஜீவாத்மா) பயணி பயணம் செய்வதற்கு தேகம் என்னும் வாகனம் தயாரிக்கப்பட்டது. வாகனம் நடக்கும் வரை ஜீவன் அதில் பயணம் செய்துக் கொண்டுயிருப்பான். வாகனம் நடக்காத நிலை வந்தப்போது அதனை நடத்தும் டிரைவர் இந்த வாகனம் வேலைக்கு ஆகாது, வேறு புதிய வாகனம் ஏறலாம் என்னும் ஜீவனை கூட்டிக் கொண்டுப்போய் வேறு புதிய வாகனம் ஏறுவார். வாகனம் வேலைக்கு ஆகாதப்போது பயணி ஒருவரே இறங்கி அந்த வண்டியை நடத்தும் டிரைவரும் இறங்குவார். அப்படி பயணி, டிரைவர் இவ்விருவர் வேலைக்காத வண்டியிலிருந்து இறங்கி வேறு ஒரு புதிய வாகனம் ஏறி பயணம் செய்வார்கள். வாகனம் ஏதுவாக இருந்தாலும் பயணம் செய்யுபவர் ஒருவர் தான், டிரைவர் ஒருவர் தான் இருப்பார். ஒருவர் பயணம் செய்பவர் பயணம் செய்வதற்கு ஒரு சீட்டு மட்டும் இருக்கின்ற வாகனத்தை நடத்துவதற்கு, பயணி பின்பு நிரந்தரமாக ஒரு டிரைவர் இருப்பார். எத்தனை வாகனங்களும் பழுதுப்பட்டாலும், எத்தனை வாகனங்களும் மாறினாலும் பயணம் செய்யுபவர் ஒருவரே, டிரைவர் ஒருவரே, வழி ஒன்று தான் என்று மறக்ககூடாது. **ஒரு வாகனம் பழுது அடைந்து நடக்காத நிலைக்கு வந்தப்போது, வேறு ஒன்று புதிய வாகனம் கொடுக்கும் வாகனம் தயார் செய்கின்றவர் வேறு**

**ஒருவர் இருப்பார். அவரே வாகனத்திற்கு தளபதி.** எத்தனையோ பேர் பயணிகளுக்கு புதிய வாகனம் கொடுக்கும் நிலைமை வாகனங்கள் தயார் செய்யுபவற்கு இருக்கும். வாகனங்களை தயார் செய்பவர் ஒரு பயணிப்பவர் உட்காரும் ஒரு சீட்டை, ஒரு டிரைவர் நடத்தும் படி ஒரு டிரைவர் சீட்டை, வாகனத்தில் இருந்து மற்றும், முதல் வாகனத்தில் எத்தனை பாகம் உள்ளதோ, எல்லாம் பாகங்கள் போலவே அனைத்து வாகனத்தை தயார் செய்து இருப்பார். ஒரு வண்டியில் பயணம் நின்றுப்போனால் அதனிலுள்ள டிரைவர், பயணம் செய்பவர் இருவர் இறங்கிய உடனே புதிய வண்டி ஏறிப்போவார். தேகம் என்னும் வாகனத்தில் ஜீவன் தன் பொருள்களை (லக்கேஜ்) எடுத்துக் கொண்டு பயணம் செய்வார். வாகனத்தை நடத்தும் மந்திரவாதி (டிரைவர்) மிஸ்டர் X நினைத்துக் கொள்ளுங்கள். டிரைவர் யார் என்று கடைசியில் சொல்லிக் கொள்ளலாம். மேலும் எத்தனையோ புதிய வாகனங்களும் எத்தனையோ பேருக்கு கொடுப்பவர் ஒருவர் இருக்கின்றார். **அந்த வாகனங்களுக்கு எஜமான் பரமாத்மா அல்லது கடவுள் என்று சொல்கின்றோம். இப்போது உன் தேகம் ஒரு வாகனம், அதனை கொடுத்தவர் கடவுள். உன் தேகம் என்னும் வாகனத்தில் வாழ்க்கை பயணத்தை கடத்துபவன் நீ தான் என்று தெரிந்துக் கொள்.** மேலும் எத்தனை கோடி வருடங்களிலிருந்து உனக்கு பெர்மனெண்ட் டிரைவராக இருந்து, உன் தேகம் என்னும் வாகனத்தில் உன்னுடன் உன்முன்னே உட்கார்ந்துயிருந்து, அதனை நடத்துபவரை நீ எப்போதும் பார்க்கவில்லை. அவர் யார் என்னும் பல பேருக்கு தெரியாது. அவரை இப்போதும்

மிஸ்டர் X ஆகவே சொல்லிக் கொள்ளலாம். ஜீவன் பயணம் செய்யும் தேகம் என்னும் வாகனத்தில் ஜீவனிடம் ஒரு மூட்டை இருக்கிறது என்னும் சொல்லிக் கொண்டோம் அல்லவா! பயணம் செய்யும் ஜீவன் எப்போது பழைய வண்டி இறங்கி புதிய வண்டி ஏறினால், அப்போது தன் மூட்டையை பத்திரமாக எடுத்துக் கொண்டு போவான். எந்த வண்டி ஏறினாலும் தன் பக்கத்தில் அந்த மூட்டையை வைத்துக் கொண்டு பயணம் செய்யும் படி ஜீவன் வைத்துக் கொள்ளுவான். அந்த மூட்டையில் என்ன பொருள் இருக்கின்றது கவனித்தால் அதில் பல ரகமான பச்சை காய்கள், பக்குவத்திற்கு வந்த பழுத்த பழம் இருக்கின்றது என்று தெரிகின்றது. தடையற்ற இல்லாத பயணத்தில் ஜீவன் அந்த பழங்களை ஆகாரமாக தின்றுக் கொண்டு இருப்பார். அந்த விதமாக பையிலுள்ள பழங்களை தின்றுக் கொண்டுயிருந்தால் அது முடிந்துப்போன பை காலியாகும் அல்லவா! மேலும் ஜீவன் அந்த பழங்களை தின்று அது முடிந்துப்போகாமல் வழியில் பக்கத்திலுள்ள மரத்தில் காய்ந்து இருந்த தொங்கிக் கொண்டு இருந்த பழங்களை போய் கொண்டுயிருந்தப்போது பறித்துக் கொண்டு தன் பையில் போட்டுக் கொண்டுயிருப்பான். இந்த விதமாக வழி பக்கத்தில் பல மரத்தில் காய்ந்து இருந்த பல ஜாதி பழங்களை பறித்துக் கொண்டு, தன் பையிலுள்ளது முடிந்துப்போகாமலே, தன் எவ்வளவு தூரம் பயணம் செய்தாலும் பழங்களை முடித்துக் கொள்ளாமலே சேர்த்துக் கொண்டுயிருப்பான். இந்த விதமாக வழியில் ஜீவன் பயணம் செய்து, சில பக்குவத்திற்கு வந்த பழங்களை தின்றுக்

கொண்டு செலவு செய்து, சில காய்களை எட்டிய மரத்திலிருந்து பிடிங்கி சேர்த்துக் கொண்டுயிருப்பான். ஒரு நாள் பயணத்தில் நான்கு பழங்களை தின்றால், அந்த நாள் 9 அல்லது 10 காய்களை சேர்த்துக் கொண்டுயிருப்பான். ஒவ்வொரு நாள் 10 பழங்களை தின்று செலவளித்தால், அந்த நாள் மூன்று அல்லது நான்கு பழங்களை சேர்த்துக் கொள்வான். இந்த விதமாக ஏறக்குறைய செலவு, ஏறக்குறைய மீதியிருக்கும். அப்படி சேர்த்துக் கொண்ட பழங்களை சேமித்தது அதிகமாய் சில பைகள் மீதியாக பல பேருக்கு உள்ளது. இது எல்லாம் ஜீவன் பயணம் என்னும் முதலிலேயே சொல்லிக் கொண்டோம் அல்லவா! இந்த மூட்டையின் விஷயம் என்ன வென்று சிலர் கேட்கலாம். இந்த மூட்டைகள் நம் எல்லோருக்கும் இருக்கின்ற மூட்டைகள். அது தான் கர்மமூட்டைகள். அவற்றின் பல ரகமான பழங்கள் என்பது பாவம் புண்ணியங்கள் இருக்கும். நாம் எப்போது பாவ புண்ணியங்கள் கர்மத்திலிருந்து அனுபவித்து முடித்துக் கொண்டு, மறுப்படி புதிய பாவ புண்ணியங்களை கர்மம் என்னும் பையில் சேர்த்துக் கொள்கின்றோம். ஒரு பயணத்திற்கு பிறகு கம்யம் இருக்க வேண்டும் அல்லவா! அப்படி கம்யம் இல்லாத முடிவில்லாப் பயணம் தேகம் என்னும் வாகனத்தை மாற்றிக் கொண்டு நம் செய்கின்ற வார்த்தை உண்மை தான். இங்கு முடிவு இல்லாத பயணம் என்ன? கம்யம் இருக்க வேண்டும் அல்லவா! சிலர் கேட்கலாம் அதற்கு பதில் என்ன வென்றால்! கம்யம் என்பது இருக்கின்றது. **அந்த கம்யம் பெயர் மோக்ஷம்.**

ஆனால் கம்யத்திற்கு சேர வேண்டும் என்றால் ஒரு முறையிருக்கின்றது. அந்த முறை என்ன வென்றால் பயணம் செய்பவனிடமிருந்த பை எப்போது முடிகின்றதோ அப்போது அவன் எங்கு இருப்பானோ அதுவே அவன் கம்யம். இந்த முறைப்பிரகாரம் பயணத்தை ஆரம்பித்த ஜீவன், தன் முறையை மறந்துப்போய் பயணம் செய்து, தன் பையிலிருந்ததை முடித்துக் கொள்ளாமல், கர்மத்தை பையில் நிறைத்து கொள்வதற்கு முயற்சி செய்துக் கொண்டே இருக்கின்றான். அப்படி செலவு செய்யும் பழங்களை விட சேர்க்கும் பழங்கள் அதிகம் இருக்கின்றதினால் சில பைகள் மீதியாகியவர்களும் கூட பல பேர் இருக்கின்றார்கள். இந்த விஷயம் எல்லாத்தையும் ஏதோ ஒரு கதையாக பார்க்காமல் **பயணம் செய்பவன் நீ தான் என்று நினைத்துக் கொள், வாகனம் உன் தேகம் என்னும் நினைத்துக் கொள், மூட்டைகள் உன் கர்மம் மூட்டைகள் என்னும் நினைத்துக் கொள். அந்த மூட்டையிலுள்ளதை நீ சம்பாதித்துக் கொண்ட பாவ புண்ணியங்கள் என்று தெரிந்துக் கொள்.** நீ எத்தனை அனுபவித்தாலும் அனுபவிக்க வேண்டியது எத்தனை கர்ம பலன்கள் இன்னும் உன்னிடம் மீதியிருக்கின்றது என்னும் நினைத்துக் கொள். இப்போது நீ மோக்ஷம் என்னும் கம்யம் எதற்கு சேராமல் இருக்கின்றாயோ அர்த்தமாகியது என்று நினைத்துக் கொள்கின்றேன். பயணம் எல்லாத்தையும் மனிதனுக்கு பொருத்திக் கொண்டு பார்த்தால் ஜீவன் சில கோடி வருடங்களிலிருந்து வாழக்கையை தேகத்துடன் தொடர்ந்து கொண்டேயிருக்கின்றான். மரணத்தில்

யாரும் இல்லாமல் போகவில்லை. மரணம் என்பது ஜீவன் அழிவு அல்ல. மரணத்தில் தேகம் மட்டும் அழிகின்றது. மரணத்தினால் ஜீவனுக்கு பழைய தேகம் போய் புதிய தேகம் வருகின்றது. அதனால் தான் ஜீவன் இறப்பதும் இல்லை பிறப்பதும் இல்லை. மரணத்தை அடையுவது தேகம் மட்டுமே. அப்படியே பிறக்கின்றதும் தேகம் மட்டும் தான். ஜீவன் பழைய துணிகளை விட்டு, புதிய துணிகளை அணிவதுப்போல் பழைய தேகத்தை விட்டு புதிய தேகத்தை அணிகின்றான். தேகம் என்னும் வாகனம் பழையது ஆகி நின்றுப்போனால் இறந்தது என்னும், புதிய தேகம் என்னும் வாகனம் வந்தால் பிறந்தது என்னும் பெயர் இருக்கும். இறந்தப்போதும் பிறந்தப்போதும், தேகத்தில் பயணம் செய்யும் ஜீவனிலும் அதை நடத்தும் டிரைவரிலும் எப்படிப்பட்ட மாற்றம் இருக்காது. மரணத்தில் நியாபகத்திலுள்ள மனசு அழிவதினால் போன தேகத்திலுள்ள நியாபகங்கள் எல்லாம் அந்த தேகத்துடன் அழிகின்றது. அதனால் பழைய தேகத்திலுள்ள சமாச்சாரம் தெரிவிப்பது எதுவும் இல்லாததினால் முன்பு இருந்த ஜென்மம் விஷயம் ஜீவனுக்கு சிறிதளவுக்கூட தெரியாமல் போகின்றது. புதிய தேகத்தில் புதிய மனசு தெரிவிக்கும் விஷயங்கள் மட்டுமே தெரியும். போன பழைய தேகத்தில் தான் என்ன செய்தோம் என்னும் ஜீவனுக்கு ஒன்றும் தெரியாது. தேகம் என்னும் வாகனத்தை நடத்தும் டிரைவற்கு நமக்கு இருக்கின்ற படி பாகங்கள் இருக்காது. அவர் பாகங்கள் இல்லாத ஒருவரே ஆனதினால் மேலும் அவருக்கு எல்லாம் நியாபகம் இருக்கும், எல்லாம் தெரியும். ஆனால் அவர் ஜீவனுக்கு ஒன்றுக்கூட

சொல்லமாட்டார். அவர் வேலை வாகனத்தை நடத்தும் வேலை மட்டும் தான். அவர் மிஸ்டர் X ஆகவே ஜீவனுக்கு தெரியாமல் வாகனத்தை மட்டும் நடத்திக் கொண்டுயிருப்பார். (குறிப்பு: நடந்துப்போன ஜென்ம விவரங்கள் தெரியாமல் போனதினால், அவற்றை நேரடியாக பார்த்ததுப் போல், சாஸ்திரம் முறையாக யாரும் சொல்லாமல் போனதினால், பூமி மீது மனிதன் முழுமையாக அஞ்ஞானத்தில் முழ்கிப்போய் ஜீவனுக்கு ஜென்மங்களே இல்லை என்னும் சொல்லிக் கொள்ளும் ஆபத்து உள்ளது. இப்போது புதியதாக பிறந்த மதங்கள் எல்லாம் ஜென்மங்கள் இல்லை என்று சொல்கின்றது. மற்றும் ஹிந்து மதங்களில் பகுத்தறிவாளர்களும், நாத்திகவாளர்களும் புனர்ஜென்மங்கள் இருப்பது உண்மை அல்ல என்று சொல்கின்றார்கள். மேலும் முழுமையாக ஜென்மங்கள் இல்லை என்னும் நிலை பூமி மீது ஏற்படாமல் இருப்பதற்கு நம் தேகத்தில் டிரைவராகயிருப்பவர் அவரே சில வருடங்களுக்கு ஒரு தடவை மிக குறைவாக யாருக்கோ ஒருவருக்கு நடந்துப் போன ஜென்மத்தின் நியாபகத்தை தெரிவிப்பார். மனிதன் பிறந்தப்பிறகு சிறிய வயதில் மூன்றுயிலிருந்து ஐந்து, ஆறு வருடங்களில் பின் நடந்த விஷயங்களை ஜீவனுக்கு தெரிவிப்பார். அப்போது அந்த சிறியவன் அல்லது சிறியபாப்பா தன் உள்ளே தெரிந்த விஷயங்கள் வெளியே சொல்வர்கள். அப்படி சொல்லிய சந்தர்ப்பங்கள் எத்தனையோ நடந்தது. அந்த நடந்துப்போன நியாபகம் கிட்டதட்ட ஒரு வருடத்தை விட குறைவான காலம் இருந்து பிறகு இல்லாமல் போகும். அது

உண்மையாக நியாபகம் அல்ல. தேகத்தை நடத்துகின்ற மிஸ்டர் X என்பவர் சொல்லுவது வரையே சொல்வார். அவர் எப்போது சொல்லுவது நிறுத்துவரோ அப்போது சிறியவன் ஒன்றும் சொல்லமாட்டார். இந்த முறை தெரியாத பகுத்தறிவாளர்கள் அப்படி சொல்லும் சிறியவற்கு ஏதோ ஒரு நோய் இருக்கின்றது என்னும், அதனால் அப்படி சொல்வார் என்னும் அது எல்லாம் உண்மை அல்ல என்று சொல்வார்கள். இதனை பற்றி நாங்கள் எழுதும் **“புனர்ஜென்மம் நியாபகம்”** என்னும் புத்தகத்தில் விவரிக்கிறோம். ஜீவன் எத்தனை தேகங்கள் மாறினாலும் நடந்துப்போன எந்த ஒரு தேகத்தின் நியாபகம் ஜீவனுக்கு இருக்காது. மேலும் இப்போது இருக்கின்ற ஜென்மத்தில் மட்டுமே நான் பிறந்தேன் என்னும் நினைத்துக் கொள்ளுவான். கடந்துப்போன சமாச்சாரம் எதுவும் தெரியாது அதனால் இதற்கு முன்பு நான் எப்போதும் பூமி மீது பிறக்கவில்லை எண்ணத்துடன் இருப்பான். **உண்மையாக தன் இதற்கு முன்பு எத்தனையோ தேகத்தை அடைந்தேன் என்னும் தெரியாத மனிதன், இன்னும் பிறகும் எத்தனையோ தேகங்களை அடைய வேண்டும் என்னும் தெரியாத மனிதன், தற்போது இருக்கின்ற ஜென்மம் மட்டும் தெரிந்த மனிதன், இப்போது பிறந்தது தவிற முன்பின் ஜென்மங்கள் விவரம் தெரியாமல், இப்போது மட்டுமே தன்னை கடவுள் பிறக்க வைத்தார் என்னும் நினைத்துக் கொள்ளுவான். அல்லது நானே இப்போது பிறந்தேன் என்னும் என்னை எந்த கடவுளும் என்னை பிறக்க வைக்கவில்லை என்று நினைத்து கொள்ளுவான்.** இந்த எண்ணங்கள் ஹிந்து மதங்களில் வேறு

மதங்களில் இருக்கின்றது என்று நினைத்துக் கொள்ளுகிறோம். ஹிந்து மதங்களில் பகவத்கீதா போதனையில் மனிதனுக்கு எத்தனையோ ஜென்மங்கள் கடந்தது என்னும், பிறகு மோக்ஷம் அடையும் வரை எத்தனையோ ஜென்மங்கள் எடுக்க வேண்டியது இருக்கும் என்று தெரிகின்றது. வேறு மதங்களில் மனிதன் இறந்தப்பின் கடவுள் மறுபடி அதே தேகத்துடனே எழுப்பி மனிதன் செய்துக் கொண்ட பாவ புண்ணியங்களுக்கு தீர்ப்பு திருத்தி தண்டனை கொடுப்பார் என்று சொல்லிக் கொண்டுயிருப்பதை கேட்டோம். அந்த வார்த்தை உண்மை தான் அப்படி ஒரு தடவை மட்டும் கடவுள் செய்கின்றாரா? என்னும் யோசித்தால் ஒரு தடவை தான் என்னும் குறிப்பு ஒன்றும் இல்லை என்று தெரிகின்றது. இதே விஷயத்தில் ஹிந்து மதம் பூரணங்களில் கூட சொல்லிக் கொண்டார்கள். மேலும் அது சாஸ்த்திரம் முறை அல்ல என்னும் பகவத்கீதையில் சொல்லியது மட்டுமே சாஸ்த்திரம் முறை என்று நாங்கள் சொல்கின்றோம். பகவத்கீதா ஞானம் தெரிந்தவர் சிலர்கள் தனக்கு எத்தனையோ ஜென்மங்கள் கடந்துப்போனது என்னும் நம்பியவர், பிறகு வரப்போகும் ஜென்மத்திலிருந்து வெளியே போக வேண்டும் என்னும் தெரிந்தவர், இப்போதுயிருந்து மோக்ஷத்திற்காக முயற்சி செய்பவர் இருப்பார்கள். அப்படிப்பட்ட நோக்கதுடன் இருப்பவருக்கு உண்மையான ஞானம் மார்க்கம் கிடைக்காமல், அவருக்கு தன்னிடத்தில் இருக்கின்ற கர்மம் என்னும் கோணிப்பை இருக்கிறது என்னும் தெரியாமல், அவர் முயற்சி செய்துக் கொண்டே இருக்கின்றார்கள். நம்மிடம்

பையிருக்கின்றவரை, அது முடியும் வரை, தேகம் என்னும் வாகனம் மந்திரகாரன் (டிரைவர்) நம்மை ஒரு வண்டியிலிருந்து இறங்கிக் கொண்டு இருக்கும்போது இன்னொரு வண்டியில் வற்புறுத்தியாக ஏற்றுவார் என்னும், கர்மம் எப்போது இல்லாமல் போகுமோ அப்போது மோக்ஷம் கிடைக்கும். எதற்கு என்றால்! கர்மம் என்னும் நம் லக்கேஜ் நம்மிடம் இருக்கும் வரை நம் டிரைவர் நம்மை விட்டு போகமாட்டார். டிரைவர் போனப்பிறகு வாகனத்தை நீ ஏறவேண்டிய அவசியம் இல்லை. டிரைவர் (மந்திரகாரன்) இருக்கும் வரை அவர் உன்னை வாகனத்திலேயே உட்கார வைப்பார். ஜீவனிடம் கர்மம் என்னும் கோணிப்பை முடிந்து விட்டால், நீ ஜீவனை விட்டுவிடு என்னும் ஜீவனை வாகனத்தில் ஏற்றாதே என்னும் டிரைவற்கு கடவுளிடமிருந்து உத்தரவு கொடுக்கப்பட்டது. அதனால் எங்கு கர்மத்தில் ஜீவன் இருப்பானோ அங்கு ஜீவனுக்கு வாகனம் இருக்கும் மேலும் அதனை நடத்தும் மந்திரகாரன் இருப்பார். ஒவ்வொரு ஜீவனுக்கு ஒரு தேகம், ஒரு டிரைவர் இருப்பது சர்வசாதாரணமானது. பூமி மீது சிலர் மோக்ஷத்திற்காக முயற்சி செய்கின்றார்கள். அதற்காக அவர் பல மார்க்க்த்தை தேடுகின்றார்கள். யார் எத்தனை மார்க்கத்தை தேடினாலும் கர்மம் விஷயம் தெரியாது, தேகத்தை நடத்தும் அவரைப் பற்றி தெரியாததால் மோக்ஷம் கிடைக்காது. கர்மம் பை இருக்கும் வரை டிரைவா் விடமாட்டார் என்னும் தெரியாதவர், தேகம் உள்ளே உள்ள கவனத்தை விட்டு வெளியே பக்தியில் விழுந்து, பல பக்தி

மார்க்கத்தை அனுசரிக்கின்றார்கள். மோக்ஷத்திற்காக எக்னங்கள் செய்பவர், தானங்கள் செய்பவர், வேதங்கள் சொல்பவர், தபசு செய்கின்றவர் இருக்கின்றார்கள். சிலர் செய்ய வைக்கின்றவரும் இருக்கின்றார்கள். இந்த நான்கு ரகங்கள் பக்தி மார்க்கத்தை அனுசரிக்கும் யாருக்கும் மோக்ஷம் எப்போதும் கிடைக்காது என்னும் பகவத்கீதாவில் விஷ்வரூபசந்தர்ஷன யோகத்தில் **48, 53** சுலோகத்தில் விவரமாகயிருக்கின்றது. பகவத்கீதாவில் பகவான் சொல்லிய விவரம் தெரியாமல் பல பேர் தவறாக நினைத்து, உண்மையான தெய்வ மாரக்கத்தில் பயணம் செய்யாமல் போகின்றார்கள். பகவத்கீதாவில் பகவான் சொல்லியதுப்போல் தேகத்துக்குள்ளே பார்க்காமல், தேகத்தை நடத்தும் உன்பக்கத்திலுள்ள தேகம் என்னும் வாகனம் ஓட்டும் மந்திரகாரனை தெரிந்துக் கொள்ளாத வரை மோக்ஷம் யாருக்கும் கிடைக்காது. கர்மசித்தாந்தத்தை தெரியாதவர், தேகத்திலிருந்து கர்ம சித்தாந்தத்தை தெரியாதவர், தேகத்திலிருந்து கர்மப்பிரகாரம் தேகத்தை நடத்துபவரை தெரியாதவர், பூமி மீது எவ்வளவு பெரிய சாமிஜிகளும், எவ்வளவு பெரிய பிடாதிபதியானாலும் வண்டி ஏறவேண்டியது தான் பயணம் செய்ய வேண்டியது தான். கடவுள் கணக்கில் சாமன்யமான மனிதனும் சாமிஜிகளும் எல்லோரும் சமமானவர் தான். **ஞானம் என்னும் சொல் பிரகாரம் நடந்துக் கொள்ளும் சாமன்யமான மனிதனும் மோக்ஷம் அடையுவார்கள். ஞானம் என்னும் சொல் பிரகாரம் நடந்துக் கொள்ளாத சாமிஜிகளும் மோக்ஷம் அடையமுடியாது.** எந்திரத்தை நடத்தும் ஜென்த்திரகாரன் இருப்பதுப்போல், தேகம் என்னும்

எந்திரத்தை நடத்தும் மந்திரகாரன் பற்றி புரிந்துக் கொண்டு, கர்மம் இருக்கும் வரை மந்திரகாரன் நம்மை விட மாட்டார் என்னும் தெரிந்து, தேகத்தில் இருக்கும் கர்மத்தை, தேகத்திலேயே மந்திரகாரனான மிஸ்டர் X சை தெரிந்து, முடிந்துப்போன கர்மம் என்னும் கோணிபையை மிஸ்டர் X க்கு கொடுத்த நாள் உனக்கு மோக்ஷம் கிடைக்கும். அப்போது இறந்தவனுக்கு அந்த மரணம் இறுதி மரணமாகும். அதுவரை உள்ளே உள்ள விஷயம் விவரம் தெரியாமல், கர்மம் பையை மந்திரகாரருக்கு கொடுக்காதவரை உனக்கு எத்தனை தடவை மரணம் வந்தாலும் அது இறுதி மரணம் அல்ல. இறுதி மரணம் என்றால் என்ன இப்போது தெரிந்தது. சில பேர் சாமிஜிகள் இறந்துப்போனபோது எங்கள் குரு மோக்ஷம் அடைந்தார் என்னும் அந்த சாமிஜி சிஷ்யர்கள் நினைத்துக் கொள்ளுவார்கள். அப்போது இறந்துப்போன அந்த சாமிஜி இறுதி மரணம் அடைந்தார் என்னும் நாம் நினைத்துக் கொள்ளலாம். அப்படி நினைத்துக் கொள்ளுவதில் உண்மை இருக்கலாம் அல்லது பொய்யாகவும் இருக்கலாம். இறுதி மரணம் அடையாதவனையும் கூட அவர் மோக்ஷம் அடைந்தார் என்னும் தவறாக நாம் நினைத்துக் கொள்ளலாம். உண்மையாக இறுதி மரணம் அடைந்து மோக்ஷத்திற்கு போகுபவரை தவறாக அவர் மோக்ஷத்தை அடையவில்லை என்று நினைத்துக் கொள்ளலாம். இப்படிப்பட்ட குழப்பம் நடந்தது, மரணித்தவர்களில் யார் மோக்ஷம் அடைந்தாரோ, யார் அடையவில்லை கூட மனிதர்களுக்கு தெரியாமல் போகும் என்னும் நினைத்துக் கொண்ட பகவான், தன்

பகவத்கீதாவில் இறுதி மரணத்தைப்பற்றி அக்ஷரப்பரப்பிரம்மா யோகத்தில் கடைசியில் **23** சுலோகத்திலிருந்து **28** ஆவது வரை கூறினார். முதலில் **23** சுலோகத்தில் என்ன கூறினார் என்னும் பார்த்தால் இப்படியிருக்கின்றது.

அத்தியாயம் **8,** சுலோகம் : **23**

**யாத்திரகாலே துவனவுருத்தி மாவுருத்திம் சவையோகினஹ: /**

**பிரயாத்தா யானித்து தம் காலம் வக்ஷமி பரத்தரஸ்பா //**

யோகிகள் எப்போது மரணிப்பாரோ மறுபடி பிறப்பாரோ, எப்போது இறந்துப்போனால் மறுபடி பிறக்கமாட்டாரோ அந்த காலத்தைப் பற்றி சொல்கிறேன் கேளுங்கள். இப்போது இது சாஸ்த்திரம் முறையான விஷயத்தை எல்லோரும் கவனிக்க வேண்டும். பகவான் சொல்லும் காலத்தை தெரிந்துக் கொண்ட பிறகு கட்டுக்கதைகளுக்கு சிறிது அளவுக்கும் கூட இடமிருக்காது. எப்படிப்பட்டவர் மரணத்தையும் பகவான் சொல்லிய நேரத்தில் ஒப்பிட்டு பார்த்தால் அது இறுதி மரணம் அல்லவா என்பதை தேர்ந்து சொல்லிக் கொள்ளலாம். மேல் சுலோகத்தில் **“யோகினாம்”** என்னும் இந்த காலம் யோகிகளுக்கு மட்டுமே சொல்லினார். மேலும் யோகிகளானவரில் முழுமையான கர்மம் முடிந்தவர் யார்? கர்மம் முடியாமல் இன்னும் மீதியிருக்கின்றவர் யார் என்பவரும் கூட தெரிந்துக் கொள்ளலாம். எக்ன யாகங்கள் செய்பவர், வேதங்களை படிக்கின்றவர்கள், தானம் செய்பவர், தபசு செய்கின்றவர் யோகிகள் அல்ல என்னும், அவர் ஜென்மத்திற்கு தவிற மோக்ஷத்திற்கு போகமாட்டார் என்னும், அப்படிப்பட்டவரை பார்க்க வேண்டிய வேலை இல்லை என்னும், கீதாவில் விஷ்வரூபசந்தர்சனயோகத்தில் **48, 53**

ஆவது சுலோகங்கள் பிரகாரம் சொல்லலாம். எக்ன, வேத, தான, தபசு செய்யும் நான்கு ரகங்கள் உள்ளவர்களை விட்டு யோகிகளானவரிலும் கூட கர்மம் முடியாமல், டிரைவர் பிரியாமல் யார் மறுபடி பிறப்பாரோ, அவருடையது இறுதி மரணம் அல்ல, யாருடைய தேகமில் நடத்தும் டிரைவர் அவரை விட்டு போகுவாரோ, யார் கர்மம் முழுமையாக முடிந்துப்போகுமோ அப்படிப்பட்ட யோகி அடைந்த மரணம் இறுதி மரணம் என்று தெரிந்துக் கொள்ள வேண்டும். கடைசி மரணத்தை யோகியானவர்களும், எந்த நேரத்தில் அடையுவாரோ பகவத்கீதாவில் அக்ஷரப்பரப்பிரம்மா யோகத்தில் **24** ஆவது சுலோகத்திலிருந்து பகவானே கூறினார். மேலும் நான் அந்த நேரத்தைப் பற்றி சொல்ல வேண்டியது இல்லை. பகவத்கீதாவை படித்தால் நம் டிரைவர் மிஸ்டர் X கூட தெரியுவர் என்று தெரிவிக்கின்றோம். நாங்கள் பகவத்கீதையை பல தடவை படித்தோம், நீங்கள் சொல்லியதுப்போல இறுதி மரணத்தைப்பற்றி, தேகத்தை நடத்துபவர் பற்றி ஒன்றும் இல்லை என்னும் சிலர் கேட்கலாம். அதற்கு எங்கள் பதில் என்ன வென்றால்! ஆன்மீகம் என்னும் துறையில் புரட்சிகரமான எழுத்துடன் இணைந்துள்ள த்ரைத்தசித்தாந்த பகவத்கீதாவை படியுங்கள், எல்லாம் அர்த்தமாகும்.

**சமாப்தம்**

அசத்தியம் ஆயிரம் பேர் சொல்லினாலும்
அது சத்தியம் ஆகாது.
சத்தியம் ஆயிரம் பேர் அல்ல என்னும் சொல்லினாலும்
அது அசத்தியம் ஆகாது.